

# இரண்டே நெஞ்சே

கவிஞர்

மு. உலகநாதன்

# இரண்டும் ஒன்றே!

கவிஞர் வி.மு. உலகநாதன்

வாசுகி பதிப்பகம்
69, தொட்டிக்கலைக் குமரப்ப முதலித் தெரு,
சூளை, சென்னை—600112

# பதிப்பு விளக்கம்


நூலின் தலைப்பு : இரண்டும் ஒன்றே!

பொருள் : திருமாலியமும் சிவனியமும் ஒன்றே என்று ஆழ்வார்கள் நாயன்மார்கள் பாடல்களைக் கொண்டு ஒப்புநோக்கிச் செய்த திறனாய்வு.

ஆசிரியர் : கவிஞர். வி. மு. உலகநாதன்

பதிப்பு : முதற்பதிப்பு

வெளியீடு : நவம்பர் 1992

உரிமை : ஆசிரியருக்கே

தாள் : 10.7. K.G. ஒயிட் பிரிண்டிங்

நூலின் அளவு : 18. C.M. 12.5 C.M.

எழுத்து : 10—புள்ளி

பக்கங்கள் : 208

படிகள் : 1200

அச்சகம் : கவிக்குயில் அச்சகம்,
47, நல்லதம்பி தெரு.
திருவல்லிக்கேணி, சென்னை-5

**விலை : உரூபா 30-00**

பதிப்பாளர் : வாசுகி பதிப்பகம்
69, தொட்டிக்கலைக் குமரப்ப
முதலித் தெரு, சூளை
சென்னை-600112

எம். சன்ஸ் உரிமையாளர்

முத்தர்

திரு. எம். டி. குலசேகரப்பிள்ளை அவர்களுக்கு

# அன்புப் படையல்

உயர்ந்தவர் ஆயர் குழந்தைகள் படித்தே
உயர்ந்திடப் பெரும்பொருள் வழங்கி
உயர்ந்தவர் திருமால் அருளினைப் பாடி
உயர்ந்தவர் குலசேக ரர்தாம்
உயர்ந்தவர் எளியோர்க் கீந்ததால் கண்ணன்
உயர்ந்தஒண் திருவடி சார்ந்தே
உயர்ந்தவர்க் "கிரண்டும் ஒன்றே" இந் நூலை
உயர்வுறப் படைத்தனன் இனிதே!

---

"இரண்டும் ஒன்றே" என்னும் இந்த ஒப்பாய்வு நூலை வெளியிடப் பொருள் உதவி நல்கிய திருப்பதி திருமலை தேவஸ்தான அதிகாரிகளுக்கு என்றும் நன்றியுடையேன்.

அன்பன் வி.மு. உலகநாதன்

# பொருளடக்கம்


| வரிசை எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்பகமும் முகவரியும் | 1 |
| 2. | பதிப்பு விளக்கம் | 2 |
| 3' | அன்புப் படையல் | 3 |
| 4. | பொருளடக்கம் | 4—5 |
| 5. | மதிப்புரை | 6—8 |
| 6. | அணிந்துரை | 9—11 |
| | தேனீபோல் மொய்த்திடுவோம் | 12 |
| | நூலாசிரியன் உரை | 13—16 |
| | உள்ளுறை | |
| 1. | மெய்யுணர்வில் உய்யும் தெய்வம் | 17—26 |
| 2. | இறைவன் ஒருவனே! | 27—35 |
| 3. | இரண்டும் ஒன்றே! | 36—45 |
| 4. | திருமங்கை ஆழ்வாரும் திருநாவுக்கரசரும் | 46—55 |
| 5. | திருமங்கை ஆழ்வாரும் திருஞானசம்பந்தரும் | 56—64 |
| 6. | திருமங்கை ஆழ்வாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் | 65—72 |
| 7. | திருமங்கை ஆழ்வாரும் மாணிக்கவாசகரும் | 73—81 |
| 8. | நம்மாழ்வாரும் நாவுக்கரசரும் | 82—88 |
| 9. | நம்மாழ்வாரும் ஞானசம்பந்தரும் | 89—96 |
| 10. | நம்மாழ்வாரும் சுந்தரரும் | 97—106 |

11. நம்மாழ்வாரும் மணிவாசகரும் 107—114

12. பொய்கை ஆழ்வாரும் நாவுக்கரசரும் 115—122

13. திருமழிசைப்பிரானும் நாவுக்கரசரும் 123—130

14. பெரியாழ்வாரும் நாவுக்கரசரும் 131—137

15. பெரியாழ்வாரும் சேந்தனாரும் 138—146

16. பெரியாழ்வாரும் பட்டினத்தாரும் 147—154

17. ஆண்டாள் அன்னையும் மாணிக்கவாசகரும் 155—162

18. குலசேகராழ்வாரும் நாவுக்கரசரும் 163—170

19. தொண்டரடிப்பொடியும் மணிவாசகரும் 171—178

20. அன்பிலே உறையும் அருளாளன் 179—185

21. சடகோபரும் இராமலிங்கரும் 186—195

22. அனைத்தும் ஒன்றே! 196—203

23. எங்கும் நிறைந்த இறைவன் 204—208

# மதிப்புரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

"ஒண்மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப,
ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்(து),
எண்மதியும் கடந்தண்ட மீது போகி,
இருவிசும்பி னூடுபோய் எழுந்து மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித்
தாரகையின் புறந்தடவி, அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
மலர்புரையும் திருவடியே வணங்கி னேனே!

—திருமங்கையாழ்வார்

எல்லா நாடுகளிலும் சமயப் பெரியார்கள் தோன்றி மக்களை நன்னெறிப்படுத்தவே சமயங்களைத் தோற்றுவித்தார்கள். சமயநெறிகள் வாழ்க்கையை நன்னெறிப்படுத்துவதுடன் இறையுணர்வையும் ஊட்டுவனவாகும். இப்படி உயர்ந்த குறிக்கோளுடன் தோன்றிய சமயங்கள் "சாதி சமயங்களிலே வீதி பல வகுத்து, சாத்திரக் குப்பைகளைப் பெருக்கி" மக்களிடையே சமயப் பூசல்களையும் சமயப் பிணக்குகளையும் வளர்த்துவிட்டன. சைவ—சமண வாதங்கள், சைவ—வைணவப் பிணக்குகள் வரலாற்றிலும் இடம் பெற்று விட்டன. இவை நல்லோர் பலர் வெறுப்புக்கும் இடங்களாயின. பாரதியார் கண்ணன் வாக்காக,

போலிச் சுவடியை யெல்லாம்—இன்று
பொசுக்கிவிட்டால் எவர்க்கும் நன்மையுண் டென்பான்[2]

என்று கூறுவதையும் காணலாம். இச்செயல்கள் இறை மறுப்புக் கொள்கை பிறக்கவும் காரணமாயின.

---

1. திருநெடுந். 5.

2. கண்ணன் என் தந்தை—6.

சமய நூல்களிலும் தத்தம் சமயக் கடவுளர்களை உயர்த்தியும் பிற கடவுளர்களைத் தாழ்த்தியும் பேசும் போக்கில் பாடல்களும் தோன்றலாயின. சமயப் பெரியார்களின் நன்னோக்கமெல்லாம் வழிவழி வந்தவர்களால் பாழ்படுத்தப் பெற்றன. இக்காலக் கட்சி அரசியல்களைவிடக் கீழான நிலைகட்கு இறங்கிவிட்டன. ஆயினும் தாயுமானவர், வள்ளல்பெருமான் போன்றவர்கள் சமரச நிலையை ஏற்படுத்த முயன்றுள்ளனர். திரு. வி. க. போன்ற அறிஞர்கள் இத்திசையில் நூல்கள் இயற்றிப் பிரசாரமும் செய்து வரலாயினர்.

இந்தச் சூழ்நிலையில் இரண்டும் ஒன்றே!' என்ற நூல் வெளிவருகின்றது. இதனை இயற்றி உபகரித்தவர் கவிஞர் வி. மு. உலகநாதன் என்ற நல்லார். 'இறைவன் ஒருவனே', 'இரண்டும் (சைவமும் வைணவமும்) ஒன்றே' என்ற கட்டுரைகளைத் தொடர்ந்து ஆழ்வார்கள் நாயன்மார்கள் பாடல்களை ஆய்ந்து இருவர் பாடல்களிலும் பொதிந்துள்ள பொதுக் கருத்துகளை எடுத்துக்காட்டியே சமயப் பொறையை உயர்ப்பிக்கும் பாங்கில் பல கட்டுரைகள் நூலை அணி செய்கின்றன. அவற்றைப் படித்து அநுபவிப்போரிடம் சமயப் பொறை நிலைபெறும் என்பதற்கு ஐயம் இல்லை.

ஒன்றை நினைவு கூரலாம். வைணவ சைவ தத்துவங்களையும் சித்து-பசு, அசித்து-பாசம், ஈசுவரன்-பதி என்று ஒப்பிட்டு ஆழ்ந்து நோக்கினால் இரண்டு தத்துவங்களிலும் அமைந்துள்ள கருத்துகள் பெயர்களினால் வேறுபடினும்பொருளமைப்புகளினால் ஒன்றாக இருப்பதை அறியலாம். வள்ளல் பெருமானும்,

"பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதி"

யாகக் காணலாம் என்று கூறியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

---

3. திருஅருட்பா, மூன்றாம் திருமுறை மகாதேவ மாலை. 48.

இந்த நூல் நல்ல எளிய தீந்தமிழ் நடையில் பொதுமக்கள் விழையும் பாங்கில் அமைந்துள்ளது. மக்கள்பால் சமயப் பொறையை வளர்க்கப் பெருந் துணைபுரியும். "அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயில் மண்ணு" அவர்கள் வாயால் தவழும் பொன்மொழியின் கருத்திற்கு அரணாகவும் அமையும் என்பதற்கு ஐயம் இல்லை. ஆசிரியரின் சமயத் தொண்டு வளர்ந்தோங்குக என்றும், இந்நூலை வழங்கிய கவிஞர் உலகநாதன் நோய் நொடியின்றிப் பல்லாண்டு வாழ்க என்றும், வைணவ மரபுப்படி 'இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்' என்றும் வாழ்த்துகின்றேன்.

இந்நூல் திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தார் சமய நூல்களுக்கு வழங்கும் திட்டப்படி நிதி பெற்று வெளிவருகின்றது. தேவஸ்தானம் செய்து வரும் உதவி பொதுமக்கள் பாராட்டும் வகையில் அமைகின்றது. இந்த நிதி உதவி பெறுவதற்கு அடியேனும் ஒரு சிறு கருவியாக அமைந்தது அவன் திருவருளேயாகும்.

குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குலைந்துவீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கிஎ மாந்து
நிற்கின்றார் நிற்க;நான் உவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன்;
மகிழ்ந்துநீ என்உளம் எனும்அம்
பலத்திலே நின்றாய்; எனக்கிது போதும்;
பண்ணிய தவம்பலித் ததுவே.[4]

'வேங்கடம்'
ஏடி-13, (மனை எண். 3354)
அண்ணாநகர்.
சென்னை-600040.

ந. சுப்பு ரெட்டியார்
தொ. பே. 6211583
12—11—1992

4. திருஅருட்பா. ஆறாம் திருமுறை சிவபுண்ணியப் பேறு—3.

டாக்டர் த. பெரியாண்டவன், எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
குறளகம்—சென்னை-108

# அணிந்துரை

கவிஞர் வி. மு. உலகநாதன் அவர்கள் இறையுணர்வோடு இயற்றமிழ்த் தொண்டாற்றும் நல்லறிஞர். தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் தகைமைசால் புலவர். பன்னூல்களை யாத்தளித்த இப்பெருந்தகை இப்பொழுது 'இரண்டும் ஒன்றே' என்னும் நூலை நமக்கு அளித்துள்ளார்.

மதப் பூசல்கள் ஓங்கி ஒலிக்கும் இந்தக் காலத்தில் இந் நூலின் வரவு இன்றியமையாதது. சமணம், சைவம், வைணவம், புத்தம் என்னும் பல்வேறு மதங்களைப் பின் பற்றிய மக்கள் காலப்போக்கில் தத்தம் மதமே உயர்ந்ததெண வாதிட்டுக் கொண்டனர். இதன் விளைவாக நாட்டில் அமைதி பறிபோயிற்று. மதங்கள் அனைத்தும் இறைவனை அடையக் காட்டி நிற்கும் பல்வகை வழிகளே என்பதை மறப் பதனால் இத்தகைய நிகழ்வுகள் சமுதாயத்தில் தோன்றி விடு கின்றன. இறை, இறையுணர்வு என்பனவற்றைக் கூர்ந்து ஆய்ந்து, சைவம், வைணவம் ஆகிய இரு பெரும் மதங்கள் கூறும் இறைவன் ஒருவனே என்பதை இந்நூல் தெளிவாக்கு கின்றது. கவிஞர் வி.மு. உலகநாதன், "மெய்யுணர்வில் உய்யும் தெய்வம்", "இறைவன் ஒருவனே", "இரண்டும் ஒன்றே" என்ற பகுதிகளை முதற்கண் அமைத்து நூலின் பொதுக் கருத் துகளை விளக்குகின்றார். அடுத்த நிலையில் திருமங்கை யாழ்வாரை—திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய பெருமக்களுடன் ஒப்பிட்டு அரிய செய்திகளை அளிக்கின்றார். இவற்றிற்கு அடுத்த பகுதியில் நம்மாழ்வாரை நாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய பெருமக்களோடு ஒப்பிடுகிறார். பொய்கையாழ்வாரும் நாவுக்கரசரும்; திருமழிசைப்பிரானும் நாவுக்கரசரும்; பெரியாழ்வாரும் நாவுக் கரசரும்; பெரியாழ்வாரும் சேந்தனாரும்; பெரியாழ்வாரும்

பட்டினத்தாரும்; ஆண்டாள் அன்னையும் மாணிக்கவாசகரும் என இந்நூலின் ஆய்வு மேலும் விரிவடைந்துள்ளது.

"நீர் நுமது என்று இவை
வேர் முதல் மாய்த்து இறை
சேர்மின் உயிருக்கு அது
நேர் நிறை இல்லே"

எனும் பாடலில் இறைவனைக் குறிக்க உவமைகள் ஏதும் கூறப் படாமையைக் கருத்தில் கொண்டு 'இறைவனுக்குரிய உவமை இல்லாமையால் இவ்விதம் பாடினார்' என நூலாசிரியர் கூறும் பாங்கு பாராட்டுதற்குரியது.

'நாமமும் உருவமும் கற்பிக்கின்றபோதுதான் என் தெய்வம் உன் தெய்வம் என்ற பேதம் வெளிப்படுகின்றது. இப்பேதம் இல்லாமல் நம்மாழ்வாரும், அப்பரும் பாடி மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்த எண்ணினார்கள்" என நூலா சிரியர் கூறும் கருத்து மிகவும் ஏற்புடையது. "வாழ்க்கையில் நன்மைகள் பலவற்றை அனுபவிக்கின்றோம், இந்த இனிய நன்மைகளை எல்லாம் அருள்பவன் பரம்பொருளே என்பதை உணர்தல் வேண்டும். சுகபோகங்கள் பலவற்றை நாம் அனுபவிக்கின்றோம். இந்தச் சுகபோகத்தை அனுபவிப்பது உடம்புதான்" என்பதை நாம் உணர்தல் வேண்டும் என்றும், 'பரம்பொருள் ஒருவனே" என்பதை நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், திருநாவுக்கரசர், திருமூலர் போன்ற பெருமக்கள் தெளிவு படுத்தினார்கள். படகு குளத்திலே நீரைக் கிழித்துக் கொண்டு போக எய்தி னாலும் கிழிந்த அந்நீர் உடனே ஒன்று சேர்ந்து காட்சியளிப் பதைப் போலவே இறைவனுக்கும், வேற்றுமைகள் ஏற்பட அழைத்தாலும், பெயர்களையும், உருவங்களையும் வேற்றுமை யுறச் செய்தாலும் எம்பெருமான் ஒருவனே என்பது வெள் ளிடைமலை" என்றும் நுண்மான் நுழைபுலத்தோடு விளங்கும் கருத்துரைகள் இந்நூலுள் பலவாகப் பொதிந்துள்ளன. திருமங்கையாழ்வார் நான்முகனையும், சிவனையும் திருமா லாகக் காட்டும்,

பாருருவி நீர்எரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும் போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற
மூவுருவம் கண்டபோது ஒன்றாம் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவம் தானே!

எனும் பாடலை எடுத்துரைத்து, தாம் எடுத்துக்கொண்ட கருத்திற்குச் சான்றளிக்கின்றார். "இரு விழுதுகளைக் கொண்ட ஒரே ஆலமரம் நிழலைத் தந்து, அதனடியில் வந்து தங்கி இருப்போரை மகிழ்விப்பதைப் போன்று எம்பெருமான் எல்லோருக்கும், உயிர்க்குலங்கள் அனைத்திற்கும் நிழலாக அமைந்து அருள் புரிகின்றான்" எனவும் நயவுரைத் தருகின்றார். ஒப்பாய்வுப் பகுதிகள் ஆழ்வார்கள், நாயன்மார்களின் எழுத்தொற்றுமைகளைப் படம் பிடித்துக் காட்டும் பயன்மிக்க பகுதிகளாக விளங்குகின்றன.

"சிந்திப்போர்க்கு என் உள்ளம் எப்போதும் தித்திக்கும்.' எனும் திருமங்கையாழ்வாரின் கருத்தை, "கள்ள நெஞ்ச வஞ்ச கருத்தை விட்டு அருத்தியோடு உள்ளம் ஒன்றி உளத்துளான்' எனத் திருஞானசம்பந்தர் பாடுவதை அழகாக எடுத்துரைக்கின்றார். இவ்வாறு ஒப்புமை காட்டும் பகுதிகள் மிகப் பல நூலின் ஒவ்வொரு பக்கமும் 'இறை ஒன்றே' என்னும் குறிக்கோளை நிலைநாட்டுவதாய் உரிய சான்றுகளோடு உயர்ந்து நிற்கின்றது.இறைவனைப்பற்றியதெளிவு வேண்டுவோர்தேடிக் கற்கத் தகவுடைய நூல் இந்நூல். கவிஞர் வி. மு. உலகநாதன் அவர்களின் முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது. துவளாமல் தமிழ்த் தொண்டாற்றி வரும் இத்தூயவரின் தமிழ்த் தொண்டு மேலும் வளர்க என வாழ்த்துகின்றேன்.

# தேனீ போல் மொய்த்திடுவோம் சேர்ந்து !

அறிவாய் அறியாமை அற்றுவிழ மெய்யாய்
நெறிகாட்டும் ஐயனாய் நேயக்—குறிக்கோளில்
நிற்கும் பிரமமாய் நீடுலகில் தான்மறைந்தே
பொற்புடன் வாழ்வான் பொலிந்து

உயிர்க்குலத்தைக் கண்டும் உயிர்களுள்ளும் நின்றும்
செயற்படுத்தும் மாயன் திறத்தை—முயற்சியிலார்
காணாரே! உள்விழைந்தார் காண்பாரே இன்பமுற
மாணடியில் நிற்பார் மகிழ்ந்து

எல்லா உலகிற்கும் எம்பெருமான் தான் ஒருவன்
வல்லமையால் தானியக்கி வாழ்வளிப்பான் — பொல்லாங்கைச்
சாய்த்துப் புனிதநலச் சால்பொளிரச் செய்வானை
வாய்மணக்கப் பாடி வணங்கு!

வெள்ளைமனத் தாலவனை வேண்டித் துதிப்பவர்க்குக்
கொள்ளையின்பம் வந்தே கொடுத்திடுவான்—வள்ளலவன்
அன்பர்க் கெளியன் அழகுடையப் பேராளன்
புன்மை அறுப்பானைப் போற்று!

அருவம் உருவம் அருவுருவ மாகி
உருள உலகம்தான் உய்ய—ஒருவனே
தானியக்கிச் சீரளிப்பான் தண்ணார் அடிமலரைத்
தேனீபோல் மொய்த்திடுவோம் சேர்ந்து!

—கவியமுதனார்

# நூலாசிரியன் உரை

ஒன்றாம் உலகை ஒருவனே தானியக்கி
நன்றாய் உயிர்களெல்லாம் நன்னெறியில்—இன்பமுறச்
செய்விக்கும் தெய்வத்தைச் சேர்ந்தொன்றாய் நாம்போற்றி
உய்வோம் வணங்கி உவந்து! (கவியமுதன்)

என்னும் இவ் இவ்வெண்பாவில் ஒன்றான உலகத்தை ஒருவனாகிய இறைவன் படைத்து அதை இயக்கி உயிர்க்குலத்தை தோற்றுவித்து நன்னெறியில் தலைப்பட வைத்து இன்பத்தை அனுபவிக்கச் செய்கின்றான், அந்த இறைவனை எல்லா மக்களும் பேதமின்றி ஒன்றாக இணைந்து உவந்து வணங்கி வருவதே வாழ்வாகும் எனக் கவியமுதனார் பாடுவார்.

இவர் கருத்து வழி ஒருமித்த உணர்வோடு மக்கள் இறைவனைப் போற்றி வருதல் சிறப்பாகும் என்று கருதியே அடியேன் இந்நூலை இயற்றிட விழைந்தேன். முன்னர் உலக மக்கள் அனைவருமே பேதமின்றி ஒரே தெய்வத்தை வணங்கி வந்தார்கள். காலப்போக்கில் மதங்கள் பல தோன்றின. தோற்றுவித்தவர்கள் ஒருவனாக ஒளிர்ந்த இறைவனுக்குப் பலப் பெயர்களும் பல வடிவங்களும் ஏற்படுத்திப் பேதங்கள் உண்டாக்கினார்கள். இவர்களாலே ஒரு தெய்வத்தைப் பலவாக உருவகப்படுத்தி மக்கள் வழிபடலாயினர். இக்காலத்திலும் இந்த நிலையே உலகத்தில் எல்லாவிடங்களிலும் இருந்து வருகின்றன.

தன்னலப் பேர்வழிகளே மத வேறுபாட்டையும் நிறவேறு பாட்டையும் ஏற்படுத்தி மக்களைப் பிரித்தார்கள். இந்தப் பிரிவினைப் போக்கை நீக்கவே இறையன்பில் ஆழங்கால் பட்ட சான்றோர்கள் ஆன்மநேயத்தால் எல்லா உயிர்களிடமும் அன்பைச் செலுத்தி இனிது வாழவும் மனிதநேயத்தால் உலக மாந்தர்களிடம் அன்பைச் செலுத்தி இன்பமுறவும் வழி காட்டினார்கள்.

இவர்கள் காட்டிய நெறியால் இன்றைய உலகம் சிறிது வெறித்தனத்திலிருந்து விலகி மனிதநேயத்தை வளர்க்கவும், அப்படி வளர்ப்பதற்கு வழிகாட்டும் இறையன்பில் தலைப்படவும் முயன்று வருகிறது. தொன்மை நெறியான வேத நெறியில் திருமால், சிவன், பிரமன் எனப் பேசப்படும் இறைவர்களைச் செய்கின்ற தொழிலுக்கேற்ப வேறுபடுத்திக் காட்டியதனாலே ஒருவனே செயல் கருதி மூன்றாகி மூன்று பெயர்களைக் கொண்டு, அத்தொழில்களை ஆற்றி வருகின்றான் என்று அது கூறிப் போற்றுகின்றது.

இவ்வாறு ஒன்றான இறைவனைப் மூன்றாகக் காட்டப் பெற்றதால் பின்னர் வந்த சந்தர்ப்பவாதிகள் இதைப் பயன் படுத்தியே மூன்று தெய்வங்களைப் பிரித்துக் காட்டியதோடு, மேலும் பிரிவினை அதிகமாகப் பல தெய்வங்களைப் படைத்துக் காட்டினார்கள்.

வைணவம் திருமாலையும், சைவம் சிவனையும், சாக்தம் சக்தியையும், காணாபத்தியம் கணபதியையும், கௌமாரம் முருகனையும், சௌரம் சூரியனையும் போற்றுகின்ற ஆறு மதங்களைத் தோற்றுவித்து, அவற்றிற்குரிய தெய்வங்களையும் பிரிவினை மனநோக்குடைய சந்தர்ப்பவாதிகள் பிரித்துக்காட்டினார்கள். இவர்கள்இவ்வாறு காட்டியதால் ஒன்றாயிருந்தமதம் இங்கே ஆறாயின. ஒருவனாயிருந்த இறைவன் ஆறாக வடிவங்கொண்டான். இப்படி ஆக்கப்பட்டதால்

பூசல்களும் பிணக்குகளும் உருவாயின. மனிதநேயத்தை வளர்க்க வந்த மதம் மனிதர்களிடையே சண்டையை ஏற்படுத்தி அழிக்க முற்பட்டது.

இக்கொடுமையைத் தவிர்க்கவே தொன்மை நெறியான வேதம் கூறும் திருமாலும் சிவனும் ஒருவனே எனக் காட்டிய நெறியில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடி இறைவன் ஒருவனே, வைணவம் சைவம் "இரண்டும் ஒன்றே" என் றுணர்த்திய நெறியில் இந்நூலை வரைந்தேன்.

தொன்மை நெறியில் ஆழங்கால் பட்ட ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியருளிய பாக்களை ஒப்புநோக்கியே இந் நூலினைச் சால்புற இயற்றினேன். செம்பொருளான எம்பெருமான் ஒருவனே எல்லா உலகிற்கும் பரத்துவப் பொரு ளாய் இருக்கின்றான் என்றும் அவனை எல்லா மக்களும் பேத மின்றிப் போற்ற வேண்டுமென்றும் இந்நூலில் தெரிவித்துள் ளேன். இந்நூலைப் படித்துப் பிணக்கின்றி இறைவன் ஒருவனே, அனைத்து மதங்களும் அவ்வொருவனைப் போற்று கின்றன எனத் தெரிந்து மக்கள் வேற்றுமையின்றி அந்த இறைவனைப் போற்றுவார்களானால் இந்நூலை இயற்றிய தின் பயனை அடியேன் பெற்றவனாவேன்.

இவ்வாறு பேதமின்றி அனைவரும் ஒன்றுபட்டு இறைவ னைப் போற்றிப் பெரும் பதம் எய்தவே இந்நூலை வரைந் தேன். வரைந்த இந்நூலைத் தமிழ் அன்பர்கள் அனைவரும் வாங்கிப் படித்து என்னை ஊக்கப்படுத்தி மேலும் இத்தகைய நூற்கள் பல எழுதத் தூண்டுமாறு வேண்டுகின்றேன்.

இந்நூலைக் கண்ணுற்ற பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், நூலின் பெருமையும் அருமையும் பாராட்டியதோடு, அடியேனையும் புகழ்ந்து மதிப்புரை எழுதி மகிழ்வித்த அவருக்கு என்றும் நன்றியுடையேனாவேன். அடுத்து அணிந்துரை வரைந்து, நூலிலுள்ள ஒவ்வொரு

கட்டுரைகளிலும் பொதிந்துள்ள கருத்துகளைப் பெருமையாக எடுத்துக்காட்டி நூலின் சிறப்பையும் எளியேனின் திறத்தையும் புகழ்ந்துரைத்த தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் த. பெரியாண்டவன் அவர்களுக்கு இதயங்கனிந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

இந்நூலுக்கு எழிலுற அட்டைப் படம் வரைந்த ஓவியர் முத்து அவர்களுக்கும் மறவாமல் நன்றி கூறுகின்றேன். மெச்சிப் போற்றும் வகையில் அச்சிட்டுதவிய கவிக்குயில் உரிமையாளர் பெ. தேசிகவிநாயகன் அவர்களுக்கும் அச்சகப் பணியாளர்களுக்கும் என்றும் நன்றிக்குறியேன் ஆவேன்.

இந்நூல் வெளிவரப் பெரிதும் காரணமாயிருந்து பொருளுதவி தந்து சிறப்பித்த, திருப்பதி—திருமலை தேவஸ்தான அதிகாரிகளுக்கு அன்புடன் நன்றியை உரியதாக்குகின்றேன். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, யாவுமே நடைபெறக் காரண பூதனாயுள்ள வேங்கடமேயவாணனின் பொன்னார் திருவடியில் சரணடைகின்றேன்.

அன்புள்ள,

**வி. மு. உலகநாதன்**

69, தொட்டிக்கலைக்
குமரப்ப முதலித் தெரு, சூளை,
சென்னை—600112

# மெய்யுணர்வில் உய்யும் தெய்வம்

எல்லாச் சமயங்களும் நன்னெறி கூறி, இறையருளைப் பெறவே வழி காட்டுகின்றன. நன்னெறியில் நிற்காத மக்கள் இறைவன் திருவளைப் பெறவியலாது. ஒழுக்க மற்றவர்களோ விழைவதையெல்லாம் துய்க்க முனைவார்கள். ஆம் அவர்கள் பிறருடைய பொருளைப் பறித்து வாழவே முனைவார்கள். ஒழுக்கச் சீலர்களோ என்றும் வழுவாமல் விழுமிய நிலையிலேயே திகழ்வார்கள். இவர்கள் ஒழுக்கத்தையே தம் உயிராகவே மதித்து வாழ்வார்கள்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்!

என்னும் திருவள்ளுவர் பாடும் நெறியில் நிற்பர். ஒழுக்கமுடையவர் தன்னலத்தையே மேற்கொள்ள மாட்டார். அறத்தின் வழி நின்று இறைவன் திருவடிப் பேற்றையெய்துவார். மெய்யுணர்வில் நிற்பவரே, பொய்யான போக வாழ்வை விரும்ப மாட்டார். மெய்யுணர்வு என்றது உண்மையான உணர்வே என்பதாகும். மனம் உண்மையான பொருளை அறிதலே மெய்யுணர்வு எனச் சான்றோர் புகல்வர். மெய்யுணர்வாளரின் சிந்தையில் தெய்வம் நிலைத்து வாழும். உண்மைப் பொருளே தெய்வமாகும், மற்றவையெல்லாம் பொய்ப் பொருளாகும். உண்மைப் பொருளை உய்த்துணரும் பண்பு

பாலர் செய்கின்ற அனைத்துப் பணிகளையும் அறத்தின் வழி நின்றே செய்வார். அப்படிச் செய்வதால் நிறைவான வாழ்வைக் காண்பார். செய்யும் அறப்பணியில் தெய்வம் அழகுற விளங்கி நிற்கும்.

அறப் பணியாற்றுகின்றவர் தம் வாழ்வில் சிறப்பினையே காண்பர். சிறப்பு என்பது வீடு பேற்றை உணர்த்துவது; இந்த வீடு பேற்றுடன் சுவர்க்கம் முதலான அனைத்தையும் தருவது அறப்பணியே! இந்த அறப்பணிக்கு மேலானதாக வேறேதுமில்லை. இதுவே பெரியதோர் ஆக்கத்தையும் தர வல்லது என்ற விவரத்தை,

''சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு!

என்று திருவள்ளுவப் பெருந்தகை கூறுவார். இதில் வீடு பேற்றையும் சுவர்க்கத்தையும் குறித்தவர், இவற்றை அருள்வது எது என்பதைக் கூற வந்தவர் அறம் என்று கூறி இறைவனைக் குறித்தார். அறநெறி நிற்பவரிடம் இறைவன் இனிதிருப்பான். பிறவிக்கு முதற்காரணமாயிருக்கும் அஞ்ஞானத்தை அகற்றும் ஆற்றல் பெற்றவர் அறநெறியாளர். இவரே, வீடு பேற்றை அருளும் செப்பொருளான இறைவனை அடையும் மெய்யுணர்வாளர் ஆவார்.

மனத்தின் கண் மாசில்லாதவரே, அஞ்ஞானத்தை நீக்கும் மெய்ஞ்ஞான முடையவராவார்; இத்தகையவரே சத்துப் பொருளான செம்பொருளைக் காண்பவராவர். பிறவித் துன்பத்தை அகற்றும் ஆற்றல் இறைவனைக் காண எண்ணும் நிறைந்த மனத்தையுடையவராலேதான் முடியும். பிறராலே முடியாது என்பதை வான்மறை வள்ளுவர்,

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு!'

என்று குறித்தார். இதில் பிறப்பைப் பேதைமை என்றார். ஆசையால் புலன்கள் வழி அலைவோரால் ஈசனை உணரவியலாது போகும். இப்படி வாழ்பவர்கள் மீண்டும் மீண்டும் துன்பமாகிய பிறப்பெடுத்தே உழல்வோராவார்கள். அஞ்ஞானமாகிய பேதைமையிலிருந்து விடுபட்டாலே பிறவித் துயர் அறுபடும். அதற்கு மெய்ஞ்ஞான அறிவு தேவை. இவ்வறிவால் செம்பொருளான எம்பெருமானைக் காணவியலும் என்று மேற்குறித்த குறளில் குறித்தார்.

மெய்யுணர்வில் ஆழங்கால்பட்டவர் மனத்தில் தெய்வம் இனிது ஒளிரும் என்பதைச் "செம்பொருள் காண்ப தறிவு" என்ற தொடர் மொழியால் குறித்தார் திருவள்ளுவர். இவர் குறித்துணர்த்திய குறளில் இறைவனின் பெயரினை உருவத்தினைச் சுட்டாமல் கூறியிருத்தல் அறியத்தக்கது.

மனித உயிர் இனிப் பிறவாமை எய்தி நிற்க புனிதனாம் இறைவனின் திருவடியைப் பாடுதல் வேண்டும். அவனை எண்ணாமல், பிறபொருளில் மயங்கும் மாந்தர் அந்த மயக்கத்தால் மீண்டும் பிறவியெடுத்து ஆட்படுவர் என்பது திண்ணம். இதைத் திருமங்கை ஆழ்வார் குறுகிய மனத்தொடு இருந்தவரின் நிலையைத் தெரிவிக்கின்றார்.

"ஆம்;குறுகிய மனநோக்கால் இழிந்தத் தொழிலில் அலைப்புண்டேன். நாய்களைப் போன்றே கேவலமாக இருந்தேன். இந்நிலையால் ஓடி உழன்றேன். உயிர்களைக் கொன்றொழித்தேன். உண்மை நெறியை உணரும் அறிவின்றிக் கெட்டேன். துன்பத்தில் உழன்ற நான் பின்னர் காலம் கடந்து உணர்ந்தே மேற்குறித்த தவற்றால் யமன் உலகத்தில் சிக்கி இன்னல்பட நேருமே என்றஞ்சினேன். ஆதலால் இதற்குக் கழுவாய் தேடவே பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் உன்னை நாடி வந்தேன். உன் திருவடியே என் பாவத்தைப் போக்கும் மருந்து எனக் கருதிப் போற்றுகின்றேன் என்றார். தவறு செய்பவர்கள் தம் பாவத்திற்காகக் கழுவாய்தேட, கவலையைக்

களைய எம்பெருமானின் திருவடியில் சரணடைய வேண்டும். நாம் இப்பிறவியில் என்ன தவறுகள் செய்கின்றோமோ, அத்தவற்றிற்கேற்ப மீண்டும் பிறவி எடுத்துத் துன்பத்தை அநுபவிக்க நேரும்.

ஆதலால் அருளாளன் திருவடியைப் போற்றி, யம பயத்தையும் பிறவா நிலையையும் போக்க இயலும் என்பதால் திருமங்கையாழ்வார் மேற்குறித்த செய்தியைப் புலப்படுத்தும் வகையில்,

"கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடும் திளைத்திட்(டு)
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன்
உணர்விலேன் ஆதலால் நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித் திட்டேன்
பரமனே! பாற்கடல் கிடந்தாய்
நாடிநான் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்!"

என்று பாடுகின்றார். இப்பாசுரத்தில் அவர் குறித்தவாறு உலகத்தில் மக்கள் உழல்கின்றார்கள். அப்படி உழல்பவர்கள் கொண்ட ஆசையால் மீண்டும் பிறவி எடுத்துத் துன்பம் அநுபவிக்க வேண்டியதாகவேயிருக்கும், செய்கின்ற தவறுக்கேற்ப எமனுலகத்தில் இன்னல் படவேண்டியதாகவேயிருக்கும்; ஆதலால் இத்துன்பங்களிலிருந்து விடுபடவே எம்பெருமானின் திருவடியில் சரணாகதி யடைய திருமங்கை ஆழ்வார் வழிகாட்டுகின்றார்.

மேற்குறித்த பாசுரத்தில் எம்பெருமானின் திருநாமத்தினைக் குறிக்காமலும் அவன் கொண்டிருந்த கோலத்தைச் சுட்டாமலும் "நைமிசாரணியம்" என்னும் பதியில் இருத்தலை மட்டும் குறித்தார். இவ்வாறு குறித்துப் பாடியதில் பொதுமை நோக்கும் மெய்யுணர்வின் மாட்சியும் இருத்தலை அறியலாம். மெய்யுணர்வுடையார் மனத்தில் உறையும் தெய்வத்தைச் சிவஞான போதம் அருளிய மெய்கண்ட தேவர்

''அவையே தானேயாய் இருவினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே!''

என்றார். இதில் பரம் பொருள் உயிர்களோடு ஒன்றாயும் தனித்தும் நீக்கமின்றி நிற்கின்றான் என்றார். இவர் அவனைப் பெயர் கூறியும் உருவத்தை இயம்பியும் பேசினாரிலர். மெய்யுணர்வில் தலைப்படுபவர் அகப்பற்றும் புறப்பற்றும் இன்றியே இருப்பர். ஆம் அந்த இருபற்றினையும் வேரோடு அறுத்திடுவர். இப்படி அறுத்தவர்களின் சிந்தையில் இறைவன் நிறைந்திருப்பான். இத்தகைவருக்கு எத்தகையதொரு, பொருளையும் உதாரணம் காட்டவியலாது என்று நம்மாழ்வார்

''நீர் நுமது என்று இவை
வேர் முதல் மாய்த்து இறை
சேர்மின் உயிருக்கு அதன்
நேர் நிறை இல்லே''

என்று பாடுவார். இதில் இறைவனைச் சேர்ந்த உயிர் பிறவாமைப் பேற்றை எய்தி இருக்கும் என்றார். எடுத்துக் காட்டோ எதுவுமே இல்லாமல் உயர்ந்திருக்கும், இறைவனைச் சார்ந்தவருக்கும் எவற்றையும் எடுத்துக்காட்ட வியலாது என்றார். எம்பெருமானுக்குத் திருஉருவம் இல்லையென்றோ உள்ளது என்றோ கூறவியலாது. அவன் உருவமோ எல்லையற்றது. இவ்வாறு எல்லையில்லாமல் எங்கும் வியாபகமாயிருப்பவனைப் பற்ற வேண்டுமானால் பற்றற்ற நிலையில் ஒவ்வொருவரும் இருத்தல்வேண்டும். பற்றற்ற நிலையில் விளங்குபவரே மெய்யுணர்வுடையவர் ஆவார். அந்த மெய்யரின் உள்ளத்தில் தெய்வம் உறையும் என்பது தெளிவு.

பற்று அற்று விட்டது என்று சொன்ன மாத்திரத்திலேயே அவ்வுயர் வீடுபெற்றது ஆகும். அதாவது உயிர் மீண்டும் பிறவாமல் விடுதலை பெற்றதாகும். பிறத்தல் இறத்தல் இல்லாத நிலையைப் பெற்றதாகும். எனவே வீடு பேற்றை எய்துதற்கோ இறைப்பற்றைக் கொள்ளுதல் வேண்டுமென்பதை நம்மாழ்வார்

அற்றது பற்றெனில்
உற்றது வீடு, உயிர்
செற்றது மன்னுறில்
அற்றிறை பற்றே

என்று கூறுவார். அவர் இதில் பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்கு, மெய்யுணர்வு பெற்றவர்களால் இயலும் என்பதை அவர் கூறியிருத்தலாலே காணலாம்.

மேற்குறித்த பாசுரத்தில் உலகியல் பற்றிலிருந்து விடுபடும் உயிர் அப்போதே வீடு பேற்றினை எய்திவிடும் என்றவர், அந்த வீட்டினை அடைந்து விடுவதே உயிருக்கு முடிவானதன்று. அதற்கு மேலும் ஒரு நிலையுள்ளது. அதுதான் எம்பெருமானின் திருவடியாகிய பற்று என்று கூறுகின்றார். அவனடியை எவ்வாறு அடைய முடியுமென்றால், பக்தர் செய்து வரும் ஆராவமுதனின் பக்தியை இடையறாமல் செய்து வருபவருக்கோ வீட்டுலகம் இடையில் தோன்றி அப்பக்தரைத் தடுத்து விடும். அவனடியைக் காண்பிக்காமல் மறைத்து விடும். எனவே அவ்வாறு தடுக்கும் வீட்டுலகிலேயே பக்தன் நிற்காமல், பொற்பாதம் உடையவனின் திருப்பதத்தைக் காணும்வரையில் கொண்ட பக்தியைத் தொய்வின்றி நிகழ்த்துதல் வேண்டும். அப்படித் தொடர்ந்து செய்யும்போதுதான் ஒப்பிலா அப்பனின் திருவடிப் பேறுகிட்டும் என்றே கூற வந்த நம்மாழ்வார்

... ... ... "உயிர்
செற்றது மன்னுறில்
அற்று இறைபற்றே!"

என்று குறித்துக் காட்டும் தொடர் மொழியினைக் கொண்டு தெளியலாம். இறைவனை அடைய வழிமுறைகளைக் காட்டிய நம்மாழ்வார், பக்தி நெறியில் தலைப்படும் அன்பர்கள் சத்திய சீலனை எய்தி விட இயலும் என்று பாடுவார். மெய்யுணர்வு கொண்டோரால் தான் தெய்வ நிலையை எய்த இயலும் என்பதை அப்பர் பெருமானும்

"குறிக்கோளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிர ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே!"

என்று பாடியுள்ளார். அருளாளனைப் பற்றி அறிவிக்கும் அடையாளத்தையும் குறியையும் அவன் வதியும் கோயிலையும் நெறிமுறைகளையும், நேர்மைகளையும் அறிந்தவர்களாக உதட்டளவில் பிதற்றும் போக்குடையவர்கள் ஆயிரக்கணக்கில் மறைகளை முழக்குவதால் என்ன பயன் ஏற்படும்? ஏதும் ஏற்படாது. இவர்களைப் பற்றி அவர் உய்த்துணர்ந்தறியாத மெய்யுணர்வு அற்றவர்கள் ஆவார்கள் என்பதை "பொறி யிலீர்" என்று விளித்தும் இழித்தும் பேசுவார்.

வாயால் வேதங்களை ஓதுவதால் மட்டும் பயன் விளை யாது என்றவர், அவ்வேதத்தில் பொதிந்திருக்கும் தத்துவம் கோயிலாக அமைந்துள்ள நுட்பம் எல்லாம் நம் மனத்தில் புகுந்தால், அப்போதே குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிமுறைகளும், எம்பெருமான் நின்றருளும் தன்மையும் நன்கு புலனாகும் என்று அப்பர் பெருமான் செப்பியுள்ளார். இவர் தம் கருத்தினால் மெய்யுணர்வில் ஆழங்கால்பட்ட வராலே தான் எம்பெருமானை அறிய முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். எங்கும் நீக்கமற நிற்கும் இறைவன் மெய்யுணர்வில் நிற்பவரின் மனத்திலே மகிழ்ந்துய்வான் என்பது வெள்ளிடைமலை!

அப்பர் பாடிய இந்த அழகிய பாடலில் இறைவனைப் பற்றிக் கூறுகின்ற பெயருமில்லை. உருவமும் சொல்லப்பட வில்லை. நாமமும் உருவமும் கற்பிக்கின்றபோது தான் என் தெய்வம் உன் தெய்வம் என்ற பேதம் வெளிப்படுகின்றது. இப்பேதமில்லாமல், நம்மாழ்வாரும், அப்பரும் பாடி மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்த எண்ணினார்கள். ஆம் ஒன்றா யுள்ள இறைவனை அன்புடன் சேர்ந்து போற்றி இன்பம் துய்க்கவே மனித சமுதாயத்திற்கு உணர்த்தினார்கள். மெய்யு

ணர்வில் தலைப்படும் அன்பர்களின் அகத்தின்கண் மெய்ய னாய் நின்று நலம் புரக்கும் தெய்வமான எம்பெருமான் உய்வான் என்பது தேற்றம். எம்பெருமானை நம்பிக்கையுடன் யார் எண்ணித் துதிக்கின்றார்களோ அவர்களின் மனக் கோயிலில் தினமிருந்து நினைவு கூர்ந்து நல்வினையாற்றி விளங்கிடவழிகாட்டுவான். அப்படி வழிகாட்டும்இறைவனைத் தொழுது நலங்காண்பது நல்லது. எனவே, நினைத்தால்தான் அவன் இணங்கி வருவான்; அவனை வணங்கினால்தான் மனத் தின்கண் நிலைப்பான் என்பதைத் தம் மனத்திற்குக் கூறி உலகத்தாரும் தம் மனத்திலே அந்தப் பரம் பொருளை நிறுத் தவே பொய்கை ஆழ்வார்.

"உளன்கண்டாய்" என்று கூறுகின்றார். இதை இறைவன் இருக்கின்றானா? என்று கேட்பவர்களுக்கு உணர்த்தவே அன்றே அவனிருக்கின்றான் என்று கூறினார் அவர். அவன் எங்கே இருக்கின்றான் என்று கேட்பவர்க்கு என்றும் எங்கே யும் இருக்கும் அவன் "உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்" என்று நினைப்பவர்கள் நெஞ்சத்தில் இங்கிதமாக உள்ளான்; ஆம் அவன் வாஞ்சையுடன் சென்று தங்கியுள்ளான் என்று பேசுவார்.

அவன் உத்தமன். நித்தம் நத்தித் துதிப்பவர் நெஞ்சத்தில் சத்தியமாய் சார்ந்து நிற்பான் என்று விளம்புவார். அவன் வெள்ளமெனும் கடலின் மேல் உள்ளம் மகிழ்ந்து அறிதுயில் செய்கின்றான் என்கின்றார். பாவங்களையெல்லாம் வேகச் செய்து ஒழிக்கும் வேங்கடத்தின் மலையிலே நிற்கின்றான் என்றும் கூறுகின்றான். இக்கருத்தை,

**உள்கண்டாய் நன்னெஞ்சே உத்தமன் என்றும்**
**உளன்கண்டாய் உள்ளுவார் உள்ளத்து—உளன்கண்டாய்**
**வெள்ளத்தில் உள்ளானும் வேங்கடத்துமேயானும்**
**உள்ளத்தில் உள்ளான் என்று ஓர்"**

என்று பாடிக் காட்டினார். இவரைப் பார்த்து இவர் மனம் பரம் பொருள் எங்கேயிருக்கின்றான் என்று கேட்டிருக்கவேண்டும். அதற்குவிளக்கம் தரும் வகையில் மேற்குறித்த பாசுரத்தை இவர் பாடியிருப்பதாக நாம் அறிகின்றோம். இவர் மனம் கேட்டிருக்காது, ஆனால் அவர் காலத்தில் இறைவன்மீது பற்றில்லாத கீழோர் ஒருவர் கேட்டிருக்கக் கூடும். அவருக்கு நேராக எடுத்துக் கூறினால் தர்க்கம் உண்டாகும் என்பதால் தம் மனத்திற்குக் கூறி, கேட்பவரும் மற்றவரும் உணர்ந்து இறைப்பற்றில் ஈடுபாடு கொள்ளவே மேற்குறித்த் பாசுரத்தைப் பொய்கை ஆழ்வார் பாடியிருக்கின்றார்.

இப்பாசுரத்தை யாருக்காகப் பாடியிருந்தாலும் இதில் கூறியுள்ள செய்தி, மெய்யுணர்வு பெற்றவர் மனத்தில் எம்பெருமான் விரும்பியிருப்பான் என்கின்ற விவரம் மிகத் தெளிவாகப் பேசப்பட்டுள்ளதை அறிகின்றோம்.

"மெய்யுணர்வே உள்ளொளியாம், மேலோர்தம் உள்ளம்தான்
தெய்வம் உறையும் திருக்கோயில்—வையமிசை
நன்றாய் அறத்தொண்டை நாளும் விழைந்தாற்றி
நின்றிடுவோர் வாழ்வார் நிலைத்து!"

என்று கவியமுதனார் இந்த நேரிசை வெண்பாவில் மெய்யுணர்வு பெற்ற நல்லோரைப் பற்றிக் கூறியுள்ளார். மெய்யுணர்வுடையவர் உள்ளொளி பெற்றவர் என்கின்றார். இவரையே மேலோர் என்றும் புகழ்ந்தார்.

இவர் உள்ளத்தில் இறைவன் இருப்பான் என்றார். மெய்யுணர்வுடையாரின் உள்ளத்தையே எம்பெருமான் வதியும் திருக்கோயிலாகக் கூறுகின்றார். இத்தகையவர் என்றும் அறத்தொண்டில் ஆழங்கால்பட்டு, இப்புவியில் ஒப்பின்றி எப்போதும் நிலைத்து வாழ்வார் என்று கூறிப் போற்றுவார். மெய்யுணர்வைப் பெற்றவர் உள்ளத்தில் இறைவன் நிறைந்திருப்பதால் அந்த உள்ளமே உள்ளொளி பெற்றதாகும் என்றும் புகழ்வார்.

இறைவன் வாழும் உள்ளத்தில் ஒளி நின்று வீசுவதால், அந்த உள்ளம் உள்ளொளி பெற்றதாகும். ஆம் பரம் பொருள் இலங்கும் உள்ளம் ஒளி பெற்ற உள்ளம். ஆதலால் கவியமுதனார், மெய்யுணர்வு பெற்றவரின் உள்ளத்தை உள்ளொளி உடையதாகக் கூறியது போற்றுதற்குரியதாகும்.

இது காறும் கூறியவற்றால் மெய்யுணர்வு பெற்றவர் உள்ளத்தில் எம்பெருமானாகிய இறைவன் நின்று உய்வான என்ற செய்தி கூறப் பெற்றது. இக்கருத்தைத் திருவள்ளுவர், திருமங்கை ஆழ்வார், மெய்கண்ட தேவர், நம்மாழ்வார், திருநாவுக்கரசர் கவியமுதனார் முதலானோர் வலியுறுத்திக் கூறினார்கள். இப்படிக் கூறியவர்களின் கருத்து வழி நின்று மெய்யுணர்வில் மேன்மையுற்று வாழ்தல் நம் கட்டுப்பாடாகும்.

## நேரிசை வெண்பா

உள்ளம் தெளிவானால் உண்மைவாழ் அவ்விடத்தே
வள்ளல் பெருமாயன் வாழ்ந்திடுவான்—விள்ளவொண்ணா
நல்லின்பம் நல்கிடுவான் நாயகனைப் போற்றிடுவோர்
செல்வரே வாழ்வார் சிறந்து

# இறைவன் ஒருவனே!

தமிழகத்திலும் பாரதம் முழுவதிலும் உள்ள எல்லா மாநிலங்களிலும் போற்றப்படும் சமயங்கள் பலவாகும், அவற்றுள் சிறப்பாகப் போற்றப்படுகின்ற சமயங்கள் இரண்டே! அவை வைணவமும் சைவமுமாகும். இச்சமயங்கள் கூறும் தெய்வங்கள் திருமாலும், சிவனும் ஆகும்.

இத்தெய்வங்கள் தம் அடியார்களுக்கு விரும்பி வந்து அருளிய நிலையினை ஆழ்வார்களும் நாயன்மார்களும் சிறப்பாகப் பாடித் தெரிவித்துள்ளார்கள். இந்த மண்ணுலகமே போற்றும் வேதங்களும் இத்தெய்வங்களின் பெருமையை அருமையாகத் தெரிவிக்கின்றன. தமிழ் கூறு நல்லுலகத்தில் தோன்றிய அமிழ்தம் அனைய சங்க இலக்கியங்களும் இந்த இரு தெய்வங்களின் ஏற்றங்களைப் போற்றிப் புகழ்ந்துள்ளன.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் நித்தமும் சத்திய நெறியில் நிலைத்தவர்களாவார்கள். உள்ளுருக உவந்து பாடித் தம் தெய்வங்களிடம் மன்பதை உய்வதற்கு அருள் வேண்டி நின்றார்கள். மெய்யுணர்வில் நின்று எல்லா மக்களும் உய்யவே வழி காட்டினார்கள். இவர்கள் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்கின்ற பெருநோக்கோடும் அருள் நோக்கோடும் பரம் பொருளிடம் முறையீடு செய்தார்கள்.

மக்கள் மாட்சிமை பெற்று விளங்கவே, பயன் எய்தி உய்யவே வழிகாட்ட வந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் தாம் போற்றிய நெறியில் நின்று பாடினாலும், அப்பாடல் களில் பெய்துள்ள கருத்துகள் ஒருமித்திருக்கும் வகையில் பாடி யிருக்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் பாடியருளியிருக்கும் கருத்துகளைக் கொண்டு பார்த்தால் "இறைவன் ஒருவனே' என அறிய முடிகின்றது.

ஒன்றாக இருக்கும் இந்த உலகத்தையே நீர், மலை முதலான வற்றால் பிரித்துப் பல்வேறான, கண்டங்கள் என்றும் தேசங் களென்றும், நாடுகளென்றும் பேசுதல் போன்று ஒருவனான இறைவனைப் பெயர் உருவப் பேதங்களால் வெவ்வேறாக்கியே நாடுகள் தோறும் ஊர்கள் தோறும் பேசப்படுகின்றன. எங்கும் எவ்விடத்தும் நீக்கமற நிற்கும் பரம் பொருளின் பெற்றியினை அற்புதமாகப் போற்றிப் பரவி வந்த ஆழ்வார்களும் நாயன் மார்களும் பாடியருளியப் பாடல்களில் பெய்துள்ள கருத்து களில், இறைவன் ஒருவனே என்பதைக் குறித்திருத்தலைக் காணலாம்.

உலகத்தில் உய்யும் மக்கள் தாம் நடத்துகின்ற வாழ்க்கைக் குப் பொருள் அவசியம் எனப் பொருள் தேடும் வகையிலே நன்முயற்சியில் தலைப்படுகின்றார்கள். ஆம், சிரமமின்றி வாழ மக்களுக்குப் பொருள் மிக வேண்டப்படுவதாகும் என்பது உண்மையே!

என்றாலும், அதற்காக உண்மையை மறந்து தவறாகச் செயல்படுவது ஏற்புடையதாகாது. தோன்றிய மாந்தர்கள் மாண்புடையவர்களாக மிளிர்தல் வேண்டும் என்பதால் அருளி யலை மறந்து பொருளியலைப் பெரிதாகக் கருதிச் செயல்படு வது, தவறான போக்கில் கொண்டுபோய் விட்டுவிடும் என்பதை ஆழ்வார்களும் நாயன்மார்களும் வலியுறுத்தி யுள்ளார்கள்.

வாழ்க்கையில் நன்மைகள் பலவற்றை அனுபவிக்கின்றோம். இந்த இனிய நன்மைகளையெல்லாம் அருள்பவன் பரம்

பொருளே என்பதை உணர்தல் வேண்டும்; சுக போகங்கள் பல வற்றினை நாம் அனுபவிக்கின்றோம்; இந்தச் சுகபோகத்தை அனுபவிப்பது உடம்புதான் என்பதை உணர்தல் வேண்டும்.

ஆம், சுகபோகச் சுவையினை அனுபவிக்கும் உடம்பு அவற்றைத் தேடிக் கொள்ளவே விரும்புகிறது. இவ்வாறு தேடு வதற்கு அமைந்துள்ள ஐந்து புலன்களோ தூண்டிச் செயல் படுத்துகின்றன. இப்புலன்கள் பேராசையால் தவறுகளைச் செய்யவும் வைப்பனவாகும். செய்கின்ற தவற்றால் உடம்பு பெரும் துன்பங்களையெல்லாம் அனுபவிக்க நேருகின்றது. இன்றும் புலன்களுக்கு அடிமையானவர்கள் தவறுகளை மிகுதி யாகச் செய்தே அடிபட்டு, இடர்ப்பட்டுச் சாகின்றார்கள்!

இப்படி அடிப்பட்டு அழியும் உடம்பைப் பெற்றவர்களின் புலன்கள் நல்வழியில் செயல்பட ஆழ்வார்களும் நாயன்மார் களும் வழிகாட்டியுள்ளார்கள். உடம்பைப் படைத்த இறைவன் உடம்பினுள் உயிரையும் அமைத்துள்ளான். அழியும் உடம்பில் அழியாத உயிரையும் வைத்து, அந்த உயிர் மீண்டும் பிறவாத் தன்மையை அடையவே மனித உடம்பில் உயிரை வைத் துள்ளான்.

எண்ணிறந்த பிற உயிர்கள் எல்லாமும் பிறவாத நிலையை பெறவே நினைப்பதில்லை. காரணம் அவ்வுயிர்கள் பெற்ற உடம்போ எம்பெருமானைப் பற்றி அறிவதற்குரிய தகுதி யினைப் பெறவில்லை. ஆதலால், இவ்வுயிர்கள் மீண்டும் பிற வாத நிலையினைப் பெறுவதிலில்லை. பிறந்து பிறந்து இவக்கின்றன.

எனவே, பிறவா நிலையைப் பெறுவதற்குரிய உடம்பைப் பெற்ற உயிர் மனித உயிரே! ஆதலால், அந்த அருமையான மனித உயிர் தவறான போக்கில் சென்றால் மீண்டும் பிறப் பெடுத்து இடர்ப்பட வேண்டியதாகும். ஆதலால் கிடைத்தற் கரிய மனித உயிர் மாட்சிமையைப் பெற்று உய்யவும், பின்னர்

பிறவாநிலையை அடையவும் இவற்றிற்காகவே இறைவனைப பற்றியே உய்யவும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் வழிகாட்டியுள்ளார்கள். பிற உயிர்கள் போல் மனித உயிர்கள் இருப்பதில்லை. மனித உயிர்களுக்குரிய பண்பினை உணர்த்தியே இறைவனின் திருவடிப் பேற்றினை அடைந்திடத் தெளிவினைப் பெறவே வகை செய்தார்கள். அறம், பொருள், இன்பம், வீடு எனக் கூறப்படும் நான்கான உறுதிப் பொருள்களை அறிந்து செயல்படவும் உணர்த்தினார்கள்.

அறநெறியில் நின்று, சேர்த்த பொருளை, ஈத்துவக்கும் பண்பில் இன்பம் எய்திட எம்பெருமானாகிய திருவடிப் பேற்றினை அடைந்திட இச்சான்றோர்கள் பாங்குறப் பாடி அருளினார்கள். இறைவனின் திருவடிகளும் திருநாமங்களும் மனித குலத்தை, உயிர்க் குலத்தை வாழ வைப்பனவாகும். எம்பெருமானுக்குத் திருநாமங்கள் பல வைத்துப் போற்றினாலும் உருவங்களைப் பல்வேறாக அமைத்து வழி பட்டாலும் அவன் ஒருவனேயாவான்.

பரம் பொருள் ஒருவனே என்பதை நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார், திருநாவுக்கரசர், திருமூலர் போன்ற பெருமக்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அம்பைக் குளத்தினில் நீரைக் கிழித்துக் கொண்டு போக எய்தினாலும், கிழிந்த அந்நீர் உடனே ஒன்றாகச்சேர்ந்து காட்சியளிப்பதைப் போலவே இறைவனுக்கும் வேற்றுமைகள் ஏற்பட அழைத்தாலும் பெயர்களும் உருவங்களும் வேற்றுமையுறச் செய்தாலும் எம்பெருமான் ஒருவனே என்பது வெள்ளிடைமலை.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனக் கூறும் நெறியில் உலகெங்கும் உள்ள மக்கள் யாவரும் ஒரு குலம் என்னும் மனித குலத்தைச் சார்ந்தவர்களே! அப்படியே உலகெலாம் போற்றும் இறைவன் ஒருவனேயாவான் என்பதையும் அறிதல் வேண்டும். மனித உயிர்களுக்கு மட்டுமல்லாமல் பிற உயிர்களுக்கும் எம்பெருமான் ஒருவனே காரண பூதனாவான். அப்படி அவன் படைத்த உயிர்களில் எல்லாம் நின்று வாழ்கின்றான். உடம்

புக்குள் உயிரை மறைத்து வைத்து அற்புதங்களை நிகழ்த்து கின்றான் என்பதனை நம்மாழ்வார்,

"திட விசும்பு எரிவளி நீர் நிலம் இவைமிசை
படர் பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே!"

என்று பாடுகின்றார். இதில் ஐந்து பூதங்களான வானம் நெருப்பு, காற்று, நீர், நிலம் ஆகியவற்றுள் பரம்பொருள் நின்று செயல்படுத்துகின்றான்; எவ்வாறு அவற்றை இயக்கு கின்றான் என்றால், உடம்பில் உயிரிருந்து இயக்குவதைப் போன்று இயக்குகின்றான் என்று உவமைப்படுத்திக் காட்டு கின்றார் நம்மாழ்வார். உடம்பை நடத்தும் உயிர்கூட அவனே தான், தன்னை வெளிப்படுத்திக் காட்டிக் கொள்ளாமல் மறைந்து நின்று இயக்குகின்றான் என்று கூறுகின்றார். எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் நின்று இடக்கும் இறைவனையே புகழ் வாய்ந்த வேதங்களும் ஞானச் சுடரொளி எனப் போற்றுகின்றன. இவனோ பிரளயகாலத்தில் எல்லாப் பொருள்களையும் உண்டு காத்தருளிய பேரருளாளன் ஆவான்

தேவர்களும் அறிய முடியாத நிலையிலிருந்து மூலப் பொருள்களான விண் முதலான எல்லாப் பொருள்களும் செய லாற்றவே இவன் காரணனாய் இருக்கின்றான். இவன் அனைத் திற்கும் முதன்மையாயிருந்து நடத்தும் அருட்குணம் படைத் தவனாவான்; பிரளயகாலத்தில் உண்டு எல்லாவற்றையும் தன் வயிற்றில் வைத்துக் காத்துப் பிரளயத்திற்குப் பின்னர் அவற்றையெல்லாம் மீண்டும் தோன்றுமாறு செய்ய வைத்தவ னும் இவனேயாவான்.

இவ்வாறு தோன்றச் செய்த இவனே பிரம தேவனாவான். அழிக்கின்ற நிலையில் முப்புரத்தை எரித்த சிவபெருமானே ஆவான். பரிணாம வளர்ச்சியினை ஏற்படுத்தும் அருள் தன்மையும் உடையவன் இவனேதான். சிவனாகவும் பிரமா

வாகவும் இருந்து உலகைக் காக்கின்ற திருமாலே இவன் என்று மனம் உருகும்படி எம்பெருமானைப் பாடி இசைக்கின்றார்.

இவ்வாறு வளமார் தமிழெடுத்து உளமுருகப்பாடியே இசைத்த நம்மாழ்வார் இசைபட இப்புவிமிசைத் திகழ்ந்தார். அவர் இசைத்த இன்னொரு பாசுரத்தில்

"சுரர் அறிவு அருநிலை விண் முதல் முழுவதும்
வரன் முதலாய் அவை முழுதுண்ட பரபரன்
புரம் ஒரு மூன்றெரித்து அமரர்க்கும் அறிவியந்து
அரன் அயன் என உலகழித்து அமைத்து உளனே!"

என்பதாகும். இதில் எம்பெருமானான திருமாலே அழித்தல் தொழில் செய்யும் சிவனாகவும், படைக்கும் தொழிலாற்றும் பிரம்மாவாகவும் இருந்து அருளுகின்ற பெருமாயனாகத் திகழ்கின்றான் எனப் பாராட்டியே நம்மாழ்வார் மேற்குறித்த பாசுரத்தில் தெரிவிக்கின்றார். இதனால் உலகத்தை நடத்துபவன் ஒருவனேயாவான். அவனே திருமாலாவான் எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு பாடியருளியதால் நம்மாழ்வாரின் பரந்த அறிவையும் ஆழமான சிந்தனையையும் நாம் அறிய முடிகின்றது. இவர் சாதியை வெறுத்தவர். மனித குலத்தைத் தனிச் சிறப்புடன் விளங்கி நிற்க அறவழி காட்டியவர். உன் தெய்வம் தாழ்ந்தது என் தெய்வம் சிறந்தது எனப் பேசும் மாந்தரின் வேற்றுமையை மாற்ற அவர்களைத் திருத்திப் பேதமற்ற நிலையிலிருந்து இறை வழிபாடு செய்வதற்கு வழி காட்டினார்.

அப்படி வழி காட்டியவர் ஒப்பிலா தெய்வம் ஒன்றே என்று நன்கு உணரச் செய்தார். சிவபிரானும் திருமால்தான் எனப் பிணக்குத் தோன்றாதவாறுஇதமாக எடுத்துரைத்த பண்பாளர் நம்மாழ்வார்.

மூன்று திருமூர்த்திகளாக உள்ள பிரம்மாவும், சிவனும், திருமாலும் ஆக்கல், அழித்தல், அருளல் என்னும் செயலால் உலகம் புரக்கும் அருளாளர்கள் ஆவார்கள். இந்த மும் மூர்த்திகளாலே உலகம் செயற்படுகின்றது. இத்தகைய தெய்வங்களுள் பிரம்மாவைப் பற்றி யாரும் பேசுவதில்லை; யாரேனும் குறைவாக வேறுபடுத்திக் கூறினாலும் அதற்காக எதிர்த்துக் கூறி மறுப்பவர் எவருமிலர்.

ஆனால் சிவபிரான் தான் அனைத்தும் நல்கும் அத்தன் என்று கூறி, திருமாலைக் குறைவாகப் பேசினாலும் அல்லது திருமாலைப் பெருமையாகக் கூறி, சிவபிரானைச் சிறுமைப் படுத்துக் கூறினாலும் எதிர்ப்புகள் தோன்றி மன்பதையில் இன்னல் ஏற்பட்டுள்ளதை யாரே மறுக்கவியலும், இந்த வேறுபாட்டைக் களையவே எல்லாத் தெய்வங்களும் ஒன்று எனக் கூறும் வகையில் நம்மாழ்வார் சிவபெருமானும் திருமாலே என்று பாடிக் காட்டினார். மற்றும் படைக்கும் தெய்வமான பிரம்ம தேவனும் திருமாலே எனக் கூறியவர் அவ னையே விண்ணுக்கும், மண்ணுக்குமாய் ஓங்கி நின்று—வரம்பு கடந்து நின்ற பெருமான் என்றார். பிரளயகாலத்தில் படைத்த உலகத்தை அழிந்து போகாமல் காத்திட உண்டும் தன் வயிற்றில் வைத்துக் காத்தும் பின் தோன்றிடச் செய்த அம்மாமாயன் யாராக உள்ளான்?

"அரன் அயன் என உலகழித்து அமைத்து உளனே!"

என்று அவனைச் சிவனாகவும் பிரம்மாவாகவும் மேற்குறித்த அடியின் மூலம் காட்சிப்படுத்தியுள்ளார். இதனால் திருமாலே அனைத்துத் தெய்வங்களாகவே காட்சியளிக்கின்றான் என அறிகின்ற நாமோ எம்பெருமான் ஒருவனேதான் என உணர்தல் ஏற்புடையதாகும்.

இந்தப் பாசுரத்தால், உலகியலில் வாழும் மக்கள் பேத மின்றி வாழவே ஒரே நெறியில் விளங்கி நிற்கவே, வாழ்விக்கும் இறைவன் ஒருவனே என உணர்ந்து போற்றிடவே வழிகாட்டு

கின்றார். மனிதகுலம் ஒற்றுமையாகத் தொழிலாற்றிட, வழி பாட்டில் ஊன்றிச் சிறப்புறத் தெளிவைக் காட்டினார்.

பிரிந்து வழிபடும் போக்கு ஏற்புடையதன்று. வைணவர் சைவர் என்று வேறுபாடு கொண்டு இருப்பதும் நல்லதல்ல. பல் வேறான நிலையில் பிரிந்து வேறுபட்டு வழிபடுதல் சிறப்பாகாது என்று கூறுவதோடு, இப்போக்கைத் தவிர்த்து ஒன்றுபட்டு வழிபடவே நம்மாழ்வார் தெரிவிக்கின்றார். செம் பொருளான எம்பெருமானை ஒருவனாகவே அனைத்துலகத் திற்கும் அவனே தலைவனாகவே காட்டுகின்றார்.

வாழும் மக்கள் ஒருகுலமாக நிற்கவும் வழிபடும் தெய்வம் ஒருவனாகவே ஏற்றுப் போற்றவும் தாம் பாடியருளியதிருவாய் மொழியின் மூலம் தெளிவு படுத்துகின்றார். அறிந்து உணர்ந்து போற்றுகின்ற தெய்வம் ஒன்றாய், பலவாய், அறிய முடியாத அருவமாய், கண்ணுக்குப் புலனாகும் அறிவாய் இருப்பதோடு அழகு பொருந்திய நாராயணனாகவும், நான் முகனாகவும் அரனாகவும் இருக்கின்றான் என்றார்.

அவன் தூய்மையுடையார் சிந்தையுள்ளேசென்றுறைவான் அச்சிந்தையோ தூய்மைபெற அகப்பற்று,புறப்பற்றுஎன்கின்ற பசைகளைக் களைதல் வேண்டும். அப்படிக் களைந்தால் அந்தத் தூய சிந்தையிலே மாமாயன் வந்தமர்வான். அப்படி அவன் அமர்வதாலே அவனும், அந்தச் சிந்தையுடையவர்களும் ஒன்றாகவே ஒருமையுற்று இருமையகற்றிப் பேரின்ப வெள்ளத் திலே நீந்தித் திளைக்க வியலும், இவ்வாறு அவனோடு சேர்ந்துதிளைக்கும் நாளே மீண்டும் இப்புவியில் நாம் பிறவாத நாளாகும்; பிறவாமல் பரம்பொருளின் வீட்டுலகில் பிறங்கும் நாளாகும் என்பதனை

"ஒன்றென பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரன் என்னும் இவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளினும் இருபசை அறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனுடை நம்முடை நாளே!"

என்று பாடி இசைக்கின்றார். இப்பாசுரத்தில் ஒப்பிலா அப்பன் ஒருவனே பலவாய், அறிவாய், அருவமாய்க் காட்சி

*யளிக்கின்றான் என்று நம்மாழ்வார் நயம்பட உரைத்தல் காணலாம். இம்மையில் நம்பிக்கையுடன் இலங்கிடவேமக்களுக்கு வழிகாட்டுவோனாய் இருப்பவன் இறைவனே! அவன் ஒருவனே! அவனோடு சேர்ந்தின்புற, அனுதினமும நினைவு கூர்ந்து போற்றிட வழி காட்டுகின்றார். இவ்வாறு ஒவ்வொரு நாளையும் செவ்வியுடைய நாளாக எம்பெருமானை எண்ணு கின்ற நாளாக மக்கள் கொண்டாலே அஃது மீண்டும் பிறவாத நாளாக அமையும்.*

## இறைவன் ஒருவனே!

ஒன்றான தெய்வத்தை ஒவ்வாத பேதத்தால்
இன்றிங்கே பல்வடிவாய் ஏத்துதல்—நன்றாமோ
என்றும்எல் லோர்க்கும் இறைவன் ஒருவனே
நன்றேத்தி உய்தல் நலம்!

# இரண்டும் ஒன்றே!

அன்புள்ளங் கொண்ட நம்மாழ்வார் எம்பெருமானிடம் பேசுகின்றார். அர்ச்சாவதாரப் பெருமானை முன்னிறுத்தி நீ கள்வன் என்கின்றார். மனிதராய் இருக்கும் ஒருவர் கள்வராயிருந்தால் அவ..டம் நீர் கள்வர் என்று சொல்லவியலுமா? அவரோ கள்வராக இருந்தாலும் கள்வரென்று ஒப்புக் கொள்வாரா? மாறாக அவர் சண்டைக்கல்லவா வருவார்? ஆனால் இங்கே உலகத்தையெல்லாம் காக்கும் கடவுளைப் பார்த்தே நீ கள்வன் என்றல்லவா? கனிவுடன் கூறுகின்றார் நம்மாழ்வார்.

இப்படிப் பேசியவர், தம்மைப் பற்றிக் கூறும்போது நிராதரவற்ற தனியன் என்றே பேசுவார். அந்தக் கள்வனையே என் ஆருயிர் என்றே புகழ்கின்றார். அடுத்து வேறுகதியில்லாத எனக்கோ ஆதரவு காட்டும் வகையிலே நீயோ என்தலைமீது அமர்ந்துவிட்டாய் என்றும் கூறுகின்றார். தலைமீது சுமையோ, ஒருவர் அமர்ந்திருக்கும் நிலையோ ஏற்பட்டால், தூக்கிச் செல்பவர்க்கு மிக வேதனையாகவன்றோயிருக்கும். ஆனால் நம்மாழ்வார்தலைமீதுஎம்பெருமானோ ஏறியமர்ந்தது சுமையாகவேயில்லையாம்; மாறாகத் தம் துன்பத்தை மாற்றுகின்ற நல்லின்பமாக விருந்ததெனப் போற்றிய அவர், தம் தலைமீதமர்ந்த அவனையோ இனியெங்குமே போகவிடமாட்டேன் என்றுகெட்டியாகவே பிடித்துக்கொண்டுவிட்டார். பிடித்துச்கொண்ட அவனிடம் நீ மாயம் பல செய்கின்ற திறனுடையவன் என்கின்றார்.

மாயத்தால் மறைந்து விடும் ஆற்றல் பெற்ற நீ! மாயங் காட்டியே என்னைவிட்டுப் பிரிந்து செல்ல மாட்டாய் என்று விளம்புகின்றார். மாய பிரானே உன்னிடத்தில் கனிவுரை புகலுகின்றவாய் இருக்கின்றது? அஃது இனிய கருத்தையே வழங்கவல்லது; ஐயனே! உன் கண்கள் தாமரை மலர்களைப் போன்றன. அவை பேரெழிலைப் பொழியவல்லன; நீ பெற்ற திருமேனி மாணிக்கம் போன்று ஒளியை உடையது; அஃது இவ்வுலகினில் வெளிச்சத்தையே காட்ட வல்லது. என்று எம் பெருமானின் எழிலை யெல்லாம் பாடலில் அழகாகத் தீட்டியுள்ளார். நம்மாழ்வார் அவனை உவகை மேலிடவேதவத்தில் சிறந்த ஞானி என்றே புகழ்ந்துள்ளார்! இவர் அவனையே உலகைப் படைத்தளித்த நான்முகன் என்றும் மூன்று கண்களுடைய சிவபெருமான் என்றும போற்றியவர்.

"முனியே! நான் முகனே! முக்கண்ணப்பா! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே! என்கள்வா!
தனியேன் ஆருயிரே என்தலை மிசையாய் வந்திட்டு
இனிநான் போகல்ஒட்டேன் ஒன்றும் மாயம் செய்யேல்
என்னையே!

என்று பாடுகின்றார். இதில் நான் இனியுன்னைப் போகவிட மாட்டேன் என்று கூறியவர். அவனைப் பார்த்து நீ மாயம் செய்து மறைபவன், எனவே, அந்த மாயத்தைச்செய்து என்னை விட்டு மறைந்து போகாதே என்று அன்புடன் உள்ளம் உருகிட வேண்டுகின்றார். இதில் இவர் அவன்பால் கொண்ட பக்தியாம் காதலை விவரித்தல் காணலாம்.

இவர் அவன்பால் பக்தி செய்து உருகியதைப் போன்று திருமங்கையாழ்வாரும் உருகிப் பாடுகின்றார். மேலும் இவர் நான் முகனையும் சிவனையும் திருமாலாகவே காட்டுவார்.

பாருருவி நீர்எரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருவுருவே றெண்ணும் போது

ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற
மூவுருவம் கண்டபோது ஒன்றாம் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவம் தானே!

என்று பாடினார். இதில் அழகியதாகப் பேசப்பெறும் இப் புவியில் ஒப்பிலா மூர்த்திகளாகப் போற்றப்படும் மும்மூர்த்தி களைக் குறித்தார். அந்த மூர்த்திகளை நான்முகன், சிவன், திருமால், என்றே கூறுதல் காணலாம். வடிவங்களைப் பெற்ற இம் மூர்த்திகளின் நிறம் பற்றியும் கூறுகின்றார்; நான் முகன் பொன்னிறம் என்றும், சிவபிரான் நெருப்பைப்போன்ற சிவந்த நிறம் என்றும், திருமால் கடலைப்போன்ற கருநிறம் என்றும் கூறுகின்றார்.

இந்த மூன்று மூர்த்திகளும் ஒன்றாகிப் படைக்கப் பெற்றவையோ மண், நீர், நெருப்பு, காற்று, விண் ஆகிய ஐந்து பூதங்களாகும் என்றார். ஐந்தாகிய பூதங்களால் உருவானதே ஞாலம் என்கின்றார். இந்த ஞாலத்தில் தோன்றிய உயிர்களுள் மனித உயிர்களால் உருக்கொண்டன பல்வேறு சமயங்கள்.

இவ்வாறு அதிசயங்களையெல்லாம் ஏற்படுத்திய ஐயன் யாருக்கும் எவற்றிற்கும் புலனாகாதவாறு மறைந்து எங்கும் பரவி நிற்கின்றான். அவனின் அந்தவுருவமே அனைவருமே அறிய ஒளியாகியே நிற்கக் காணலாம். இந்த ஒளிவடிவமே சிறப்புக்குரிய கார்மேக வடிவமாகும். இதுவே செம்பொரு ளான எம்பெருமான் வடிவம் என்று கூறியே திருமங்கையாழ் வார் போற்றுகின்றார்;

மேற்குறித்த பாசுரத்தில் ஒன்றான பரம்பொருள் மூன்று மூர்த்திகளாகி, ஐந்து பூதங்களாகி, ஞாலத்தினை ஏற்படுத்தி, உயிர்களைப் படைத்து இயக்கி வருகின்றான் என்றார். ஒன்றாய் இருந்து உலகை நடத்துகின்ற திருமாலைப் பிரித்துப் பார்க்கும் மக்களுக்கோ அவன் மூன்று மூர்த்திகளாகக் காட்சி யளித்து அவரவர் விருப்பத்திற்கேற்பத் திகழ்கின்றான் என்று

இயம்புகின்றார். இப்பாசுரத்தால் திருமங்கையாழ்வார் வேற்றுமையாகப் பார்க்கும் மக்களுக்கோ ஒற்றுமைக்கண் கொண்டு பார்த்து இறைவன் ஒருவனே என்று கொள்ள உணர்த்துகின்றார்.

இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் அடியார்களில் ஒருவரான நாவுக்கரசரும் ஒரே தெய்வம்தான் மூவுருவங் கொண்டு மூன்று தெய்வங்களாகவே காட்சியளிக்கின்றது என்ற செய்தியை

"ஒருவனாய் உலகத்தே நின்ற நாளோ
ஓருருவே மூவுருவாய் ஆன நாளோ"

என்று பாடுகின்றார். எம்பெருமான் ஒருவனே! பின்னர் மூன்றுருவம் தாங்கி ஆக்கல், அழித்தல் அருளல் என்கின்ற முத்தொழிலை நடத்துகின்றான் என்று கூறுகிறார். மேலும் இவர்

"மூன்று மூர்த்தியுள் நின்றியலும் தொழில்
மூன்றும் ஆயின மூவிலைச் சூலத்தன்
மூன்று கண்ணினன் தீத்தொழில் மூன்றினன்
மூன்று போழ்தும்என் சிந்தையுள் மூழ்குமே!"

என்று பாடுவதில் சிவபெருமான் மூன்று மூர்த்திகளாய்த் தொழிலாற்றி வருவதைக் குறித்தார். இப்பாடலில் நாவுக்கரசர் சிவபெருமான் மூன்று கண்களையும் பெற்றிருத்தலைத் தெரிவிக்கின்றார்.

இத்தகைய நிலையுடையவனே முப்புரத்தையும் தீமைகளையும் எரித்தான் என்பதைத் "தீத்தொழிலன்" என்னும் சொல்லால் சுட்டினார். தீமைகளை மாய்த்துச் செம்மையை நல்கும் அவனையே என் சிந்தையால் மூன்று பொழுதும் தொழுது வழிபட்டு வருகின்றேன் என்றார். மேலே "மூன்று மூர்த்தியுள் நின்றியலும் தொழில் மூன்றும் ஆயின" என்ற தொடர் மொழியில் எம்பெருமான மூன்று மூர்த்திகளாய்

முத்தொழிலான ஆக்கல் அழித்தல் அருளல் என்பவற்றை நடத்தி வருபவன் என்றார்.

அவன் ஒருவனே அனைத்துமாயுள்ளான் என்றும் கூறினார். அடுத்துத் திருமூலரும் சிவனே திருமாலாகவே நின்று உலகைக் காத்து வருகின்றான் என்று பாடியுள்ளார். நம்மாழ்வார் திருமங்கை ஆழ்வார், திருநாவுக்கரசர் ஆகியோர் இறைவன் ஒருவனே முத்தொழிலை நிகழ்த்தும் கர்த்தாவாகி நின்றே அத்தொழில்களைச் சிறப்பாகச் செய்ய மூன்று வடிவமாக நான்முகன் அரன் நாராயணன் என்ற பெயர் கொண்டு உயிர்கள் உய்ய ஞாலத்தை நிகழ்த்துகின்றான் என்று பாடியுள்ளார்கள். திருமூலரும் இவர்களைப் போன்று பாடினாலும் ஓரிரு பாடல்களில் சிவனும் திருமாலும் மட்டுமே உலகை நடத்தி வருகின்றனர். என்று கூறி நான்முகனைக் குறித்தாரில்லை இச்செய்தினை,

"செந்தாமரை வண்ணன் தீவண்ணன் எம்இறை
மைந்தார் முகில்வண்ணன் மாயம் செய் பாசத்தும்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்
அந்தார் பிறவி அமைந்து நின்றானே!"

என்று பாடிய திருமூலர் தீவண்ணனாகிய சிவனும் முகில் வண்ணனாகிய திருமாலும் செய்த மாயச்செயலால் மலர் கொத்துகளைச் சூடிய மாதர்கள் ஆடவர்களுடன் கூடிக் குழந்தைப் பேற்றைப் பெறுகின்றார்கள் என்று கூறுகின்றார். இவ்வாறு பிறவிகள் தோன்ற முகில் வண்ணனும் தீவண்ணனும் காரணமாகயிருக்கின்றனர் என்று கூறியிருப்பதை மேற்குறித்த பாடலால் தெரியலாம்,

இன்னொரு பாடலில் திருமாலையே சிவன் என்றே உவந்து கூறுகின்றார். எம்பெருமானாகிய சிவபெருமானே ஒவ்வொரு சமயத்தில் ஒப்பற்ற சூரிய சந்திரராகவும், பிரிதொரு சமயத்தில் பெருங்காற்றாகவும் குளிர்ந்த மழையாகவும் உலகுக்கு நலஞ்செய்து வரும் அவனே திருமாலாகவும் பெருமையுடன் இலங்குகின்றான் என்பதை

"தானொரு காலம் தனிச்சுடராய் நிற்கும்
தானொரு கால்சண்ட மாருத மாய்நிற்கும்
தானொரு காலம் தண்மழையாய் நிற்கும்
தானொரு காலம்தண் மாயனும் ஆமே!

என்று பாடி உலகைத் தோற்றுவித்து உயிர்க் குலத்தை உண்டாக்கி இடையறாமல் செயற்பட்டு வரும் இறைவன் இருவேறு வடிவங்கொண்டு பிறங்குவதைத் திருமூலர் திறம் படக் கூறியிருத்தல் காணலாம். உலகச் செயலினை மும்மூர்த்தி களன்றி இரு மூர்த்திகளான திருமால் சிவன் என்பவராலே நிகழ்த்தப்படுகின்றது என்பதை இதனால் உணர்த்துதல் காணலாம். இப்பாடலுக்கு முன்பு ஒரு பாடலில்

"ஒருவனு மேஉலகேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுஉயிர் தானே!"

என்று பாடியுள்ளார். இதில் பரம்பொருள் ஒருவனே ஆக்கல், அழித்தல், அருளல் ஆகிய முத்தொழிலை நடத்தி வருவதோடு தோற்றுவித்த உயிரை உடம்புடன் கூடிச் செயல் பட இயக்கியும் வருகின்றான் என்றார். "ஒருவனே" என்னும் சொல்லின் இறுதியில் உள்ள தேற்றேகாரம் பரம்பொருள் ஒருவனே என்றுணர்த்துவதோடு பிறிதொன்றில்லை எனக் கூறுதல் காணலாம். இவன் ஒருவன் தான் இரண்டு வடிவந் தாங்கி உலகைப்புரக்கின்றான் என்பதைத் தெளிவாகக் கூறி யுள்ளார். ஒருபரம்பொருளே இரு மூர்த்திகளாகத் திகழ் கின்றான் என்பதைப் பேயாழ்வாரும் பாடுகின்றார்.

திருவேங்கட முடையானைக் கண்டு மகிழ்வுற்ற அவர், முன்பு நிகழ்ந்த வரலாற்றொன்றை நினைவுபடுத்துகின்றார். அப்பெருமாயனை அகங்கனிந்து, யார் யார் எவ்வாறெல்லாம் போற்றுகின்றார்களோ அவ்வவ்வாறே அவர்களுக்கு அருள் புரிகின்றான் என்றார். கண்ணபெருமான் கீதையில் அர்ச்சுன னிடம் நான் ஒருவனே பல்வேறான கோலம்பூண்டு உயிர்த்

குலத்திற்கு அருள் சொரிகின்றேன் என்ற செய்தியைத் தெளிவுபடுத்தும் வகையில் எம்பெருமானே திருமாலாகவும் சிவனாகவும் வந்து நலஞ்சொரிகின்றான் என்பதைப் பேயாழ் வார் பாடுகின்றார். அடியார்கள் எந்தெந்தமூர்த்தியாக அவன் வந்து அருளவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த மூர்த்தியாகிய வடிவம் தாங்கியே திருமாலகவும், சிவனாகவும் வந்தருளும் காட்சியைத் திருமலையில் வதியும் திருவேங்க முடையான் மீது ஏற்றிப்பாடிக் காட்டுகின்றார். அந்தத் திருவேங்கடமுடையானை வழிபட வைணவ அடியார்களும். சைவ அடியார்களும் சென்று பக்தி செய்து பரவும்போது' இவர்களுக்கு அவன் எவ்வாறு வந்து காட்சி தந்தான் என்ப தையும் காட்டுகின்றார்.

அப்பெருமாயன் தாழ்ந்த சடையும், நீண்ட பொன் முடியும் கைகளில் மழுவாகிய ஆயுதமும் சக்கரமும் சங்கும் மேனியில் சுற்றிக் கொண்டிருக்கும் பாம்பும் இடுப்பில் பொன் நாணும் கொண்டு திருமாலாகவும் சிவனாகவும் இருந்து காட்சி தருகின்றான் என்றார். இப்படி இருவேறு நிலையில் இருக்கும் அப்பனாகிய அவன் ஒப்பிலா ஒருவனே! என்றார் அவர். அருவிகள் பெருக்கெடுத்து ஓடிவரும் திருமலையில் உள்ள திருவேங்கடமுடையானாக விளங்குகின்ற, அந்நாயகன் தான்

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவம் ஒன்றாய் இசைந்து!

என்று பாடும் இவ்வெண்பாவினால் படம்பிடித்துக் காட்டு கின்றார். இத்தமிழ் மண்ணில் வேற்றுமை கொண்டு வைணவ அடியார்களாகவும் சிவனடியார்களாகவும் வாழும் பிரிவினைப் போக்கை மாற்றவே பேயாழ்வார் பரம்பொருளின் நிலையைச் சிவனாகவும் திருமாலாகவும் இருந்தே உலகத்தை நடத்தும் நிலையையும் உலக உயிர்களின் நலன்களுக்காக எம்பெருமான்

பல்வேறான கோலங்களையே மேற்கொள்கின்றான் என்ற நிலையையும்எடுத்துக்காட்டியும் வேற்றுமைகொண்டவர்களை யெல்லாம் ஒற்றுமையாக இருந்து செயற்படவும் திருவேங்கடமுடையானை ஒருவனாகவே அனைத்துயிர்க்கும் அருள் சுரக்கும் பரம்பொருளாகவே காட்டியுள்ளார்.

மேலும் இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் ஆழ்வார்களுள் முதலாழ்வாராகத் திகழ்ந்த பொய்கை ஆழ்வாரும் பாடித் தெரிவிக்கின்றார். ஒருவனான பரம்பொருள் நாராயணனாகவும் சிவபிரானாகவும் பெயர்களைக் கொண்டான். அவனே திருமாலாகத் திகழ்ந்தபோது கருட வாகனத்தையும் சிவனாக விளங்கியபோது எருது வாகனத்தையும் கொண்டான் என்கின்றார் அவர்.

சிவனைப் பற்றிய சிறப்பியல்புகளை உரைநூல்கள் உவந்து பேசும்; திருமாலைப் பற்றிய சிறப்பியல்புகளை மறைநூல்கள் மாட்சிமையுறக் கூறும். சிவனின் இருப்பிடம் கைலைமலை; திருமாலின் இருப்பிடம் பாற்கடல். சிவனின் தொழில் அழித்தல்: திருமாலின் தொழில் அருளல்; சிவனுடைய ஆயுதம் சூலம்; திருமாலின் ஆயுதம் சக்கரம்; சிவனுடைய மேனி நெருப்பு வண்ணம்—சிவப்பு; திருமாலின் மேனி கார்வண்ணம்—கருப்பு. இந்த இருமேனி கொண்டிட்ட பரம்பொருள் ஒருவனே! அவன் அடியார்கள் எந்த வடிவங் கொண்டு போற்றுகின்றார்களோ அந்த வடிவங்கொண்டு வந்தே அருள்கின்றான்.

இரு விழுதுகளைக் கொண்ட ஒரே ஆலமரம் நிழலைத் தந்து அதனடியில் வந்து தங்கியிருப்பவரை மகிழ்விப்பதைப் போன்றே எம்பெருமான் எல்லோருக்கும் உயிர்க் குலங்கள் அனைத்திற்கும் நிழலாக அமைந்து அருள் புரிகின்றான் இத்தகையவனைப் பற்றிப் பொய்கையாழ்வார்

"அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுரையுங் கோயில்—வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்புக் கையது வேல்நேமி
உருவம் எரிகார் மேனி ஒன்று!"

என்ற இவ்வெண்பாவில் தெரிவிக்கின்றார். இதில் திருமாலே சிவனாகவும், சிவனே திருமாலாகவும் தம் அடியார்களுக்கு அருள் சுரந்த நிலையைத் தெரிவிக்கின்றார். இன்னொரு வெண்பாவில் சிவனடியார்களான அகத்தியர், புலத்தியர், தட்சர், மார்கண்டேயர் ஆகிய நால்வருக்கும் ஆலமரத்தின் நிழலில் திருமால் ஆசிரியனாக வந்து அறநெறி போதித்த தோடு, அந்த அருளாளன் நஞ்சினையுண்ட நீலகண்டன் என்று கூறியவர் இங்கே,

"நெறிவாசல் தானேயாய் நின்றானை ஐந்து
பொறிவாசல் போர்க்கதவம் சாத்தி—அறிவானாம்
ஆலமர நீழல் அறம்நால்வாக்கு ஆன்றுரைத்த
ஆலமமர் கண்டத் தரன்"

என்று தெரிவித்தல் காணலாம். இதில் சிவபெருமானைத் திருமாலாகவே காட்டிப் பேதங்கள் நீங்கி எவரும் ஒன்றுபட்டு இறையன்பில் ஈடுபட்டு உய்ய மக்களுக்கு உணர்த்தினார். இருவேறு தெய்வங்கள் எனப் பேசிப் பிணக்குக் கொண்டு பிரிந்தே வழி படாமல் இணக்கம்கொண்டு இணைந்து வழிபட்டுப் பெருமாயன் ஒருவனே எனப் போற்றி அருள் பெறவே வழிகாட்டினார்.

## எல்லாத் தெய்வங்களும் ஒன்றே!

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றார் திருமூலர். இவர் நெறியில் உலகத்திலுள்ள மாந்தர்கள் எல்லாரும் ஒரு குலத்தவர்கள் என்று எண்ணியே எல்லோருக்கும் ஒருவனே தேவனாவான் என்று நினைந்தே ஒன்றுபட்டுப் போற்றி வாழ்ந்தாலே உலகத்தில் இன்றுள்ள வேற்றுமைகள் வீழும்;

பின்னர் அனைவர்க்கும் இன்பம் ஏற்படும் என்றும் அதனால் பிணக்கற்றும் இணக்கமுடனும் மனிதகுலம் தழைக்கும் என்றும் நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், திருநாவுக்கரசர், பேயாழ் வார்,பொய்கை ஆழ்வார்முதலானோர் கூறியநெறியிலேநின்று அருளாளனைப் பாடி உய்தல் பெருமை தரும். அதனாலே அவன் அருளும்நமக்குக்கிடைக்கும் என்பது திண்ணம். எனவே உலகம் அமைதியில் திளைத்திடவும் நலமெல்லாம் படைத் திடவும் வேற்றுமைகள் தகர்ந்திடவும் ஒற்றுமையில் விளங்கிட வும் பொதுமையை மேவிடவும் எல்லாரும் எல்லாமும் பெற்று இன்புறவும் ஒருவனே இறைவன் என்ற உணர்வில் ஆழங்கால் பட்டு உய்தலே சால்பாம்.

## திருமால் சிவன் ஒருவனே!

திருமால் சிவன்என்று செப்பும் இறைவன்
ஒருவனே என்பதனை உன்னி—விருப்புற்றுப்
போற்றிடுவீர் பேதமின்றிப் பூவுலகில் மக்கள்நீர்
ஏற்றமெலாம் காண்பீர் இசைந்து!

# திருமங்கைஆழ்வாரும் திருநாவுக்கரசரும்!

உலகத்திலுள்ள மதங்களில் மிகப்பழமையானது இந்து மதம், இதன் காலத்தை அறுதியிட்டுக் கூறுவதற்கு இயலாத வகையில் அது மிகத் தொன்மையானது என்று வரலாற் றறிஞர்கள் கூறுவார்கள். இதுபிற மதநெறிகளையும் பெற்றிருக்கும் அளவிலே காலத்திற்கேற்ப புதிய கருத்து களைக் கொண்டிருக்கும் நிலையிலே பெருமையைக் கொண் டிலங்குவதாகும்.

குறிப்பாக மக்கள் நலத்தைப் பெரிதாகக் கொண்டு, அற நெறிப் பண்புகளை உணர்த்துகின்ற வகையில் தகுதியுடைய தாகும். இஃது அன்பு நெறியைக் கூறி அதன் வழி இறை யருளைப் பெற மக்களுக்கு ஆற்றலை நல்க வல்லது. இஃதோர் பெரிய ஆலமரம் போன்று விளங்கி உலகத்தில் பெரிதும் போற்றத்தகுந்த வகையில் மிளிர்வது; ஈடும் எடுப்புமின்றி இலங்குவது; இந்த விந்தைக்குரிய ஆலமரத்தின் இருபெரும் விழுதுகளாக உள்ளவையே வைணவமும், சைவமும் என விவேகானந்தர் விளம்புவர். இவற்றின் மேலான பண்புகளை எல்லாம் எடுத்துத்தெளிவு படுத்தியுள்ளார் அவர். உயர்வற உயர்நலம் உடையவனாகியபரம்பொருளின் திறத்தையெல்லாம் தெளிவிக்கின்ற வைணவத்தின் மாட்சியையும் சைவத்தின் சிறப்பினையும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் அழகுறப் பாடிக் காட்டியுள்ளார்கள். திருமாலின் கீர்த்தியினைத் திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்களும் சிவபெருமானின்

செம்மையினைத் தேவாரம் திருவாசகம் போன்றவற்றில் நாயன்மார்களும் பெருமையுறப் பாடியுள்ளார்கள்.

சூரியனைப் பரிதியென்றும் பகலவன் என்றும் கதிரவன் என்றும் பல்வேறான பெயர்களையிட்டு அழைத்தல் போன்று எம்பெருமானைத் திருமால் என்றும் சிவபிரான் என்றும் அழைத்து வழிபட்டு வந்தனர் முன்னோர்கள். இப்படித்தாம் கூறி அழைத்து வந்த பெயர்களுக்கேற்ப வடிவங்களையும் அமைத்துப் போற்றி வந்தார்கள். இந்த நெறிமுறையில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம் தெய்வங்களைப் பரவி வந்தார்கள். பெயர் உருவம் கூறி அமைத்து வேறுபடுத்தி இத்தெய்வங்களைப் பரவினாலும் போற்றிப்பாடிய கருத்து களினாலே ஒன்றுபட்டுடிசைத்துள்ளார்கள். இத்தெய்வத் திருவடிகளின் பேற்றினை அடையவோ நான்கு வழி முறைகள் அமைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் எளிதாகப் பரம் பொருளைப் பற்றுவதற்கான வழிமுறையே பக்தி எனும் இனிய வழிமுறையேயாகும் என்று இத்துறையில் பெரிதும் அனுபவமுடைய பெரியவர்கள் பேசுவார்கள்.

இந்தச் சிந்தைக்கினிய வழிமுறையை அழகுற நமக்குக் காட்டிடவே ஆழ்வார்களும் நாயன்மார்களும் திவ்வியப் பிரபந் தத்தின் மூலமாகவும் தேவாரம் திருவாசகத்தின் மூலமாகவும் உள்ளம் உருகவே இசைத்தார்கள். இவையாவும்சந்தம்நிறைந்த சிந்தைக்கினிய செந்தமிழ்ப் பாடல்களாகும்.

இந்த அமுதப் பாக்களால் வந்தனைக்குரிய திருமாலையும் சிவபெருமானையும் போற்றி மகிழ்ந்தார்கள். இவர்கள் திருமாலையும் சிவனையும் பாடியிருந்தாலும் கருத்துகளால் மாறுபாடின்றியே பாடி இருக்கின்றார்கள், ஆழ்வார்கள் பாடிய கருத்துகள் நாயன்மார்கள் பாடல்களிலும் நாயன்மார் கள் பாடல்களில் உள்ள கருத்துகள்ஆழ்வார்கள் பாடல்களிலும் அமைந்துள்ளன. இப்படி இவர்கள் பாடல்களில் பயின்று வரும் ஒத்த கருத்துகளைக் கொண்டு பார்க்கும்போது இவர் களிடையே கருத்து வேறுபாடுகளில்லையென உணரலாம்.

வேற்றுமையில் ஒற்றுமையைக் காணவே பாடியருளிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் நம்மையெல்லாம் நெறிப்படுத் தவே இம்மண்ணிலுதித்த அருளாளர்கள் ஆவார்கள். இப் பெருமக்களுடைய பாடல்களில் உள்ள ஒற்றுமைகளை எடுத்துக் காட்டி இறைவன் ஒருவனே என விளக்க எழுந் தன இக்கட்டுரைகள்.

பரம்பொருளான திருமாலைப் பாடிய திருமங்கையாழ் வார் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாசுரங்களிலே அவனை அணி செய்கின்றார். அவர் பாடிய திருநெடுந்தாண்டகத்தில் மாமா யனை மிகப் பெருமையோடு பாடி நமக்குக் காட்டுகின்றார். இந்திரன், பிரம்மா முதலான தேவர்களுக்கெல்லாம் முதல்வ னாக மாயனான கண்ணபெருமான் மிளிர்கின்றான் என்று பேசுகின்றார். மண், காற்று, தீ, நீர், வான் ஆகிய ஐந்து பூதங்களைத் தோற்றுவித்து இந்த அகிலத்தையே இயக்கி வருகின்றான் என்று அவன் திறத்தினை அறிவிக்கின்றார். செழுமையும் ஆற்றலும் பெற்றுள்ள அவனோ விரும்புவோர்க் கெல்லாம் இவற்றை வழங்கியே விழுமிய நிலையிலே அவர்கள் வாழ வகை செய்கின்றான், இத்தகையவன் தமிழ் ஒலியாகவும் வடச் சொல்லோசையாகவும் இருந்து வேற்றுமையே இல்லாத வனாகவே மிளிர்கின்றான்.

இவனோ நான்கு திசைகளாய் இருந்து நல்வழி காட்டு கின்றான். குளிர்ச்சியைத் தரும் நிலவாகவும் சுட்டெரிக்கும் பரிதியாகவும் இருந்து உயிர்கள் தோன்றுவதற்கும் வளர்ச்சி யைப் பெறுவதற்கும் காரணனாய் விளங்குகின்றான். தேவர் களும் கண்டுணர்வதற்கோ அரியனாய் மிக உயர்ந்து நிற்கின் றான்.

உத்தமசீலனான அவன் எளி வந்த பிரானாக எளியவர் களுக்கு ஒளி காட்டுபவனாக உள்ளான். அறவோனாக நிறைவுடன் திகழ்ந்து அறவோர்களுக்கே அறிவு புகட்டும் சான்றோனாகவே மிளிர்கின்றான். பந்தமறுக்கும் மந்திரங் களையும் போதிப்பவனாகவும் இலங்குகின்றான்;

அவனைப் பற்றுவதற்காகக் கூறுகின்ற மந்திரச் சொல்லை மறவாமல் கூறி வழிபட்டு வந்தால், அந்தக் கருணை வள்ளல் இறங்கிவந்து அருள்புரிவான். அவனருளால் இம்மண்ணுலகத்தோர் வாழ்வாங்கு வாழலாம் என்றே தம் மனத்திற்கு எடுத்துக்கூறும் திருமங்கையாழ்வார், அவற்றை மற்றவரும் அறிந்துணர,

''இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை
இருநிலம்கால் தீ,நீர்,விண், பூதம் ஐந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல் லாகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயி றாகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறியல் ஆகா
அந்தணனை அந்தணர்மாட் டந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவா தென்றும்
வாழுதியேல் வாழலாகும் மடநெஞ்சம்மே!

என்று பாடிப் போற்றுகின்றார். இதில் ஒரு சொல்லில் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணனாகப் படம்பிடித்து மாயனைத் தூயமுடன் காட்டுகின்றார். எம்பெருமான் செம்மை சான்ற மந்திரமாக விளங்குகின்றான் என்று கூறியவர்,அந்த மந்திரமான அவனைப்பற்றஅம்மந்திரத்தாலே போற்றினால், மறவாமல் ஏத்தினால் இப்புவியில் வாழ்வாங்கு வாழலாம் என்பதை ''வாழுதியேல் வாழலாம்'' என்ற தொடர் மொழியில் கூறுவார். இக்கருத்தைத் தம் நெஞ்சத்திற்கே கூறியுள்ளார். செம்பொருளான எம்பெருமானைச் செந்திறத் துத் தமிழ் ஒலியாக விந்தையுறப் பாடினார். எம்பெருமானைத் தீந்தமிழ் மொழியின் ஒலிக்கே ஒப்பாகக் கூறினாரா? இல்லை. அவன் தமிழ் ஒலியாகயிருந்தும் தமிழின் செந்திறத்தையும் வெளிப்படுத்துகின்றான் என்றே பேசுவார்.

எம்பெருமான் உலகின்கண்ணுள்ள அனைத்து மொழியாக வும் ஒலிக்கின்றான் என்பதை உணர்ந்திருக்கும் திருமங்கை யாழ்வார், செந்திறத்துத் தமிழ் ஒலி என்று சிறப்பித்துக் கூறிய

தற்கு, தம் தமிழ்ப்பற்றின் மேம்பாட்டினாலே என உணர்தல் சிறப்பாகும். எம்பெருமான் யாவையுமாயுள்ளவன். எனவே, அவனின் பேதமற்ற நிலையினை விளக்கவந்த ஆழ்வார் "வடசொல்லாகி" என்று பாடுவதாலே தெளிவுபடுத்தியுள் ளார். ஆழ்வார் தமிழ் மொழியின் மீது அளப்பரியப் பற்று டையவராக இருந்தார் என்பதை அவர்தம் பாடலின் தொடர் மொழியால் அறியலாம்.

இவரைப்போலவே நாவுக்கரசரும் பாடியிருப்பதைக் காணலாம். திருமங்கையாழ்வாரின் பாடலில்வரும் சொல்லை யும் பொருளையும் நாவுக்கரசர் தம் பாடலில் பார்க்க முடிகின்றது. ஆழ்வார் பாடலில் பயின்றுவரும் சில சொற்களும் அப்படியே இருக்கக் காணலாம். சில சொற்களை மாற்றியிருந்தாலும் பொருளும் கருத்தும் மாறுபடாமலேயே யாத்திருத்தலை நாவுக்கரசர் பாடலில் மிளிரப் பார்க்கலாம் எனவே தம் இதயக்கமலத்தில் இலங்கும் பரம்பொருளைப்பற்றி

"வானவன்கான் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்கான் ஆன்ஐந்தும் ஆடி னான்காண்
ஐயன் காண் கையிலனல் ஏந்தி ஆடும்
கானவன்கான் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்கான் சென்றடையாச் செல்வன் தான்காண்
சிவனவன்காண் சிவபு ரத்தெம் செல்வன்தானே!"

என்று இனிது பாடிப் போற்றுவார். இதில் சிவபெருமான் தேவர்களுக்கெல்லாம் தேவனாக இருக்கின்றான். வேதங்களாக வும் பசு தரும் ஐந்து பொருளாகிய பஞ்சகவ்வியமாகவுமுள் ளான். அவனோ அன்று கையில் நெருப்புச் சட்டியை ஏந்திக் கொண்டு சுடலையில் ஆடியவனாவான்! இனியனான அவன் இசை நுட்பம் தெரிந்தவனாவான்; இந்த இசையமுதைப் பெற வேண்டுவோருக்கெல்லாம் அருள்பவனாயுள்ளான். யார்

அவனை விரும்பிப் போற்றி வருகிறார்களோ அவர்கள் உள்ளத்திலேயே தங்கித் தேனாக இனிப்பவனாகின்றான்.

அவனின் திருவடியைச் சென்றடைபவர்களுக்கெல்லாம் எல்லாச் செல்வங்களும் உண்டாகச் செய்பவனாயுள்ளான். இத்தகையவனாகிய அத்தனே சிவபுரத்தில் உவப்புடன் நிற்கின்ற செல்வன் என்று நாவுக்கரசர் தம் வாயெல்லாம் இனிக்கப் பாடுகின்றார்.

முன்பு குறித்த திருமங்கையாழ்வார் பாசுரத்திலும் அடுத்துப் பாடிய நாவுக்கரசரின் பாடலிலும் உள்ள கருத் தொற்றுமைகளைக் காண்பது சிறப்பாகும், அந்த வகையில், திருமங்கையாழ்வார் திருமகள்கேள்வனைத் தேவர்களுக் கெல்லாம் முதல்வனாகவும் ஐந்து பூதங்களாகவும் செந்தமிழ் ஓசையாகவும் வடசொல்லாகவும் திசைகள் நான்காகவும் சான்றோனாகவும் சான்றோர்களுக்கே அறிவு போதிப்பவ னாகவும் விழைந்தே அருள்பாலிக்கும் மந்திரமாகவும் இருக்கின் றான் என்றார்.

இவரைப் போன்றே நாவுக்கரசரும் உமையவள் கேள்வனை வடமொழி, தென்மொழி என்றும் நான்கு மறை களென்றும், ஐந்துவிதப் பொருளான பசுவின் பஞ்சகவ்விய மென்றும் சிறப்பு மிகுந்தவனென்றும் சிவபுரத்துச் செல்வ னென்றும், கூறினார்.

இங்கே இருவரும் கூறிய கருத்துகள் யாவும் ஒரே நிலையில் இருத்தல் காணலாம். ஆழ்வாரோ தாம் வழிபடும் தெய்வத்தின் பெயரினைச் சுட்டாமல் பாடியுள்ளார். நாவுக்கரசரோ சிவன் என்னும் சொல்லை மட்டும் வைத்துப் பாடியுள்ளார். இச்சொல்லை நீக்கி இருவர் தம் பாடலின் சொல் பொருள் நிலையைப் பார்த்தால் ஒரே மாதிரியாக இருந்து இறைவன் நலம்புகலக் காணலாம். இவர்களின் கருத் தொற்றுமையைக்கொண்டு பார்த்தால்பேதம் இன்றி இறைவன் ஒருவனே எனக் கண்டுவந்து போற்றி நமக்கு வழிகாட்டுதல்

காணலாம். இந்த ஒற்றுமை வழியில் வேற்றுமையை மறந்து ஒருவனாகிய பரம்பொருளைப் போற்றுதல் நம்மவர்தம் கடப் பாடாகும்.

இவர்கள் இருவரும் பரம்பொருளை அடைய தடையாக வுள்ள, தடுக்கின்ற ஐந்து புலன்களின் கொடுமைகளை எடுத்துக்கூறி, இவற்றிலிருந்து விடுபட அருளாளன் திருவடி யில் சிந்தை செலுத்துவதற்கு வழிகாட்டுகின்றார்கள். இறைவனை இடையறாமல் சிந்திக்கின்ற மனமே புலன்களை அடக்குகின்ற ஆற்றல் வாய்ந்த எசமானகும் என்றார்கள். மாறுபாடான போக்கில் மனம் சென்றால் துன்பமே அனுபவிக்க நேரும் என்றும் துன்பந்தரும் புலன்களே தம் போக்கில் மனத்தை இழுத்துச் சென்று இடர்ப்படுத்தும் என்றும், புலன்களின் போக்கில் செல்லாமல் உலகம் யாவையும் நடத்தும் உலகளந்தான் பால் மனம் பதிந்து நின்றால் பேரின்பமே அடையலாம் என்றார்கள். பரிதியின் வரவால் இருள் இல்லாமல் மறைதல் போலவே இறையுணர்வில் நிலைத்து நிற்கும் மனத்தின் ஆற்றலைக் கண்டே பொறிப் புலன்கள் யாவும் அடங்கி ஒடுங்கும் என்றார்கள்.

புலன்கள் இழுத்துச் செல்லும் போக்கில் மனம் செல்லாமல் உயர்வற உயர்நலம் உடைய எம்பெருமானைப் பற்றிட, அவன் திருவடிகளைப் போற்றிட, மெய்யுணர்வில் தலைப்பட வேண்டும் என்றும் இத்தகைய சீர்மையுடைய மனமே தகுதிப்பாட்டினை எய்தவல்லது, என்றும் கூறினார் கள். நெறியில் திரியாமல் மெய்யுணர்வில் செயற்படும் மனத்தைப் பெற்றவர்களே திருமங்கையாழ்வாரும் திருநாவுக் கரசரும் ஆவார்கள். எனவே, ஐந்து புலன்களின் கொடுமைப் போக்கிலிருந்து மனம் விடுபடவே செம்பொருளான எம்பெருமானிடம் முறையீடு செய்ய வேண்டுமென்றார்கள்.

திருமங்கையாழ்வார், கண்ண பெருமானே! பொல்லாத ஐம்புலன்கள் என்கிற குதிரைகளோ என்னுள் தங்கி அவற் றின் போக்கின்படி இழுத்துச் சென்று துன்புறுத்து

கின்றன. தவறான படுகுழியில் என்னைத் தள்ளி அவலமுறச் செய்கின்றன. நற்செயல்களை அறிந்து செய்ய எண்ணுகின்ற என்னை மாற்றி அற்பனாக்கித் தீயவன் என்றே பிறர் சொல்லவும் இழிச்செயலில் அவை ஈடுபடுத்த முனைகின்றன. என்றாலும் அவைகளின் முனைப்பினை ஒடுக்குவதற்கே என் மனமோ இனிதான உன் பொன்னார் திருவடிகளை நினைவு கூர்ந்து போற்றிட எண்ணுகின்றது. நற்கதிக்கு உற்ற செல்வனான உன்னை என்றும் மறந்திடவே மாட்டேன். நீ! தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய நல்லோன்; திருமகளுக்கு அருள்பாலித்த செல்வன்; பெருமைவாய்ந்த சக்கரத்தை உடைய சுடர்வண்ணன்! வல்லமையால் எல்லா உலகங்களையும் ஒரே வாயாக உண்டே பெருமையுற்றவன். எழிலனைய திருமகளை விழைந்தேற்றே திருமார்பிடை வைத்துச் சீர்த்தியுற்றவன்; எனவே உன்னை என்றும் மறவாமல் போற்றும் என்னால் அன்புடன் நன்மையையே ஆற்றுவதற்கு இயலாதவாறு என்னுடனே இருந்து கொண்டு தொந்தரவு செய்யும் ஐந்து புலன்கள் என்னை நாளும் அரித்து வருகின்றன. அவற்றிற்கு அஞ்சி உன்னிடம் தஞ்சம் புகுந்தே வேண்டுகின்றேன், விழுமிய நிலையில் திருவழுந்தூரில் எழுந்தருளியுள்ள அம்மானான செம்பொருளே எம்முடன் போந்து அருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

ஐயனே! உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன்; என்னையே நீ ஆட்கொண்டு அருள் சுரக்க வேண்டுகின்றேன் என்றவர்

"திருவுக்கும் திருவாகிய செல்வா
தெய்வத்துக் கரசே செய்ய கண்ணா
உருவச் செஞ்சுடர் ஆழி வல்லானே
உலகை உண்ட ஒருவா திருமார்பா
ஒருவற் காற்றி உய்யும்வகை யின்றால்
உடன்நின் றைவர் என்னுள் புகுந்து ஒழியா
தருவித் தின்றிட அஞ்சிநின் னடைந்தேன்
அழுந்தூர் மேல்திசை நின்ற அம்மானே!"

என்று பாடி இறைஞ்சுகின்றார். தம்மை ஆட்டிப் படைத்து அரித்துத் தின்று வரும் புலன்கள் என்னுள்ளத்திலிருந்து அகலவே திருவழுந்தூரிலுள்ள அம்மானே நீயே அந்த வுள்ளத்திலே வந்து அமர்தல் வேண்டும் என்று அன்பாக வேண்டுகின்றார். இவர் வேண்டியதைப் போன்று திருநாவுக் கரசரும் சிவபெருமானிடம் இறைஞ்சுதல் காணலாம்.

ஐயனே! பொத்தல்களையுடைய என் உடம்பாகிய குடிசைக்குள் கொடிய புலன்களாகிய ஐவர் புகுந்து அலைக் கழித்து வருகின்றனர். அவர்களால் என் உள்ளம் மத்தினால் அடியுண்ட தயிர் கலங்குதல் போன்று கலங்கி அவலம் கொண்டுள்ளது. அப்புலன்கள் செய்யும் துன்பத்திலிருந்து விடுபட நான் உன்னிடம் அடைக்கலம் புகுந்தேன். அருள் செய்வாயாக என வேண்டுகின்றார்.

தேவர்களுக்கு உவந்து அருள் செய்த நன் மனத்தை இனிதே பெற்ற ஐயனே! உன்னைத் தவிர எனக்கு வேறு போக்கிடமில்லை. ஆதலால், சாதனைக்குரிய பெரியோனே உன்னை நாடி, தேடிச் சத்தி முற்றத்துக்கு நத்தி வந்தேன்! நித்தியவாசனே! பத்தனாகிய எனக்குப் பரிவு காட்டுவாயாக. தவச் சீலர்களுக்கே உதவும் சிவக்கொழுந்தே எனக்கும் உதவுக என உவப்புடன் அப்பரம் பொருளைப் போற்றிய அவர்

"பொத்தார் குரம்பை புகுந்து ஐவர்
நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போல் மறுகுமென்
சிந்தை மறுக் கொழிவி
அத்தா அடியேன் அடைக்கலம்
கண்டாய் அமரர்கள் தம்
சித்தா திருச்சத்தி முற்றத்
துறையும் சிவக் கொழுந்தே"

என்று பாடுவார். மத்தைக் கொண்டு தயிரைக் கலக்குதல் போல என் மனத்தைப் புலன்கள் ஐந்தும் கலக்கி அலைக்

கழிக்கின்றன. ஆதலால் மனம் இப்போக்கால் உன்னெறியைப் பாட இயலாமற் போய் விடுகின்றன. எனவே, சத்திய முற்றத் துறையும் உன்னடியைப் பற்றுகின்றேன். சிவக் கொழுந்தே என் அவலத்தைப் போக்கி எனக்கு உவப்பு ஏற்படும் வகையில் உன்னருளைத் தருவாயாக! என வேண்டி நின்றார். திருமங்கையாழ்வார் ஐம்புலனை அடக்க திரு மகளுக்கு அருள்பாலித்த ஐயனிடம் — திருவழுந்தூரில் எழுந்தருளியுள்ள மெய்யனிடம் வேண்டி நின்றார். இவரைப் போன்று நாவுக்கரசரும் மனக்கலக்கத்தை உண்டாக்கும் புலன் களை மாற்ற திருச்சத்தி முற்றத் துறையும் சிவக்கொழுந்திடம் வேண்டி நின்றார். இந்தச் சான்றோர்கள் புலன்களின் போக்கை ஒழிப்பதற்கு வேறுவழிகளை நாடவில்லை. மருந்து களைத்தேடவில்லை.எந்தமருந்தாலும் வேறுஎவராலும் மாற்ற வியலாது. எனவே, இப்புலன்களை ஒடுக்கும், ஒழிக்கும் மருந்து அவற்றைக் கெடுக்கும் மருந்து எம்பெருமானே! எனத்தெளிந்த திருமங்கையாழ்வாரும் திருநாவுக்கரசரும் அவனையே பாடிப் புலன்களின் போக்கை ஒடுக்கியே பேரானந்தம் கண்டார்கள்.

அவர்கள் தாம் கண்ட உண்மை நிலையை உலகத் தார்க்குப் பாடிக் காட்டினார்கள். இவர்கள் பாடல்கள் வழியில் சென்று அவன் திருவடியை நாடி நலந்தேடி உய்தல் நம்மவர்களின் கடனாகும்; ஏற்றம் தரும் அவர்களின், நெறியைப் போற்றி உய்தலே பெருமை தரும் என்றுணர்ந்தே செயலாற்ற வேண்டும்.

## இன்பமே இசைப்பீர் இனிது!

புலன்களின் போக்கைப் பொசுக்கிய சான்றோர்
நலமுரைத்த நன்னெறியில் நாளும் நிலையாக
நின்றே இறைவன் நெறியினில் வாழ்தல்பேர்
இன்பமே இசைப்பீர் இனிது!

# திருமங்கை ஆழ்வாரும் திருஞான சம்பந்தரும்

ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள் எனப் பேசப்பெறும் திருமங்கை ஆழ்வாரும் திருஞான சம்பந்தரும் சிறந்த அருளாளர்கள் ஆவார்கள். மக்கள் தக்க நெறியினிலே நின்று மிக்க நலன்களைக் காணவும் பெருமைக்குரிய எம்பெருமானின் திருவடிப் பேற்றினை அடைந்திடவும் இவர்கள் நல்லதொரு வழியைக் காட்டியவர்கள் ஆவார்கள்.

இப்பெரியார்கள் வைணவம் சைவம் என்ற சமயத்தினைச் சார்ந்தவர்களாயினும் திருமாலை, சிவனை வழிபடும் தெய்வங்களாகப் போற்றி வருபவர்களாயினும் இவர்கள் பாடியருளிய பாடல்களில் ஒரேவிதமான—மாறுபாடில்லாத கருத்துகளால் சத்வ குணப்பொருளான எம்பெருமானைப் போற்றியுள்ளார்கள். அன்றைய நாளில் அவர்கள் பாடியருளிய பாடல்கள் இன்றைக்கும் என்றைக்குமே பயன் விளைவிப்பனவாயுள்ளன. எழிலனைய அழியாத ஓவியங்களாகவே மிளிர்கின்றன.

பரம்பொருளைக் காண்பவர்களுக்கு மனத்தூய்மை வேண்டும். மனத்தூய்மை இன்றி எத்துணைக் காலம் அவனை வழிபட்டாலும் அவர்கள் நன்மையைப் பெறுதல் அரிது. தூய்மையும் உறுதியும் இல்லாத மனமோ புலன்களால் அலைக்கழிக்கப்படும். வாழ்வில் மனத்தூய்மையற்றவர் தாழ்வையே அனுபவிக்க நேரிடும்; என்றும் நிம்மதியை அனுபவிக்கவே இயலாது.

இவர்களைப் பற்றித் திருமங்கை ஆழ்வார் கூறுகின்றார். ஒருவர் பேரின்பம் அடைவதற்கோ சுடர்கின்ற முடியைப் புனைந்து, எழிலாக இருக்கின்ற அருளாளனின் பாதங்களை மறவாமல் துதிக்கின்ற அடியார்களின் திறனையே அறிந்து அவ்வடியார்களோடு இணைந்து வழிபட்டாலே,அப்படிப்பட்டவரின் உள்ளத்தில் எம்பெருமானின் பற்றுச்சுரந்து தித்திக்கும் என்கிறார். அஃது அமுதமாகிய பெருஞ்சிறப்பையருளும் என்கிறார். இக்கருத்தினை,

"எம்பெருமான் தாளை நாளுஞ் சிந்திப்பார்க்கு
என்னுள்ளம் எப்பொழுதும் தித்திக்கும்."

என்று பெரிய திருமொழியில் பாடிக் காட்டுகின்றார். எம்பெருமானை, அவனுடைய பாதங்களைச் சிந்திப்பவர்கள் எவராகவிருந்தாலும் அவர்களையறியும் திருமங்கை ஆழ்வாரின் உள்ளம் தித்திக்கும் என்று கூறுகின்றார். அவர்களை உவந்து போற்றுவேன் என்றும் கூறுகின்றார். இதை,

"சிந்திப்பார்க்கு, என்னுள்ளம் எப்பொழுதும்,
தித்திக்கும்".

என்ற தொடர்மொழியால் விளக்கியுள்ளதைக் காணலாம் உள்ளம் ஒன்றி மனத்தூய்மையோடு எம்பெருமானை வழிபடுபவர்களையே கண்டுவிட்டால் திருமங்கையாழ்வாரின் உள்ளம் களிப்புக் கடலில் மூழ்கித் திளைக்கும் என்றே குறித்தார். இவரைப் போன்றே மன உணர்வைப் பெற்ற திருஞான சம்பந்தரும் பாடுதல் காணலாம். தீயவற்றை எண்ணும் உள்ளத்தோடு பிறர் பொருளைக் கவர நினைப்பவர்கள் பழிக்கு ஆளாகி அழிவார்கள். அவர்கள் திருடுகின்ற போக்கை, வஞ்சிக்கின்ற எண்ணத்தை விட்டொழித்துப் பரம் பொருளைப் போற்றினாலன்றி அவர்கள் உள்ளத்தில் இறைவன் தங்குதல் அரிது என்ற விவரத்தைக்

"கள்ளநெஞ்ச வஞ்சக் கருத்தைவிட்டு அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உளத்துளான்".

என்று பாடி திருவாரூர் அப்பனைப் பரவுகின்றார். இப்பாடலில் கள்ளம் வஞ்சம் என்ற இரு சொல்லைப் பெய்துள்ளார். இந்தத் தவறுகளைப் புரிபவர்கள் சமுதாயத்தினைக் கெடுப்பதோடு, தாமும் கெட்டலைவார்கள் என்றும் இத்தகையவர்களின் மனங்களில் மகாதேவன் வாழமாட்டான் என்றும் ஞானசம்பந்தர் அறிவுறுத்தக் காணலாம்.

நல்லறம் செய்யாதவர்கள் நல்ல மனமில்லாதவர்களாவார்கள். அவர்கள் வாழ்வில் நலம் சிறிதும் காணமாட்டார்கள்! உண்மையும், அன்பும், ஒழுக்கமும் இல்லாதவர்களோ பொல்லாதவர்களே. அவர்கள் சமுதாயத்தால் வெறுக்கப்படுபவர்களே ஆவார்கள். அவர்கள் செல்வர்களாயிருந்தாலும் அல்லது வல்லவர்களாயிருந்தாலும், அவர்களோ நல்லறம் புரியாதவர்களாயின் என்றும் நலம் ஒன்றும் காணாதவர்களே யாவர்கள் என்பதனை

"நலம்தான் ஒன்றுமிலேன் நல்லதோர் அறம்
செய்துமிலேன்."

என்று திருமங்கை ஆழ்வார் இசைக்கின்றார். இப்பாசுரக் கருத்தினைத் தன்மேல் ஏற்றியே பாடுகின்றார் நல்லதோர் அறம் செய்யவில்லையென்றும் நலம் ஒன்றும் தாம் காணவில்லையென்றும் வருந்திக்கூறி உலகத்தார் அறிய உணர்த்துகின்றார். இதில் "அறம் செய்யவில்லை" என்று பாடாமல் "நல்லதோர் அறம் செய்துமிலேன்" என்று கூறுவதால் இறைவனுக்குச் செய்யும் சிறந்த தொண்டை விளக்குகின்றார். நலத்திலும் நல்லதோர் அறத்திலும் நிற்பவர்களுக்கே எம்பெருமான் அருள் புரிவான் என்பதை இச்சிறிய தொடர் மொழியில் விளக்கிக் காட்டுகிறார்.

மேலும் எம்பெருமானை உறவுமுறையில் வைத்து மனம் உவப்பெய்தப் பாடுகின்றார். இதனால் அவன் எத்தகைய உறவாளன் என்ற விவரத்தை அழகோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார். அந்த உறவு முறையை உடைய எம்பெருமான்

செய்யும் நலத்தையும் சுட்டுகின்றார் திருமங்கை ஆழ்வார். எம்பெருமானைத் தந்தை என்றும் சுற்றம் என்றும் ஆள்கின்ற அரசு என்றும் கூறியதோடமையாமல், என்னுடைய வாழ்நாள் என்றும் இயம்புகின்றார். இந்தச் செய்தியினை

"எம்பெருமான் எந்தை என்னுடைய சுற்றம்
எனக்கு அரசு என்னுடைய வாழ்நாள்"

என்று இனிது பாடித் தெரிவிக்கின்றார். நாமெல்லாம் வாழ்க்கையிலே உள்ள தந்தையை மனைவி, மக்களாகிய சுற்றத்தை, ஆளும் அரசை, சுகமாக வாழுகின்ற அன்றைய வாழ்நாளை பெரிதாகப் பேசி மகிழ்கின்றோம். என்றாலும் இவை மகிழ்வதற்குரிய வகையில் என்றும் நிலைத்திருப்பதில்லை. எனவே, நிலைத்த வாழ்வினை, சிறப்பினைப்பெற எம்பெருமானே அனைத்து வாழ்வாகவே இருப்பவன் என்று போற்றிட திருமங்கை ஆழ்வார் நமக்கு எடுத்து விளக்குகின்றார்.

இவரைப் போன்றே அருள் ஞானம் பெற்ற திருஞான சம்பந்தரும் பரம்பொருளைச் சுற்றம்; பிரான், தொடர்ந்து ஒளிரும் சோதி, கற்கும் நூற்கருத்து, கருத்தின் விளக்கம். அருளியல் இன்பம் என்றவர் இன்னும் மேலே சென்று அவனே முற்றும் என்றே முடிவுகட்டுகின்றார். இவற்றைச் சுவைபடவே

"சுற்றம் நீ! பிரானும் நீ! தொடர்ந்திலங்கும் சோதி நீ!
கற்றநூற் கருத்தும் நீ! அருத்தமின்பம் என்றிவை
முற்றும் நீ! புகழ்ந்து முன் உரைப்பதென் முகம்மனே!"

என்று பாட்டிசைக்கின்றார். திருமங்கையாழ்வாரும் இவரும் சொல்வந்த கருத்துகளை ஒரே தன்மையுடைய சொற்றொடர்களாகவே, பெய்து பாடிதாம் போற்றிய தெய்வங்களைப் புகழக் காண்கிறோம். இவர்கள் இத்தொடர்களில் தெய்வங்களின் பெயர்களைக் குறிக்காமல் பாடியுள்ளதால் வேற்றுமை இல்லாமல் பொதுமையாகவே கூறியுள்ள இச்சான்றோர்களின் கருத்துகள் அருமையாகவே உள்ளன.

'எம்பெருமான்' மை நிறம்போலவும், கருத்து விரிந்த கடல்போலவும் வளம் அருளும் மண்போலவும் எழிலையும்

பயனையும் கொடுக்கும் சந்திரர் சூரியர்களைப் போலவும் இன்னும் பல பொருள்களைப் போலவும் பெருமையாக இருக்கிறான். அவனே! திருவிண்ணகரத்தில் உள்ளான். அவனின் திறனை நான் நன்கு உணர்ந்துள்ளேன் என்றார். அவர்,

நான் வாழவும் இந்த உலகம் வாழவும் அவனையே வேண்டுகிறேன். அவனை நினைக்கின்ற மனத்தால் நான் வேறொன்றையும் நினைப்பதில்லை. எனவே, அவனையோ நான் என்றும் மறக்கவே மாட்டேன்! என்பதை

"மையொண்கருங்கடலும் நிலனும் மணிவரையும்
செய்ய சுடர் இரண்டும் இவையாய நின்னை நெஞ்சில்
உய்யும் வகையுணர்ந்தேன் உண்மையாலினியாது மற்றோர்
தெய்வம் பிறிதறியேன் திருவிண்ணகரானே."

எனப் பாடுகின்றார். 'ஒலியெழுப்புகின்ற கடல், பரந்துள்ள பூமி, உயர்ந்திருக்கும் மலை, பெரிய சந்திர சூரியர்கள், யாவும், உன் உடம்பின் உறுப்புகளே!' என்று கண்ணபெருமானின் பெரியதோர் நிலையினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். திருமங்கையாழ்வார் எண்ணிறந்த செயலைஇனிதாகஎளிதாகச் செய்யும் எம்பெருமானின் பேராற்றலை விரித்துக் காட்டவே மேற்குறித்த பாடலைப் பாடித் தெரிவிக்கின்றார். உன்னை யன்றிப் பிறிதொன்றை நினைக்கமாட்டேன் என்று கூறியவர் நம்மையும் அவர் நெறியில் நிற்க வழிகாட்டியுள்ளார்.

ஞானசம்பந்தரும் மனத்தைக் கவரும் கலை, நிறைவினைத் தரும் மறை, உயிர்ப்பை அருளும் காற்று, சீறி அழிக்கும் தீ, மிக உயரத்திலுள்ள வானம், அருகில் உள்ள பூமி, ஓங்கி நிற்கும் மலை என்று கூறியவர், இவற்றால் மிக எழிலை உடைய சிவ பெருமானின் பெற்றியினை அற்புதமாக வருணிக்கிறார். மேற்குறித்தவற்றைச் சிவபுரத்துத் தேவாரத்தில்,

"கலையவன்மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணுமவன்
கொலையவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே!"

என்று பாடி விவரிக்கின்றார். திருச்சிரபுரத்திலுள்ள பெருமானே மகிழ்ச்சியினை வந்து அருளுகின்றவனாக இருப்பதோடு, தன் அடியார்கள் துயர்களையும், சிலை கொண்டு காப்பவனாகவும் உள்ளான் என்று மேற்குறித்த பாடலில் பகர்கின்றார். திருமங்கை ஆழ்வார் இறுதியடியில் 'திருவிண்ணகரானே! என்று ஏகாரத்தால் கண்ணபிரானைப் பெருமைப் படுத்திக் காட்டுவதைப் போன்று ஞானசம்பந்தரும் "வளநகர் திருச்சிரபுரமே என்று சிவபெருமானை ஏகாரத்தால் தனிமைப் படுத்திச் சிறப்பித்துள்ளார். அனைத்துமாயுள்ள எம்பெருமானின் தனித்துவத்தை இவ்விருவரும் ஒன்றுபட்டுக் காட்டியுள்ளார்கள்; பெருமைபடுத்திப் பாடியுள்ளார்கள். திருமங்கை ஆழ்வார் தாம் பரமபதம் காண்பதெந்நாள்? எனத் திருவிண்ணகரப் பெருமானைப் பின்வருமாறு வினவுகின்றார்' 'ஐயனே! உலர்ந்து தீய்ந்து போன வெம்மையுடைய பாலை நிலத்தில் வலிமை பொருந்திய யானையினால் கீழே தள்ளப்பட்டுப் பயனற்றுப் போன பெரிய மரத்தினைப் போன்று, வீழ்ந்து அழிந்தவர்களை நினைக்காமல், உன்னிடத்தில் அன்பால் தெளிவு பெற்று நீங்கா நினைவோடு இருக்கும் எனக்கோ, மனைவாழ்க்கை பெரிய துன்பம் தருவதாக இருக்கிறது. அதிலிருந்து என்னை விடுபடச்செய்து, உன் திருவிடத்தினைக் காண அருள் சொரிய இறைஞ்சுகின்றேன் என்ற இந்த இனிய செய்தியினை

"முளிந்தீந்த வேங்கடத்து மூரிப் பெருங்களிற்றால்
விளிந்தீந்த மாமரம்போல் வீழ்ந்தாரை நினையாதே
அளிந்தோர்ந்த சிந்தை நின்பால் அடியேற்கு வானுலகம்
தெளிந்தேஎன் றெய்துவது திருவிண் ணகரானே!

என்று பாடியிருக்கிறார். இதில், இவ்வுலகில் வாழ்ந்த பெரிய செல்வந்தர்கள், தீய கருமங்களால் இடர்ப்பட்டு மாய்ந்து

போனார்கள். இப்படி வாழ்ந்தவர்களின் குறையுடைய வாழ்க்கையினை மதிக்காமல், சிறந்த நலமுடைய வாழ்வையே நல்கும் உன்னையே நெஞ்சாரப் போற்றுகின்றேன்! நலமுடைய வாழ்வே பரமபதமாகும். அந்த அருமை வாழ்வே உயர் பதமாகும். அந்த அருமை வாழ்வையே யான் பெறுகின்ற நாள் எந்நாளோ? என்று எம்பெருமானிடம் வேண்டுகின்றார் திருமங்கை ஆழ்வார்.

மேற்குறித்த பாடலின் முதலடியில் கடைசிச்சீரில் "பெருங் களிற்றால்" என்ற தொடரைப் பெய்து, கூற்றவனின் கொடுமையை உருவகமாக அமைத்துக் காட்டுகின்றார். அடுத்த அடியில் இரண்டாம் மூன்றாம் சீரில், "மாமரம்போல் வீழ்ந் தாரை" என்ற தொடரை எடுத்தாண்டு 'சொத்துச் சுகபோகத்தால் வசதியாக வாழ்ந்த அரசர் முதலான செல்வவர்களாயினும் அவர்களும் ஒரு நாள் அழிபவர்களே என்ற விவரத்தைக் குறித்துக் காட்டியுள்ளார். பெரிய மதயானையால் மாமரமும் வீழ்ந்துபடுதல் போலவே செல்வர்களாயினும் கூற்றுவனால் ஒரு நாள் மாய்வார்கள் என்பதையும் நினைவு கூர்கின்றார் ஆதலால் செல்வமோ வாழ்வே அன்று என்றும் இறைவனே நமக்கு நல்வாழ்வு என்றும் தெரிவிக்கின்றார். இவர் நெறியில் திருஞானசம்பந்தரும் பேராசை உடைய மனத்தைப் பற்றிக் கூறுகின்றார்; இத்தகைய மனமுடையவர்களுக்கு இன்று நன்மை ஏற்பட்டாலோ இந்நாளை நன்னாள் என்றே கூறுவார்கள். இதனினும் மேலாய் நன்மை பெற்றிட்ட மறுநாளைப் பெருநாள் என்றே புகழ்வார்கள்.

இவ்வாறு நன்மையேற்படும் ஒவ்வொரு நாளையும் மிகச் சிறப்பான திருநாளாகவே பேராசையுடைய மனத்தைப் பெற்றவர்கள் பேசுவார்கள். இன்பம் நல்கும் செல்வத்தைக் கண்டு குதூகலிக்கும் மனமோ பின் இச்செல்வம் அழியும் போது பெரிதும், அல்லல்படுகின்றது. இச்செல்வத்திற்காக நாளையெல்லாம் பொழுதையெல்லாம் வீணடித்து வாழுகின்றவர்க்கு அறிவுரை கூறுகின்றார் அவர். இவர்கள் திருந்தி

வாழ, அருள் வாழ்வு பெற பிறை நிலவினை அணிந்துள்ளவனை—கங்கையுடையவனை—கொன்றை மலர்களைச் சூடியிருப்பவனை—சோதி வடிவானவனைப் போற்றி வர வேண்டுமென்று புகலுகின்றார். அவனைச் சரணடைந்தால் பிறவா நிலையையடையலாமென்று,

"இன்று நன்று நாளை நன்று என்று நின்ற இச்சையால்
பொன்று கின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே,"

என்று இதைத் திருக்கோடிகா என்னும் தேவாரத்தில் பாடுகின்றார் திருஞானசம்பந்தர். துன்பங்கள் பேராசையால் ஏற்படுகின்றன; எனவே இன்பத்தை எடுத்துக் கூறித் திருந்தி வாழ்ந்திட, எம்பெருமானைப் பற்றி வாழ்ந்திட இருவருமே இணைந்து கருத்துரைத்தார்கள்.

எம்பெருமானை நினைக்கும் மனமே மகிழும், அந்த மனத்தில்புகுந்தேதேன் போன்ற இன்பமேஅருள்வான். சுவைக் கரும்பின் சாறு போன்று அவன் தித்திப்பான் என்றார். சிறப்புடன் நறையூரில் இருக்கும் அந்த எம்பெருமானையே இந்த உடம்பைக் கொண்டு காணப் பெற்றேன். என்பதை,

"ஊனேர் யாக்கை தன்னை உழந்தோம்பி வைத்தமையால்
யானாய் என்றனக்காய் அடியேன் மனம்புகுந்த
தேனே! தீங்கரும்பின் தெளிவே! என்சிந்தை தன்னால்
நானே எய்தப்பெற்றேன் நறையூர் நின்ற நம்பியோ!

என்று பாடுகின்றார். இப்பாடலில் உள்ளம் எண்ணியதை நிறைவேற்றி வைக்கின்ற உடம்பினது சிறப்பைக் கூறுகின்றார். திருமங்கை ஆழ்வார் எம்பெருமானே காலமெல்லாம் உன்னை நினைந்து போற்றும் இவ்வுள்ளத்திற்கு மகிழ்ச்சியை என் உடம்பே ஏற்படுத்தித் தந்த உடம்பால்தான் வந்து நறையூரில் இருக்கும் உன்னையேநினைக்கின்ற உள்ளமே விழவைப் பெற்றது. உன்னைக் கண்டும் மகிழ்வுற்றது என்கின்றார்.

எம்பெருமானே! முன்பு இந்த உடம்பானது உள்ளம் நினைத்த படி உன் திருவடியைக் காண்பதற்கு உதவி செய்யவில்லை என்பதனை,

"ஊனேர்யாக்கை தன்னை உழந்தோம்பி
வைத்தமையால்"

என்னும் அடியால் தெரிவிக்கின்றார் ஆழ்வார்.

ஞானசம்பந்தரும் ஊனமாகிய இருளோ விட்டு விலக ஞான ஒளி தேவை என்கின்றார். இவ்வொளியைப் பெறவே சிவபெருமானை நினைத்துப் போற்றுதல் வேண்டும். அப்படி அவனை நினைந்து போற்றும் உள்ளம் தேன் போன்று இனிக்கும் தன்மையுடையதாகும் என்கிறார். இந்த உண்மையை

"ஊனத்திருள் நீங்கிட வேண்டின்
ஞானப் பொருள் கொண்டு அடிபேணும்
தேனொத் தினியான் அமரருஞ்சேர்
வானம் மயிலாடு துறையே!

என்று பாடியருளினார். இப்பாடலில் ஊனத்திருள் என்று கூறியது உடம்பு இருள்போல் துன்பம் உடையது என்பதை அறிவித்தார். இந்த உடம்பு எடுக்கும் துன்பத்திலிருந்து விடுபட்டு உயிர் பிறவா நிலையை எய்திட வானம் அனைய பெருமானைப் போற்ற வேண்டும் என்கின்றார். இதை

"ஞானப் பொருள் கொண்டு அடிபேணும்"

என்னும் அடியால் அறிவிக்கின்றார். மேற்குறித்த அடிகளில் இறைவனைத் தேன் என்றும் வான் என்றும் அனைத்தும் என்றும் உறவு என்றும் ஞானம் என்றும் திருமங்கை ஆழ்வாரும் ஞானசம்பந்தரும் கூறிவிழைந்து பாராட்டுகிறார்கள். இவர்கள் வணங்கும் தெய்வங்களுக்கும் போற்றும் சமயங்களுக்கும் வெவ்வேறு பெயரிட்டிருந்தாலும், ஒருமித்த கருத்துகளைப் பெய்து எம்பெருமானைப் பாடிச் சிறப்பித்தார்கள்.

# திருமங்கை ஆழ்வாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும்

திருமங்கை ஆழ்வார் நம்மாழ்வாரைப் போன்று ஆயிரத்துக்கு மேற்பட்ட பாரசுரங்களைப் பாடி எம்பெருமானின் சிறப்பையெல்லாம் போற்றித் தெளிவாகக் கூறியுள்ளார். இவர் தம் பாசுரங்கள் உவப்பையூட்ட வல்லன; உள்ளத்தை ஈர்க்கத் தக்கன; கருத்தும் பொருளும் ஒருமித்து, சொல்லும் செய்தியினை வெல்லம்போல் சுவைக்க வைப்பன; யாப்பு நலனும் இசையின்பமும் வசப்படுத்தும் பெற்றியுடையன; புலவர் பெருமக்கள் இவர் தம் பாசுரங்களைப் பெரிதும் போற்றிப் புகழ்வர்; உள்ளத்தால் உவந்து கூறுவர்.

இத்தகைய திறத்தைப் பெற்ற சத்திய சீலரான திருமங்கை ஆழ்வார் திருவேங்கடத்தில் கோயில்கொண்டிலங்கும் எம்பெருமானை உள்ளம் நெகிழ்ந்து பாடிப் பரவுகின்றார். பேராற்றல் படைத்த அந்த ஆராவமுதனை நோக்கி ஐயனே! நீ எனக்கு முன்பு வெகு தொலைவில் இருந்தாய்; உன்னை யான் மறவாமல் எண்ணித் துதித்ததால் இன்று என்னருகில் இருப்பவனாகிவிட்டாய். மேலும் உன்னைத் தொடர்ந்து இன்பம் தோன்ற நான் ஏத்தி வந்ததால்காத்தருளும் ஐயனாகிய நீ! என் சிந்தையில் நின்று விந்தையுற ஒளி செய்கின்றாய்.

நீ மாயனானதால், எங்கும் நிறைந்து, மறைந்து நின்று அருள் சுரக்கின்றாய்! உன் மாயத் திறத்தை யார்தான் வாய்

கொண்டு உரைக்க வியலும்; பரவிப் பாடுவார் மனத்தில் பரவசம் கொண்டுள்ள நீ! கணுக்களையுடைய மூங்கில்கள் பிளவுபட்டு, ஒளிமிகுந்த முத்துகளையும் இரத்தினங்களையும் உதிர்க்குமிடமான திருவேங்கடமென்னும் திருமலைமேல் எழுந்தருளி அழகொளி காட்டுகின்றாய்!

நீ யார்? நீதான் ஆயன்! ஆம் நீயே கண்ணன்! உன்னுடைய பொன்னார் திருவடிகளைத் தவிர அடியேன் வேறொன்றையும் போற்றுதல் அறியேன்! நப்பின்னைப் பிராட்டியுடன் சேர்ந்து வந்து என்னெஞ்சில் புகுந்தவன் நீ! உன்னருமைத் திருவடிகளைத் தவிர, வேறெதையும் விரும்பிப் போற்றுபவன் அல்லேன்! என்று தம் உறுதியான கருத்தினை திருமங்கை ஆழ்வார் வெளிப்படத் தெரிவிக்கின்றார்.

எம்பெருமான் ஏன் தூரத்திலிருக்கின்றான்? யார் எண்ணாமலிருக்கின்றார்களோ, அவர்களுக்கு அவன் எட்டாத தூரத்தில் மறைந்து நிற்கின்றான்! யார் அவன் சீர்மையை எண்ணிப் பண்ணிசைக்கின்றார்களோ அவர்களுக்கு அருகில் வந்து அருள் சுரக்கின்றான்! கருணை வள்ளலான கார் முகில் வண்ணன் வாடும் பயிரை வாழ்விக்கும் மழைபோல விரும்புபவர்க்கே அருள் சுரக்கின்றான்.

உதாரணமாக, போற்றாத துரியோதனாதியர்க்கு அவன் வெகு தொலைவில் இருந்தான், அவர்களுக்கு உதவி செய்யாமல் எதிர்மறையில் நின்று பாரதப் போரில் அவர்களை அழித்து ஒழித்தான். தன்னை என்றும் மறவாமல் போற்றி உதவிடவேண்டிய பாண்டவர்களுக்குப் பக்கத் துணைவனாகி, பாரதப் போரில் அவர்கள் வெற்றிபெற அகமகிழ்வுடன் உதவி புரிந்தான் அவன் இத்தகைய உத்தமனைப்பற்றி,

"சேயன் அணியன் என்சிந்தையுள் நின்ற
மாயன் மணிவாள் ஒளிவெண் தரளங்கள்
வேய்விண்டு உதிர்வேங் கடமா மலைமேய
ஆயன் அடியல்லது மற்று அறியேனே!"

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். இதில் சேயன் என்றதில் எண்ணிப் போற்றாதவர்கள் அறியாதவாறு அவன் தூரத்தில் மறைந்து நிற்கின்றான் என்றும் அணியன் என்றதில் எண்ணுவோர்க்கு அருகில் சென்று உதவிடுவான் என்றும் கூறியவர், எண்ணி நிதம்போற்றும் என் சிந்தையில்வந்து குடி கொண்டான் என்றார். அந்த மாயனே வேங்கடத்தில் நிற்கும் ஆயனே ஆவான். அவன் திருவடியை அன்றி வேறொன்றை யான் அறியேனே என்றார்.

இவரைப் போன்றே சுந்தரமூர்த்தி நாயனாரும் தம் உள்ளக் கிடக்கையைத் தெரியப்படுத்துகிறார். திருக்காளத்தியில் கோயில்கொண்டுள்ள எம்பெருமானைப் போற்றுகின்றார். காளத்தி நாதனை நோக்கி முன்பு உன் பெருமையை அறியாமலிருந்தேன். அதனால் பிறர் என்னைக் கடிந்து பேசுமளவில் தீயபோக்கில் செயற்பட்டேன். செருக்குற்றுத் தருக்கித் திரிந்தேன். உன்னைப்பற்றி அறியாமையால், உன்பால் அன்பு கொண்டு போற்றாமல், வன்மைப் போக்கில் தலைபட நேர்ந்தது.

மண்ணில் உன்றன் உண்மையை உணராது வாழ்ந்த எனக்கு நல்லதோர் அறிவுரை கூறுவார் இன்றி இருந்த என்பால் அன்புகொண்ட நீ பெற்ற தாயினும் மகிழ்வுகொண்டு நீயே வந்து என்னுள்ளத்தில் குடி புகுந்தாய்; குளிர்ச்சி பொருந்திய பெரிய சடைமுடியையுடையவனே! இளமையை யுடையவனே! வானவர்கள் தம் முடியால் வணங்குவதற்குரியவனே! உன்னையல்லாமல் மற்றொருவரையும் அறியேனே!'' என்றார். பரம்பொருள்பால் சிந்தையைப் பறிகொடுத்த சுந்தரர்,

''கடியேன் காதன்மையால் கழல்போ தறியாத என்னுள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார் சடைபெம் குழகா
முடியால் வானவர்கள் முயங்கும் திருக்கா ளத்தியாய்
அடியேன் உன்னையல்லால் அறியேன்மற் றொருவரையே!''

எனப்பாடிப்போற்றுவார். இதில் அன்பு இல்லாததனால்உனை மறந்தேன்; தீயவனாக உழன்றேன்; நீ உணர்த்தியதால் நான் உன்னை அறிந்தேன்; அறிந்த என் அகத்தில் கோயிலாக அமர்ந்தாய்! இத்தகைய வித்தகனாகிய உன்னையன்றி உள்ளத்தால் மற்றொருவரையும் அறியமாட்டேன் என்று பேசுவார்.

இந்தச் செந்தமிழ்க் கவிஞர்களான இருவர்களும் பாடியருளியவற்றில் கருத்தொற்றுமை இருத்தலைக் கண்டு மகிழலாம். திருமங்கையாழ்வார் திருமாலை என் சிந்தையில் நின்ற மாயன் என்றார். அம்மாயனே திருவேங்கட மாமலைமேல் நின்றொளிரும் ஆயன் என்றார். அந்த ஆயனான கண்ணபிரானின் திருவடிகளையன்றி மற்றொன்றையும் அறியேனே என்றார். இவரைப் போன்றே, சுந்தரமூர்த்தி நாயனாரும் சிவபெருமானைத் தம்முள் கோயில் கொண்ட "குழகா" என்றார். அக்குழகனே காளத்தியில் கோயில் கொண்ட குளிர்வார் சடையனே! என்றார். இவ்வாறு இனிது கூறியவர் அச்சடையனையன்றி வெறொருவரை அறியமாட்டேனே என்கின்றார். இவர்கள் இருவரும் தாம்விரும்பிய தெய்வங்களைப் பாடினாலும், பாடப் பெற்ற செய்திகளோ ஒன்றுபட்டிருத்தலை அறியலாம். இவர்கள் இருவரும் எம்பெருமானைத் தவிர இம்மண்ணில் வேறொன்றையும் அறியாதவர்கள்; ஆம் நோக்கும் திசையெல்லாம் அவனன்றி வேறில்லை என்றே கருதியவர்கள்; எல்லாப் பொருள்களிலும் அவனையே கண்டவர்கள்; கண்டே இன்புற்றார்கள்.

இவர்கள் பெற்ற மன உணர்வினை நாமும் பெற்றால் இறைவனைப் போற்றி ஏற்றம் பெற்றுய்யலாம். வாழ்வில் பெரும் பதத்தை எய்தியவர்களாகவே திகழலாம். வாழ்வு என்பது அழிந்து படுவதன்று? நிலைத்து நிற்பது; நிலைத்ததாகிய நல்வாழ்வு என்பதோ அவன் திருவடியே! என்ற செய்தியினை இப்பெருமக்கள் இருவரும் நமக்கு நல்வழி காட்டியுள்ளார்கள், இவர்கள் சொல்லவந்த கருத்துகளை

வெல்லம் போல் இனிக்கச் சொல்லி, நம்முள்ளத்தைப் பற்றி இழுத்தே அருள் வழியைக் கூறினார்கள்.

அதள, சுதள, பாதளம் எனக் கூறும் மண்ணுலகமோ ஏழாகும்; வற்றாத நிலையில் அலைகளைக் கொண்டிருக்கும் கடல்கள் ஏழாகும். ஆடாமல் அசையாமல் நிற்கும் மலைகள் ஏழாகும் இவையாவும் வியப்புக்குரியனவாகும். இத்தகைய பெரியனவற்றையெல்லாம் ஒரேவாயால் முன்பு உண்டவன் நீ! நீயோ பழமையுடைய புகழோடு நிற்கின்றாய்! உன்னையே சான்றோர்கள் மெத்த போற்றித் துதிக்கின்றார்கள். எளியோர்க்கு உதவி செய்யும் உன்னையே நான் போற்று கின்றேன். எனக்கிங்கு ஆதரவு காட்டுவாறின்றி நிராதரவாக உள்ளேன். துன்பத்தில் அழுந்திக் கிடக்கும் அடியேன். உன்னைத் தவிர வேறு கதியில்லாமையால் உன்னையே போற்றிப் பரவுகின்றேன். பற்றற்றவனாகிய உன்பற்றில் நின்று இன்பம் காண விழைந்து, வாயார கூவி அழைக்கின் றேன். தந்தையாகிய எம்பெருமானே பந்தமுடன் என் முன் வந்து அருள் தந்திடுவாயாக! என வேண்டியவர்,

"வற்றா முதுநீரோடு மால்வரை ஏழும்"
துற்றாக முன்துற் றியதொல் புகழோனே
அற்றேன் அடியேன் உன்னையே அழைக்கின்றேன்
பெற்றேன் அருள் தந்திடுக! என் எந்தை பிரானே!"

என்று பாடித் தம் உள்ளுணர்வைத் தெரிவிக்கின்றார். ஆதர வற்றவர்கள் எங்கெங்கிருக்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களைத் தேடிச் சென்று உதவுகின்ற செங்கண் மாலாகிய உன்னையே உணர்ந்த சான்றோர்கள் காப்பவன் நீ! என்றே இனிது கூறுவார்கள். எனவே, அடியேனும் ஆதரவற்றவ னாகவே உள்ளேன். என்னையும் அன்பு கொண்டு ஆதரிக்க வேண்டுகின்றேன். நான் உன்னடியேன் ஆதலால் வாயார உன்னையே இன்பமுறக் கூவியழைக்கின்றேன்.

கருணையுடைய நீ விரைந்து வந்து அருள் புரிந்திடு வாயாக! நீயோ என் தந்தை! நீயோ நான் போற்றிப் பக்தி செய்யும் பிரான்! ஆதலால் சாதனையுடைய நீ! எனக்கு அருள்

சுரக்கவேண்டும் என்று திருமங்கையாழ்வார் எம்பெருமானிடம் இறைஞ்சுகின்றார். மனித வாழ்க்கையினை இனிது வாழ எண்ணுபவார்கள் அழியும் பொருளையே நிலைத்த பொருளாக நினைக்கின்றார்கள். அந்த அழியும் பொருளையே பெரிதாகக் கருதிவிடுவதால் இறுதிக் காலத்தில் இடர்ப்பட்டழிந்துவிடுகின்றார்கள். இவ்வாறு அழியாமல் நிலைத்து வாழ வேண்டியே எம்பெருமானிடம் "அற்றேன் அடியேன் உன்னையே அழைக்கின்றேன்" என்று பாடுவார். கதி நீ தான் வேறு கதியில்லை என்பதனை அற்றேன் என்னும் சொல்லாலே திருமங்கை ஆழ்வார் பேசுவார். அவரோ அவன் திருவருளினைப் பெற்று விட்டதனைக் காட்ட "பெற்றேன் அருள்" என்ற தொடர் மொழியால் கூறுகின்றார்.

இவரைப் போன்றே நிராதரவற்ற சுந்தரமூர்த்தி நாயனாரும் எம்பெருமானை நோக்கிப் பாடுகின்றார். இவர் தம் நிலையைச் சிவபெருமானிடம், எம்பெருமானே! உன்னை எக்காலத்திலும், எக்காரணத்தாலும், எந்நிலையாலும் மறவாமல் போற்றுபவனாவேன் என்கின்றார். நான் எடுக்கின்ற ஏழு பிறவியிலும் உன்னை மறவேன் என்றும் பேசுவார்.

உன்மீது காதல் கொண்ட என்னெஞ்சம் நெகிழுமாறு போற்றுகின்றேன்; புற்றிலிருந்து வெளிப்பட்டு, படமெடுத்தாடும் பாம்புகளையுடையதும் ஒளியால் தெளிவுடன் விளங்குவதுமான அவிநாசி என்னும் அருமைத் திருவூரில் பற்றுடன் வதிகின்ற பசுபதியே! பரம் பொருளே! கரங்குவித்துச் சிரம் தாழ்த்தித் துதிக்கின்றேன்; அனைத்திற்கும் காரண பூதனாயுள்ள உன்னையே நினைக்கின்றேன்; நினைந்து நினைந்து மனமாரப் பூசிக்கின்றேன் என்பதை,

"எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாய் என்று உன்னையே உள்கின்றேன் உணர்ந்து உள்ளத்தால்
புற்றாடு அரவா புக்கொளியூர் அவிநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே!"

எனப்பாடுவார். எல்லாவற்றிற்கும் நீதான் ஆதாரப் பொருள்; தொல்லை அறுப்பவன் நீயே! நல்லனவற்றையருள்பவனும் நீயே! எனவே உன்னை யான் எப்போதும் மறவேன், "ஏழு பிறவி எடுத்தாலும் அறத்தின் நாயகனாக உள்ள உன்னையே மறவாமல் போற்றுவேன்; உற்றதொரு பொருளாக, நற்றுணைவனாக இருப்பவன் நீயே! ஆதலால் உன்னையே நினைக்கின்றேன்; நினைந்த யான் உள்ளத்தால் உணர்ந்து போற்றுகின்றேன் என்றார்!

தஞ்சம் என்று வந்தவர்க்கு அஞ்சாதே! என்று அருள் சுரக்கும் நீ! நஞ்சுடைய பாம்பினை இடமாகக் கொண்ட அவிநாசியில் அடியார் சஞ்சலம் தீர்க்கவே கவின் மிகுந்து விளங்குகின்ற பசுபதியே! பரம் பொருளே! சஞ்சலத்துடனிருக்கும் யான், உன்பால் தஞ்சமடைந்தேன்; எனக்குத் தயவு காட்டுவாயாக! எனச் சுந்தரர் சிந்தை நெகிழ்ந்து பாடுவார். முன்னர் எடுத்துக் காட்டிய திருமங்கை யாழ்வார் பாசுரத்தின் மூன்றாம் அடியில், நான் திக்கற்றவனாகி விட்டேன் எனக்குக் கதி யாருமில்லை. எனவே, உன்னைப்பரிடி பக்தி செய்து யான் உனக்கே அடியவனாகிவிட்டேன். வாயால் தூயமுடன் அழைக்கின்றேன். நீ என்னை மறந்துவிடாதே. என்ற கருத்தை,

"அற்றேன் அடியேன் உன்னையே அழைக்கின்றேன்"

என்னும் தொடரால் பாடியுள்ளதைக் காணலாம். நான்காம் அடியில், எனக்கு நீ தந்தை, ஆம் என் வணக்கத்திற்குரிய பெருமானும் நீயே! எனவே, அடியேன் விரும்புவதைப் பெற உன் திருவருளுக்காகவே இறைஞ்சுகின்றேன் அருள் புரிவாயாக என்று கோருவதை,

"பெற்றேன் அருள்தந்திடுக என் எந்தை பிரானே"

எனப்பாடுவார். இதில் "பெற்றேன்" என்பதால் அருளாளனின் பேரின்பத்தைப் பெற்று விட்டதாகக் கூறுதல் காணலாம். அடுத்து, சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய இரண்டாம் அடியில் எனக்கு வேறொரு கதியில்லை, ஆதலால் உன்னையே

கதியாகக் கொண்டேன் என்றார். உன்னை எனக்குரியவன் என்று உள்ளத்தால் நெகிழ்ந்து பாடுகின்றேன் என்பதை.

"உற்றாய் என்றுன்னையே உள்குகின்றேன்
உள்ளத்தால் உணர்ந்து.

என்று பாடுவார். நான்காம் அடியில் உன் அருள் கிட்டினால் உனக்கே பக்தியுடையவனாவேன். வேறு எந்தப் பொருள் மீதும் பற்று வைக்காமல் உன்னையே பற்றாகக் கொண்டுய்வேன் என்ற செய்தியினைப்

"பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே"

என்று பாடுவார்.

இதுகாறும் கூறியவற்றால் திருமங்கையாழ்வாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிய பாடல்களில் கருத்தொற்றுமை இருத்தல் காண்கின்றோம். இவர்கள் பாடிய மூர்த்திகள் இருவேறு தன்மையில் இருந்தாலும் பாடிய பாடல்களில் பயின்று வரும் கருத்துகள், ஒருமித்த நிலையில் இருந்து பரம்பொருள் ஒருவனே என்ற விளக்கத்தைத் தரக் காணலாம். இருவரும் பாடிய பாடல்களில் பரம்பொருளின் திறன் கோயில் கொண்ட இடம், அவன் அருளும் தன்மை அன்புடன் நினைப்பவரிடம் இனிது வந்து அருளிடும் பண்பு, ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவற்றை மிகத் தெளிவாகக் அவர்கள் காட்டியுள்ளார்கள்.

இறைவன் அடியார்களுக்கு உதவும் அன்பனாக இருப்பதால் அவனிடத்தில் திருமங்கையாழ்வார்,

"அடியேன் உன்னையே அழைக்கின்றேன்'

என்றார், சுந்தரமூர்த்தி நாயனார்.

"பற்றாக வாழ்வேன் பசுபதியே"

என்றார். இவ்வாறு செம்பொருளை நம்பிப் பாடிய இவர்களின் இன்பப் பாடலில் நாமெல்லாம் ஈடுபட்டு இசைத்தே செம்பொருளான எம்பெருமானின் அருள்நிலையைப் பெற்றுய்வோமாக!

# திருமங்கை ஆழ்வாரும் மாணிக்கவாசகரும்

உலகமனைத்தையும் கடந்தும் அண்டங்களுக்கப்பால் நின்றும் ஒளிர்கின்ற இறைவனாகிய பேரொளியே மாந்தர் களான அனைவர்களின் உள்ளத்திலும் ஒளி வீசித் திகழ்கின்றது; என்று உபநிடதம் இயம்புகின்றது. இக்கருத் தினை உணராதவர்கள் இறைவன் எங்கேயிருக்கின்றான்? அவனைக் காட்டவியலுமா? என்று பிறரை ஏளனம் செய்யும் வகையில் கேள்வியினைக் கேட்பார்கள்.

இப்படிக் கேட்பவர்கள் எல்லோரும் தம் புலன்களின் அறிவு வழிநின்று கேட்பவர்களேயன்றி உய்த்துணர்ந்து ஆழ்ந்து பார்க்கும் உள்ளத்தின் அறிவால் தெளிந்து கேட்டவர் களாக எண்ணுதல் இயலாது. இத்தகையவர்கள் இறைவனைப் பார்த்தலரிது. இந்நிலையில் உள்ளவர்களைப்பற்றியும் இவர்கள் உள்ளத்தினைப்பற்றியும் தெளிவில்லாத நிலையைக் குறித்தும் மணிவாசகப்பெருமான் மிக விளக்கமாக எடுத்துக் கூறுகின்றார். நினைக்காதவர்களின் உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றான் என்பதை

"ஓராதார் உள்ளத்து ஒளிக்கும்
ஒளியானே"

என்று பாடி விளம்புகின்றார்.

ஆம் அப்பரம்பொருளைப்பற்றி அவர்கள் அறியாமல் போனாலும் அவர்களின் உள்ளத்திலும் அவன் ஒளிந்து மறைந்திருக்கின்றான் என இவர் தெரிவித்தல் காணலாம்.

உள்ளத்தால் உய்த்துணர்ந்தறியாமல் வெறும் புலன்களின் அறிவைக்கொண்டு பார்ப்பவர்களுக்கு அருளாளன் இருந்தல் தெரியாது. அப்பரம்பொருளைக் குறித்து எடுத்து விளக்கினாலும் புரியாது; ஆனால் புலன்களின் ஆற்றல் எல்லாம் ஒடுங்குமாறு செய்து, அடிமனம் என்னும் உள்ளொளியால் காண்பவர்க்கோ எந்தத் திசையிலும் தானாகி இலங்கும் மாமாயன் காட்சியளிப்பான் என்னும் செய்தியைத் திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில்,

"தொண்டர்கள் தங்கள் சிந்தையுள்
முளைத் தெழுந்த தீங்கரும்பினை"

எனப் பாடுவார். இதில் உய்த்துணர்வார் சிந்தையில் எம்பெருமான் தித்திக்கும் கரும்பாக முளைத்தெழுவான் என்றார். எம்பெருமானைத் தித்திக்கும் கரும்பாக உருவகப் படுத்திக் காட்டினார். இவர் பாடிப் பரம்பொருளைப்பற்றி விளம்பியதைப் போன்று மாணிக்கவாசகரும்

"உள்ளிருக்கும் உள்ளானே" என்றும்
"ஓயாதே உள்குவார் உள்ளத்தில்
உள்ளிருக்கும் உள்ளானே"

என்றும் பாடுவார். இவ்வாறு பாடியருளிய திருமங்கை ஆழ்வாரும் மாணிக்கவாசகரும் பரம்பொருள் இருக்கும் இருப்பிடத்தைக் காட்டுகின்றார்கள், தூய்மையுடையோர் மனமே மாயபிரான் வதியும் இடமெனக் குறித்தார்கள்.

பறந்து திரியும் தும்பியைப் பார்த்துத் திருமங்கை ஆழ்வார் மகிழ்ந்து கேட்கின்றார். தும்பியே திரிந்து மலரிலுள்ள தேனை

உண்டு இசைக்கின்றாய்! இதனால் நீ கண்ட பயன் யாது? ஏதுமில்லை அல்லவா? பரமபதத்திற்கு அதிபதியாயும், செருக்கற்றுத் துதிக்கும் தேவர்களுக்கெல்லாம் தலைவனாயும், நலஞ்சொரிபவனாயுமுள்ள பரம்பொருளிடம் சென்று அவனுடைய திருமார்பில் விளங்கும் மணம் மிகுந்த துளப மாலையை நுகர்வாயேயானால் பெறுவதற்கரிய பேற்றினை எய்துவாய் என்றவர், மற்ற மலர்களை நுகர்ந்தால் தேனை மட்டும் நுகர்வாய்; ஆனால் எம்பெருமானின் துளப மாலையை நுகர்ந்தால், தேனையும் பரமபதத்தையும் அனுபவிப்பாய் என்கின்றார். இச்செய்தியை அழகோவியமாக

"விண்ட மலரெல்லாம் ஊதிநீ என்பெறுதி
அண்ட முதல்வன் அமரர்கள் எல்லாரும்
கண்டு வணங்கும் கண்ணபுரத்து எம்பெருமான்
வண்டு நறுந்துழாய் வந்து ஊதாய் கோத்தும்பி"

என்று பாடிக் கூறுவார். இப்பாடலை ஆழ்வார் அகத்துறை நெறியில் பாடுகின்றார். தம்மைத் தலைவியாகவும் எம்பெருமானைத் தலைவனாகவும் எண்ணிக் காதல் மிகுந்து பாடுகின்றார். கோத்தும்பியே எம்பெருமானிடம் செல்லும் நீ துளப மாலையிலுள்ள தேனை உண்ணுவதோடு, என்னுடைய விரக தாபத்தினையும் கூறவேண்டுகின்றேன் என்கிறார்.

அவனிடம் கூறும்போது, அவன் என்னைப்பற்றி என்ன கூறுகின்றான் என்பதையும் கேட்டுவந்து இசையெழுப்பிக் கூறுவாயாக! எனப் பரகாலநாயகிக் கேட்கின்றாள். எம்பெருமானை எளிதில் பற்றுதற்குரிய உபாயம் நாயகி நாயகன் பாவமே ஆதலால் இந்த நெறியில் ஆழங்கால்பட்டஅவர், மேற்குறித்த பாசுரத்தைப் பாடினார். இந்த அருளாளரைப் போன்றே மணிவாசகரும் தம் திருவாசகத்தில் பாடியுள்ளார். கோத்தும்பியைப் பார்த்து, நீ தேனைப் பருகுவதற்காகப் பல்வேறான மலர்களை நாடுகின்றாய், அப்படி நாடிப்பெறும் தேனைக் காட்டிலும் பேரின்பம் நல்கும் தேனை, எம்பெருமானிடம் நாடிப் பெறுவாயாக! என்கிறார். அங்கக் கெய்வக்

தேன் நினைக்குந்தோறும், உணர்ந்து பார்க்குந்தோறும், பேசும் தோறும், எப்பொழுதும் இனிக்கும் தன்மையுடைய தேன். எல்லா எலும்புகளிலே உள்ளிருந்து நெகிழுமாறு செய்யும் பேரானந்தத் தேனே! யாகும் அது.

அத் தேனோ எம்பெருமானின் திருவடி மலரில் உள்ளது. அம்மலரை ஊதிப் பெரும்பதம் எய்துவாயாக! எனக் கூறியவர்

"தினைத்தனை உள்ளதோர் பூவில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பி"

என்று பாடியவர் கோத்தும்பியிடம் இச்செய்தியினைக் கூறுகின்றார். மேற்குறித்த பாடலில் கடைசி அடியில் முதல், இரண்டு சீர்களில் "குனிப்புடையானுக்கே" எனக் கூறுவதால் எம்பெருமானின் ஊழிக்கால நடனத்தை நமக்கு நினைவு கூர்ந்தார். மேலும் கோத்தும்பியினிடம் இப்படித் திருநடம் புரிந்தோனின் பாத மலரினைக் கண்டு ஊதினால் பேரின்பம் காணவியலு மென்று கூறுகின்றார்.

மாணிக்கவாசகரும் திருமங்கை ஆழ்வாரும் பரம்பொருளிடம் தாம் ஐக்கியமாகும் விருப்பத்தினைக் கூறியே மற்றவரும் அவனை அடையவே கோத்தும்பியை முன்னிலைப்படுத்திக் கூறியிருக்கின்றார்கள். "துளப மாலையை அணிந்த திருமாலிடம் சென்று ஊதுவாய்" என்று திருமங்கையாழ்வாரும்

"குனிப்புடையானைச் சென்றூதுவாய்" என்று மாணிக்கவாசகரும் இனிதே தெரிவிக்கின்றார்கள். மனிதகுலம் வீண் பொழுதைப் போக்காமல் தனிச்சிறப்புடையவனான தயாபரனைப்பற்றி வாழ இவர்கள் வழிகாட்டுகின்றார்கள்.

மேலும் ஆழ்வார் திருக்கண்ணபுரத்தைப் புகழ்ந்து பாடுகின்றார். புலவர் பெருமக்கள் விரும்புகின்ற இடத்தில் வாழும் ஐயனே! நான் தாய் தந்தையர்களையும், உறவினர்

களையும் போற்றுகின்றவனல்லன், இவர்களிடம் யான் என்றும் எவ்விதப்பற்றையும் கொண்டவனல்லன், எனக்கு எல்லாமாய் யாவையுமாய் உள்ளவன் நீதான்! உன்னையே பற்றுடைய வனாகச் சரணடைந்தேன்.

இந்த எளியேனை உன்னுடையவனாக ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன், எனக்கிருக்கும் உறவினர்களெல்லாம் நான் பெற்றுள்ள உடம்பாலான உறவுக்குரியவர்களே! இந்த உடம்பும் அழியும் தன்மையுடையதே! ஆனால் அழியாத உயிருக்கு எம்பெருமானே உன்னைத் தவிர நலம் செய்பவர் எவருமிலர். நான் கடைத்தேற உதவியாய் இருப்பவன் நீயே! ஆதலால் என் உயிரோ பிறவாத நிலையை அடைய உன் திருவடியைப் பாடி இறைஞ்சுகின்றேன் என்று,

"பெற்றாரும் சுற்றமும் என்றிவை பேணேன்நான்
மற்றாரும் பற்றிலேன் ஆதலால் நின்னடைந்தேன்
உற்றான் என்று உள்ளத்துவைத்து அருள்செய்கண்டாய்
கற்றார்சேர் கண்ண புரத்து உறை அம்மானே!"

எனத் தம் உணர்வினை வெளிப்படுத்துகின்றார். காம விவகாரத்தால் பெற்றெடுத்த தாய் தந்தையர்களையும் விரும்பு கின்றேனில்லை, என்னிடம் பொருளிருந்தால் போற்றுவதும், பொருள் இல்லாதபோது தூற்றுவதுமாயுள்ள உறவினர்களை யும் நான் விரும்புவதும் இல்லை. வேறெந்தத்தெய்வங்களையும் என் சிந்தையோ போற்றுவதுமில்லை. இத்தகைய மனத் திண் மையைப் பெற்ற யான் உன்னையே கதியென்று வந்தடைந் தேன். எனவே, ஐயனே! அன்புடன் என் துன்பங்களைக் களைந் தெறிவாயாக! ஆம் துன்பங்களை நீக்குவதிலே உன்னைத்தவிர வேறெவருமிலர். எனவே, திருவுள்ளம்கொண்டு என்னை ஏற்பாயாக! என்று பரம்பொருளிடம் வேண்டுகின்றார். தவத்தால் பெற்றெடுத்த தாய் தந்தையர்களைக் கண்கண்ட தெய்வங்களாகக் கருதி கடமையாற்றுவதைவிட்டு அவர் களையான் காப்பாற்றமாட்டேன் என்று ஆழ்வார் கூறியது சரியாகுமா? என்று சிலர் கேட்கக்கூடும். கேட்கும் அவர்களுக்கு

என் தாய் தந்தையர்களையும் என்னையும் பிற உயிர்களையும் தோற்றுவித்தவனும் காப்பவனும் எம்பெருமானே! என்ற விவரத்தை அறிவிக்கவே "நின்னடைந்தேன்" என்னும் தொடரால் தெரிவிக்கின்றார் திருமங்கையாழ்வார். இவரைப் போன்றே மாணிக்கவாசகரும்,

"உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும்
கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே!"

என்று எம்பெருமானைப் போற்றுகின்றார். இப்பாடலில், "உற்றார்" என்று கூறியதில் பெற்றோர்களையும், உறவினர் களையும் குறித்தார்.

இவர்களை யான் விரும்பேன் என்றார், கற்றவர்களையும் விரும்பமாட்டேன் என்பதற்குக் காரணம் ஒரேவிதமான கருத்தை ஒருவர் ஒருவிதமாகவும் மற்றொருவர் இதைமறுத்து வேறு விதமாகவும் படிப்பவர்களுக்குக் குழப்பம் ஏற்படுமாறு செய்வதால் கற்றாரை விரும்பமாட்டேன் என்று குறித்தார். அடுத்துக்கூறும்போது 'கற்பனவும் இனியமையும்" என்பதால், பரம்பொருளைப்பற்றி அறியும் அறிவும் அவனையே பக்தி செய்தால் ஏற்படும் என்பதைக் காட்டவே இவ்வறிவும் அவனாலேயே கிட்டும் என்பதை உணர்த்தினார்.

இவர் பேரின்பம் பெறுவதற்குக் குற்றாலத்துக் கூத்தனிடம் தாய்ப் பசுவினை நாடும் கன்றினைப்போல விரைகின்றார். இந்த விரைவுத் தன்மையினைத் தம் பாடலிலும் காட்டி யுள்ளார் என்பதை அறியலாம்.

திருமங்கையாழ்வார் கண்ணபுரத்து நாயகனிடம் தஞ்சம் அடைந்ததைப்போன்று இவரும் குற்றாலக் கூத்தபிரானிடம்

தஞ்சமடைகின்றார். இவர்களுடைய நோக்கும் போக்கும் இறைவனைப் போற்றுவதில் ஒரே தன்மையுடையதா யிருத்தலை அறியலாம்.

இப்பிரபஞ்சத்தில் தோன்றிய மாந்தரெல்லோரும் ஆசைப் பெருக்காலே நாசமடைவதைக் கண்ட திருமங்கை ஆழ்வார் வருத்தமுற்று, அவர்கள், திருந்தவே, ஞானமார்க்கத்தினைப் பெறுவதற்குத் தேன் போன்றினிக்கும் தம் பாசுரத்தின் மூலம் அறியுமாறு செய்கின்றார். அவர் மாமாயனிடம் ஐயனே! நீ, நாற்றம், சுவை, ஊறு, ஒளி ஓசை முதலானவற்றைத் தந்தவன்; இவற்றை நுகர ஐந்து புலன்களையும் அளித்தவன்; இவை யன்றி எண்ணிறந்த நலன்களையும் தந்த நீ! என் நலன்களில் மட்டும் அக்கறை காட்டாமலும் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாமலும் இருத்தல் நன்றோ? இப்படியிருந்தால் நான் மனம் நொந்து உன்னைக் குறை கூறியிருப்பேனன்றோ? அவ்வாறில்லாமல் உன்னைப் போற்றும் எனக்கு அருள் புரியாமலிருத்தல் நன்றாமோ?

உன்னிடம் வந்து குறையிரந்தவர்களுக்கு நீ அருள் தந்தவனாதலால், என் குறையைக் கேட்டு அருள் புரிவா யாக! எளிய மக்கள் புரியாமல் செய்த வினையால், பிறவியை யெடுக்கின்ற வகையில், கருவாகிய சிறையில் மீண்டும் மீண்டும் தோன்றிடவே, இடர்ப்படுத்துகின்றாய். இந்தத் துன்ப நிலையிலேதான் அடியேனும் உள்ளேன். இவ்வாறு பிறவியெடுத்தே மாய்வது, ஆற்றங்கரையிலுள்ள மரம் இப்பவோ இன்னும் சற்று நேரத்திலோ வீழ்தல் போல என் வாழ்வும் வீழும் எனவே இஃது அற்ப வாழ்வாகும்.

இந்தக் கேவல வாழ்விலிருந்து யான் விடுபட்டும் பிறவாமை என்னும் நிலைத்த வாழ்வை எய்திடவும் அதற்கு உன் திருவடியினை என்றும் வாழ்த்திடவும் அந்தப் புகழ் வாழ்வினையே எனக்கு அளிப்பாயாக! என்று பாடுகின்றார் இதனை,

"மாற்றம் உளவாகிலும் சொல்லுவன், மக்கள்
தோற்றக் குழிதோற்று விப்பாய் கொல் என்றின்னம்
ஆற்றங் கரை வாழ் மரம்போல் அஞ்சுகின்றேன்
நாற்றம் சுவை ஊறு ஒளி ஆகிய நம்பி!"

என்பதன் மூலம் தெளிவுபடுத்துகின்றார். பிறப்பால் ஏற்படும் துன்பத்தை அறிந்து, அந்தப் பிறவியே யினிவேண்டாம் ஆதலால் பிறவாமையாகிய பேற்றை அளிப்பாயாக என்று சீவான்மா வாகியதாம் பரமான்மா வாகிய எம்பெருமானிடம் கேட்கும் தம் நிலையை மேற்குறித்த பாசுரத்தில் குறித்தார்.

மாணிக்க வாசகரும் மனித வாழ்க்கையை ஆற்றங்கரை யிலுள்ள மரத்தின் வாழ்வுக்கு ஒப்பிட்டார். புலன்கள் செய் யும் கொடுமை பெரியதெனப் பேசுகின்றார். ஈர்ப்புக்கு ஆட் படும் மனமே புலன்களின் தூண்டுதலால், தவறு செய்தே துன்பப்படுகின்றது. எனவே, புலன்கள் வழி செல்லும் மனமுடையவர், மேகம் மழையைப் பொழிவதைப் போன்று கண்ணீர் விடுவர்; மடவார் சாகசவலையில் சிக்குண்டு ஆட்படுவர்; எனவே, இப்படிச் சிக்குண்டு கிடந்திட்ட என்னையே பரம்பொருளாகிய நீயே வந்து ஆட்கொண்டாய் ஆம் என்னைத் தடுத்தாட்கொண்ட இனியனாகிய நீயே திருவாரூரில் கோயில் கொண்டுள்ளாய்! உன் அருமைத் திருவடியே என்னைப் பெருமை செய்ய வல்லனவாகும் என்று அப்பெருமானிடம் பிறவாமை பற்றிக் கூறி வேண்டு வதையே,

"காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய்
வேருறு வேனை விடுதிகண்டாய் விளங்குந் திருவார்
ஊருறை வாய்மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
வாருறு பூண்முலையாள் பங்களன்னை வளர்ப்பவனே!

எனக் கட்டளைக் கலித்துறைப் பாட்டாலேயே வெளியிடு கின்றார். அடங்காத எருதுகளை வண்டிகளில் பூட்டினால் அவை தறிகெட்டு ஓடி வண்டியைப் பள்ளத்தில் தள்ளுவன போல், புலன்கள் என்னும் எருதுகள் என்னை இழுத்துக்

கொண்டு போய் பெண்கள் வலையில் சிக்கவே செய்தன. அச்சிக்கலிலிருந்து ஐயனே! விடுவித்தாய் என்றவர் என்னை விடுதி கண்டாய்'' என்னும் தொடர்மொழியால் அவனுடன் அவர் கலந் தின்புறவே விழைகின்றதறியலாம்,இவ்வாறுபாடிய மாணிக்கவாசகரும் திருமங்கையாழ்வரும் அருளிய செய்தி களால் தூயவர் மனத்தில் வாலறிவன் உறைவான் என்றும் இடையறாமல் பக்தி செய்தால் எம்பெருமானாகிய தேனைச் சுவைக்க இயலும் என்றும், அந்தப் பரம்பொருளே நமக்கு உறவு என்றும் மனித வாழ்வு ஆற்றங்கரையிலுள்ள மரத்தின் வாழ்வு போன்றதென்றும் அந்த அழியும் வாழ்வி லிருந்து நிலைத்த வாழ்வை எய்திடவே, அவனையே பாடிப் பக்தி செய்யவேண்டுமென்றும் அறிகின்றோம். எனவே இவர்கள் இருவரும் பாடியருளிய பெரிய திருமொழியையும் திருவாசகத்தையும் நாள்தோறும் பாடி இதயம் குளிர்வோ மாக! மேன்மை காண்போமாக!

## நேரிசை வெண்பா

ஆற்றங் கரைமரமோ அற்றழிந்து வீழ்தல்போல்
கூற்றுவனோ நம்மைக் குலைக்காமல்—ஏற்றமுடன்
எம்பெருமான் பேர்பரவி ஏத்தும் அருள்வாழ்வில்
இம்மையில் நிற்றல் இனிது!

# நம்மாழ்வாரும் நாவுக்கரசரும்

மனிதன் புலன்களுக்கு ஆட்படும் போது வாழ்வில் வருத்த முறுவான். ஆண்களானாலும் பெண்களானாலும் புலன்களின் போக்கில் செயற்படக்கூடாது. பேராசையைத் தூண்டுவன புலன்களே என்பது தேற்றம். எனவே, புலன்கள் என்னும் குதிரைகளை மனமென்னும் சாட்டை கொண்டு நெறிப்படுத்துபவனே மனிதனாவான்.

இல்வாழ்க்கையாகிய நன்நெறியில் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்வு மலையினது உயர்வைக் காட்டிலும் மிகவுயர்வானது என்று கூற வந்த திருவள்ளுவர்

நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

என்று பாடுவார். "இதில் திரியா தடங்குதல்" என்றது பொறிகளால் புலன்களை நுகரா நின்றே அடங்குதல் எனப் பரிமேலழகர் பொருள் கூறுவார். இந்த நெறியில் நின்று இனிய வாழ்க்கையை நடத்துபவனே மாந்தன், இத்தகைய இறை நெறியில் ஆழங்கால்பட்டவனே சான்றோன் ஆவான். புலன்களை அடக்கியவன் நிலையில் திரியாத மனம் படைத்தவன். அவனே இறைமைப் பண்பில் நிறைவைச் காண இயலும், என்பதை நம்மாழ்வார் புலப்படுத்தியுள்ளார். மனத்தூய்மையால்தான் உயர முடியும் என்கிறார்.

என்னைச் சார்ந்த நன்மை தீமையாகிற இருவகையான வினைகளும் தொலைந்து படச் செய்கின்ற மாயனே! எனக்கு ஏற்படும் மாயப் பிறப்புகளையும் அறுத்துப் பிறவா நிலையை அளிப்பவன் ஆவான்! நான் அவனை அடைய வேண்டுமென்

றால், அதற்கு அவனே வந்து வழி காட்டுபவன் ஆவான் என்றும் யான் திடமாகக் கருதுகின்றேன். என்னிடம் என் மனம் பொருந்துமாறு செய்பவனே தன் வீட்டுலகை எனக்காக அழகாக்கி வைத்துள்ளவனும் அவனே! அந்தப் பேரானந்த வுலகில் இருப்பவனையே அங்கேயிருக்கின்றான் இங்கேயிருக்கின்றான். ஆம் சொல்ல முடியாத தூரத்தில், விண்ணின் மேலும் பூமியின் கீழும் எவ்விடத்தும் இருக்கின்றான் என்பர் நுண்மையான உருவமுடையவனாய்க் காண முடியாதவாறு உருவமற்றவனாய் எல்லாப் பொருள்களுள்ளும் எல்லோருடைய உள்ளத்திலும் உயிராக உள்ள அவனோ நெடுமாலக என்னிடம் ஆசை மிகுந்தவனாக இருக்கின்றான் என்ற செய்தியினை

''சார்ந்த இருவல் வினைகளும்
சரித்து மாயப் பற்றறுத்துத்
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத்
திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி
அகலம் கீழ்மேல் அளவிறந்து
நேர்ந்த உருவாய் அருவாகும்
இவற்றின் உயிராம் நெடுமாலே!''

என்று பாடுவார். இதில் அவன்பால் என் மனமதை வைக்க அவனே கருதியதாகக் கூறுகின்றார். நன்னெறியில்நின்று, புலன்கள் வழி செல்லாமல், தூயமனத்தையுடையவராய் விளங்கியதால், எம்பெருமான் நம்மாழ்வாரை விழைவு கொண்டு அழைத்தான் எனக் கூறுகின்றார். சார்ந்துதொல்லை படுத்தும் இரு வல் வினைகளும் சரிந்து மாய்ந்து பட, உலகியல் பற்றும் ஆசாபாசங்களும் அறுந்து விடுபட, மனம் அவனையே சார்ந்து நின்றது என்கின்றார். மனம் எம்பெருமானைச் சார்ந்து நின்றதால் தொல்லை வினைகள் இல்லாமல் போயின; சிற்றின்பங்கள் தீய்ந்து ஒழிந்தன; மாயப் பற்றுகள்

மாய்ந்தொழிந்தன; வருத்தம் யாவும் இருக்குமிடமில்லாமல் போயின; யானோ வீட்டுலகில் வேட்கையுடன் இலங்க அவனே வகை செய்தான் என்கின்றார். அந்த இன்ப உலகில் அவன் ஞானச் சுடராகி ஒளிர்கின்றான். ஆம், அவன் அங்கிங்கெனாதபடி எங்கும் விளங்கி நிற்கின்றான். எல்லா உயிர்களின் பாலும் பொருள்களின் பாலும் மறைந்து உறைகின்றான். அடியார்கள் மீது மிகப் பிடிப்புக் கொண்டு காதல் மேவி ஆதரவு காட்டுகின்றான், என்று எம்பெருமானைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் நம்மாழ்வார்.

இப்பாசுரத்தால் எம்பெருமான் மீது நம்பிக்கை வைத்து மனம் ஒன்றிப் போற்றுபவர்கள், ஏற்றமும் எல்லா நலன்களும் பெறவியலும் என்பதோடு ஞானச் சுடராய் ஒளிரும் அவனிடத்திலே சென்று நாம் உவப்புடன் நின்று அனுபவிக்க இயலும் எனக் கூறுக்கின்றார் அவர். தன்பால் மனத்தை வைத்திடத் திருத்தியே வீடு தருவான் என்று நம்மாழ்வார் பாடியதைப் போன்று, "என்னைப் பிறப்பறுத்துச் சிவலோகத்து இருத்திடுவான்" என்று சிவபிரானை நாவுக்கரசர் பாடுகின்றார். அவனையே சரணாகதி என்று அவன் திருவடியில் சரணடைந்தேன். அவனடியை அடையப் பெற்றால் பெரும் பயன் ஏற்படும் என்று நம்பி அவனுடைய திருவடிகளை அடைய முனையுங்கள் என்கின்றார். புன்னை மரங்கள் சூழ்ந்த பொழிலிடத்தேயுள்ள புகலூரில் கோயில் கொண்ட அப்பரம்பொருளைக் காணுங்கள் என்கின்றார். அவன் அருமைப் பெருமையினை அறிந்து போற்றுங்கள் என்கின்றார்.

அவன் என்னுடைய பிறவித் துயரை அறுத்தவன், என் வினைகளைக் கட்டோடு அறுத்து எறிந்தவன். நரகமென்பது ஒன்றா! இல்லை ஏழாகும்! எடுக்கும் ஏழ் பிறவி தோறும் வந்து இடர்ப்படுத்தும். அந்த நரகத்தில் என்னைத் தள்ளாமல் அவனின் உலகமான சிவலோகத்திலே இருத்தி இன்பமளித்தான் என்று,

"தன்னைச் சரண் என்று தாளடைந்தேன்
தன்னடி அடையப்
புன்னைப் பொழில் புகலூர் அண்ணல்
செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினை
கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்க வொட்டான்
சிவலோகத்து இருத்திடுமே!"

என்று நாவுக்கரசர் பாடுவார். நம்மாழ்வார் தம் பாசுரத்தில் தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு தந்திடுவான் என்று கண்ணபிரான் அருளைப் போற்றுவார். நாவுக்கரசர் "என்னைப் பிறப்பறுத்து என் வினை கட்டறுத்து ஏழ்நரகத்து என்னைக் கிடக்க வொட்டாமல் சிவலோகத்து இருத்துவான்" என்று சிவபெருமானின் பெருமையைப் போற்றுவார். உடம்பெடுத்து வந்தவர்கள் இந்த மண்ணுலகில் வாழ்தலே வீடு பேறு எனக் கருதியுள்ளவர்களுக்கு இஃது நல்வீடன்று, இன்ப வீடோ எம்பெருமான் வதியும் பதியே என்பதால் அப்பதியில் வதியவே நம்மாழ்வாரும் நாவுக்கரசரும் நல்வழி காட்டினார்கள். யாழின் இசைக்கு ஒப்பாக இறைவனைக் கூறுவார்—நம்மாழ்வார். பழங்காலந்தொட்டு இனிய யாழைப்பற்றி ஆய்ந்துகூறும் நூலின் படியே, அமைந்த அந்தயாழின் நரம்பிலிருந்து வெளிப்படும் இசையின்பத்திற்கு ஒப்புடையவனே எம்பெருமான் என்றார். ஞானிகள் பலரால் அனுபவித்துப் போற்றப்படும் பரம்பொருளே நமக்குத் தூய வழியைக் காட்டும் அவனே! கரும்பின் சாறு போல் இனிப்பவன் ஆவான், அமுதம் போன்றே நலம் பயப்பவனாவான், நீல நிறமேகத்தைப் போன்றவன் அவன். நான் போற்றும் கண்ணபிரானாவான். ஐயனே நீயல்லாமல் எனக்கு வேறு போக்கிடமில்லை; வேறு எவரிடமும் தஞ்சமடைபவன் யான் அல்லேன் என்றார்.

என்னை உன் திருவுள்ளத்தில் ஏற்றுக்கொண்டருளவேண்டுமென்று அவனிடம் கோருவார், அவன் ஒருவனே உவப்பருளும்

வள்ளல். இத்தகைய அத்தனைத் தவிர, வேறெவரையும் தம் உள்ளத்தால் விரும்பாத அவர் அந்தச் சிந்தைக்கினிய ஐயனின் திருவுள்ளத்தில் இடம் கோருகின்றார். கண்ணபெருமானை யாழிசைக்கு ஒப்பாக நம்மாழ்வார் பாடிக் காட்டுவார். பழங் காலந்தொட்டு இருந்து வரும் இன்பந்தரும் யாழ்பற்றி ஆராயப்பட்ட நூல்களிலிருந்தே அவர் நரம்பிலிருந்து வெளிப் படும் இசையின்பத்தினை,

"முன்நல் யாழ்பயில் நூல்நரம்பின் முதிர்சுவையே
பன்னலார் பயிலும் பரனே பவித்திரனே
கன்னலே அமுதே, கார் முகிலே! என்கண்ணா
நின்னலால் இலேன் காண் என்னைநீ குறிக்கொள்ளே!"

என்று பாடித் தெரிவிப்பார். இதில் அவனை ஞானிகள் அனுபவிக்கும் பெருமான் என்றும், தூய ஆனந்தமயமாக இருப்பவன் என்றும் உள்ளத்திலிருந்தே புலன்களை நெறிப் படுத்தி நலம் காணச் செய்விப்பவன் என்றும் அடியார்களை இடையூறு செய்யும் பாவங்களையே போக்கி;தன்னை அவர்கள் அனுபவிக்கச் செய்பவனென்றும் கூறிய நம்மாழ்வார் அவனின் நல்லின்பம் இடையறாமல் கிட்டவே, கண்ணா என்னை விட்டு விடாதே என்று வேண்டுவார்.

உலகில் என்னென்ன இன்பங்கள் உண்டோ? அவையாவும் அழியும் தன்மையுடையன! அவை நிலையான இன்பத்தைத் தராத தகுதியற்றன; எந்நாளும் நிலைத்து நிற்கும் இன்பம் எம் பெருமானைப் பற்றிப் பேசுதல், பாடுதல், அவன் திருவடி யில் நிற்றல் ஆகியவையே ஆதலால் அந்த இன்பத்தை அனுபவிக்க நினைந்து வேண்டுவார் அவர். இதை "என்னை நீ! குறிக்கொள்ளே" என்ற தொடர் மொழியால் சுட்டுவார் நம்மாழ்வார். நாவுக்கரசரும் அடியேனைக் குறிக் கொள்வதே" என்று திருப்பழனத்து ஐயனிடம் மெய்யுருக வேண்டுகின் றார்.

பொருந்தியே என்பால் நின்றே வருத்திடும், மிகக் கடுமை யாக வாட்டிடும் அத்துன்பமெல்லாம் ஆவிபோல் மென்மை

யாகவும் நுண்மையாகவும் மாறி விலகிடவும் பொல்லாத அல்லல்கள் எல்லாம் வேறுடன் அறுந்து போகவும் எம்பெருமானே நீயே காரண பூதனாவாய்.

இந்நன்மையைச் செய்யும் உன்னையே என்றும் போற்றுபவன் யான்; உன்னை மறவாமல் தியானித்துப் போற்றும் என் நிலையை நீயறிவாய்! திருப்பழனத்து விரும்பிவதியும் அரசே! உன்னை என் வாயாரக் கூவியழைத்து உதவி செய்ய வேண்டுகின்றேன். அடியவனாயுள்ள எனக்கு உன் திருவுள்ளத்தில் இடம் தந்து ஆதரிக்க வேண்டும் என்கின்றார். இக்கருத்தினைத் தம் உள்ளம் உருகிட

"மேவித்து நின்று விளைந்தன வெந்துயர் துக்கமெல்லாம்
ஆவித்து நின்று கழிந்தன அல்லல் அவையறுப்பான்
பாவித்த பாவனை நீயறிவாய் பழனத்து அரசே
கூவித்துக் கொள்ளும் தனைஅடியேனைக் குறிகொள்வதே"

எனப் பாடுவார். என்னை வந்து தாக்க வந்த வெம்மையுடைய துயரமும், துக்கமும் ஆவிபோல் பறந்து போயின. அடியேன் நாளும் பொழுதும் நாவாரப் பாடித் துதித்ததால், தாயாகித் தாங்கும் தயாபரனை வாயாரப் பாடி வணங்கியதால் வந்த அல்லல்கள் யாவும் இல்லாமல் அறுந்துபட்டன. என்றவர் அந்த அருளாளன் என் திருவுள்ளத்தில் இருந்திட, இருந்து இன்பம் நுகர்ந்திட அவனையே கூவியழைக்கின்றார்.

அழைக்கும் அடியாரை நாடி விழைந்து சென்று அருள் பாலிக்கும் திருப்பழனத்தரசனிடம் பரிந்து நின்று பயனுறப் பாடி இறைஞ்சுகின்றார் நாவுக்கரசர். மேற்குறித்த பாடலில் வந்து வருத்துகின்ற துயரமெல்லாம் ஆவியாக விலகிப்போயின என்று கூறியதில் உள்ள நயத்தை நாம் போற்றாமலிருக்க வியலாது.

நம்மாழ்வார் பாடிய பாசுரத்தில் "என் கண்ணா! நின் அல்லால் இலேன் காண்" என்றதால் உன் ஆதரவு இல்லை

யென்றால் எனக்கு வாழ்வில்லை. உன்னால்தான் அடியேன் உயிர் வாழ்கின்றேன் என்று கண்ண பெருமானிடம் முறையீடு செய்கின்றார். இது மிகவும் ஏற்புடையதாகும். சிறப்புடைய தாகும்.

இவரைப் போன்று நாவுக்கரசர் பாடிய பாடலில் திருப் பழனத்து அரசே பாவித்த பாவனை நீயறிவாய்" என்றதால், நான் துதிக்கின்ற நிலையை நீதான் அறிவாய்; அறிகின்ற நீதான் எனக்குக் காப்பாவாய்; உன் அருள் இல்லையென்றால் எனக்கு உய்வு இல்லை. உன்னால்தான் எளியேன் இருக்க முடிகின்றது! என்று திருப்பழனத்து எம்பெருமானிடம் குறை யிரந்து நிற்கின்றார். இவ்வாறு தம் நிலையைக் கூறி இனிது அருள் புரியும் பரம்பொருளிடம் வேண்டி நின்றது நம் மனத்தை உருக்கும் தன்மையதாகும்; போற்றுதற்குரியதாகும். மாந்தர்க்கு மிக இன்பந்தரும் பொருள் இனிப்பாகும், இந்த இனிப்பே ஒருவன் உடம்பில் மிகுதியானால், நோயாகி வாட்டி வதைப்பதை இன்று கண்கூடா காண்கின்றோம். இந்த இனிப்பு நோயைச் சர்க்கரை நோய் எனக் கூறுவர். இந்த நோயுள்ளவன் மருத்துவர் உதவியால் தவிர்த்திட முயல்வான். இந்தப் பொருள் இனிப்பா? அந்தப் பொருள் இனிப்பா என அறிந்து இனிப்பில்லாப் பொருளைத் தேடியுண்பான். இப்படி அழியும் உடம்பினைக் காப்பாற்ற பெரும் பாடுபடுகின்றான்!

உடம்பை எடுத்ததால் கண்டிப்பாக ஒருநாள் அந்த உடம்பு மண்ணில் அடியற்றமரம்போல் வீழும் எனவே, அழியா மலிருக்க—பிறவாமை என்கின்ற பேற்றையடைய நம்மாழ்வா ரும் நாவுக்கரசரும் கூறியவாறு, பாடியவாறு எம்பெருமானின் பெற்றியினை அவன் திருவடிப் பேற்றினைப் பெற்றிடவே நாளும் பொழுதும் நாவினிக்கப் பாடித் துதிப்போமாக. அனைத்திற்கும் ஆதாரமாயிருக்கும் அவன்மீது காதல் கொண்டு போற்றிச் சாதலின்றி வாழ்வோமாக!

# நம்மாழ்வாரும் ஞானசம்பந்தரும்

நான் போட்ட முடியை ஒருவராலும் அவிழ்க்க இயலாது; என்னை யார் சரணடைகின்றார்களோ அவர்களால் மட்டும் அந்த முடியை அவிழ்க்க இயலும் என்று எம்பெருமான் கீதையில் கூறியதாக விளம்புவர். இக்கருத்தினை நம்மாழ்வார்

"பொல்லா ஆக்கையின்
புணர்வினை அறுக்கல் அறா
சொல்லாய் யான் உன்னைச்
சார்வது ஓர் சூழ்ச்சியே"

என்று பாடுவார். யாக்கையாகிய இந்த உடம்பு விடுபட உன்னைச் சரணாகதி அடைகின்றேன். சரணாகதி அடைவதால் என் பிறவித்துயர் நீங்கும் என்கின்றார். இதில் "அறுக்கல் அறா" என்னும் தொடரால் நான் உன்னை நினையாமல் பிறவித் துயரை அறுக்க முயன்றால் அஃது அறாது என்கின்றார்.

"யான் உன்னைச் சார்வது ஓர் சூழ்ச்சியே" என்கின்ற தொடர்மொழியைப் பெய்து பாடி உன்னைச் சார்ந்து வேண்டுவதால் இப்பிறவியாகிய கட்டையே அறுத்திடுவேனெனத்திட்டமாகப் பேசுவார். யாரைக்கொண்டு நலங்காண இயலுமோ அவரைக்கொண்டு நலங்காணவே நம்மாழ்வார் கண்ணபெருமானிடமே கூறி உதவிவேண்டுகின்றார். மேலான வீட்டுலகை வழங்குபவன் யார்? திண்மையுள்ளகண்ணபெருமானே! எண்ணிறந்த நலஞ்செய்வதால் நாம் எண்ணுதற்குரிய மேலானவனா

யுள்ளவனும் அம்மாயனே! எனக்கோ உகந்தவனாயுள்ளவனும் அப்பரம்பொருளே! மண்ணையும் விண்ணையும் ஒருங்கே சேர்த்து உண்டவன் வியப்புக்குரிய கண்ணபெருமானே! அவனே எல்லா உலகங்களுக்கும் இறைவனாய் இலங்கு கின்றான்; அவனைத் தவிர வேறொரு தெய்வமில்லை என்ற விவரத்தை

**"திண்ணன் வீடு முதல்மு ழுதுமாய்**
**எண்ணின்மீதி யன்எம் பெருமான்**
**மண்ணும் விண்ணும் எல்லாம்உடன் உண்டநம்**
**கண்ணன்கண் அல்லது இல்லைஓர் கண்ணே!"**

எனப்பாடித் தெரிவிப்பார். இதில் கண்ணனே உலகிற்கெல்லாம் கண்ணாய் இருப்பவன் எனக் கூறுதலால் அவன் கண்களே அனைத்தையும் ஆதரித்து அருள் சுரப்பன என உணர்த்துதல் காணலாம். வீடுபேறு முதலான நலன்களை அருள்பவன் ஆதலால், அவனைத் தலைவனென்றே உயர்த்திப் பேசுகிறார்; நினைப்பவர்களின் எண்ணங்களுக்கெல்லாம் எட்டாமல் மேலானவனாக இருப்பதால், அவனை உவந்து தலைவனெனச் சாற்றியது தக்கதே! மண்ணும் விண்ணும் உண்ட கண்ணபெரு மான், நமக்கெல்லாம் கண்ணாக விளங்குபவன் என்கின்றார். இத்தகையவனே பரம்பொருள் என்று காட்டுவதற்குக் "கண்ணன் கண் அல்லது இல்லை ஓர் கண்ணே" என்று பாசுரத்தின் இறுதியடியில் எடுத்தாண்டார். இத்தகையவனே நமக்குத் தெய்வம் என்பதை "எம்பெருமான்" என்னும் சொல்லைப்பெய்து இசைத்தார். அவர் முதலடியின் முதற்சீரில் "திண்ணன்" என்னும் சொல்லை வைத்துக் கேட்பவர்களுக்கு வேட்கையால் மாறாமல்நாட்டங்கொண்டு உறுதியுடன் வழங்கு பவன் என்று அம்மாயனைச் சிறப்பிக்கின்றார் அவர்.

இவரைப் போன்றே ஞானசம்பந்தரும் சிவபெருமானின் சீர்த்தியினைச் சிறப்பிக்கின்றார். பிறப்பறுப்பவனென்றும் வீட்டுலகை அருள்பவனென்றும் அவனைக் கூறுவார். மக்களைப் பார்த்துச் சித்தம் தெளிவீர் என்று கூறியவர்

ஆரூரில் அமர்ந்த அத்தனைச் சித்தத்தால் ஏத்துங்கள் என்கின்றார். அவன் திருவடியில் பக்தியுடன் மலர் தூவி வழுத்தினால் முக்தியே கிட்டும் என்று மொழிகின்றார். பிறவாத் துயரை அறுக்கவே ஆரூரில் உள்ள அவனை மறவாதுபோற்றிப் பாடுங்கள் என்கின்றார். இத்தகைய வித்தகனைப் போற்றினால் எல்லா நலன்களையும் எளிதாக அடையலாம் என்கின்றார். இவற்றைப் பெற விழைபவர்களுக்கு யான் எளிதான வழியினைக் கூறுவேன் என்கின்றார். வெம்மை மிகுந்த காட்டின் கண் நின்று, அனல் சட்டியை ஏந்தியே கைவீசி ஆடுகின்ற மென்மை வாய்ந்த சடைமுடியைக்கொண்ட, சிவபெருமான் திருவாரூரிலே கோயில் கொண்டிலங்குகின்றான். அந்த இடத்திற்குச் சென்று அவன் விரும்பும் வகையில் பாடியும் கைதொழுதும் பணிந்தும் வந்தால் நினைத்த பயன் கிட்டும் என்ற விவரத்தை,

"வீடு பிறப்பெளிதாம் அதனை வினவுதிரேல் வெய்ய
காடிட மாக நின்று கனலேந்திக் கைவீசி
ஆடும் அவிர்—சடையான் அவன்மேய ஆரூரைச் சென்று
பாடு தல்—கைதொழுதல் பணிதல் கருமமே"

என்று ஞானசம்பந்தர் பாடுவார். இதில் போற்றுதல் மாந்தர்க்குக் கருமமே! எனமக்கள் அவனை ஏத்தி வழிபட்டு வருவதற்கே வழி கூறுகின்றார். முன்னர் பாடிய நம்மாழ்வார், பிறவித் துயரை அறுக்கவும் வீடுப்பேற்றை அடையவும் கூறியதைப் போன்று ஞானசம்பந்தரும் இக்கருத்தையே மேலும் வலியுறுத்தினார்; போற்றிப் பயனை எய்திடக் கூறினார்.

ஆழ்வாரும் அடியாரும் மக்கள் தாழ்வற்ற நல்வாழ்வினை அடையவேவழிகாட்டினார்கள். ஏழ்பாரும் உய்யஇனிது உதவும் எம்பெருமானை இறைஞ்சி நிதம் போற்றுதலே இனிய வாழ்வு என்று அவர்கள் இசைத்தார்கள். அவர்கள் இசைத்த வழியில் செல்வதே உயர்வாகும்.

உலகத்தில் வாழும் மக்கள் இன்பந்தேடி அலைகின்றார்கள். அலைகின்றவர்கள் என்னென்னவோ கண்டு துய்க்க அலைகின்

றார்கள். கண்டவையெல்லாம் துய்க்க இயலுமா? இவ்வாறு அலைந்து தேடித் துய்ப்பவை யாவும் இன்பம் பயக்குமா? முன்னர் கூறியபடி புலன்கள் விழையும் இன்பத்திற்கே நாளையும் பொழுதையும் செலவிடுகின்றார்கள்; அப்படிச் செலவிட்டுப் பெற்ற பொருளைச் சுவைப்பதால் இன்பம் ஏற்படுமா?

அவை ஒருபோதும் இன்பம் தருதல் இல்லை. நாவுக்கு இன்பம் வேண்டி, கரும்பினை இன்பப்பொருள் எனக்கருதி வாங்கிக் கடித்துத் தின்னும்வரை இன்பத்தைக் காணலாம்; தின்று முடிந்த பின்னர் அந்த இன்பம் மறைந்துவிடும்; அந்த இன்பம் நிலையாக இருப்பதில்லை. புலன்கள் விழையும் பொருள்கள் யாவும் சில நிமிடங்களே இன்பம் தருவன. பின்னர் இன்பம் தந்த பொருளும் அழிந்து போகின்றன. எனவே, நம்மாழ்வார் "இல்லை கண்டீர் இன்பம்" என்றார்; ஆனால் மனிதன், அழியும் அந்த இன்பத்தை என்றும் உள்ளதாகவே பேசுகின்றான். இவ்வாறு பேசுதல் பேதமை என்றார் அவர். அந்தஇன்பம் என்றும் உள்ளது என நினைப்பவனைப் பார்த்துப் பரிதாபப்பட்டு அப்பா கடலை என்றும் உள்ளது என நினையாதே! என்று இடித்துக் கூறுவார்.

இன்பத்தைச் சுவைத்தவர்களோ அந்த இன்பத்தால் நிலைத்த நலனைப் பெற்றார்களில்லை. அவர்கள் அந்த இன்பத்தால் தொல்லை பட்டார்களேயன்றிச் சுகம் காணவில்லை என்கின்றார். அப்படித் தொல்லைப்பட்டவர்களே எண்ணிலடங்காதவர்கள் எனக் கூறுவார். இப்படி, தொல்லையால் மாய்ந்தவர்கள் எல்லோரும் மீண்டும் பிறந்த காரணத்தை உணராதவர்களாவார்கள். பிறந்தோம் இருந்தோம், இறந்தோம் என்று பயனற்று மாய்ந்தவர்களைப்பற்றி, "தோன்றிக் கழிந்தொழிந்தார்கள்" என வேதனையோடு விளம்புகின்றார்.

இப்படிக் கூறியவர் பின்னர் எது இன்பம் தெரியுமா? என்றவர் நல்லின்பத்தை—பேரின்பத்தைப்பற்றிப் பேசுவார். அந்த நல்லின்பத்தைப் பெற விழைந்தால் பழமையும் செழுமை

யும் உடைய மதுரையம் பதியில் உள்ள அருளாளனிடம் செல்லுங்கள் என்று வழிகாட்டுகின்றார். அந்த அருளாளனே பேரின்பம் நல்கும் பிரானாவான் என்றவர் அவனே புகழாளன் என்றார். அந்தப் புகழாளனை விழைந்தால் வளமான செல்வங்களை மட்டும் வாரிவழங்குவான் என்றார். நலமுறவே என்றும் இன்பம் பயக்கின்றசெல்வத்தையும்நமக்குமகிழ்ந்துவழங்குவான் என்கின்றார். அவன் திருப்பெயரைச் சொன்னால் உயர்ந்த வாழ்வைக் காணலாம் என்கின்றார். இத்தகைய வித்தகனையல்லாமல் மற்றொன்றையும் வாழ்வாகக் கருதுவதற்கு இயலாது என்கின்றார். ஆம் அவனேதான் நம் வாழ்வு எனப்போற்றுமாறும் ஏத்தி உய்யுமாறும் கூறுகின்றார். அவனைப் போற்றாமல் விட்டால் வாழ்வேயில்லையென உறுதியாகக்கூறி உணர்த்துவார். இந்தச் செய்தியினை,

"இல்லை கண்டீர் இன்பம்
அந்தோ உள்ளது நினையாதே!
தொல்லை யார்கள் எத்தனையவர்
தோன்றிக் கழிந்தொழிந்தார்
மல்லை மூதூர்வட மதுரைப்
பிறந்தவன் வண்புகழே
சொல்லி உய்யப் போகல்
அல்லால் மற்றொன்றில்லை சுருக்கே"

எனப்பாடி இசைத்தார்.

இந்தப் பாசுரத்தின் இறுதிச் சீரில் சுருக்கே என்னுமொரு சொல்லைப் பெய்துள்ளார். இந்தச் சொல்லினை எல்லா உலகங்களையும் ஏற்படுத்தி அவ்வுலகங்களில் வாழும் எல்லா உயிர்களையும் காத்துவருகின்ற கருணாமூர்த்தியான கார்முகில் வண்ணனையும் அவன் செய்த எண்ணிறந்த பணிகளையும் எண்ணிப் பார்க்கும்போது, மேற்குறித்த ஒரே பாசுரத்தால் பாடிக் காட்டிட இயலுமா? இயலாது. எனவே, எண்ணற்ற பாசுரங்களைப் பாடியே போற்றிடவேண்டும் என்ற விவரத்தைச் சுட்டிக் காட்டிடவே இச்சொல்லைப் பெய்து பாடினார்

எனக் கொள்ளுவதே சால்பாகும். நம்மாழ்வார் செந்தமிழ்ப் பாசுரத்தில் அப்பெருமானின்

"வண்புகழே சொல்லி உய்யப்போகல்
அல்லால் மற்றொன்றில்லை! எனப்பாடி
யதைப் போன்றே ஞானசம்பந்தரும்
அந்தண் ஆரூர்தொழுது உய்யலாம்
மையல் கொண்டு அஞ்சல்நெஞ்சே!"

என்று தம் தேவாரத்தில் ஆவல் மேவிப் பாடுவார். அவர் தந்தையார் போயினார் எனக்கூறி அவர்கள் போன வழியிலே அவர்களைச் சார்ந்தவர்களும் போனார்கள் என்று கூறுவார். பிறப்பெடுத்த யாவரும் இறப்பது உறுதியாதலால், முன்னே தாய் தந்தையர்கள் மறைந்து போனார்கள் என்றும் அவர்கள் மறைந்ததைப் போன்று அவர்களைச் சார்ந்தவர்களும் பின்னர் மறைந்து போனார்கள் என்றும் கூறினார். இவ்வாறு கூறிய தற்கு ஆறறிவு படைத்த மனிதவுயிர், பிறந்து, அறத்தின் வழிநின்று இறைவனின் திருவடிப் பேற்றினை எய்தாமல் இவ் வுலகில் அந்த உயர்ந்த புகழை நிறுவிடாமலே வேண்டாதநெறி யாகிய தீமைப் போக்கில் வாழ்நாளை வீணாளாக்கி மறைந்து போகின்றார்களே! என்று தம் மன ஆதங்கத்தை இயம்பி மண்ணுலகில் வாழுமக்கள் மாண்புடன் ஆண்டவன் அருட்பண் பில் தோய்ந்து நிற்கவும், சிறக்கவும் வழியைக் கூறினார். என்றே தெளியவேண்டும்.

தூய்மைப் பண்பில் நிற்காமல் தீமையைச் செய்து வாழ்வோரின் நிலையைப் பற்றிக் கூறவந்த சம்பந்தர் தவறு புரிவோரைக் கூற்றுவனின் கூட்டத்தார் பார்த்துக்கொண்டே இருக்கின்றார். ஆம் கூர்மையான கருவிகொண்டு குத்தி, கொத்திக்கொண்டு போகத் திட்டமிட்டு நிற்கின்றார், என்பதை அறிந்தே திரிந்து வாழ, நெறியுடன் நடப்பீர்; களாக! என மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார்! பின்னர் எந்நாளும் இம்மண்ணில் நிலைத்து வாழவே பூதவுடல் போன பின்னரும் புகழுடம்போடு நின்று வாழவே வழி கூறுகின்றார்.

இந்த நல்வழியைத் தம் மனத்திற்குக் கூறுவதன் மூலம் ஞாலத்தில் உய்யும் மாந்தர்களுக்கு உணர்த்துகின்றார்.

நிலையான வாழ்வைக் காண்பதற்கு என்ன செய்யவேண்டும் தெரியுமா? எவரைப்பற்றினால் இந்த வாழ்வைப் பெற இயலும் தெரியுமா? என்றவர் ஆரூரிலே அழகுடன் நிற்கும் பேராளனைத் தொழுதாலே, துதித்தாலே வாழலாம் என்று கூறுகின்றார். இந்த இனியனைப்பற்றினாலே துன்பம் அகலும் என்றவர் அந்தத் துன்பம் என்ற பயமே நம்மிடம் வராது. ஆதலால் எண்ணிப் பெருமானையே ஏத்திப் புகழ்வாயாக அவன் மீது அன்புடன் காதல்கொண்டு போற்றுவாயாக! எனத் தம் ஏழை நெஞ்சுக்கு உணர்த்துகின்றார். நாம் செய்கின்ற தீய வினையால் ஏற்படும்துன்பத்தைப் போக்கும் உபாயம்எம்பெருமான் திருவடியே! வந்த வினையும் வருகின்ற வல்வினையும் உன்னை அழித்துவிடுமே? என்று அஞ்சாதே! சஞ்சலம் தீர்க்கப் பஞ்சாட்சர மூர்த்தியுள்ளான் என்றே கூறுவார். இக் கருத்தினை,

> "தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
> தாமும் போவார்
> கொந்தவேல் கொண்டு ஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்
> கொண்டு போவார்
> எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியால்
> ஏழை நெஞ்சே
> அந்தண் ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு
> அஞ்சல் நெஞ்சே!"

என்று பாடுவார். இதில் "கொந்தவேல் கொண்டு ஒரு கூற்றத்தார் பார்க்கின்றார்" எனக்கூறியதில் எமனுடைய கூட்டத்தார் குத்திட்டிகொண்டு உன்னைத் தாக்கப் பார்க்கின்றார். ஆகவே உணர்ந்து திரிந்து செயற்படுவாயாக! என்றவர், கொண்டு போவார்" என்ற தொடரால் தீமை செய்தால் கொண்டுபோய் விடுவார் என்று எச்சரித்தவர்,தவறு செய்யாதே என உணர்த்துறார்.

இந்த பாடலில் இரு இடங்களில் "நெஞ்சே" என்கின்ற சொல்லைப் பெய்து முதலில் ஏழை நெஞ்சே என்று விளித்து ஆரூர் அப்பனைப் போற்றிடவே கூறினார். அடுத்துக் கூறிய நெஞ்சே அஞ்சல் என் விளித்ததால் தவற்றிற்காக அஞ்சாதே ஆரூரில் வதியும் பேரருளாளன் இருக்கின்றான் என்று இயம்பினார். இங்கே செய்துவிட்ட தவறுக்காக வருந்தாதே அத்தவற்றையும் மாற்றி நல்வழிப்படுத்த அத்தன் உள்ளான் எனக் கூறுகின்றார். இங்கே ஓர் இனிய செய்தியினையே இயம்புகின்றார். நாம் அறியாமையால் செய்த தவற்றையும் மாற்றும் ஆற்றல் பெற்றவன் இறைவனே! அந்த விந்தைக்குரியவனைச் சிந்தையால் வந்தித்தால் தொந்தரவை அறுத்துச் சுகவாழ்விலே புகுவைப்பான் எனப் பாடியருளிய சம்பந்தர் மகிழ்ந்து கூறுதல் காணலாம்.

இதுகாறும் கூறியவற்றால் இன்னலற்ற இன்ப வாழ்வைப் பற்றிக் கூறப்பட்டது. நம்மாழ்வார் இறைவனின் புகழைப் பேசினால் உய்யலாம்; ஆம் அல்லலற்ற நல்வாழ்வினைக் காணலாம் என்றார். சம்பந்தர் தண்ணளியான் தன்னை வேண்டுவோர்க்கு நன்மை விளைவித்தவனே ஆரூரில் சீரோங்கி நிற்கின்றான். அந்தஐயனைத்தொழுதால்,குத்தவருகின்ற கூற்றுவனிடம் அகப்படாமல் எந்நாளும் இன்ப வாழ்வில் இனிது உய்யலாம் என்றார்; இவர்கள் இவ்வாறு தம் கருத்துகளை வெளிப்படுத்தும் பாடல்களை நாம் ஆவலுடன் நிதம் பாடினால் நிலைத்து வாழலாம் என்பது தேற்றம்.

இவர்கள் இருவரும் கூறிய கருத்தால் ஒன்றுபட்டு, இறைவன் ஒருவனே என உணர்த்தும் நெறியில் நாம் பேதமின்றித் தெய்வ வழிபாட்டில் மாட்சிமை காண்போமாக!

# நம்மாழ்வாரும் சுந்தரரும்

வேதங்களைத் தமிழாகப் பாடி வழங்கியவர் நம்மாழ்வார். இவரை ஆழ்வார்களுள் முதன்மையாக வைத்துப் புகழ்வோர் சான்றோர். ஆயிரத்திற்கு மேற்பட்டப் பாசுரங்களை அழகோவியமாகத் தீட்டி, அறிஞர்கள் மனத்தைக் கவர்ந்தவர்.

சமுதாயத்தில் வாழும் மாந்தர்கள் பண்புடையவர்களாகத் திகழவேண்டும் என்பதற்காகவே இந்த இனிய பாசுரங்களைப் பாடியருளினார். பண்புடைய மக்களே எண்ணிறந்த நலன்கள் நல்கும் கண்ணபிரானை அறிந்தின்புற இயலும் என்றார்.

மாந்தரை நெறிப்படுத்தி இறையன்பில் தோய்ந்தின் புறவே நம்மாழ்வார் திருவாய் மொழியை இசைத்தார்; அவர் மாந்தர் நலம்பெற மட்டும் திருவாய் மொழியைப் பாட வில்லை. இறைவன் கேட்டின்புறவும் பாடினார் எனக்கொள் ளுதல்வேண்டும். பரம்பொருளே நம்மாழ்வாரிடம் திருவாய் மொழியைப் பாடுமாறு கூறி, அவ்வாறே அவர் பாடியதைக் கேட்டு இன்புற்றதாகச் சான்றோர் பலர் கூறுவர்.

நத்தி விரும்பிக் கோருவோர்முன் அத்தனான எம்பெரு மான் வந்தருளி உதவும் பண்பினையெல்லாம் திருவாய் மொழியில் பெருமையாகக் காட்டியுள்ளார். செம்பொருளான எம்பெருமானைச் சிறப்புறப் படம்பிடித்துக் காட்டி மகிழ்கின்றார் அவர்.

இவர் எம்பெருமானை வள்ளலே! என்று விளித்து அருள் சுரந்திடப்பாடி இறைஞ்சுகின்றார். வள்ளலான ஆராவமுதனை நோக்கி "மது" என்னும் பொல்லாத அரக்கனை நீ அழித்ததால் மதுசூதனன் என்னும் பெயரினைப் பெற்றாய்! நீ இச்சையை யூட்டும் வகையிலே பச்சை மலைபோன்ற மேனியினைப் பெற்றுக் கவர்ச்சியினைக் கொண்டுள்ளாய்!

இத்தகைய தன்மை வாய்ந்த உன்னிடத்திலே என் கவனத்தையே செலுத்திவிட்ட யான், பிறப்பொருளின் மீது நாட்டம் கொள்ளவில்லை. பிறப்பொருளை வெறுத்தொதுக்கி நின்பால் ஒன்றிநிற்கவே அருள் சொரிந்த தெய்வம் நீ!

ஐயனே! உன் திருப்புகழான பேரின்ப வெள்ளத்தில் குடைந்து ஆடிப்பாடிக் களித்துத் திளைத்ததால், சுகானுபவம் காணுகின்றேன். எனக்கிருந்த துன்பங்களையெல்லாம் தொலைத்துவிட்டு, உன்னுடன் கலந்த அடியேனாகிய யான், எப்படி உன்னைவிட்டுப் பிரியவியலும் என்று எம்பெருமானைக் கேட்கும் நம்மாழ்வார்,

"வள்ளலே மதுசூதனா என்மரகத
மலையே உனைநினைந்து
எள்கல் தந்த எந்தாய் உன்னை
எங்ஙனம் விடுகேன்
வெள்ளமே புரைநின் புகழ்குடைந்து
ஆடிப்பாடிக் களித்து உகந்து உகந்து
உள்ள நோய்கள் எல்லாம் துறந்து
உய்ந்து போந்திருந்தேனே!"

எனப்பாடுகின்றார். இப்பாசுரத்தில் ஓர் அரிய செய்தியினை உணர்த்துகின்றார். ஒருவருக்குப் பரம்பொருளின் இன்பமே கிட்டிவிட்டால் அவ்வின்பத்தையோ விட இயலுமா? எனக் கூறும் நம்மாழ்வார் விட்டுவிட இயலாது என்ற செய்தியை மேற்குறித்த பாசுரத்தில் இரண்டாம் அடியின் இறுதியில் உன்னை எங்ஙனம் விடுகேன் என அருளாளனிடம் கூறுகின்றார்.

அந்த இரண்டாம் அடியிலேயே முதற்சீரில் "எள்கல்" என்று குறித்துள்ளார். இதில் உன்னை நினைந்து போற்றிய தால், சிறிய இன்பங்களான பிறவற்றையெல்லாம் இகழ்ந்து ஒதுக்கவே அருள்புரிந்தாய் எனக் கூறியிருத்தல் காணலாம்.

"எள்கல்" என்பதற்கு ஈடுபாடு என்றும் இகழ்ச்சி என்றும் இருபொருள் கூறுவர். இந்த இருபொருளும் எம்பெரு மானோடு நம்மாழ்வார் ஈடுபட்டதையும் அப்படி ஈடுபட்டதால் வேண்டாத சிறுமைக்குரிய பொருள்களை இகழ்ந்து ஒதுக்கிய தையும் கூறுதல் காணலாம். இவ்வாறு பாடிய நம்மாழ்வார் எம்பெருமானை யான் எவ்வாறுவிட்டுப் பிரிவேன் என்று கூறியதைப் போன்று, சுந்தரமூர்த்தி நாயனாரும் சிவபெரு மானை நோக்கி "எங்ஙனம் நான் பிரிந்து இருக்கேன்" என்று பாடுகின்றார். இவர் இந்தப் புவியில் பிறந்ததை வெறுத்துப் பேசுகிறார். இதை இடர்தரும் பிறவி என்றார். இவ்வாறு தாம் அனுபவித்த துன்பத்தைப் பெரிதும் வெறுக்கின்றார். இந்தப் பிறவியில் துன்பப்படும் யான் அடுத்த பிறவியியில் துன்பத்தை அனுபவிக்காமலிருக்கவே இனிப்பிறவியே வேண்டாம் என் பதைப் "பிறந்தயர்வேன்"என்னும் சொல்லால் குறித்தார். ஆம் எதிர்கால வினைச் சொல்லால் அதைப் பிறந்தயர்வேன் எனச் சுட்டியதால் அறியலாம். நான் பிறவி எடுக்காமலிருக்கவே நீயென்னை ஆண்டுகொள்ளல் வேண்டுமென்றார். இவ்வாறு பிரிவுத் துன்பத்திலிருந்து தாம்விடுபடவே பரம்பொருளின் பெருமைகளையெல்லாம் உளமுருகப் பாடுவார்.

அவனைப் பிறவி நோயைத் தீர்க்கும் மருந்து என்றும், அமுதம் என்றும் தம் நாவினிக்கப் புகழ்வார். எம்பெருமான் பெற்ற திருமேனியை அனல் வீசும் திருமேனி என்றார். அவன் திருக் கைகள் தன் இனிய நாயகியை அணைத்துக் கொள்கின்ற கைகளே என்று குறித்தார். இத்தகைய சத்திய சீலனை நான் எப்படிவிட்டுப் பிரிந்திருப்பேன் என்று வேதனைப்படுகிறார்.

இத்தகையனை எண்ணிப் பார்க்காதவாறு செய்கின்ற மயக்கப் பொருள்கள் இப்புவியில் மலிந்து கிடக்கின்றன,

வேண்டாத அப்பொருள்களோ புலன்களினாலே என்னை இழுத்துச் செல்வதால், மனமும் சென்று தீய படுகுழியில் என்னைத் தள்ளிவிடுகிறது. எனவே, மனம் இப்பொருள்களின் மீதுகொண்ட காதலால் நான் மீண்டும் பிறவியெடுக்கவேண்டியுள்ளதே. ஆசை வயப்பட்ட மனத்தால் பிறவி எடுக்கின்ற நிலையை மாற்ற, என் மனத்தை நல்வழிப்படுத்த, இனியான் பிறவா நிலையைக் காண உன் பெரும் பதத்தைக் கோருகின்றேன் என்று சிவபிரானிடம்,

'இங்ஙனம் வந்து இடர்ப்பிறவிப் பிறந்தயர்வேன் அயராமே
அங்ஙனம் வந்து எனைஆண்ட அருமருந்தென் ஆரமுதை
வெங்கனல்மா மேனியனை மான்மருவும் கையானை
எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே!''

எனப்பாடி வேண்டுவார். பிறவித் துயரில் சிக்கி இடர்ப்படும் உலக மக்களுக்குத் தாம் அனுபவித்த துன்ப நிலையைக் கூறி, அவர்களும் இனி அத்துன்பத்தை அனுபவிக்காமலிருக்க எம்பெருமானிடம் பற்றுக்கொண்டிடத் தூண்டுகிறார். சுந்தரமூர்த்தி நாயனார் செந்தமிழில் இந்தப் பனுவலைப் பாடியது உலகத்தில் ஆட்படும் மக்களையெல்லாம் நல்வழிபடுத்தவே இசைத்ததாகும்.

நம்மாழ்வார், கண்ணபெருமான் தன் கையில் கோல் கொண்டு செய்யும் நீதியை நமக்குப் போதிக்கின்றார். அவன் பிடித்த கோல் கொடுங்கோலன்று, கொலைக் கருவியாகவும் அவன்கோல் இல்லை. தான் நடத்திச் செல்லும் குதிரையை நெறிபடுத்தவே பிடித்த கோல் அது.

குருசேத்திரத்தில் பாரதப்போர் நடந்தபோது சாகசம் புரிந்த தீயவர்களை நாசம் செய்த பரம்பொருளே! கொடுமை செய்த பாவியாகிய துரியோதனன் கொண்டிருந்த பெரிய சேனைகளைப் பொன்றொழியச் செய்த மாயபிரானே!

தவறுகளைச்செய்யும் இந்த உடம்பின் பிறவியினையே அறுத்தொழிக்க முயன்றாலும் அஃது ஏனோ என்னால் இயலவில்லை? ஆதலால் உன்னைக்கொண்டே ஒழிக்க முயல்கின்

றேன். உன்னைப்பற்றி ஓர் உபாயத்தை எனக்குரைக்க வேண்டு கின்றேன், அருள்புரிவாயாக! அருளாளா! நீஎடுத்த அவதாரங் களினாலே பல அரிய பெரிய நன்மைகளையெல்லாம் செய்தாய். இப்போது கண்ணனாகவந்து எண்ணிறந்த நன்மை களைப் புரிந்த உன்னிடம் என் துன்பத்தை விலக்கவேண்டு கின்றேன் உற்றுதவி செய்வாயாக எனக்கோரும் நம்மாழ்வார்,

"கொல்லா மாக்கோல் கொலைசெய்து பாரதப்போர்
எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்தஎந்தாய்
பொல்லா ஆக்கையின் புணர்வினை அறுக்கல்அறா
சொல்லாய் யான் உன்னைச் சார்வது ஓர் சூழ்ச்சியே"

எனப்பாடுவார். பாரதத்தைப் படிப்பவர்கள் அர்ச்சுனன்விட்ட அம்புகளே துரியோதனன் கூட்டத்தை அழித்ததாகக் கருதுவார் கள். ஆனால் இஃது உண்மையன்று, அந்தத் தீயவர்களான துரியோதனாதியர்களை வீழ்த்தி, பூமி பாரத்தைத் தீர்த்தது கண்ணபிரான் கையில்கொண்ட கோலேயாகும். பாரதப் போரில் அர்ச்சுனனுக்குத் தேர் செலுத்தியபோது அத்தேரில் கட்டப்பட்ட குதிரைகளை நெறிப்படுத்தி ஒழுங்காகச் செல்ல கண்ணபிரான் கைக்கொண்ட கோலே வீழ்த்தியது என நம்மாழ்வார் மேற்குறித்த பாசுரத்தில் பகர்கின்றார். எம்பெரு மானாகிய பார்த்தசாரதி அக்கொடியோர் கூட்டத்தை வீழ்த்தியதாகக் கூறாமல் கண்ணன் கைகோலே வீழ்த்தியது என்கின்றார். இதிலிருந்து நமக்கு ஒன்று புலனாகக்கூடும். அஃதாவது கண்ணபெருமானிடம் சிறு துரும்பு இருந்தாலும் அந்தத் துரும்பும் ஆற்றல் சான்றது எனப் புலனாகின்ற தன்றோ?

"எல்லாச் சேனையும்" என்று கூறியதில் துரியோதன னுடைய அனைத்துச் சேனைகளையும் ஒழித்ததோடு பாண்ட வர்கள் சேனைகளில் பெரும்பாலானவற்றையும் ஒழித்ததாகக் கூறுதல் காணலாம். அடுத்து அப்பாசுரத்தில் "புணர்வினை அறுக்கல் அறா, சொல்லாய் யான் உன்னைச் சார்வது ஓர் யே" என ஒரு தொடர்மொழியை ஆண்டுள்ளார். இது

பிறவித்துயரை அறுக்க உன்னைத் தவிர வேறு கதியில்லையாத லால் உன்னையே சரணடைந்தேன் என்னும் கருத்தைச் சுட்டுவ தாகும். இவர் சுட்டியவாறு சுந்தரமூர்த்தி நாயனாரும் இவ்வாறே குறித்துப் பாடுகின்றார். இதைப்,

"பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப்
பொருது உன்னடியே புகும்சூழல் சொல்லே"

எனப்பாடுவார். மரங்களை விரைந்தடித்துக்கொண்டு செல்லும் நிவா என்னும் ஆற்றங்கரையின்மேல் நடம்புரியுங் கோலத்தில் திருநெல்வாயில் அறத்துறையில் கோயில்கொண்டிலங்கும் நின் மலனே! என்னைவறியவனாகவே இம்மண்ணுலகத்தில் தோற் றுவித்தாய்! பிறர்க்குதவும் வகையில் அறத்தைச் செய்யவே இயலாதவனாயுள்ளேன். சிறந்த பண்பில் நிலைத்து நிற்கமாட் டாமலே மனத்தை அலையச் செய்கின்றன புலன்கள். அந்தப் பொல்லாத புலன்களை அடக்கி உன் அருள்நிலையில் தலைப் பட எனக்கு ஆற்றலினைத் தருவாயாக!

இந்த ஐந்து புலன்களையும் நான் அடக்கியே உன் அருளியல் பண்பில் நிலைக்கவே உன் பொன்னார்த் திருவடி களே வழிகாட்ட வல்லன. எனவே, உன் திருவடி சம்பந்தம் எனக்கேற்படச் செய்வாயாக! ஞானநிலையை அடையவேண்டு வோர்க்கு நயந்து சென்று வழங்கும் ஐயனே! நீ உயர்வும் தாழ்வும் இல்லாமல் எப்போதும் ஒரே சீராக இருக்கின்றாய். எவ்விடத்தும் செவ்வியுடன் பவ்வியமாய் விளங்குகின்றாய்! உன்னைத் தவிர வேறெவற்றின் மீதும் என் மனம் செல்லா மலிருக்க வேண்டுகின்றேன்.

நான் வறியவன், உன்நெறியில் என்னை நிலைக்கவொட் டாமல் செய்வது இம்மண்ணுலக வாழ்வு; இவ்வாழ்வில் நரக வேதனையை யான் அனுபவிக்கவே நீ என்னைப் பிறந்திடச் செய்வித்தாய் போலும்? இப்புவின் வாழ்வில் யான் பொருந்தி யிருக்கவே மாட்டேன்! இவ்வாழ்வு நிலையற்றதாகும். நிலை பேறுடைய உன்னை அனுபவிக்க முடியாமல் செய்கின்ற

என்னையே இன்னல்படுத்துகின்ற ஐந்து புலன்களையே அழிக்க ஓர் உபாயம் காட்டுவாயாக! காட்டினால் மாட்சிமை நல்கும் உன் திருவடியில் யான் பொருந்தியிருக்க இயலும் என்று சிவபெருமானிடம் இரங்கி வேண்டுகின்ற சுந்தரர்.

"கறிமா மிளகும் மிகுவன் மரமும்
மிகவுந் திவரும் நிவவின் கரைமேல்
நெறிவார் குழலார் அவர்காண நடம்செய்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே
வறிதே நிலையாத இம்மண்ணுலகின்
நரனாக வகுத்தனை நானிலையேன்
பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப்
பொருது உன்னடியே புகும்சூழல் சொல்லே"

எனப் பாடித் துதிப்பார்.

இப்பாடலில் எம்பெருமான் திருவடியே புலன்களை எதிர்த்து வீழ்த்தும் ஆற்றல் பெற்றது என்றார். எனவே, நாளும் பொழுதும் அவன் திருவடிகளைப் பாடிக் கடைத்தேற நமக்கு வழிகாட்டுகின்றார்.

நம்மாழ்வார், உயிர்களைத் நன் நெறியில் நிற்க வைக்கும் திறன் பெற்றவன் எம்பெருமான் என்று இயம்புவார். அவன் எழுச்சி மிக்கவன். அவனோ அழிவும் தாழ்வுமின்றி, எங்கும் நின்று தன் ஒளியைக் காட்டி மக்களுக்கு வாழ்வளிப்பவன். குறைகளைத் தவிர்த்து மலர்ச்சியினை வழங்கும் அழகன். இத்தகையவனை நத்தி நித்தம் போற்றிய நம்மாழ்வார், அவன் திருவடிகளாகிய நிழலில் நிற்க விழைகின்றார்.

அவன் திருவடிகளே வாழ்வினை வழங்கும் தன்மையுடையன; இந்தப் பூமண்டலத்தில் எங்கும் உள்ளவர்களுக்கு அவன் திருவடிகள் வழங்குகின்ற வாழ்வோ கிட்டுதல் அரிதாகும். ஆதலால், இந்தப் புவியிலுள்ள அனைத்தையுமே

தவிர்த்து உன் திருவடிகளின் கீழ் நல்வாழ்வினைப் பெறவந்த எனக்கு நீ அருள் சுரக்கவேண்டுகின்றேன் என்றவர்,

"சூழ்ச்சி ஞானச் சுடரொளி யாகியென்றும்
ஏழ்ச்சி கேடின்றி எங்ஙனும் நிறைந்த எந்தாய்
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்த்துநின் தாளிணைக்கீழ்
வாழ்ச்சி யான்சேரும் வகையருளாய் வந்தே"

என்று அவன் திருவடியைப் பாடிப் போற்றுவார். இதில் அவன் திருவடியின் கீழ் வாழும் வகையினைக் கோருகின்றார். இந்த இனிய வாழ்வை அவனே முன்வந்து வழங்கவேண்டுமென்கின்றார். வேறு—பொருள்களின்மேல் ஆசை வைக்காமலிருக்கச் செய்வன உன் திருவடிகளே என்கின்றார். அவன் திருவடிகளே பேரின்ப வாழ்வு எனக்கூறுகின்றார். எம்பெருமானே, நீ! உயிர்களைத் தன்வசப்படுத்தும் ஞானச் சுடரொளியானவன்; எழுச்சி மிக்கவன்.

கெடுதலின்றி எவ்விடத்தும் செவ்வி காட்டி நிற்பவன் நீயே என் தந்தை! செந்தமிழ் பாடும் என்முன் வந்து வாழ்வருள்வாயாக என அவனைப் போற்றுவார் நம்மாழ்வார். இவர் நின்தாளிணைக் கீழ்வாழ்ச்சி யான் சேரும் வகையருள் வாய் என்று எம்பெருமானிடம் வேண்டியதைப் போன்று சுந்தரமூர்த்தி நாயனாரும் "இடுக்கண் உற்றனன் உய்வகை யருளாய்" என வேண்டுகின்றார்.

ஐயனே! பிறருக்கு உதவிட விழைகின்றேன். அதற்குப் பொருள் தேவையென்றாலும், அப்பொருளை மிகுதியாக வைத்திருப்பதைக் குற்றமாகவும் கருதுகின்றேன். அப்படி அதிகமாக வைத்திருப்பதைப் பகையாகவும் கருதுகின்றேன். இத்தகைய பொருளையே விலக்கிவிடுகின்ற மனநிலையையே எனக்குத் தருவாயாக!

விருப்பத்தையும் சினத்தையும் வளர்க்கின்ற இப்பொருளைச் சேர்க்க விரும்பும் ஐம்புலன்களும் என் மனத்தை அலைக்கழிக்கின்றன. இப்போக்கினை எண்ணி நடுங்குகின்றேன்.

வயது முதிர்ந்து தள்ளாத நிலையினை அடைகின்றபோது, இப்பொருள் என் முதிர்ச்சியினை இளமையாக்கிவிடுமா? தள்ளாத நிலையே இல்லாமல் செய்யுமா?

அப்படி முதிர்ச்சியுற்றுத் தள்ளாத காலத்தில் நோயில் படுக்கும்போது, இப்பொருள்கள் எனக்கு என்ன உதவியினைச் செய்யும்? யமன் என்னைக்கொண்டு செல்லும்போது இந்தப் பொருள்களோ அவனைத் தடுத்து விரட்டுமா? எனவே, இக் காலத்தில் உதவாத இந்தப் பொருளுக்காகத் தவறு செய்து பின்னர் கூற்றுவனுலகில் சிக்கி நரகத்தில் அழுந்தி வருந்த வேண்டி நேருமே!

எனவே, இப்போதே பொருளாசையைத் தவிர்க்கவே புலன்களை அடக்கி ஒடுக்கவே உன்னைத் தஞ்சம் அடைகின்றேன். நரகத்தில் அழுந்தும் நிலையை எண்ணி அஞ்சி திருவிடை மருதூரில் கோயில்கொண்டிலங்கும் உன்னை வேண்டுகின்றேன் நல்லருள் புரிவாயாக! நீ தானே எல்லாவித மான துன்பங்களையும் போக்குபவன் என்று பரவுகின்றார்.

இந்த மண்ணக வாழ்வோ இனிது என்று எண்ணியே வாழும்மாந்தர்கள்,புலன்களின்போக்குக்கு ஆட்பட்டுக்கிடக்கின்றார்கள்; சிற்றின்பங்களுக்கு அடிமையாகிப் பேரின்பம் பெறும் வழியை அறியாமல் தவிக்கின்றார்கள். வயது முதிர்ந்த தள்ளாத காலத்தில் படுக்கையில் கிடக்கும்போது கடவுளே! என்று எண்ணுவார்கள். இப்படியெண்ணுவது கண் தெரியாமல் போன பிறகே சூரிய வணக்கம் செய்வதற்கு ஒப்பாகும். அப்போதைக்கு இப்போதே நாவார அவன் திருநாமங்களைப் பாடிப் பரவித் துதிப்பதாலே பேரின்பம் காணவியலும், என்பதால் செந்தமிழ்ப் பனுவலால் சிந்தைக்கினிய எம்பெருமானைப் போற்றிவழிகாட்டுகின்றார்.நாளும் பொழுதும் உலகாயதத்தில் உழலும் மக்களுக்கு வழிகாட்ட வந்த சுந்தரர்,

"கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னை
குற்றம் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையும் சினமும்
வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல
நடுக்கம் உற்றதோர் மூப்புவந்து எய்த
நமன்தமர் நகரத் திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைமரு துறை எந்தை பிரானே!"

என்று பாடிக் காட்டுவார். இதில் வாழ்வைப் பெறுபவர்களுக்கு இறைவனைக் காட்டி மாட்சிமை பெறக்கூறுகின்றார். எப்படியும் வாழலாம் என்பது தப்பான போக்காகும். அப்பன் திருவடியைப்பற்றி வாழ்வதே பேரின்ப வாழ்வு—என நம்மாழ்வாரும் சுந்தரரும் ஒருமித்து உலக மக்களுக்கு வழிகாட்டுவதற்காகப் பாடியருளினார்கள்.

அப்படி அவர்கள் பாடிய அருமைப் பாடல்களைப் பெருமையாக நிதம்பாடி அருளாளனைப் போற்றி ஏற்றமுடன் இகபரலோக வாழ்வை எய்துதல் நம் கடனாகும். கடமையை உடன்பாடு கொண்டு செய்து உய்வோமாக!

## இன்பவழி செல்வோம் இயைந்து!

*(நேரிசை வெண்பா)*

மண்ணுலக வாழ்வே மகிழ்வற்ற தாகுமென்றே
அண்ணல் திருவடியே ஆக்கமருள்—ஒண்வாழ்வாய்ச்
சொன்னார்நம் மாழ்வாரும் சுந்தரரும் காட்டிய
இன்பவழி செல்வோம் இயைந்து!

# நம்மாழ்வாரும் மணிவாசகரும்

சித்தர்களுக்கும் வேதங்களின் முடிவைத் தெரிந்தவர்களுக்கும் தவத்தில் சிறப்புற்றவர்களுக்கும் மற்ற மற்ற துறைகளில் மாட்சிமை கண்டவர்களுக்கும் துறவுக்கோலத்தைப் பூண்டவர்களுக்கும், பக்தியில் தோய்ந்த பண்பாளர்களுக்கும், ஞான நிலையில் நலங் காண்பவர்களுக்கும், தவத்தால் முத்தி அடைந்தவர்களுக்கும், முன்பு முத்தியடைந்த முனிவர்களுக்கும் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி இனிய அமுதமாயிருந்து ஆக்கம் நல்கவல்லது, நல்கியது என்று கம்பநாட்டாழ்வார்,

"சித்தர்க்கும் வேதச் சிரம்தெரிந்
தோர்கட்கும் செய்தவர்க்குஞ்
சுத்தர்க்கும் மற்றைத் துறைதுறந்
தோர்க்கும் தொண்டுசெய்யும்
பத்தர்க்கும் ஞானப் பகவர்க்கு
மேயன்றிப் பண்டுசென்ற
முத்தர்க்கும் இன்னமுதம்சட
கோபன் மொழித்தொகையே!"

என்று சடகோபர் அந்தாதியில் பாடுவார். இதில் நம்மாழ்வாரின் பெருமையையும் திருவாய்மொழியின் அருமையையும் தெரிவிக்கின்றார்,

இத்தகைய அருமைத் திருவாய்மொழி ஒன்றில் எம்பெருமானைச் சிக்கெனப் பிடித்ததாக நம்மாழ்வார் பாடியுள்ளார். நம்மாழ்வாரின் பிடி மிக அழுத்தமான, உறுதியான பிடியாதலால் எம்பெருமான் அப்பிடியிலிருந்து மீள இயலாமல் கட்டுண்டிருந்தான். நம்மாழ்வாரும் அவனைவிட்டு விலகாமல் அப்படியே கெட்டியாகப் பற்றியிருந்தார். பின்னர் அவர் அப்பெருமானைப் பார்த்து வைகுந்த வாசனே! என்று விளிக்கின்றார்; விளித்தவர் நீலமணி போன்ற வடி வழகையுடையவனே என்றார்; அப்பெருமானைப் பார்த்து நீ அல்லல் செய்வோர்க்குப் பொல்லாதவனாய் இருக்கின்றாய் என்றார்;

வாமனனே! எனக்கு அழகுவாய்ந்தவனாயிருந்து, என்னுள்ளத்திலே பொருந்தி இலங்குகின்றாய் நீ! எப்போதும் அமுதம் போன்றே இருந்து இன்பம் பயப்பவனாகவுள்ளவன் தான் நீ! இத்தகைய சால்புடைய நீயே! தேவர்களுக்கும் போற்றுதற் குரியவனாகத் திகழ்கின்றாய்! நீக்கமுடியாத தீமைகளை உன் அடியார்கள் நீக்கவும் எளிதாக விலக்கவும் அவர்களுக்குத் துணையாகவுள்ளாய்!

தொல்லை தரும் அசுரர்களுக்கு நீ பொல்லாதவனாயிருந்து இன்னல் தந்து அவர்களை அழித்தொழிக்கின்றாய்; இத்தகைய அத்தனான உன்னையே சிக்கெனப் பிடித்துக்கொண்டேன் என்பதை,

"வைகுந்தா! மணிவண்ணனே! என் பொல்லாத்
 திருக்குறளா! என்னுள் மன்னி
வைகும் வைகல் தோறும்
 அமுதாய வானேறே!
செய்குந்தா அருந்தீமை உன்அடி யார்க்குத்
 தீர்த்து அசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா உன்னைநான்
 பிடித்தேன்கொள் சிக்கெனவே!"

என்று இப்பாசுரத்தில் பாடுவார். இதில் எம்பெருமானே தம் பிடியிலே கட்டுண்டதாய் பெருமகிழ்வெய்துகின்றார். அவனும்

தம் கட்டுக்கோ அடங்கியிருந்ததால் தாம் புதியதொரு அழகு பெற்றதாகக் கூறுகின்றார். மேலும் அவனைவிட்டுப்பிரியாமல் இருக்கவே, தம் மனத்தால் அவனைப் போற்றி நின்றருளவே செய்கின்றார். இறைவனே இரங்கிவந்து நம்மாழ்வார் அன்புக்கு இன்பம் சொரிந்ததாகவே மேற்குறித்த பாசுரத்தில் தெரிவிக்கின்றார்.

நம்பிக்கையுடன் நம்மாழ்வார் எம்பெருமானைப் பற்றிய தைப் போன்று மணிவாசகரும், தாமேபக்தி செய்துபரம்பொரு ளைப்பற்றியதாகப் பாடுவார். இவர் எம்பெருமானைப் பார்த்து அத்தனே அண்டங்களெல்லாம் பரவி நிற்கும் ஆதி நீ என்று புகழ்கின்றார். ஆதியே என்று விளித்தவர், எந்தவித முடிவுமில்லாத சித்தனே என்று சித்திரிக்கின்றார். மேலும் எவற்றிற்கும் அடங்காமலிருக்கும்நீதான் அன்புடையஅடியார்க் குக் கட்டுப்பட்டுவிடுகின்றாய்; சக்தி வாய்ந்த பக்தர்கள் உன்னைச்சிக்கெனப் பிடித்து வயப்படுத்தியே விடுகின்றார்கள்

நீ சிறந்த செல்வனாவாய்; ஆம் அவலத்தைப் போக்குகின்ற திண்ணியவனாவாய்; நீயே பக்தர்கள் பின்னே செல்லும் பித்தனாவாய்; எல்லா உயிர்களும் தழைத்து வாழ, அவ்வுயிர் கள்பால் அன்பு செலுத்தும் நீ பித்தனேயாவாய்!

தவறு செய்து வாழும் உயிர்களோ இல்லாமல் போகவே செய்யும் நீதான் வஞ்சகனான எத்தனேயாவாய்! இப்படி உயிர் கள் தோன்றவும் வாழவும் இல்லாமலும் செய்யும் நீயே பேராற்றல் உடைய பெருமானாவாய். உன் நிலையினை உய்த் துணர்ந்த யானோ உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனி நீ எங்கெழுந்து சென்றிடுவாய் என்று. மணிவாசகர் சிவபெருமானிடமே கேட்கின்றார். இந்த அன்பின் நிலையை இன்பமுற அவர்,

"அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறு இல்லாச்
சித்தனே பக்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே

பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே!"

என்று இனிது பாடுகின்றார். முடிவும் முதலும் இல்லாத அவனை ஆதியே என்றார். பக்தர்கள் சிக்கெனப் பிடிக்கும் அளவில் உள்ள அவனைச் சித்தனே என்றார். எல்லா உயிர்களுக்கும் அருளும் அவனைச் செல்வமே என்றார். உயிர்களெல்லாம் பிழைத்துத் தழைத்திலங்க வைக்கின்ற நிலையிலுள்ள பெருமானைப் பித்தனே என்றார். பித்தனாய் அன்பர்க்கு அருளும் அத்தனை எத்தனே என்று பேசுகின்றார். காரணம் தம் நிலைக்கு அன்புடன்வந்து அருளாமலிருத்தலாலே இவ்வாறு வஞ்சகனெனப் பேசுகின்றார்.

அருளாளனை எத்தனே என்றதால் கள்வனாகத் தம்மை ஏமாற்றியவனாகக் கருதுகின்றார். இத்தகைய ஏமாற்றுக்காரனை மாணிக்கவாசகர் அன்பென்னும் கயிறுகொண்டு தம் சிந்தையென்னும் கொம்பில் பிடித்துக் கட்டிவிடுகின்றார். அன்பென்னும் பிடியில் அகப்படும் மலையே என்று கூறுவதற்கேற்ப நம்மாழ்வாரும், மாணிக்கவாசகரும் அன்புக் கயிற்றால், இன்பம் நல்கும் எம்பெருமானைக் கட்டிப்பிடித்துவிடுகின்றனர். இவர்கள் இருவரும் ஒருமித்து அன்பாலே அருளாளனை விருப்பிப்பற்றியதைப்போல்மக்களும் சிறந்த நிலையை எய்திட அன்பால் போற்றி அவனைப் பற்றிட வழிகாட்டுகின்றார்கள்.

நம்மாழ்வார், இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும், எம்பெருமானை நம்பி போற்றி ஏற்றம் பெற்றவர். இவர் திருவேங்கடமலையில் இருக்கும் எம்பெருமானிடம் இறைஞ்சுகின்றார்; இந்தப் பெருமை வாய்ந்த மலையின் மேலிருக்கும் நீ! அந்நாளில் இலங்கையினை அழித்தாய்! இலங்கையில் கொடிய இராவணனை வீழ்த்தச்சென்றபோது,பிறனில் விழைந்த வாலி என்னும் வானரத்தலைவனை அழிக்கும்போது பருத்த மிகப் பெரிய ஏழு மரங்களைத் துளைத்து ஊடுருவிச் செல்ல ஓர்

அம்பினை மட்டுமே விடுவதற்காகத் தொடுத்திட்ட மிகப்பெரிய வில்லினையுடைய பெருமான் நீ! கொத்துகள் உடைய குளிர்ச்சி பொருந்திய அழகிய துளசி மாலையை அணிந்து நிற்பவனே! அமுதம் போன்று இனிமையுடையவனே! உன்னை என்னோடு கலந்திருக்கவே யான் செய்துவிட்டேன்.

நீயோ இளமையும் வலிமையும் வாய்ந்தவன்; தேவர்களுக் கெல்லாம் தலைவன்; இத்தகைய அத்தனான நீ என்னைவிட்டு எங்கே போகவியலும்? அன்பனாகிய என்னைவிட்டால் உனக்கு வேறு போக்கிடம் ஏது? என அவனிடம் கேட்பவர்,

"எந்தாய் தண்திரு வேங்கடத்துள் நின்றாய்
இலங்கை செற்றாய் மராமரம்
பைந்தாள் ஏழ் உருவ ஒருவாளி
கோத்த வில்லா
கொந்தார் தண்அம் துழாயினாய்
அமுதே உன்னை என்னுள்ளே குழைத்தஎம்
மைந்தா வான்ஏறே இனி
எங்குப் போகின்றதே!"

இப்பாசுரத்தில், உன்னை முன்பு அறியாமல் இருந்தேன் இவ்வாறிருந்த என்பால் நீயே அன்புடன்வந்து உன்னை அறியு மாறு தெரிய உணர்த்தினாய். அதனால் உன்னைப் பிரிந்து உயிர் தரிக்க முடியாதபடி என்னை நீ செய்துவிட்டாய்!

இவ்வாறு செய்த நீ இன்று என்னைவிட்டுப்போவதுதான் ஏற்றதாகுமா? நெறியாகுமா? என்று கேட்கும் வகையில் மேற் குறித்த பாசுரத்தில் "இனி எங்குப் போகின்றதே" என்று பாடி யிருத்தல் காணலாம். இப்படிப் பாடியதில் ஒரு கருத்துப் புலனாகக் காணலாம். அஃதாவது என்னைத் தவிர உனக்கு வேறு புகலிடமேது? என்று கேட்பதாகவிருத்தல் அறியலாம். உலகெலாம் நிலவி நலம் செய்யும் அருளாளனுக்கு வேறு போக்குடமில்லையா? உண்டு என்பது நம்மாழ்வாருக்குத் தெரியும். இருந்தும் இவ்வாறு குறித்தது, தாம் அவன்பால் கொண்ட பக்தியின் உறுதிப் பாடே என்பது புலனாகும்.

இப்படி ஒப்பில்லா வகையில் எம்பெருமான்பால் கொண்ட காதலால் தம் நிலையினைத் தெளிவாக்குகின்றார்.

நம்மாழ்வார்கொண்ட உறுதிப்பாட்டினைப் போன்று மாணிக்கவாசகரும் பெற்றிருந்தார். ஆம் அவரும் நம்மாழ்வாரைப்போல எம்பெருமானை "எந்தாய்" என்றே விளிக்கின்றார். இவர் சிவபெருமானிடம் உன்னையன்றி யான் எங்குப் புகுவேன் என்றார். உன் பெருமையினைப் பிறரும் அறிந்து கூறவியலாத வகையில் நீ உயர் புகழில் வியப்புற விளங்குகின்றாய்! நீ தலைவன் இல்லாத தலைவன்; பொல்லாத நாய்க்கு ஒப்பான புன்மையுடைய என்னை ஏற்றுக்கொள்வாயா? ஏற்று நல்லோனாகச் செயற்பட வைக்காமல் தீயோனாகவே உழல வைப்பாயா?

என்மீது கருணையைப் பொழிவார் யார்? தீயனான என்னிடம் நீ கருணை புரியாமல் விட்டுவிட்டால் என் நிலை என்னவாகும்? பெருமானே பொன்னைப்போன்று மின்னுகின்ற திருமேனி படைத்த தெய்வமே! யான் உன்னிருப்பிடத்தை விட்டே வேறு எந்த இடத்திற்குச் சொந்தம் பாராட்டிச் செல்ல இயலும்? அற்ப நிலையாலே யான் அறிவிழந்து போனதால், நல்லாரிணக்கம் பெறும் தகுதியினை இழந்து நிற்கின்றேன். புன்னெறியில் நிற்கும் என்னைப் புறத்தள்ளி இடர்ப்படுத்தாதே!

உன்னையன்றி என்னை ஆதரிப்பவர்கள் எவரும் இலர். ஆதலால் உன் மீது காதல்கொண்ட என்னை உன் அடியானாக ஆட்படுத்திக் கொள்வாயாக என இறைஞ்சுமவர்,

"தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா
புறமே போக விடுவாயோ?
என்னை நோக்கு வார்யாரே
என்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழும் திருமேனி
எந்தாய் எங்குப்புகுவேனே!"

என்று பாடுவார். இறை நெறியில் ஆழங்கால்பட்ட இவரோ தம்மை நாயாகவும், புன்மையுடையவராகவும் புகலுகின்றார். இறைவனிடம் நிறைவு பெற்ற இவர்,இவ்வாறு கூறுதல் உலகத் தவர்கள் புரிந்து செயற்படவே கூறியதாகும். எல்லா உயிர் களைக் காட்டிலும் சிறப்புடைய மனிதகுலம் மேன்மை யுற்று ஒளிராமல் விலங்கினத்திற்கும் கீழாக வாழ்தலால் அவர்கள் எல்லாரும் மெய்யுணர்வு பெற்று இறைநெறியில் நிற்கவே வழிகாட்டினார். நம்மாழ்வாரும் மாணிக்கவாச கரும் எம்பெருமானை எந்தாய் என்று கூறி அன்புடன் அழைத்துத் தம் சிந்தையில் குடியிருக்கச் செய்துவிடுகின்றனர். நம்மாழ்வார் பரம்பொருளைப் பார்த்து என்னைவிட்டு எங்கே போகின்றாய் எனவினவுகின்றார். மணிவாசகர் உன்னைவிட்டு எங்கே புகுவேன் என்று கேட்கிறார். இருவரும் இவ்வாறு கூறுதலால் இவர்களுக்குப் புகலிடம் எம்பெருமானே எனத் தெளியலாம்.

நம்மாழ்வார் தம் பாசுரத்தில் கடைசியடியில் பரம் பொருளை "மைந்தா" என்று அழைக்கின்றார். இச்சொல் லுக்கு வலிமையையும் இளமையையும் பெற்று நின்று என்றும் நலம் புரப்பவன் எம்பெருமான் என்றே உரையாசிரியர்கள் அப்பரம்பொருளின் திறத்தை உயர்த்திக் கூறுவார்கள். மாணிக்கவாசகர் பரம்பொருளைத்தலைவனே என்று பேசுகின் றார். இவர் பாடிய பாடலில் இக்கருத்தை முதலடியில் நான்காம் சீரில் வைத்துப் பாடியுள்ளதை அறியலாம். இச் சொல்லுக்குத் தனக்குமேல் தலைவனில்லாதவன் என்று பொருள் கூறுவர். இவர்களிருவரும் கூறிய சொற்களை இயைத்துக் கூறுவோமானால் என்றும் இளமையும் வலிமையும் பெற்றுத் தலைமையை ஏற்று உலகினை நடத்துபவன் பரம் பொருள் எனக் கூறுதல்வேண்டும். அவன் பேராற்றல் பெற்றவன். அடியாரிடம் அன்பு காட்டி ஆக்கம் நல்குபவன். தன்னை நினைப்பவரிடம் ஓடி உதவிசெய்பவன். கொடியோ ரைப் படிமிசையில் துடித்துடித்து வீழ்த்தி அழியச் செய்பவன்.

எளிவந்த பிரானான அவன் தன்னை எண்ணிப் பக்தி செய்பவருக்கு ஒளியனைய வாழ்வை நல்குபவன் தன்னையே உய்த்துணர்ந்து வாழவே நம்மாழ்வாரும் மணிவாசகரும் உலகத்தாருக்குத் தம் பாடல்கள் மூலம் வழிகாட்டினார்கள்.

தன்னை வேண்டிய பாஞ்சாலிக்கு ஓடோடியும் சென்று மானம் காத்தவன் மாமாயன். துன்புற்ற மார்கண்டேயனுக்கு விரைந்து அருள்சொரிந்தவன் சிவபெருமான். துயருற்றவர்கள் எவ்வாறு வேண்டுகிறார்களோ அவ்வாறு கண்ணபிரானாகவும் சிவபிரானாகவும் தோன்றி உதவி செய்பவன் எம்பெருமான். ஆதலால் அவனைப் பக்தி செய்து உய்ய நம்மாழ்வாரும் மணிவாசகரும் நமக்கு வழிகாட்டிச் சென்றார்கள். இவர்கள் நெறியில் சென்று பேரானந்தப் பெற்றியினை எய்தி வாழ்வோமாக!

## செம்மை யருள்வானைச் செப்பு

*(நேரிசை வெண்பா)*

இளமையும் மிக்க எழிலையும் பெற்றோன்
வளத்தினைத் தந்திடும்மா மாயன்—உளம் கவர்ந்து
தம்மடியார்க் கன்பாய்த் தயவாகத் தோன்றியே
செம்மையெலாம் செய்வான் சிறந்து

# பொய்கை ஆழ்வாரும் நாவுக்கரசரும்

முதலாழ்வார்கள் மூவர்களாவர்; அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் எனக் கூறப்படுபவர்கள் ஆவார்கள். இவர்களில் முன் தோன்றியவர் பொய்கையாழ்வார். இவர் எம்பெருமானைக் குறித்து நூறு வெண்பாக்களால் பண்புறப் பாடியுள்ளார். இவர் பாடியருளிய பிரபந்தத்தை முதல் திருவந்தாதி என்பர். பாடியருளிய நூறு பாசுரங்களுள் நாற்பத்து மூன்றாம் பாசுரத்தில் ஓர் இனிய செய்தியினைத் தெரிவிக்கின்றார்.

இப்பாசுரத்தில் செம்பொருளான எம்பெருமானைப் பாடுபவர்கள் அடைகின்ற அரும்பயனைத் தெரிவித்துள்ளார். முளைத்தே நிலத்தில் பசுமை குன்றாமல், வாசம் குறையாமல் இருக்கும் துளசியை மாலையாகக் கட்டப்பெற்றுக் கருணை முகில்வண்ணன் மேனியிலே அணிவித்திருந்தது. அது முன்னிலும் பன்மடங்கு பசுமையுடையதாய் மணம் வீசுவதாய், எழில் உடையதாய் விளங்குகின்றதாம்.

இந்தக் கோலத்தில் அழகுடனிருக்கும் அருளாளனின் பெருமை வாய்ந்த திருவடிகளையே தீர்த்தங்களைக்கொண்டு கழுவியும் மணமிக்க மலர்களைக்கொண்டு சார்த்தியும் பூசிப்பவர்களின் மனக்குறையோ மாறும்; அவனை நினைத்துப் போற்றி எடுக்கின்ற முயற்சியாவும் உயர்வைத் தரும்; வெற்றியைத் தோற்றுவிக்கும். இந்த நன்முயற்சியில் தலைப்படுபவரின் தீவினைகள் யாவும் பறந்தும், மறைந்தும் ஓடும். அவன் திருநாமத்தையே இடைவிடாமல் சொல்லிப் பக்தி செய்தால் செல்வம் பெருகும்; பல்வேறான பயன்கள் தோன்றும். அவனையே வழியாகக்கொண்டு தொழிற்படுவோருக்கே என்றும் தீமையில்லை; நன்மைகளே விளையும்.

உலகமெலாம் நின்று ஒளியருளும் மாமாயனைப் பாட்டிசைத்தால் அவனே நாட்டம் நம்பால் கொள்வான்; கேட்பதைக் கொடுப்பான்; நம்மிடம் தேங்கியே நீங்காமல் நிற்கும் பாவங்களும், தீவினைகளும் பரிதி கண்ட பனிபோல் விலகும். அந்தப் பரம்பொருள் என்னும் செல்வம் நம் நெஞ்சில் நிலைக்கும்படி செய்கின்ற இனிய செய்தியை

> "மனமாசு தீரும் அருவினையும் சாரா
> தனமாய தானேகை கூடும்—புனமேய
> பூந்துழா யானடிக்கே போதொடு நீர் ஏந்தித்
> தாந்தொழா நிற்பார் தமர்!

என்று தம் நாவினிக்கப் பாடுவார். இதில் மனத்திலே எழும் ஆசைகளே இன்பங்கள் பலவற்றையோ அனுபவிக்கத் தூண்டுமே. இப்படித் தவறுகள் செய்து இன்பங்கள் பெற ஐம்புலன்களே தூண்டுவதால் மனமும் அவற்றின் போக்கிலே செயற்படுகின்றது. புலன்கள் தூண்டுவதால் மனமும் கட்டுப்பாடின்றி அலைய நேரும். அதனால் மனமோ தவறுகளைச் செய்துவிட இயலும். ஆதலால் தவறுகளைத் தூண்டும் புலன்களையடக்க மனமே தெளிவு பெறவேண்டும். தெளிவு பெற்ற மனமே நலம் காணும். எனவே மனமோ தெளிவு பெறுவதற்கு இனியதொரு மருந்தே,

எம்பெருமானின் அருமைத் திருவடிகளேயாகும். அந்த மாயனின் திருவடியைப் போற்றினால் பற்றிய துன்பம் மாறும் என்பதை "மனமாசு தீரும் என்றார்; மேலும் பிற எந்தத் துன்பமும் அந்த மனத்தைச் சாராது என்பதை "அருவினையும் சாரா" என்றார். நம் வாழ்வுக்காகவும் எம்பெருமானின் தொண்டிற்காகவும் பொருள் தேவை என்பதைக் கூறவந்தவர் "தனமாய தானே கைகூடும் என்றார்". என்வே அவன் திருவடியைப் போற்றுவதால் தீமை விலகும் நன்மையே பெருகும் என இப்பாசுரத்தில் இனிது விளக்கியுள்ளார்.

திருநாவுக்கரசரும் பொய்கையாழ்வார் நெறியில் இறைவனைப் பாடுகின்றார். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சிந்தை

யாகிய மனம் மாறுபடும் இயல்புடையது. ஐம்புலன் தூண்டும் போக்குக்கே அஃது ஆட்பட்டுவிடும். அப்படி போகாமல் தடுக்கவும் நல்லறிவால் அதை நிலை நிறுத்தவும்வேண்டும். என்றால் இறைவனையே வந்திக்கின்ற சிந்தைதான் வேண்டுமென்கின்றார். இவ்வாறு அவனை நித்தமும் அனுபவிக்கின்ற வகையில் வணங்கினால் பேதமை நீங்கும்; தவம் பெருகும்; பேரானந்த வெள்ளத்தில் மூழ்க இயலும். எனவே, மாறுபடும் போக்கேயில்லாமல் என்றும் மாண்புறவே நின்று நிலவுகின்ற சிந்தையால்தான் அவனை நெருங்கிப் பற்றிடவியலும் வாழ்த்தி வணங்கிடவியலும் என்பதைப்,

> "பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்
> திருகலாகிய சிந்தை திருந்தலாம்
> பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
> மருக லான்அடி வாழ்த்தி வணங்கவே!"

என்று பாடுகின்றார். நாவுக்கரசர் மாறுபடுகின்ற சிந்தையைத் திருகலாகிய சிந்தை என்றார். அந்தச் சிந்தையோ திருந்தும் தன்மையுடையது என்பதை, திருந்தலாம் என்றார். அப்படி மாறிய சிந்தை திருந்தினால்,இன்பம் பருகலாம் என்றார். நாம் பருகுகின்ற இன்ப ஆனந்தம் எது? எம்பெருமானுடைய திருவடியே எனக்கூறுகின்றார். பேரானந்தம் அருளுகின்ற அந்த அருளாளனுடைய திருவடியை வாழ்த்தி வணங்கு என்று தம் சிந்தைக்கும் மகிழ்வுடன் உணர்த்துகின்றார். இவ்வாறு இவர் உணர்த்திய கருத்தையும், முன்பு பொய்கையாழ்வார் உணர்த்திய கருத்தையும் ஒப்புநோக்கிப் பார்த்தல் சால்பாகும்.

திருமாலின் திருவடியில் பூக்கொண்டும் நீர்கொண்டும் பூசித்தால் மனத்தில் படிந்த மாசு நீங்கும். பொல்லாத வல்வினைகள் அம்மனத்தை அண்டாமல் போகும். வாழ்வியலுக்கும் அருளியலுக்கும் வேண்டிய செல்வம் கிட்டும் என்று பொய்கையாழ்வார் பாடிக் காட்டினார்.

சிவபெருமானின் திருவடியை வாழ்த்தி வணங்கினால் சிந்தை திருந்தும்; பேதமை நீங்கும்; தவம் பெருகும்; அவனை

அந்த மனம் அணுகிப் பேரானந்தத்தைப் பருகும் என்று நாவுக்கரசர் பாடித் தெரிவித்தார். இப்படி இருவரும் ஒத்துப்பாடி எம்பெருமானுடைய வித்தகத் திருவடியை வாழ்த்தி வணங்கிப் பெரும்பயன் துய்த்தார்கள்; துய்த்தவர்கள் நமக்கும் வழி காட்டினார்கள்.

உலகியலில் வாழ்வோரைப்பற்றியுள்ள துன்பங்கள் எண்ணிலடங்கா; அப்படிப்பற்றிய துன்பங்களை விலக்க பொய்கையாழ்வார் நல்வழி காட்டுகின்றார். ஆம் நம்மைப் பற்றி இருக்கின்ற, நம்மை விட்டுப் போகாமல் நம்முடனே இருக்கின்ற பழவினைகளும், அந்தப் பழவினைகளின் பயனாக வரும் மனத்துன்பங்களும் உடம்போடு சேர்ந்து நின்று வருத்துகின்ற நோய்களும், இன்றும் நம்மையறியாமலேயேவந்து சேர்ந்துள்ள பாவங்களும், ஆன்மாவுக்கும் தெரியாமல்வந்து மூடிக்கிடக்கின்ற துயர்களும் நம்மைவிட்டு விலகவேண்டுமானால் முன்பொரு காலத்தில் மெல்லிய இடையையுடைய சீதா பிராட்டியாரை, இலங்கையில் சிறை வைத்த இராவணின் மிடுக்குக் குலையும்படி வீழ்த்தி நின்ற, அழகிய கையாலேயே வில்லை ஏந்தி நின்ற இராமபிரானைச் சரணாகதி அடைய வேண்டுமென்று கூறவந்த பொய்கையாழ்வார்,

"அடைந்த அருவினையோ டல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீள்ா டொழியவேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள்
தன்விலங்கை வைத்தான் சரண்"

என்று பாடுகின்றார். இதில் இராமபிரானைச் சரணாகதி யடைந்தால் நம்மையறியாமல் பற்றியுள்ள துன்பங்களும் தொலைந்துபோகும் என்று கூறுகின்றார். இவரைப் போன்றே நாவுக்கரசரும் சிவபெருமானை நினைந்து சரண்புகுந்தால் உய்யலாம் என்கின்றார். உலகியல் தொடர்பால் அழுந்திக் கிடப்பவர்கள் மனைவியின் மீது அளப்பரிய பற்றுக்கொண்டு இருப்பவர்கள் தாய் தந்தையர்கள் மீது வைத்த ஆசையால் அழுந்திக் கிடப்பவர்கள் மக்கள் மீதுகொண்ட விருப்பத்தாலே பிணைந்திருப்பவர்கள் சுற்றத்தார்கள் சூழ அவர்களுடன்

இணங்கி நிற்பவர்கள் யாவரும் சொல்லொண்ணாத் துன்பத்தால் இன்னலுறுவார்கள் என்று உணர்த்துகின்றார்.

இத்தகைய பற்றினால் செய்கின்ற செயல்களினால் ஏற்படுகின்ற துன்பத்தில் அவர்கள் விழுந்து அழுந்திவிடுகிறார்கள். அவர்கள் மீண்டும் விடுப்பட்டு வெளியேறவியலாமல் அங்கேயே அழுந்தியுள்ளார்கள் என்று அவர் தெளிவாகக் கூறுகின்றார். இத்துன்ப வேதனையோ ஏற்பட்டுவிட்டால் மீளவே முடியாது எனத்திட்பமாகப்பேசுகின்றார். இந்த வேதனையோ நாம் மறையும் நாள்வரையும் தொடரும் தன்மையுடையது என்று தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். இந்த வேதனையிலேயே கிடக்காதீர் என்றுணர்த்த வந்தவர், இந்தத் துன்பத்திலிருந்தே மக்கள் விடுபடவேண்டுமானால் அலைகளால் பேரொலி எழுப்புகின்ற கடல் சூழ்ந்த நாகை நல்லூரில் புகழ் மேவிய காரோணத்தில் கோயில்கொண்டுள்ள சிவபெருமானை நினையுங்கள் என்றார். அப்படி அவனை நினைக்கின்ற நெஞ்சினைப் பெற்றவர்களே வாழவியலும் என்று சொல்ல வந்தவர்,

"மனைவிதாய் தந்தை மக்கள்
மற்றுள சுற்றம் என்னும்
வினையுளே விழுந்து அழுந்தி
வேதனைக்கு இடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை
மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீர் ஆகில்
உய்யலாம் நெஞ்சி னீரே!"

என்று பாடுவார். இவ்வாறு பாடும் நாவுக்கரசர் பொய்கையாழ்வார் உணர்த்தியதைப்போலவே இறைவனிடம் சரணாகதியடைய வேண்டுகிறார். உலகியல் பற்றில் விடுபடாமல் தொடர்ந்து துன்பம் அனுபவிக்கின்ற நெஞ்சங்களுக்கு, வழிகாட்டி இனி என்றும் துன்பம் அனுபவிக்காமலிருக்கவே அவனைக் கோடித்துச் சரணடைந்து பேரின்பப் பெற்றியினை எய்த இவர்கள் இருவரும் அவனை நயந்து பாடி அருளினார்கள்.

அடுத்துப் பொய்கைப் பிரான் பரம்பொருளையன்றிப் பிறிதொரு பொருளை எண்ணிப் போற்றமாட்டேன் என்று விளம்புகின்றார். அவனைத் தவிர மற்ற பொருள்கள் அற்பப் பொருள்கள்; அழியும் பொருள்கள் என்றே, நிலைத்த இன்பங்களை அவனைத் தவிர மற்ற எவையும் தருதல் இல்லை என உணர்ந்தே இவ்வாறு கூறுகின்றார்.

மனத்தினால் தேடும்போது உன் திருவடிகளையே தேடுவேன்; மனமோ விழைந்து ஏதேனும் சொல்லநினைத்தால் உனது திருப்புகழையே பாடும்படிச் செய்து மகிழ்வேன்; ஏதேனும் ஒன்றைக் காதலால் தலையில் அணிந்துகொள்ள நினைத்தால் அழகிய திருச்சக்கரத்தைக் கையில் ஏந்திக்கொண்டிருக்கும் உன் திருவடிகளையே அணிகலனாகவே அணிய விழைகிறேன். இத்தகைய உணர்வில் தலைப்படும் எனக்கு எது எப்படியிருந்தாலும் கவலையில்லை. ஆதலால் உன் திருவடிகளே என் தலைமீது அணியாக இருக்கும்போது எனக்குப் பிணியேது? பயமேது? என்பால் எவர்தான் பிணக்குக்கொண்டு அழிக்கவியலும்?

விண், மண், நீர், நெருப்பு, காற்று ஆகியவையோ மாற்றம் அடைந்து ஆற்றலைக் காட்டி அழிக்க வந்தாலும் எனக்குக் கவலையில்லை. எனவே, என்றுமே எம்பெருமான் பற்றில் தோய்ந்தவர்க்குப் பயமேதுமில்லை என்றே உணர்ந்தவந்த பொய்கையாழ்வார் மேலே கூறிய கருத்துகளைக்கொண்ட பாடலை ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார். பரம்பொருளையே பற்றிக்கொண்டதால் ஏற்படும் துணிவுடைமையால் மனமகிழ்ச்சிகொண்டு,

"நாடினும் நின்னடியே நாடுவன் நாள்தோறும்
பாடினும் நின்புகழே பாடுவன்—சூடினும்
பொன்னாழி ஏந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகில் என்ன எனக்கு!"

என்று பாடுகின்றார். இப்பாடலின் ஈற்றடியில் எனக்கு எந்தவித இன்னல் ஏற்பட்டாலும் கவலைப்படமாட்டேன் என்கிறார். காரணம், பொன்னாழியை ஏந்தி நிற்கும் அந்தப்

பொன்னரங்கனின் இன்பப் பொன்னடியை என் தலை மேலே தாங்கி நிற்கின்றேன். ஆதலால் பயமில்லை என்கின்றார். இதனால் உலகத்தில் உழலும் மக்கள் கவலையின்றி வாழ விழும்பிய நிலையை எய்தி நிற்க, அருளாளனின் திருவடியைப் போற்றுமாறு உணர்த்துகின்றார். இவரைப்போன்று நாவுக்கரசரும் தேவுபற்றி ஆவலுறப் பேசுகின்றார். பொய்கையாழ்வார், "என்னாகில் என்ன எனக்கு" என்று கூறியதில் உள்ளுறையாக உரைத்த செய்தியினை நாவுக்கரசர் வெளிப்படையாகத் தெரியப் பாடுகின்றார். அவனை நினைந்தே பற்றி விட்டால் எந்தத் துன்பமில்லை என்பதை, வானம் ஆடினால் தான் என்ன! பூமி நடுங்கினால்தான் என்ன! பெரிய மலை நிலைகுலைந்து ஆட்டங் கண்டால்தான் என்ன! குளிர்ச்சியினையுடைய கடலும் பொங்கி இடர்ப்பாட்டை ஏற்படுத்தினால்தான் என்ன! விண்மீன்கள் உதிர்ந்தால்தான் என்ன சூரிய சந்திரர்கள் கீழே விழுந்தால்தான் என்ன! கவலையேயில்லை என்கிறார். கடலில் தோன்றிய நஞ்சினைக் குடித்தும் எந்தவித இடர்ப்பாடுமின்றி இருக்கும் எம்பெருமானுக்கே அடிமையாயிருக்கும் உத்தமர்களுக்குக் குறைவு ஏற்படுமா? எத்துன்பமும் அவர்களைப் பற்றாது; அவர்கள் எற்றைக்குமே நற்றிறத்தோடு விளங்குவார்கள் என்பதை,

"வானம் துளங்கில் என்! மண் கம்பம்
　　ஆகில் என்! மால் வரையும்
தானம் துளங்கித் தலைதடு
　　மாறில் என்! தண்கடலும்
மீனம் படில் என்! விரிசுடர்
　　வீழில் என்! வேலை நஞ்சுண்டு
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு
　　ஆட்பட்ட உத்தமர்க்கே!'

என்று பாடுகின்றார். "இதில் அவனிருக்க பயமேன்" என்ற விவரத்தை மிகத்தெளிவாகக் கூறக்காணலாம். ஒருவன் தனக்கு வாய்ப்பும் வசதியும் பக்கத் துணையும் இருப்பதாகக் கருதியே

ஏதேதோ செய்ய நினைக்கின்றான். இவன் செல்வாக்கால் பிறரையழிக்க நினைக்கின்றான். அப்படி நினைக்கும் இவன் தன் அழிவையும் தமக்குத் துணை நிற்பவர்களின் அழிவையும் எண்ணுவதேயில்லை. அரசன் அன்று கொன்றால் இறைவன் நின்று கொல்வான் என்பதையும் உணர்வதில்லை. ஆதலால் இத்தகையவர்களோ தவறுகள் செய்து பின்னர் சொல்ல வொண்ணாக் கவலையில் மூழ்கி மாய்கின்றார்கள்.

எத்தகைய துயர் விளைத்தாலும் அவர்களின் துயரத்தால் அழியாமல் நிலைத்து நிற்க வகை செய்வது எம்பெருமான் திருவடியே என்று பூமியில் வாழ்வோர் புரிந்து செயல்படவே அவன் திருவடியே இம்மைக்கும் மறுமைக்கும் வழி செய்வது என்றும் எல்லா நன்மைகளையும் அளிக்கவல்லது என்றும் பொய்கையாழ்வாரும் நாவுக்கரசரும் பாடி எம்பெருமானின் திருவடியின் பெருமையை எடுத்துக்காட்டினார்கள். கோட்பாடின்றி ஆட்டம் போடும் அகந்தை மனிதர்களைத் தடுத்து நிறுத்திடவும் வேட்கையுடன் அவன் திருவடிமேல் நாட்டங் கொண்டிடவும் வழிகாட்டியுள்ளார்கள். எந்தவிதக் குறையுமின்றி நிறைவுடன் நிற்கும் இறைவனிடம் ஆட்பட்டு நின்றால் சிறந்த உத்தமர்களாக ஆகலாம். அவர்கட்குப் பேரின்பம் அவனால் கிட்டுமென்று நாவுக்கரசர் நவில்கின்றார்.

பொன்னரங்கன் பொன்னடியைத் தன்தலை மேல் சூடுவோருக்குப் பிரளயமே நிகழ்ந்தாலும் துன்பமில்லை என்று "என்னாகில் என்ன எனக்கு" என்று விளம்பித்தம் தெளிவினைக் கூறிய பொய்கையாழ்வார். அழகனின் திருவடியைக் காட்டிப்பெருமையை எய்த உணர்த்தினார். இதுகாறும் கூறியவற்றால் பிறவற்றிற்காக அலையாமல் இறைவன் திருவடியில் சரணடைந்தால் உய்யலாம் என்ற முடிவான செய்தியின் விவரத்தை அறிகிறோம். எனவே நாம் என்றும் நினைந்து அவனைப் போற்றி வாழ்தலே வாழ்வாகும் என்ற கட்டுப்பாட்டில் நடைபோடுவதே சால்பாகும்.

# திருமழிசைப்பிரானும் நாவுக்கரசரும்

சிறந்த அருள் உணர்வைப் பெற்றுப் பிறர் போற்ற வாழ்ந்தவர் திருமழிசை ஆழ்வார். இவர் திருமழிசை என்னும் பதியில் உதித்தவராதலால், திருமழிசை யாழ்வார் என அழைக்கப் பெற்றார். திருவரங்கன் திருவேங்கடவன் என்று ஊர்பெயரால் எம்பெருமானை அழைத்தல்போல, இவரும் ஊர் பெயராலே அழைக்கப் பெற்றார் என அறிகின்றோம்.

அருளாளன் மீது நான்முகன் திருவந்தாதி என்னும் பெயரில் தொண்ணூற்றாறு பாசுரங்களும், திருச்சந்தவிருத்தம் என்னும் பெயரால் நூற்றிருபது பாசுரங்களும் பாடினார். முன்னது இயற்பாத் தொகுதியிலும் பின்னது இசைப்பாத் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன. இசைப்பாத் தொகுதியில் இடம் பெற்ற திருச்சந்த விருத்தம் மிகுந்த இனிய ஓசையுடன் திகழ்வது, ஒவ்வொரு பாசுரமும் பிறர் மனத்தைக் கவ்விப் பிடிக்கும் வகையில் இசை நயத்தால் வயப்படுத்தும் பெற்றி யுடையது. இவர் பாடிய இந்த இனிய பாசுரங்களில் ஒன்றான எழுபத்து நான்காம் பாசுரத்தில் சிறிய வடிவமெடு த்த, வாமன நிலையிலிருந்து பெரிய வடிவமாக ஓங்கி, உலகளந்த நிலையைப் பெற்ற பெருமாயனின் திருவடிகளை அருமையாகப் பாடுவார். பாடிய அவர் உள்ளம் உவக்கின்றார்.

உலகளந்த பெருமானுடைய திருவடிகளே நல்வழி காட்டுவன என்றார். சிறப்புடன் வாழ அவை நன்னெறிப் படுத்துவன என்றார். இவற்றையறிந்து தெளிந்தவர்கள் தம் தலையார வணங்குதல் சால்பு என்கின்றார். வணங்குவதால்

மிகச்சிறந்ததாகிய ஞானமும் பக்தியும் செல்வமும், ஏற்படும் என்கின்றார்.

பரந்து, கிளர்ந்து எழுகின்ற தெளிந்த அலைகளையுடைய திருபாற்கடலில் எப்போதும் இருந்த இடத்தில் இருந்து கொண்டே கேட்பவர்கட்கு நலஞ்செய்கின்ற எம்பெருமானை வாழ்த்தினால் பாடி இசைத்தால் நம்மை வாட்டி வதைக்கும் கொடிய வினைகள் வேரோடு பறிக்கப்பட்டு, சிறிதும் தொடர் பில்லாமல் அறுந்து வீழும் என்கின்றார். ஆம் அவனை எண்ணிப் பண்ணிசைத்தால் பொல்லாத தொல்லைகள் பரிதியைக் கண்ட பனி மாறுவது போல இல்லாமல் போகும். நலந்தரும் அவனையோ நயந்தால் கலியெனும் துன்பம் நலிந்து நம்மை விட்டு விலகிப் போகுமென்று பேசும் திருமழிசைப் பிரான்.

"அறிந்தறிந்து வாமனன் அடியிணை வணங்கினால்
செறிந்தெழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடும்;
மறிந்தெழுந்த தெண்டிரையுள் மன்னு மாலை வாழ்த்தினால்
பறிந்தெழுந்து தீவினைகள் பற்றறுதல் பான்மையே!

என்று பாடிக் காட்டியுள்ளார். இதில் எம்பெருமானுடைய திருவடிகளை வணங்குதலும், அவனது திருப்புகழினை வாயார வாழ்த்துதலும் இசைத்தலும் பெரும் பயன் ஆகும் என்கின்றார். இப்படி ஒப்பற்றவனாகவுள்ள அப்பனைச் செப்பியே துதித்தால் நம் பாவங்கள் தாவியோடும்; விரைந்து மறையும் என்கின்றார்.

பரம்பொருள், விரும்பும் அடியார்களைத் தானே தேடி உதவி செய்பவனாவான். அவன் அடியாரை ஆட்கொள்ளு மிடத்தில் வேற்றுமை பாராதவன்; எல்லோரையும் நல்லோ ராகவே, சமமாகவே நேசிப்பவன். திருபாற்கடலில் அறிதுயில் கொள்ளும் பெருமானின் புகழை வாயாலே சொன்னால் போதும் எல்லா நோயும் பற்றிய பொல்லாத வினையும் பொசுங்கிப் போகும் என்று பகர்கின்றார்,

''மாலவனாகிய அவனை வாழ்த்தினால் பறிந்து எழுந்து தீவினைகள் பற்று அறுதல் பான்மையே''என்று திருமழிசைப் பிரான் உறுதியாகச் சாதிப்பார். நாவுக்கரசரும் ஆடிப்பாடி அண்ணாமலையைக் கைதொழுதால் ஓடிப்போம் நம்பால் உள்ள வினைகளே என்று கூறுவார்.

பரம்பொருளின் அருமைத் திருவடிகள் அழகிய திருவடிகளாகும். விழைந்து தேடிச் சென்று நீங்கள் அந்த அழகுத் திருவடிகளை ஏத்துங்கள் என்கின்றார். நாம் அவனைத் தேடிச் சென்றால் அவனோ நம்மை நாடி வந்தவர்களே என்று நயந்து ஏற்றுக் கொள்வான். இத்தகைய அத்தனை ஆடியும் பாடியும் கைத்தொழுது போற்றுங்கள் என்கின்றார். அவன் யார் நம் மனத்திற்கு உவப்பூட்டும் அண்ணாமலை என்னும் பெயருடைய ஐயன்; அவனே நம்மை உய்விக்கும் மெய்யன்; ஆம் அந்த மெய்யனைக் கை தொழுதால் பொய் வினைகளும் பொல்லாத் துயர்களும் இல்லாமல் நம்மை விட்டு இன்றே ஓடும். ஆம் ஆடும் ஐயனையே நாடித் துதித்தாலே ஓடும் நம் வினைகளே என நாவுக்கரசர் இயம்புகின்றார். வாட்டிடும் துயரை ஓட்டிடும் அவனே நாட்டமுடன் வந்து போற்றும் நல்லாரையே ஆட்படுத்திக் கொள்வான் என்று கூறும் அவர்.

''தேடிச் சென்றுதி ருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமது உள்ள வினைகளே''

என்று பாடுவார். குட்டி தன் தாயைத் தேடிச் சென்று பற்றிக் கொண்டாலே தாய் குரங்கு போகும் இடத்திற்குக்கெல்லாம் குட்டியையெடுத்துச்செல்லும். அதைப்போலவேஎம்பெருமானை அடியார்கள் தேடிச் சென்று அவனின் அழகிய திருவடியை ஏத்தினால் நமக்கவனோ பேரருள் நல்குவான், அவன் திருவருளால் நம்மைப் பற்றியுள்ள முன்வினைகள் முற்றும் அற்றுப் போவதோடு இனிவரும் இடர்ப்பாடும் தடைப்பட்டுத் தொடராமல் போகும் இதைத் தம் பாடலில் ஈற்றடியில்

"ஒடிப்போம் நமது உள்ள வினைகளே" என்று குறித்துக் காட்டுவார்.

இந்த இரண்டு பெருமக்களும் இறைவனை அடைய நமக்கு வழியைக் கூறியுள்ளார்கள். கருணையின் வடிவமாக உள்ள அருளாளனை விரும்பிப் போற்றினால் நம்மைப் பற்றிய பிணிகளான வினைகள் அற்றுப் போவதுடன் அவன் திருவடித் தாமரையை அடைகின்ற வழியும் கிட்டும் என்று திட்பமாகப் பேசுகின்றார்கள்.

எம்பெருமான், தீயவற்றை எல்லாம் மாய்க்கவும் நன்மைகளையெல்லாம் வாழ்விக்கவும் அரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றான். அந்த விந்தைக்குரியவன் பெருஞ்சுடருடைய சக்கரத்தையும் மிகு ஒலி எழுப்புகின்ற சங்கையும், வலிமை வாய்ந்த கதையையும் மின்னும் வாளையும் வல்லமை வாய்ந்த வில்லையும் கொண்டு அழகிய திருக்கைகளுடன் விளங்குகின்றான்; அவனை நோக்கி ஐயனே! செந்தாமரை மலரில் தோன்றிய அன்னையை உன்திருமார்பில் எழிலாக வைத்துள்ளாய். ஆம் அந்தச் சீர்மையுற்ற அன்னையை நீ ஏற்றுள்ளதால் பெருமையுற்றுப் பிறங்குகின்றாய். நீயே அனைத்தையும் காக்கும் தலைவனாவாய்! சிலேத்துமம் முதலானவற்றிற்கு இருப்பிடமாகிய உடம்போ பெரும் நோய்களால் தாக்குண்டு அழிவதற்கு உரியதாகும். இவ்வாறு பல்வேறான நோய்களால் வீழுகின்ற உடம்பு தோன்றாமலிருக்கவும் பிறவிதன்னையே அறுக்கவும் உன்னை அறிந்து பற்றியே வாழ்வதற்குரிய வழியினை எனக்கு அருள வேண்டுமென்று திருமழிசைப் பிரான் வேண்டுகின்றார். பிறவியினை அறுத்துப் பிறவாப் பேற்றினை அருள்பவன் ஆராவமுதன்; ஆதலால், அவன் முன்னிலையில்

"வெய்ய ஆழிசங்கு தண்டு வில்லும்வாளும் ஏந்துசீர்க்
கையசெய்ய போதில் மாதுசேரும்மார்ப நாதனே
ஐயிலாய ஆக்கைநோய் அறுத்து வந்து நின்னடைந்து!
உய்வதோர் உபாயம் நீ எனக்கு நல்லக வேண்டுமே"

என்று பாடுவார். இதில் துன்பப்படுவோரின் தொல்லையினையறுக்கவும் அடியாரின் கொடியத் துன்பங்களைப் பொடியாக்கவும், அவர்களை வருத்தும் அற்பஆசைகளை அழிக்கவும் அருளாளன் ஐந்து ஆயுதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளான் என்றும், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு அழியும் உடம்பை மீண்டும் பிறவிஎடுக்காதவாறும் துயரத்தால் வருத்தமுறாதவாறும் இருப்பதற்கு அவன் அருளே தேவையென்றும் கூறிய அவர் எம்பெருமானிடம் உன்னை அடைந்தேன் ஆதலால், நீயோ வாழ்வதற்குரிய அருளியல் வாழ்வினை அடியேனுக்கு அருள வேண்டும் என உருகிக் கோருகின்றார் இவர் இதில் "ஐயிலாய ஆக்கை நோய் அறுத்து வந்து. நின் அடைந்து" என்று திருமாலிடம் கூறுவதைப்போன்று

நாவுக்கரசரும் "புலன்கள் ஐந்தும் வரைகிலாப் பிறவி மாய" என்று கொண்டீச் சுரத்திலுள்ள சிவபெருமானிடம் கூறுகின்றார். அளவிட்டுக் கூறவியலாதவாறு துன்பங்கள் ஏற்பட்டு வருத்தி வருகின்றன. அந்தப் பொல்லாத கொடுமையை நீக்கமுடியாமல் இருக்கின்றேன். இந்தப் பிறவி மாய்ந்து ஒடுங்குகின்ற இடம் எது? என்று தெரியாமல் இடர்ப் படுகின்றேன்; அஃது எங்கிருந்து தோன்றுகின்றது என்ற வழிதெரியாமல் திண்டாடுகின்றேன். இவ்வாறு இன்னலுறும் யான் எம் பெருமானாகிய உன்னைப் பற்றினாலே பிறவித் துயர் மாயும். புலன்களின் கொடுமையும் இடர்ப்பட்டொழியும் என்றே எண்ணிப் பூசிக்கின்றேன். உன்னிடையில் நாகம் படமெடுத்து ஆடுகின்றது; அதனுடைய தலைவன் நீ! எனவே உன்னைச் சரணடைந்த என்னைப் பார்த்தே எதற்கும் நீ அஞ்சாதே என்று சொல்ல மாட்டாயா?

தண்ணீரோ தடாகமாகத் தேங்கி அலைகள் உலாவருகின்ற வயல்கள் சூழ்ந்தே வேலியாக அமைந்துள்ள திருக்கொண்டீச் சரம் என்னும் எழிலனைய நல்லூரில் கோயில் கொண்டிலங்கும் பெருமானே எனக்கு ஆதரவு நல்குவாயாக என்று

"வரைகிலேன் புலன்கள் ஐந்தும்
வரைகிலாப் பிறவி மாயப்
புரையிலே அடங்கி நின்று
புறப்படும் வழியும் காணேன்
அரையிலே மிளிரும் நாகத்து
அண்ணலே அஞ்சல் என்னாய்
திரை யுலாம் பழன வேலித்
திரைக் கொண்டீச் சரத்து ளானே!"

என்றுபாடுவார். இதில் புலன்கள் செய்யும் துன்பத்தின் நிலையை அளவிட்டுக் கூறவியலாத நிலையில் உள்ளேன் என்பதை "வரைகிலேன்" என்றார். எடுக்கின்ற பிறவியோ அளவிட்டுக்கூறவியலாத அளவில் எடுத்துக்கொண்டே இருக்க வேண்டியுள்ளதை "வரைகிலா" என்று கூறுகின்றார். கொடுமை செய்யும் புலன்களும் துன்பத்தைத் தருகின்ற பிறவி களும் தோன்றாமல் இருப்பதற்கு மாய" என்னும் சொல்லால் நாவுக்கரசர் நவில்கின்றார்.

இந்த இருதுயர்களும் இல்லாமல் நம்மை அண்டாமல் போகவே அண்ட சராசரத்தை இயக்கும் அண்ணலிடம் முறை யீடு செய்யுங்கள் என்று நமக்கு உணர்த்துகின்றார். திருமழிசைப்பிரான் ஐந்து புலன்களால் உண்டாகும் துன்பத்தை அனுபவிக்காமலிருப்பதற்கும் நடமாடும் உடம்பு கொடுமையினால் வருந்தாமலிருப்பதற்கும் பிறவித்துயரை அறுத்திட வேண்டும் என்று மாய பிரானிடம் சரணடை கின்றார். இவரைப் போன்று புலன்கள் ஐந்தும் பிறவியும் மாய்ந்துபடவே சிவபிரானிடம் முறையீடு செய்கின்றார் நாவுக்கரசர்.

அனைத்தையும் காக்கும் ஐயனாகிய எம்பெருமானை நினைத்துப் போற்றினால் வாழ இயலும் எனத் திருமழிசைப் பிரான் பேசுவார். மனிதன் இறைவனால் படைக்கப் பெற்றான். அவன் தன் மனத்தால் உணர்ந்து, படைக்கப் பட்ட கடவுளை எண்ணி நன்றியுடன் நிதம் போற்றி நலம்

பாடுதல் மாட்சி என்றார். அவனால் பெற்றுள்ள உடம்பால் விருப்பம் கொண்டு ஏத்துதல் உயர்வு என்றவர் அவனைவாய் வாழ்த்த வேண்டும்; கண் அவன் திருவடியைக் கண்டு துதிக்க வேண்டும்; செவி அவன் பெருமையினைக் கேட்க வேண்டும்;

தலை அவன் திருவடியில் தாழ்ந்து வணங்க வேண்டும்; குளிர்ந்த மலர்களைக் கொண்டு அவன் எழிலார் திருவடிகளில் தூவியே இருகைகள் கூப்பித் துதிக்க வேண்டும்; மணம் பொருந்திய துழாய் மாலையை மார்பகத்தே அணிந்து, அழகு வாய்ந்த கிரீடத்தைப் பொலிந்திலங்கத் தன் தலையில் சூடி இருக்கும் எம்பெருமானைப் பணிந்து போற்ற வேண்டுமென்றார்,

வாழ்த்துக வாய் காண்கஉண் கேட்க செவிமகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால்—சூழ்த்த
துழாய்மன்னு நீள்முடிஎன் தொல்லை மால் தன்னை
வாழ வண்கை கூப்பி மதித்து!

என்று திருமழிசையாழ்வார்பாடுவார். இவர்பாடியருளியதைப் போன்று நாவுக்கரசரும்வாய்வாழ்த்தவேண்டுமென்றும்நெஞ்சம் நினைக்க வேண்டுமென்றும், தலைதாழ்த்தி வணங்க வேண்டு மென்றும் கூறுகின்றார். இவ்வாறு இவைகளைச் செய்யத் தூண்டுபவனே எம்பெருமான்தான் என்று இயம்புவார். இத்தகையனை மணம் மிகுந்த மலர்கொண்டு தூவி வழிபாடு செய்யவேண்டுமென்கின்றார். காலத்தை வீணாக்காமல் அவனை வழிபட்டால் நலம் எய்தலாம் என்பதை,

''வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங் காலமே!''

எனப்பாடுவார்.

நம்மைப் படைத்தவனோ எம்பெருமான், அவன் தந்த உறுப்புகளால் அவனைப் பாடியும், அவன் திருவடித்

தாமரையை வணங்கியும் வருதல் வேண்டும். இல்லையெனில் அவ்வுறுப்புகள் பயனற்றனவாய்ப் போய்விடும். வேண்டாத பிறவற்றைப் போற்றுவதால் பயனில்லை. நிலைத்த எம்பெருமானை நினைந்து தலையார வணங்கிப் பயன் காண திருமழிசையாழ்வாரும் நாவுக்கரசரும் நவின்றார்கள். எனவே, அவர்கள் பாடியருளிய பாடல்களை நிதம்பாடி நிலைத்து வாழ நாம் வழி காண்பதே நலம். இவர்கள் தாம் பாடியதில் பெய்துள்ள கருத்துகளாலே ஒத்து இசைத்துள்ளார்கள். இக்கருத்துகளால் இறைவன் ஒருவனே எனத் தெரிவித்து வேற்றுமையின்றி அப்பரம்பொருளைப் போற்ற உணர்த்தினார்கள் என்பதை அறிய வேண்டுகின்றேன்.

## வேந்தனடி காண்பார் விழைந்து

*(நேரிசை வெண்பா)*

ஐந்து பொறிகள் அடங்க மனமொன்றிச்
செந்தமிழால் எம்பெருமான் சீர்பாடி—வந்திக்கும்
மாந்தர் பிறவி நீங்கி வானுலகில் இன்னமுதாம்
வேந்தனடி காண்பார் விழைந்து!

# பெரியாழ்வாரும் நாவுக்கரசரும்

கண்ணபெருமானின் எண்ணிறந்த திருவிளையாடல் களைப் பண்ணிசைத்துப் பாடியவர் விட்டுசித்தர். இவர் பரம்பொருளுக்கே பல்லாண்டு பாடி வாழ்த்துரைத்ததால் பெரியாழ்வார் எனப் புகழப்பட்டார். இறைவன் தன்னைக் குறித்தும் அவனின் செயலை விரித்தும் பாடுவதைக் கேட்கும் அப்பரம்பொருளே பாடும் பக்தருக்கோ அருள்புரிவான் என் பது திண்ணம் என்று செப்புகின்றார்.

இவ்வாறு இறைவனைத் தம் நிறைவான மனத்தால் பாடிய விட்டுசித்தர் இசைத்த பாசுரங்கள் நானூற்று எழுபத்து மூன்றாகும். இவர்தம் பாசுரங்கள் முதலாயிரத்தில் முதற் பிரபந்தமாக, பெரியாழ்வார் திருமொழியாகப் பெயரிட்டே அமைக்கப்பெற்றுள்ளன. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இவர் பாசுரங்களை இசைப்பாத் தொகுதியில் வைத்துப் பாடப்படுகின்றன.

இவர் தாயாகி நின்று கண்ணனைச் சேயாக அனுபவிக்கும் பாங்கு போற்றுதற்குரியது. அவர்தம் சேய்க்குத் திருப்பெயர் சூட்டி உள்ளம் உருகிப் பாடியே அழைக்கின்றார்.

அவனைப் பல பெயரிட்டு நாவினிக்க அழைத்து மகிழ் கின்றார். ஆவல் கொண்டு புகழும் தேவனாகிய அவனைப் பற்றி,

"செங்கண் நெடுமால் சிரீதரா
என்று அழைத்தக்கால்
நங்கைகாள் நாரணன்தம்
அன்னை நரகம்புகாள்"

என்று பாடுவார். மேற்குறித்த அவனின் பெயர்களைச் சொல்லி அழைத்தால் அவனுடைய அன்னை நரகம் புகமாட்டாள் என்று கூறியவர், மற்ற பெண்களும் கூறினால் பரமபதம் எய்தவியலும் என்று பேசுவார். ஆம், பேராயிரம் படைத்தவனின் பெயர்களில் ஒன்றைச் சொன்னாலே யோகமாம்; உயர்ந்த பதவியான வீட்டுலகில் மாட்சியுற்றிருக்க இயலும். இத்தகைய உத்தமனை ஆயிரம் தோள்களையுடையவனே என்றார். ஆம், எல்லாவிடங்களிலும் அவன் தோள்கள் பரவி இலங்கும். அவன் திருமுடியில் ஆயிரம் கிரீடங்கள் மின்னி எழிலுடன் விளங்குகின்றன. அவன் ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பணையின்மேல் பள்ளி கொண்டுள்ளான். அவன் ஆட்சியில் கட்டுப்பட்டு மாட்சியுடன் நிற்கும் மலைகளோ ஆயிரமாகும், மாறுபாடின்றி வளங்களை நல்கும் ஆறுகளும் சுனைகளும் பல்லாயிரமாகவே பெருகி உள்ளன. இவற்றின் நலத்தாலே எழிலுடன் விளங்கும் பொழில்களோ ஆயிரமாயிரமாகவே இருந்து மகிழ்வை வழங்குகின்றன. இத்தகைய பொழில்களில், சோலைகளில் சிறப்புற்றுத் தலைமை சான்றதாக விளங்குகின்ற சோலையே திருமாலிருஞ்சோலையாகும்.

இந்த இனிய சோலையிலே சிந்தை மகிழ்ந்து அவன் கோயில் கொண்டுள்ளான் என்கின்றாரவர். அவன் தோள்களையும் அவன் முடியில் தரித்துள்ள கிரீடங்களையும் பாம்பணைமேல் பள்ளிகொண்ட ஆற்றலினையும் போற்றுகின்றார். அவர் அவனைப்போற்றுவதோடு அவனால் உலகம் நலம் பெறவே தோன்றியுள்ள ஆறுகளையும் சுனைகளையும் மலைகளையும் இன்னபிறவற்றையும் ஆழ்வார் பெருமையாகவே விளம்புகின்றார். திருமாலிருஞ்சோலையில் இருந்து ஆட்சி புரியும் அருளாளனை —அந்த மாயபிரானை வாயார,

"ஆயிரம் தோள்பரப்பி முடியாயிரம் மின்னிலக
ஆயிரம் பைந்தலைய அனந்தசயனன் ஆளும்மலை
ஆயிரம் ஆறுகளும் சுனைகள்பல ஆயிரமும்
ஆயிரம் பூம்பொழிலும் உடைமாலிருஞ் சோலையதே"

எனப் பாடுவார். பேராயிரம் படைத்த கடவுளின் நிலையினை இந்தப் பாசுரத்தில் ஆயிரமாயிரம் பொருள் களைக் கொண்டே அவனைச் சிறப்பிக்கின்றார் மூன்றாம் அடியின் கடைசிச் சீரில் பல ஆயிரம் என்று சுனைகளைச் சுட்டுவார். திருமாலிருஞ்சோலையின் பெற்றியைக் காட்டுவதற்காகவே அழகுடைய சுனைகள் பல்லாயிரக் கணக்கிலிருந்து சிறப்புச் செய்கின்றன என்றே குறித்துள்ளார். நான்காம் அடியில் "ஆயிரம் பூம்பொழிலும் உடைய மாலிருஞ் சோலையதே" என்று குறித்தது அச்சோலை தன்னிடத்திலே ஆயிரம் பூங்காக்களைக்கொண்டே இன்னமுதனுக்கு இன்பம் சொரிகின்றது என்று விட்டுசித்தர் தம் பட்டறிவால் பாடுவார் இவர் உவப்பு மிகுதியால் உலகளந்தானைப்பற்றி,

"ஆயிரம் தோள்பரப்பி, முடிஆயிரம் மின்ன"

என்று இசைத்ததைப் போன்று நாவுக்கரசரும் ஆவல் மிகுதி யால் திருவாரூர் அப்பனைப்பற்றி "ஆயிரம் தோளுடை யானும் ஆயிரம் ஞாயிறு போலும். ஆயிரம நீள்முடியானும் என்று பாடுவார். எம்பெருமானுடைய சேவடி ஆயிரம் தாமரைக்குஒப்பாகுமென்கின்றார். அவனின்சேவடி ஒன்றல்ல, இரண்டல்ல ஆயிரம் என்று வாயினிக்கக் கூறுவார்.

பொன்னையொத்த ஆயிரம் மலைகளுக்கே அவனுடைய தோள்களான ஆயிரத்தை ஒப்பாகக் காட்டுவார். ஆயிரம் சூரியன்களுக்கு அவனுடைய நீண்ட கிரீடங்களான ஆயிரத்தை உவமையாகக் காட்டுவார். இத்தகைய உத்தமன் ஆயிரந் திருநாமங்களால் அழகுடன் விளங்குகின்றான்; அவன் ஆரூரில் சீருடன் திகழ்கின்றான் என இயம்பி, பரம்பொருளின் சிறப்பினை ஆயிரம் எண்ணிக்கையுடைய பொருள்களைக் கொண்டே விளக்கினார். இவ்வாறு இவர் கூறிய கருத்தினை விளக்கும் முகத்தான்,

"ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடியானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோள் உடையானும்

ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேர் உகந்தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே''

என்று பாடுவார். ஆயிரமாயிரமாக உயிர்களைப் படைத்தே அந்த உயிர்களுக்கு ஆயிரமாயிரமாகப் பொருள்களைப் படைத்தே அருளியவன் எம்பெருமான்; இத்தகையவனை ஆயிரம் என்கின்ற பொருள்களைக் கொண்டு உவமித்துப் பேசுவது சரியா? எனச் சிலர் கேட்கக்கூடும். ஆயிரம் என்னும் சொல்லைப் பயன்படுத்தியவர்களின் வழி நின்றே அவனைச் சிறப்பித்ததாகவே கருத வேண்டும். ஒரு பேரெண்ணைக் குறித்ததனாலே மேலும் அவ்வெண்ணுக்கும் பெரியதாகிய எண்ணையே குறிப்பிட்டதாகக் கருத வேண்டும். எம்பெரு மானின் பெருமையைப்பற்றிப் பல ஆயிரம் அல்ல பலகோடி நூறாயிரமாண்டு விளங்க வேண்டுமென்று பெரியாழ்வார் பாடுவார்.

இங்கே இவர்கள் ஆயிரம் என்று கூறியதைப் பலகோடி நூறாயிரம் எனக் கொள்ளுதல் சால்பு. இந்த வகையில் விட்டு சித்தரும் நாவுக்கரசரும் தம் நாவினிக்கவே தேவாதி தேவனை ஆவல் மிகக்கொண்டு பாடினார்கள்; அவனைப் பெருமை செய்து காட்டினார்கள்.

எளியவர்கள் சோர்வு அடையும்போதும், துன்பம் துயரம் எய்தும் போதும் அவற்றிலிருந்து நீங்குதற்காகவே வலிமை பெற்றவரின் துணையை நாடுவார்கள். இந்நிலையில் துன்புறும் அடியேன் அத்துன்பத்திலிருந்து விடுபடவே ஒப்பில்லாத உன்னை அடைய விழைகின்றேன்; என் துன்பம் மிகப் பெரியது; அதை மனிதர்களால் தீர்க்க இயலாது. ஆகவே, தீர்ப்பதற்குரியன் நீயொருவனே; ஆதலால் உன்னை அடைந்தேன் என்கின்றார்.

நீ யார்? யானைக்கே அருள்புரிந்தவன். ஆம், எந்தவுயிர் துடித்தாலும் அந்தவுயிரின் இன்னலைத்துடைப்பவன், உயிருக்கு

இடர் கொடுக்கின்றதையும் கொடுப்பவனையும் கெட்டொழி யவேசெய்பவன்நீ பெரிய துன்பங்கள் என்னை வாட்டி வதைக்கும் போதில் அந்த நேரத்தில் உன்னை என்னால் நினைக்கவே இயலாமல் போகும், ஆதலால் அந்த நேரத்தில் உன் திருநாமத்தைச் சொல்ல முடியாமல் போகுமே என்று, இன்றே என் நாவால் கூறவே விழைகின்றேன், கண் பஞ்சடையும் போதும், நா குழறும் போதும் உன் திருநாமத்தினை எங்ஙனம் என்னால் சொல்ல இயலும்? எனவே, எல்லா உறுப்புகளும் சரியாகச் செயல்படும்போதே, முன்னதாகவே இன்றே சொல்லி விடுகின்றேன்; அரவணையில் பள்ளிகொண்டு இலங்கும் திருவரங்கநாதனே, எனக்கு அருள் புரிவாயாக என

''துப்புடை யாரை அடைவது எல்லாம்
சோர்விடத்துத் துணையாவர் என்றே
ஒப்பிலேன் ஆகிலும்நின் அடைந்தேன்
ஆனைக்கு நீஅருள் செய்தமையால்
எய்ப்பென்னை வந்துநலியும் போது
அங்கேதும் நான்உன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்து அரவணைப்பள்ளி யானே''

என்று பாடியே விட்டுசித்தர் அறிவித்தல் காணலாம்.

மழை பெய்கின்ற காலத்தில் பெய்யும் நீரைத் தேக்கி வைப்பதன்மூலம் மழையில்லாத காலத்திலே பயிரை விளைவிக்க இயலும் என்பதைப் போன்று மனிதன் நோய்வாய்ப் பட்டு இறக்கும் தருவாயில் என்னுடைய வாயோ உன்னுடைய திருநாமத்தைச் சொல்ல இயலாத அளவில் குழறுமே ஆதலால், முன்னதாகத் தேக்கி வைத்த நீர் பின்னர் மழை இல்லாத காலத்தில் உதவுவது போன்று உறுப்புகளெல்லாம் நன்றாக இருக்கும்போது அவன் திருநாமத்தைச் சொல்லிப் பயனடைய மனித குலத்திற்கு விட்டுசித்தர் வழிகாட்டினார் என அறிதல் சிறப்பாகும்.

இவர் "அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்". என்று பாடியதைப் போன்று நாவுக்கரசரும் "அம்மை அடியேற்கு அருளுதி என்பது இங்கு யார் அறிவார்" என்றே பாடுவார். வேதனையைத் தருகின்ற எமனும் அவன் கூட்டத்தாரும் சேர்ந்து வேகமாக இழுத்தே சாகடிப்பதற்கு முன்பே இந்த உலகத்தில் வாழுகின்ற மக்கள் எம்பெருமானுடைய திருவடிகளைத் தம் நெஞ்சங்களில் பதித்துக்கொள்ள வேண்டும் என்கின்றார். இவ்வாறு கூறியவர், மக்களிடம் இப்போது அவன் திருவடியைப் போற்றாமல் விட்டால் பெருந் துன்பமே அனுபவிப்பீர்கள் என்கின்றார். அடுத்தப் பிறவியில் அவன் அருளைப் பெற நினைத்தால் பெற இயலுமா? அடுத்தப் பிறவியில் புரிந்து செயல்படுகின்ற மனிதப் பிறவியை எடுப்போமா? தெளிவற்ற வேறொரு பிறவியைக்கூட எடுக்கக்கூடும்! அப்பிவிறயால் ஒளிமயமாகவிளங்கும் அப்பனை நினைக்கவியலுமா? அடுத்து நாம் எந்தப் பிறவியை எடுக்கின்றோமோ யார் அறிவார்? என்று கேட்கின்றார்.

தெளிவுடைய இந்த மனிதப் பிறவியிலேயே அவனின் திருவடியை அடைதல் பெருமை தரும் என்று கூறினார். சிறப்பைத் தருபவனோ சிவபெருமான், அவன் சத்தி முற்றத் துறையில் வதிகின்றான், அந்தப் பற்றற்றானை உள்ளத்தால் பற்றிக்கொண்டு போற்றுவாயாக! அவன் திருவடியே பிறவிக் கடலிலிருந்து நம்மைக் கரை சேர்க்கும் கப்பலென அறிவாயாக! அந்த ஒப்பிலா அப்பனின் இனிய திருவடியை நனிபாடி உய்வாயாக என நாவுக்கரசர்,

"வெம்மை நமன் தமர்மிக்கு
விரவி விழுப்பதன்முன்
இம்மை உன்தாள் எனறன்நெஞ்சத்
தெழுதிவை ஈங்குஇகழில்
அம்மை அடியேற்கு அருளுதி
என்பதிங்கு ஆரறிவார்
செம்மை தருசத்தி முற்றத்
துறையும் சிவக்கொழுந்தே!'

எனப் பாட்டிசைப்பார். சென்ற நாள் உயிரறுக்கும் வாள் என்று கூறுவார் திருவள்ளுவர். நம் வாழ்நாளில் நாம் வீணாகக் கடத்திய நாள்கள் மீண்டும் நம்மிடம் வாராவே! மரத்தை வாளால் எவ்வளவு அறுக்கின்றோமோ அவ்வளவும் அறுபட்டதெல்லாம்மீண்டும் முன்புஇருந்ததைப்போன்றுஇருக் கவேஇயலாது? இதைப் போன்று அறுப்பட்டுப்போனதேநாம் வீணடித்த நாள்கள் என்பதை உணர்தல் வேண்டும். உணர்ந்து எம்பெருமானின் திருவடிகளையே நம்பிக்கையுடன் பக்தி செய்யவேண்டும்.

அவன் திருவடியை நெஞ்சத்தில் பதிக்கும் உயிர்தான் துன்பத்தால் கதிகலங்கி நிற்காது!

விட்டுசித்தர் எமன் வந்து கொண்டு போகும் போதும் நம்மை நோய் வந்து தாக்கிப் பாயில் கிடத்தும் போதும் தாயாகியே வந்து காக்கும் தயாபரனை நம் வாய் உரைக்காது நெஞ்சம் நினைக்காது. ஆதலால் இன்றே அறிவுத் தெளி வோடு வாழும் போதே, அவன் திருநாமத்தை ஓயாமல் உரைப்பீராக என உணர்த்துவார்.

நாவுக்கரசர் அருளாளன் திருவடியை அடுத்தப் பிறவியில் வழிபட்டுக் கொள்வோம் என்று இருந்துவிடாதீர் என்று கூறுவார். பின்னர் எடுக்கின்ற பிறவி எத்தகைய பிறவியோ யார் அறிவார்? யமன் வந்து கொண்டு போவதற்கு முன்பே அந்த யமனே அணுகாதவாறு சிவக்கொழுந்தாகிய எம்பெரு மானின் திருவடியைத் தொழுவாயாக! அவையே இம்மைக்கும் மறுமைக்கும் இன்ப வாழ்வையே அருளும் வல்லமையுடையன எனக் கூறிப் போற்றிடவே உணர்த்துகின்றார். இவ்வாறு இருவரும் ஒருமனத்துடன் மனிதகுலம் தனிச் சிறப்பெய்தவே பாடினார்கள். அவர்கள் காட்டிய "வழியே மாட்சியெனக் கருதி எம்பெருமானைப் பாடிச் செம்மை காண்போமாக!'

# பெரியாழ்வாரும் சேந்தனாரும்

எம்பெருமானுக்கு இன்பம் ஏற்பட வாழ்த்துப் பாடியவர் விட்டு சித்தர். பரம் பொருள் பாங்குற ஏற்றம் பெற்று விளங்க வேண்டுமென்பதுஅவருடைய விருப்பம். ஆதலால் காதல் கொண்டு, சாதனை நல்கும் அந்தப் பரம்பொருளுக்கு உவகை ஏற்பட வாழ்த்திசைத்தார் அவர். அனைத்துயிர்களை யும் படைத்து, நலஞ்செய்துவரும் ஆராவமுதனுக்கு, தீராக் காதலால், தீந்தமிழால் பாடி வாழ்த்துக் கூறுகின்றார் அவர்.

இத்தகைய சத்தியசீலனை ஒருவர் வாழ்த்துப் பாடினால் தான் அவன் நெடிதுவாழ்வானா? இல்லை. அவனோ என்றும் அழியாத நிலையாக, ஆதி அந்தமுமில்லாத அருளாளன். இந்த உலகத்தினைப் படைத்துக் காத்து, அழித்து மீண்டும் தோற்று வித்து வாழ்வளிப்பவன். எனவே, அவனுக்கு வாழ்த்துப் பாடுவதால் அது நம்மைப் பல்லாண்டு வாழ வழிசெய்வது; என்பதால் விட்டு சித்தர் அவனைப் போற்றி வாழ்த்திசைத், தார்.

இப்படி ஒப்பிலா அப்பனுக்கு வாழ்த்துப் பாடியதால். இவரை மற்ற ஆழ்வார்களிலிருந்து சிறப்பிக்கும் வகையில் பெரியாழ்வார் என்று அறிஞர் உலகம் அழைக்கின்றது இன்றளவும் அவரைப் பெரியாழ்வார் என்றே அழைத்து வருகின்றது.

எம்பெருமானுக்கு வாழ்த்துக் கூறிய பெரியாழ்வார், எம்பெருமானே! நீ மலையைப் போன்று வாழ்வாயாக

என்றோ, விரிந்த கடலைப் போன்று வாழ்வாயாக என்றோ, மிக உயர்ந்த வானத்தைப் போன்று வாழ்வாயாக என்றோ அவர் வாழத்தவில்லை! மாறாகப் பல்லாண்டு வாழ்வாயாக! பல்லாயிரத்தாண்டு வாழ்வாயாக! பலகோடி நூறாயிரமாண்டு வாழ்வாயாக என்று வாழ்த்துகின்றார். இப்படி எண்ணவே முடியாத ஆண்டுக்காலம் எம்பெருமான் வாழவேண்டுமென்ற பெரு விருப்பத்தை அவர் கொண்டிருந்ததால் அந்த மகிழ்ச்சியால் வாழ்த்திசைத்தார், இவ்வாறு அவன்பால் பெரும் விருப்புடைய அவர்,

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வித் திருகாப்பு!

என்று பாடுகின்றார். பலகோடி நூறாயிரம் ஆண்டு நீ வாழ்வாயாக! என்று அவனைப் பாடியவர், பண்டு மல்லரை வதைத்தொழித்த தோளின் ஆற்றலை ''மல்லாண்ட திண்தோள்'' என்று புகழ்வார். ஒளிமிக்க அழகுக் கோலத்தில் அவன் விளங்கியதைக் கண்டு 'மணிவண்ணா' என்று விளித்துப் புகழ்வார். அந்த அழகனின் சிவந்த அடியைப் பார்த்து வியப்பெய்தி அதைச் சேவடி என்றார். அந்தத் திருவடியும் எழில் மிகுந்து விளங்கியதால் பிறரைக் காக்கும் ஆற்றல் சான்றதெனப் போற்றுவார். அடியார்களைக் காக்கும் திருவடிக்குக் காப்பு என்றே கூறி மகிழ்வார். இப்படி அவனைப் பாதாதி கேசம் வரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

அடுத்து அவர் அந்த அருளாளனைப் பார்த்து ஐயனே! அடியவர்களான நாங்களும், யாவர்க்கும் தலைவனாயிருக்கும் நீயும் பிரிவின்றி எண்ணிறந்த நாள்கள் வாழ்தல் வேண்டும்; பிராட்டியாருடன் சார்ந்திலங்கும் உன் நித்திய வாழ்வு என்றும் நிலவ வேண்டும் என்றும் எழில் கோலம் காட்டிப் படைக்கலமாயிலங்கும், உன் திருக்கரங்களில் ஒளிரும், சக்கரமும் சங்கும் பெருமையுற்றுப் பிறங்க வேண்டும், என்று எம்பெருமானுக்கு

மங்களாசாஸனம் செய்கின்றார். வாயார வாழ்த்தி மனமாரப் போற்றி அவனுக்குப் பல்லாண்டு கூறியவர் அவனோடு தம்மையும் தம் அடியார்களையும் இணைத்துக் கொண்டு போற்றிப் புகழ்வார்.

ஆம் எம்பெருமானோடு சேர்ந்திருக்கும் பொருளுக்கு அழிவில்லையாதலால் தம்மையும் தம் அடியார்களையும் சேர்த்துக் கொண்டு தன்னலமில்லாப் பொதுநோக்கில் இன்பம் துய்க்கப் பாட்டிசைத்தார். அதை

''அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்ச
சன்னியாமும் பல்லாண்டே!

என்று பாடுகின்றார். இதில் அடியோ மோடும் என்னும் தொடரைப் பெய்தது தன்னலத்திற்காக அன்று, அவனோடு என்றும் சேர்ந்து அவனைப் பாடிப் புகழவே இவ்வாறு குறித்தார். எம்பெருமானைக் குறித்துப் புகழ்வோரையெல்லாம் தம் அடியார்கள் என்று கூறி அவர்களையும் இணைத்துக் கொண்டு பாடி இருத்தலை எடுத்துக் காட்டவே மேற்குறித்த தொடரையும் ஆண்டார்.

இரண்டாவது அடியில் வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கை எனக் குறித்தது. இதயத் தாமரையில் பிராட்டி இருந்து எம்பெருமானுக்கு உணர்த்தி, அடியார்களுக்கு அருளுமாறு தூண்டும் நிலையில் உள்ளதைக் குறித்ததாகும். நிலவுக்குக் குளிர்ச்சி இருப்பதனாலும் பரிதிக்கு ஒளியிருப்பதனாலும் பெருமையுண்டாதல் போலவே எம்பெருமானுக்குப் பெருமை சேர்ப்பவர் பிராட்டியே என்பதால், வடிவாய் என்கின்ற சொல்லால் சுட்டினார்,

எம்பெருமானின் ஏவலை ஏற்று ஆவலுடன் தொண் டாற்றும் சக்கரத்தையும் சங்கையும் பெருமையாக எடுத்துப் பாட வேண்டுமென்பதால் 'வடிவார் சோதி சுடராழி'என்றும், 'படைப்போர்புக்கு முழங்கும் பாஞ்ச சன்னியமென்றும்' அவற்றின் திறத்திற்கு அடைமொழி கொடுத்துப் புகழ்வார். பெரியாழ்வார் அருமையான ஒரு பொருளைத் தனிமையாகத் தாம் மட்டும் அனுபவிப்பது தன்னலம் ஆதலால் அந்த அருமைப் பொருளைப் பிறரும் அனுபவிக்கத் தந்து, அவர் களோடு சேர்ந்தனுபவிப்பதே பொதுமையும் பேரானந்தமும் ஆகும் என்பதால் பெரியாழ்வார் 'அடியோ மோடும்' என்ற தொடர் மொழியால் அடியார்களோடு, எம்பெருமானாகியப் பேரின்பப் பொருளை அனுபவிக்கின்ற நிலையினை வெளிப் படுத்தித் தம் உள்ளத்தின் பொதுமை நோக்கைத் தெளிவு படுத்தினார். இந்நாளில் எங்கும் பொதுவுடைமைத் தத்துவம் பேசப்படுகின்றது. என்றாலும், அவர்களுடைய பொது வுடைமைத் தத்துவத்தில் தன்னலம் இருத்தலைக் காணலாம். எவ்வாறு எனின் செய்கின்ற தொழிலுக்கேற்ப ஊதியம் பெறும் நிலையிலேயும் மற்ற வகையிலேயும் ஏற்றத்தாழ் வுள்ளதை நாம் அறியலாம்.

ஆனால் பெரியாழ்வார் 'அடியோமோடும்' என்ற தொடர் மொழியை ஆண்டதால், அடியார்களுடன் தாமும் ஒருவராக இருந்து எல்லாரும் ஒரே விதமான தன்மையில், இன்பம் அனுபவிக்கும் போக்கிலே ஒன்றாய்க் கலந்து பேரின்பத்தைத் துய்ப்பதால், ஒரு சிறந்த மாறுபாடில்லாத பொதுமையைக் குறித்தார். இப்படி எம்பெருமானுக்கு இவர் பல்லாண்டு பாடியதைப் போன்று சேந்தனார் என்பவரும் பல்லாண்டு பாடுகின்றார்.

இவர் சிவனடியாராக வாழ்ந்தவர். "போற்றி, பிறவி யறுக்கும் பித்தருக்குப் பல்லாண்டு பாடியவர் இவர். தில்லை என்னும் பதியைப் போற்றி அதை நிலை பெறுக! என்று கூறுகின்றார். இவ்வாறு உரைத்தவர் பக்தர்களைப் பற்றிக் கூறும் போது வளர்க! எனப் புகழ்ந்துரைக்கின்றார். ஆனால்

வஞ்ச நெஞ்சம் உடையவர்களைப் பற்றிச் சொல்லும்போது 'போயகல' என்றே அவ்வஞ்சகர்கள் இல்லாது ஒழிய வேண்டு மென்றார்

இச்செய்தியினைக் கூறியவர் பொன்னால் செய்யப்பட்ட மண்டபத்துள்ளே புகுந்து, புவனமெல்லாம் காக்கும், அன்னத்தை யொத்த நடையையுடை பெண்ணரசியான உமையாள் போற்றுகின்ற, பெரிய திருவடிகளை உடையவனாய்த் திருவருள் புரிந்து, பிறவியறுக்க நெறியினைத் தந்து நிற்கும் பித்தருக்குப் பல்லாண்டு கூறுதுமே என்றார். நல்ல பக்தர்கள் பெருகி நின்று அறம் வளர்த்திடவும் ஊரிலுள்ள சீரையே யழிக்கும் தீயவர்கள் யாவரும் இல்லாமல் அகன்றிடவும் எம் பெருமானுக்கு வாழ்த்திசைக்கின்றார். இதை

மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய்மண்ட பத்துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன்அடி
யோமுக்கு அருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்கும் நெறிதந்த பித்தர்க்குப்
பல்லாண்டு கூறுதுமே!

என்று சிவபெருமான் திருவடிக்குப் பல்லாண்டு கூறுகின்றார். முன்னர் பாடிய பெரியாழ்வார் "மனமுவந்தே" அடியார்களெல்லாம் உன்னோடு பிரிவின்றி ஒன்றி நிற்கவே அருள்புரிகின்ற உனக்கே ஆயிரம் பல்லாண்டு கூறுகின்றேன் என்றார்' இவரைப் போன்றே சேந்தனாரும் பக்தர்களின் பிறவியறுக்க நெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு கூறுகின்றேன் என்றார்.

உலகம் நலம் பெற எப்பெருமானைத் தூண்டிச் செய்ய வைப்பவள் அன்னை ஆதலால், பெரியாழ்வார் "வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டே எனப் பிராட்டியைச் சுட்டிக் காட்டிப் புகழ்ந்தார்.

சேந்தனமாரும், "புவனியெல்லாம் விளங்க அன்னநடை மடவாள் உமை" எனக் குறித்து அம்பிகைக்குப் பல்லாண்டு கூறுகின்றார். இங்கே எம்பெருமானோடு எம்பிராட்டியும் உடனிருந்தால்தான் அருளும் நிலை பெருமையாக நிகழும் ஆதலால் பெரியாழ்வாரும் சேந்தனாரும் பெண் தெய்வங் களையும் வைத்துப் போற்றிப் பாட்டிசைத்தனர் என அறிதல் சிறப்பு.

மேலும் பெரியாழ்வார், இறைவனைத் தன்னல வாழ்வுக் குப் பயன்படுத்த எண்ணுகின்ற போக்குடையவர்களுக்கு அடிகொடுக்கின்றார்; இல்லை அவர்கள் போக்கைச் சாடிப் பாடுகின்றார். சொத்து, சுகம் என்னும் வாழ்வுக்கு, உதவி செய்ய அதற்குரிய தெய்வங்களை வழிபடுதலும், அந்தச் சொத்து, சுகங்களை அபகரித்துக் கொண்ட அசுரர்களை வழி பட்டு மீண்டும் அவற்றைப் பெற்றிட வேண்டுதலும் இழிவா கும் என்று கூறுகின்றார். எம்பெருமானிடம், அவனுக்குரிய ஆயிரம் திருநாமங்களைக் கூறி அற்பமாகிய சொத்து, சுகவாழ் வைப்பெற எண்ணுதல் ஏற்புடையதாகாது என்றார்.

நம்மைப் பற்றியும் நம்முடைய நிலையைப் பற்றியும் எம்பெருமான் நன்கறிவான்; ஆதலால் பயன் கருதாது அவன் பெற்ற ஆயிரத் திருநாமங்களைப் போற்றி இசைக்க எம்மு டைய தொண்டர் குலத்தில் வந்து சேருங்கள் என்று வேண்டு கின்றார். இவ்வாறு கூறியவர்.

"அண்டக் குலத்துக் கதிபதி
யாகி, அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக்
களைந்த இருடி கேசன் தனக்குத்
தொண்டக் குலத்திலுள்ளீர் வந்து அடிதொழுது
ஆயிரம் நாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்த்துப் பல்லாண்டு
பல்லாயிரத் தாண்டென் மினே!

என்று பாடினார். இதில் அண்டக் குலத்துக்கதிபதி என்று கூறியதில் செல்வத்துக்கு அதிபதியான தெய்வத்தைக் குறித்தார்: இண்டக் குலத்தைச் சேர்ந்தவர்கள் அசுரர்களும் இராக்கதர்களும் ஆவார்கள், பண்டைக்குலம் என்றது பழைய செல்வத்தைப் பற்றிக் கூறியது. பழைய செல்வத்தை இழந்து வருந்துபவர்கள் புதிய செல்வத்தைக் காண அச்செல்வத்திற்கு அதிபதியான தெய்வத்தைப் போற்றுவர். இவ்வாறு போற்றிப் பெறும் செல்வத்தை அசுரர், இராக்கதர் முதலானோர் அபகரித்துப் போய்விடுவர்; அப்படி அபகரித்துச் சென்றவர்களை வேண்டிப் பெறுதல் இழிவன்றோ? எனவே அழியும் செல்வத்தினை உழைத்துச் சேர்த்தால் அது சேர்ப்பவரை அழிக்கும். ஆதலால் இதை உணர்ந்த ஒருவர் செல்வத்தை ஆட்கொல்லி என்று சொல்லியே அதிலிருந்து விலகி நின்றார். எனவே, அழியும் செல்வத்தைவிடுத்து அழியாத செல்வமான எம்பெருமானைப் பற்றி உய்ய பெரியாழ்வார் தெரிவிக்கின்றார்.

மேற்குறித்த பாசுரத்தில், புலன்களை அடக்கிய தொண்டர் குலத்திலே எம்பெருமான் சேர்ந்திருக்கின்றான். அந்த அடியார்கள் குழாத்திற்கு வந்து அவனின் அடிதொழுது அவனின் ஆயிரந்திரு நாமங்களைக் கூறிப் பல்லாண்டிசைத்துப் பயன் எய்த பெரியாழ்வார் வழி கூறுகின்றார் அற்பப் பொருளுக்கு ஆட்பட்டுத் தவறிழைக்கும் அசுரர், இராக்கதர்களாகிய "இண்டக் குலத்தை எடுத்துக்களைந்தான் இருடிகேசன்" எனக் குறித்ததில், எம்பெருமான், பொருளாசையால் இழிவுற்றவர்களை அழித்துத் தொண்டர் குலத்தில் மகிழ்ந்துள்ளான் என்ற விவரத்தை அழகாகப் படம் பிடித்தார் பெரியாழ்வார்; இவரின் வழியில் சேர்ந்தனார், வேதப் பொருளைச் சோதித்தறிந்த தூய மனத் தொண்டர்கள் இருக்குமிடத்தில் சிவபெருமான் இருக்கின்றான் என்கின்றார்.

சிவபெருமானைப் போற்றுகின்ற தொண்டர்கள் சில ஆண்டுகளில் சிதைந்துப் போகும் சிறியதேவர்களின் சிறுமையை உண்டாக்கும் நெறியிலே சேரமாட்டார்கள். ஆனால் அத்தொண்டர்கள் வில்லையேந்தியே வல்லமையைக் காட்டும்,

பொன்னிறத்தையுடைய திரண்ட மேரு மலையில் இலங்குகின்ற எருதை வாகனமாகக் கொண்ட பேரழகனான சிவபெருமானுக்குப் பல்லாண்டு பாடுவார்கள்.

அவன் அனைத்தையும் கடந்து நிற்கும் இயல்புடையவன். ஆம், எண்ணிறந்த ஆண்டுகள் இருந்து அடியார்களுக்கு அன்புடன் அருள்பவன். எனவே அவனுக்குப் பல்லாண்டு கூறுங்கள் என நம்மைப் பார்த்துக் கூறுகின்றார். அவனுக்குப் பல்லாண்டு கூறுவோர், அவன் திருவருளால் சொல்லொண்ணா இன்பங்களை இவ்வுலகத்தில் அனுபவிப்பதோடு மறுமை வாழ்விலும் பேரின்பம் எய்தவியலும் என்றியம்பும் அவர்,

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
 தூய்மனத் தொண்டர் உள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர்
 சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
 விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு எனும் பதம்கடந் தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே!

என்று உள்ளம் உருகிடப் பாட்டிசைத்தார். இதில் தூயமனத் தொண்டர்களிடம் சிறுதெய்வங்களின் வழிபாட்டில் ஈடுபடாதீர்கள் என்று கூறியவர், சிவபெருமானுக்குப் பல்லாண்டிசைக்க வேண்டுகின்றார். இவர் "சிலதேவர் சிறுநெறி" என்று கூறியதில் உலகியலில் நலம் பெற்றுச் சொத்துக்கும் சுகவாழ்வுக்கும் வேண்டாத தெய்வங்களை வழிபடுவதற்காக அலைகின்றார்கள்; இப்படி அலைந்துதேடும் பொருள் அழியும் தன்மையது; என்பதைச் "சில்லாண்டில் சிதையும்" என்று கூறியவர், உயிர் எம்பெருமானின் திருவடியைச் சேர, பிறவா நிலையையெய்த பல்லாண்டு கூறுதுமே என்று கூறுதல் போற்றுதற் குரியதாகும்.

பெரியாழ்வார் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே! என்று அவனுக்குப் பல்லாண்டு கூறுங்களென்று மக்களைப் பார்த்துக் கூறுகின்றார். தாம் பெற்ற இன்பம் பெறுக! இவ்வையகம் என்ற கருத்துப்படி பிறரும் பரம் பொருள் இன்பத்தில் ஆழங்கால்பட இவ்வாறு எடுத்துக் கூறினார், சேந்தனாரும் பெரியாழ்வார் வழியில் பல்லாண்டு என்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்று மக்களை நோக்கியே கூறினார்.

இப்படி இந்தச் செந்தமிழ்வாணர்களான பெரியாழ்வாரும் சேந்தனாரும் செம்பொருளான எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடியதால் பெருமையுற்றார்கள். இறைவனுக்குப் பல்லாண்டு இசைப்பதில் ஒருமையுற்றார்கள். அவரவர் விழைந்த தெய்வத்திற்குப் பல்லாண்டு பாடினாலும் பாடிய நெறியில், கருத்தில் ஒருமை எய்தி, உள்ளம் உருகப் பாடினார்கள்.

ஒருமையுடன் அவன் திருவடிக்குப் பெருமை சேர்க்கப் பாடியருளிய பெரியாழ்வாரும் சேந்தனாரும் காட்டிய வழியில் நாம் மாட்சிமையெய்த செம்பொருளான அந்த எம்பெருமானுக்கு நம்பிக்கையுடன் பல்லாண்டு கூறிப் பயன் காண்போமாக!

## பரமனைப் பாடிப் பிறவாமை காண்போம்

(நேரிசை வெண்பா)

பல்லாண்டு பாடிப் பரமன் தனையேத்தி
நல்லோராய் இப்புவியில் நாம்வாழ்ந்தால்—பல்லாண்டு
வாழ்வோம் பிறவாமை மாட்சிகண்டு மாயனடி
சூழ்ந்தேத்தி நிற்போம் சுடர்ந்து!

# பெரியாழ்வாரும் பட்டினத்தாரும்

கருணை முகில் வண்ணனை உள்ளம் உருகப் பாடியவர் பெரியாழ்வார். எளிவந்த பிரானாகத் தோன்றிய கண்ண பெருமானுக்குப் பல்லாண்டு பாடியதோடமையாமல், பிள்ளைத் தமிழ் பாடியவர் இவர்; தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தத்துள் பிள்ளைத் தமிழ் பாடுதல் ஒருவகை. அப் பிள்ளைத் தமிழை முதன் முதலில் பாடியவர் பெரியாழ்வாரே. எம்பெருமானுக்குப் பல்லாண்டு முதன் முதலில் பாடியவரும் இவரே!

கண்ணபிரானைச் சேயாக உருவகப்படுத்தி, தாம் தாயாக இருந்து அனுபவித்த நிலையைப் பெருமிதமாகப் பாடியே தம் பாசுரத்தில் தெரிவிப்பார். செம்பொருளான எம்பெருமானின் திறத்தையெல்லாம் தாம் பாடியருளிய பாசுரத்தில் ஆசையோடு படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

மக்களுக்கு ஏற்படும் துன்பத்தை மாற்ற அவர்கள் மிக உருகி எம்பெருமானை வேண்டினால், விரைந்து வந்து மாற்றுவான் என்று கூறுகின்றார். எம்பெருமானோ பாம்பணை மேலே பள்ளி கொண்டுள்ளான்; ஆம், அவனை உள்ளம் உவந்து போற்றுவார்களேயானால் அவர்தம் கவலைகள் நீங்கும் என்று கூறுகின்றார். அவன் கையில் உள்ள சங்கு வெண்மை நிறங்கொண்டு பொலிகின்றது; பிறரைத் தன்வயப் படுத்தும் அந்த வெண்ணிறச் சங்கினைப் போலவே நிறத்தைப் பெற்ற அன்னங்கள் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றன, அவை

செந்தாமரை மலர்கள் பூத்துள்ள வாவியுள் நீந்தி மகிழ்கின்றன. இவ்வாறு செந்தாமரை மலர்கள் பூத்து மிளிரவும், அன்னங்கள் கூட்டம் கூட்டமாக மகிழ்ந்து நீந்தவும் அந்தத் தடாகம் மிக அழகாயிருந்தது. இப்படி வனப்புடன் விளங்கும் தடாகத்தைப் பெற்ற ஊர் எது? அதுதான் இதயத்தைக் குளிர்விக்கின்ற,கண்ணபெருமான் கோயில் கொண்டிருக்கின்ற அந்த அருமை ஊரே திருக்கோட்டியூராகும்.

அத்திருக்கோட்டியூரில் விரும்பிக் கோயில் கொண்டிருக்கின்ற அருளாளன் யார் என அறிவிக்க,அவனோ நரகத்தையே நாசம் செய்பவனாவான். அவன் திருப்பெயரிலே ஒரு பெயரைச் சொன்னாலே போதும், நம்மைப் பற்றிய துன்பங்களெல்லாம் நாசமாகிப் போகும். நரகத்தில் நாம் ஆட்படாமல் பரமபதத்தில் பயனைக் காணவியலும். இன்பத்தையெல்லாம் வழங்குகின்ற அவனை மிக விழைந்து நாவினால் பாடி அழைக்காத மாந்தரெல்லாம், தாழ்வினைப் பெற்ற இழிந்த சாதியாராவார்கள்? ஆம். அவர்கள் நல்லோர்கள் வதியும் பதியில் வாழாமல், பொல்லாத போக்கிரி உலகத்தில் உழல்கின்ற புல்லர்களாவார்கள். வல்லமைப் பெற்ற பரம்பொருளைக் கருத்தில் கொண்டு போற்றாத புல்லர்கள், குடிக்கத் தண்ணீரும் உடுக்கக் கந்தையுமின்றிப் புலம்பிப் படுகுழியில் வீழ்ந்தும் எழ இயலாதவாறும் அழுந்திச் சாவார்கள். ஆம், அவர்கள் மாமாயனை விளம்பி உளம்பூரிக்காத பாவியர்கள் ஆவார்கள் என்கின்ற செய்தியைப் பெரியாழ்வார்

"உரகமெல் லணையான் கையில்உறை
சங்கம் போல்மட அன்னங்கள்
நிரைகணம் பரந்தேறும் செங்கமல
வயல்திருக் கோட்டியூர்
நரக நாசனை நாவிற்கொண்டு அழை
யாத மானிட சாதியர்
பருக நீரும் உடுக்கும் கூறையும்
பாவம் செய்தனதாம் கொலே!"

என்று பாடினார். இதில் அன்னங்களின் நிறத்திற்கு எம்பெருமானின் வெண்சங்கினை எடுத்துக் காட்டுவார். திருக்கோட்டியூரில் கோயில் கொண்ட எம்பெருமானை நரகநாசன் என்று கூறுவார். இதனால், அவன் துன்பங்களையும் துன்பஞ் செய்பவர்களையும் அவன் நாசம் செய்யும் நல்லோனாவான் என அறியலாம். நரகத்தையே நாசஞ் செய்வதோடு அல்லாமல் அவன் நேசங்கொண்டு பூசை செய்பவர்களுக்கே இன்பங்கள் வழங்குவான் என்றும் பேசுவார், இருளைக் கிழித்து ஒளி தோன்றுதல்போல நரகத் துன்பத்தை அழித்து நல்லின்பத்தினையே வழங்குவான் என்பதைப் பெரியாழ்வார் ஒன்றைக் கூறி, அதனால், அதன் எதிர்மறைப் பொருளையும் உய்த்துணருமாறு செய்கின்றார்.

இந்தப் புவியில் பரம்பொருளின் திருப்பெயரினை எண்ணாமலும் போற்றாமலும் இருப்பவர்கள் எல்லாரும் உண்ணுகின்ற உணவும், உடுத்துகின்ற உடையும் பாவம் செய்தன என்றே உணவின் மேலும் உடையின் மேலும் பாவத்தை வைத்துப் பேசுவார்.

அவர் இவ்வாறு கூறியதற்குக் காரணம், பாவிகள் தவற்றைச் செய்து உலகத்தை ஏய்த்தே உண்ணுகின்ற சோறும்உடுத்துகின்ற கூறையும் இழிவுக்குரியனஎன்பதைக் காட்டவேஅவை பாவம் செய்தன என்றார். ஆம், பாவிகளிடம் சென்று அவர்கள் அளிக்கும் உணவையும் உடையையும் பெற்று வாழாதீர்கள் என்றும் மக்களுக்கு அறிவுறுத்தவே! இத்தொடரைப் பெரியாழ்வார் எடுத்தாண்டார் போலும். தீயவை, தீயினும் அஞ்சப்படும் என்று கூறிய திருவள்ளுவர் நெறியில் இவர் பாடியிருக்கின்றார். இவரைப் போன்றே பட்டினத்தாரும் திட்பமுடன் தெரிவிப்பார். மனிதர்கள் இனியவர்களாக விளங்க வேண்டும். பிறவுயிர்களைக் காட்டிலும் சிறந்த பகுத்தறிவுடைய உயிராக விளங்குகின்ற மனித குலம், தனிச் சிறப்புக்குரிய நிலையில் வாழ்தலன்றிக் கேவல

மாக வாழ்வதைக் கண்டு வேதனைப்படும் பட்டினத்தடிகள் பாதகமே இல்லாத நல்வழியினைக் காட்டுகின்றார்.

அவர் அரச வாழ்வைத் துறந்தே பின்னர் அருளியல் வாழ்வில் ஈடுபட்டார்; போக வாழ்வைத் துறந்தே புனித வாழ்வில் ஈடுபட்டார்; உடல் வளர்க்கும் இன்ப வாழ்வைத் துறந்தே, உயிரே பெறவேண்டிய பேரின்ப வாழ்வையே நாடினார். நாடியவரோ தேடிய மேலான திவ்வியப் பொருளைக் கண்டே இன்புற்றார். அந்த இன்ப வாழ்வை உயிர்க் குலங்களும் அனுபவிக்க மிக விழைந்து காட்டுகின்றார்.

அவர், நிறைபொருளாய் எங்கும் நீக்கமற நிற்கும் இறைவனை மறந்தே, போக வாழ்வில் புரண்டு நலிந்தழியும் மக்களைப் பார்த்து மிக வருந்துகின்றார். தெளிவின்றி இழிந்தே பலியாகும் மனிதகுலத்தை வாழ்விக்கும் ஒரே பொருளுண்டு; அந்த அருமருந்தே சிந்தைக்கினியதாகிய தேவாமுதமாகிய இறைவன் என்றார்.

அந்தப் பரம்பொருள், கங்கையைத் தன் தலையில் கொண்டும், தும்பை மலரைப் பூண்டும் அழகுற ஆடுகின்றான். அவன் அரங்கத்திலே ஆடாமல் அம்பலத்திலே ஆடும் தலைவன்; நினைந்து வேண்டுவார் முன்சென்று அருள் பொழியும் வாணன். அவனைப் போற்றாதவர்கள் இந்தப் பூமண்டலத்தில் யார் இருக்கின்றார்கள்? என்று கேட்கின்றார்.

அவனை, அனைவருமே நினைந்து போற்றுகின்றவர்களே! அவனருளால் உவகை பூண்டு வாழ்கின்றவர்களே! என்றார். ஆனால், அந்தப் பந்தமுடையானை இங்கே போற்றாதவர்கள் உண்டா? உண்டென்றால் அவர்கள் எப்படியிருப்பார்கள்? அவர்களுக்கு அடையாளமிருக்கின்றதா? இருக்கின்றதென்றால்,

என்ன, அவர்களுக்குரிய அடையாளம், சோறில்லாமல் தெருத்தெருவாகத் திண்டாடுதலேயாகும். சுகமே அற்று

இகழ்சிக்குரியவர்களாக அலைதலேயாகும். இடுப்பில் சுற்றிக் கட்டிக்கொள்ள துணியுமின்றியும் பிணியுடனும் திரிதலே யாகும். இப்படி அலையும் இவர்களுக்குப் பிச்சையும் கிடைக் காமல் நடைப்பிணமாக நலிந்துசாகின்ற நிலை தான் உள்ளது.

எதனால் இந்தக் கேடு இவர்களுக்கு வந்தது? பேராசை யெனும் பித்தம் பிடித்ததால் இழிந்தவர்கள் ஆனார்கள். ஆசை மட்டுமே இருந்த இவர்களுக்கோ ஈசனை நேசிக்கின்ற பண்பின்றிப் போனதே; அருளாளனை விரும்பி அனுதினமும் போற்றாமையாலே இருள் சூழ்ந்த உலகத்தில் சோறின்றி, சுற்றிக் கட்டத் துணியின்றி, சுகமின்றி, பிச்சையோ இடுவா ரின்றி இன்னலுற்றுச் சாகின்றார்களே என்று வருந்திய பட்டினத்தடிகள்,

"ஆற்றொடு தும்பை அணிந்தாடும்
அம்பல வாணர்தமை
போற்றாதவர்க்கு அடையாளம் உண்டே
இந்தப் பூதலத்தில்
சோற்றாவி யற்றுச் சுகமற்றுச்
சுற்றத் துணியுமற்றே
ஏற்றாலும் பிச்சை கிடையாமல்
ஏக்கற்று இருப்பார்களே!"

என்று பாடுவார். முன்பு பாடிய பெரியாழ்வார் இறைவனைப் பாடாதவர்களுக்கு, குடிக்கத் தண்ணீரும் உடுக்க உடையும் கிடைத்தற்கே அரிதாகும் என்று கூறியதோடு, அப்படி இவர் களுக்கு உணவும், உடையும் கிட்டப் பெற்றாலே அந்த உணவும் உடையும் பாவம் செய்தனவாகும்.

இவரைப் போன்றே பட்டினத்தாரும் அம்பலவாணரைப் போற்றாதவர்கள் சோறற்று, சுகமற்று, சுற்றத் துணியுமற்று அலைவார்கள் என்றும், இப்படி அலைபவர்களுக்குப் பிச்சை யும் கிடைக்காமலே வதைவார்கள் என்றும் பாடுகின்றார்.

பெரியாழ்வார், மேலும் ஒரு செய்தியினை மெய்யுணர் வற்றவர்களுக்கு உணர்த்துகின்றார். அவனை எண்ணிப்

போற்றுவதால் கிட்டும் பயனைப் பற்றிப் பெட்புறக் கூறியுள் ளார். மூலமந்திரமான "ஓம்" என்கின்ற பிரணவத்தை மூன்று நொடிப்பொழுது உள்ளத்தில் வைத்தே அந்த அலைகடலின் மேல் நிலைத்தே பள்ளி கொண்டுள்ள பரந்தாமனையே போற்றுவாரானால் பேரானந்தம் அடைவர்; அவருக்குப் பரமபத வாழ்வும் வந்தடையும் என்றுணர்த்துவார்.

அப்படி அவனைப் போற்றாமல் போனால் அவர்கள் நிலையோ என்னவாகும் தெரியுமா? வெளியிலுள்ள பிராண வாயுவையே உள்ளே இழுக்க முடியாமல் அது கழுத்தளவில் நின்றே, மார் அடைப்பையே ஏற்படுத்தும். காலும் கையும் உதைத்துக் கொண்டும், துடித்துக் கொண்டும், கண்களோ திறக்காமலே மூடிவிடும். உயிரோ உடம்பை விட்டே பிரிந்து விடும்.

உயிர் பிரிந்த உடம்போ கட்டையாகி இடுகாட்டேகும் என்றே எச்சரிக்கின்றார் பெரியாழ்வார்.

இவ்வாறு எச்சரித்த அவர் எம்பெருமானைப் போற்றிப் பரமபத வாழ்வைப் பெற்று மீண்டும் பிறவாத நிலையினை அடைய அறிவுறுத்துகின்றார். இதை,

"மேல் எழுந்ததோர் வாயுக் கிளர்ந்து
மேல்மிடற் றினை உள்ளெழ வாங்கிக்
காலும் கையும் விதிர்விதிர்த் தேறிக்
கண் உறக்கமது ஆவதன் முன்னம்
மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை
மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி
வேலை வண்ணனை மேவுதிர் ஆகில்
விண்ணகத்தினில் மேவலும் ஆமே;"

என்று பாடி உணர்த்துதல் காணலாம். மாந்தர்கள் பெற்ற வாழ்வு அற்ப வாழ்வாகும். அவ்வாழ்வையே அற்புத வாழ் வாக்க வேண்டும். அதற்கு நற்றுணையாயிருக்கும் நாரா யணனை நாளும் நயந்து போற்றுவதாலே அந்த உயர்ந்த வாழ்வான பரமபத வாழ்வையே எய்திவிட இயலும் என் கிறார். இல்லையெனில் மீண்டும் இப்புவியில் பிறந்து

பல்வேறான உடம்பெடுத்துப் பல்லாற்றானும் இடர்ப்பட வேண்டி நேரும் என்கின்றார். பட்டினத்தடிகளும் மக்கள் வாழ்நாளில் இன்பப் பயனெய்தி வாழ்வதற்குச் சிறந்த பாதையை வகுத்துக் காட்டியுள்ளார். பெரியாழ்வார் கூறியதைப் போன்று இவரும் மாந்தர்களுக்கு நல்ல அறிவுரையைக் கூறுகின்றார். எம்பெருமானோ நம்பிக்கையூட்டும் நாயகனாய் ஓங்கார வடிவங்கொண்டே ஒளிர்கின்றான். ஒளி தந்து உலகைப் புரக்கும் அவன், பெரியதோர் ஆலமரமாகக் கிளைத்து அருளாட்சி செய்கின்றான. ஆம், அந்தப் பெரிய ஆலமரத்தில் தோன்றிய ஒரு சிறு வித்தே முளைத்தெழுந்து பாங்காய்ப் பெரும் பயனை விளைத்து வருதல் போன்றே இறைவன் விளைத்து வருகின்றான் என்றார். அவன் எங்கெல்லாம் பயன் விளைத்து வருகின்றான் என்றால் பதினான்கு உலகமெலாம் நீங்காமலும், பின்னர் நீங்கியும், அடுத்து நிறையாமலும்பின்னர் நிறைந்தும் நிறைவுருவாகியும்மிளிர்ந்து விளைக்கின்றான்.

அந்த நிறைவுருவான கனியே பரிவுடன் அறிந்து போற்றுபவருக்கு முன்னே வந்துஇன்பமூட்டும்; பேரானந்த பெருவாழ்வை நல்கிடச் செய்யும். ஆனால் அகங்காரங்கொண்டு அருட்சுகங்காண விரும்பாதவர்களுக்கு அந்த விந்தைக் கனியோ கிட்டாது. இல்லை அவர்களுக்குக் கிட்டாத வகையில் எட்டாத தூரத்தில் இருக்கும் என்றார். ஆனால், மட்டற்ற மகிழ்ச்சி கொண்டே உட்கிடையில் வைத்துத் திட்பமுடன் விழைபவருக்கோ கிட்டும் கனியாக அவன் இனிது வந்து தோன்றுவான். அவனைச் சொல்லிப் போற்றாத பொல்லாதவர்களுக்கோ அனுபவிக்க இயலாத வகையில் எட்டாத கனியாகச் சொல்லொணாத் தூரத்திலிருப்பான் என்பதைப் பட்டினத்தடிகள்,

''ஓங்கார மாய்நின்ற அத்துவிலே
ஒருவித்து வந்து
பாங்காய் முளைத்த பயன் அறிந்தால்
பதினால் உலகம்

நீங்காமல் நீங்கி, நிறையா நிறைந்து
நிறையுரு வாய்
ஆங்கார மானவர்க்கு எட்டாக்
கனிவந்து அமர்ந்திடுமே!"

என்று பாடுவார். இவ்வாறு எங்கும் நீக்கமற நிற்கும் பரம்பொருளைத் தீங்கனியாக உருவகப்படுத்திக் காட்டியவர், அக்கனியை அனுபவிக்க விழைபவர்கள் அறிந்து போற்றுதல் வேண்டும். அப்படிப் போற்றுபவர்களுக்கே முன்வந்து சுவை மிகுந்த பழுத்தக் கனி வடிவிலே பரம்பொருள் தோன்றுவான் என்கின்றார்.

போற்றாத அகங்காரமுடையவர்களுக்கோ காணாத வகையில் மாற்றமெய்தியே அவன் எட்டாத தூரத்தில் நின்றே கிட்டாத கனியாகக் காட்சியளிப்பான் என்று பேசுவார். அவனிலிருந்து வந்த ஒரு வித்துதான் பதினான்கு உலகத்திலும் நீங்காமல் நிறையுருவாய் ஒளிர்கின்றது என்பதை அழகுறக் காட்டியுள்ளார்,

பெரியாழ்வாரோ எம்பெருமானையே நம்பிப் போற்றி வருபவர்களுக்குப் பரமபத வாழ்வு கிட்டும் என்கின்றார். போற்றாமல் இருக்கும் புல்லர்களோ தொல்லை நரகத்தில் அல்லல் உறுவார்கள் என்று தம் பாசுரத்தில் படம் பிடித்துக் காட்டினார். பட்டினத்தாரோ, பதினான்கு உலகையெல்லாம் காக்கும் பரம்பொருளைப் போற்றுவார் முன் பழுத்த கனி வடிவாகி வந்து வாழ்வளிப்பான்; அகங்காரங்கொண்டு அலையும் அற்பர்களுக்கோ கற்பகத்தருவின் கனியான அவன் எட்டாத தூரத்தில் கிட்டாமல் போவான் எனத் தம் பாட்டாலே திட்டமாகக் கூறுகின்றார்.

இதுகாறும் கூறியவற்றால் பெரியாழ்வாரும் பட்டினத்தாரும் மக்களுக்கு உணர்த்த வந்த செய்திகளை ஒத்த கருத்தாலே ஒரே மாதிரியாகவே கூறி எம்பெருமான் நெறியில் தலைப்பட்டு மக்கள் நிலைத்து வாழவே விளம்பினார்கள். இவ்வாறு இனிதுரைத்த புனித வழியில் சென்று அவர்கள் இசைத்த பாடல்களைப் பாங்குறப் பாடிப் பரம்பொருளின் திருவருளைப் பெற்று எல்லோரும் நயந்து வாழ்தல் சால்பாகும்.

# ஆண்டாள் அன்னையும் மாணிக்கவாசகரும்

ஆண்டாள் அன்னையார், பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை என்பவர் ஆவார். வாச மலர்களை வைத்தே நித்தமும் மாயனைப் பூசை செய்து வந்தவர் பெரியாழ்வார். இப்பெரியாழ்வாருக்கு ஆசை மகளாய் வந்து அவதரித்தவர் ஆண்டாள்; தந்தையைக் காட்டிலும் இறைவன் பற்றில் ஆழங் கால்பட்டவர் ஆண்டாள். இவர் பரம்பொருளையடைந்திடப் பாடியருளிய பிரபந்தங்கள் இரண்டு. முதலாவதாகப் பாடப் பெற்றது திருப்பாவை; இரண்டாவதாகப் பாடப்பெற்றதே நாய்ச்சியார் திருமொழி. ஆக நூற்றெழுபத்து மூன்று பாசுரங்களைப் பாடி, தாவியே உலகளந்தானை மேவியே சார்ந்து நின்றவர் ஆண்டாள்.

அருமைத் திருப்பாவையில் அருளாளனை அழகுறக் காட்டியுள்ளார். சமுதாய நோக்கிலும் மிக ஈடுபாடு கொண்டவர் ஆண்டாள். ஒழுக்கமுள்ளவர்களாலேதான் அழகனான கண்ணனைக் காணவியலும் என்கிறார் அவர். எம்பெருமானைப்பற்றிப்பெருமையாகப்பாடியஅவரோ,மன்பதை உய்ய மழையைக் கோரிப் பாடினார்.

அழகனான இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்துப் பேசப் பெறுவது மழையாகும். இந்த மழையால் உண்டாகும் பயனையெல்லாம் வியப்புறக் காட்டுகிறார் ஆண்டாள். இந்த மழையும் அந்தமில் ஆனந்தம் நல்கும் பரம்பொருளாலே

பொழிகின்றது என்று கருதியவரே எம்பெருமானைப் பார்த்து வானமண்டலத்திலிருந்து பொழிகின்ற மழைக்குத் தலைவனாக இருக்கின்ற நீ! உனது கொடையான அமுதமெனும் மழையை மறுக்காமல் மறைக்காமல் பொழிந்திட வேண்டுமென்கின்றார்.

ஐயனே! அதற்காகக் கடலிலிருந்து நீரை எடுத்துக் கொண்டு ஒலியுடன் மேலே செல்ல வேண்டும். விண்ணுக்குச் செல்லும் நீர், உன் திருமேனி கருத்திருத்தல்போலவே மேகமாக மாறவேண்டும்; மேகங்கள் ஒன்றோடொன்று உராயும்போது, உன் வலக்கரத்திலுள்ள சக்கரத்தைப் போன்று மின்னியும் இடக்கரத்திலுள்ள சங்கு முழக்குதல் போன்று இடித்தும், மழை பெய்யும்போது உன் சார்ங்கமென்னும் வில்லிலிருந்து புறப்படும் அம்பு எதிரியைக் குத்துதல்போல் பூமியில் குத்திச் சர மழையையும் பொழிய வேண்டும் என்கின்றார். இப்படி உன் திருவருளால் பொழியும் மழை இந்த உலகத்தை இனிது வாழ்விப்பதோடு, நாங்கள் நீராடி உன்றன் பேர் பாடி நோன்பு நோற்கவும் உதவும். ஆதலால் இன்றே மழையைப் பொழிவிப்பாயாக எனக் கோரிய ஆண்டாள்,

"ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கருத்துப்
பாழியம் தோளுடைய பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!"

என்று பாடுகின்றார், இதில் இறைவன் பெய்விக்கும் மழையால் உலகம் இன்புறும் என்ற நிலையையும் அடுத்து நோன்பு நோற்று அவனைப் போற்ற நீராடி இன்புறும் தம் நிலையையும் குறித்தார்.

உலகம் வாழ்ந்தாலே அதில் வாழும் அனைவருமே வாழ இயலும் என்பதால் ஆண்டாள்,

"வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்"
மார்கழி நீராட

என்று பாடினார். இதில் உலகம் மழையால் வாழும்போது நாங்களும் நீராடி நோன்பு நோற்க முடியும் எனவே இரண்டும் நடைபெற பொதுமை நோக்கோடு பாடியிருப்பதைப் போற்றுவது சால்பாகும்? மாணிக்கவாசகரும் மழையை வேண்டிப் பாடியிருக்கின்றார். மேகத்தின் கருநிறத்தை ஆண்டாள் அன்னையார் கண்ணபெருமானின் திருமேனிக்கு ஒப்பாகத் தெரிவித்தார். ஆனால் மாணிக்கவாசகரோ உமையம்மையின் கருமைத் திருமேனிக்கு மேகத்தை ஒப்பிடுவார்.

மேகமே நீ! கடலை வற்றச்செய்வாயாக, அந்நீரோ, உமையாளின் திருமேனி போன்று கருத்தும், அவளின் இடையோ மின்னி ஒளிர்வதைப் போன்று மின்னல் தோன்றிப் பொலிவுற்றும், அவள் திருவடியிலுள்ள சிலம்பு ஒலிப்பதைப் போன்று இடித்தும். அன்னையின் புருவம் போன்ற வில்லிலிருந்து செல்லும் அம்பைப் போன்றே மண்ணில் பெய்யும் மேகமே சிவபெருமான் அடியார்க்கு முன்வந்து உதவி செய்வதைப்போல மழையைப் பொழிந்து உதவி செய்வாயாக என்று கூறவந்தவர்,

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள்இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!"

என்று பாடுவார். இந்தப் பாடலில் மழையின் அருமையைக் குறித்தார். உமையம்மைக்கு ஒப்புமை காட்டியே மழையின் பெருமையைச் சொன்னவர். அந்த மழையோ சிவபெருமான் அன்பர்களுக்கு அருளுவதைப் போன்று உதவி செய்யும் பெற்றியையுடையது எனக் காட்டினார். திருவள்ளுவப் பெருந்தகையும் மழையின் மாட்சியை அருமையாகப் பாடியுள்ளார். மழையை வான் சிறப்பு என்றே சிறப்பித்துள்ளார். கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வான் சிறப்பை வைத்துப் பாடுவார்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு ஈண்டு"

என்று இசைத்தார். இதில் மழையில்லையென்றால் தெய்வங்களுக்கு இந்த மண்ணில் செய்யப்படுகின்ற சிறப்புக்குரிய பூசைகள் நிகழ்தல் அரிது எனக் கூறுவார். வள்ளுவனார் வாய்மொழிப்படியே, ஆண்டாள் அன்னையாரும் மாணிக்க வாசக நாயனாரும் மழைக்கு முதன்மை தந்து பாடினார்கள். சமுதாயம் பயன் எய்தி நிற்பது மழை நீரால்தான். நாங்களும் அந்த நீரிலே ஆடி, எம்பெருமான் பேர் பாடி நோன்பு நோற்க இயலும் என்கின்றார்கள். எம்பெருமானின் திருவருளால் உண்டாகும் மழையே இந்த ஞாலத்தில் பல்லாற்றானும் உதவி செய்வதை அழகாகவே எடுத்துக் காட்டினார்கள் அவர்கள்.

ஆண்டாள் உலகளந்த மாயனின் ஆற்றலை அற்புதமாகப் பேசுவார். தேவர்களையெல்லாம் தன் அகந்தையால் இடர்ப் படுத்தியவன் மாவலி மன்னன். அவன் கொடுமையை யழித்து, துன்பமடைந்தவர்களுக்கு நன்மை செய்த இன்னமுதனின் சிறப்பினைத் திருப்பாவையிலும் நாய்ச்சியார் திருமொழியிலும் வரைந்து காட்டினார் அவர்.

கேவலமான மாவலியினை அழிக்க எம்பெருமான் வாமனனாகி அந்தப் பொல்லாத மன்னனிடம் மூன்றடிக்கு மண் கேட்டான். மாவலி, குள்ள வடிவம் கொண்ட வாமனனின் பெருமை தெரியாமல் அவன் கேட்டபடி மூன்றடி நிலம்

தருவதாக ஒப்புதலளித்தான். ஒப்புதலைப் பெற்ற மாமாயன் திருவிக்கிரம வடிவம் தாங்கி ஓரடியால் விண்ணையும் மற்றோ ரடியால் மண்ணையும் அளந்தான். மூன்றாம் அடிக்கு இடம் இல்லாமையால் பொல்லாத மாவலியின் தலைமேல் தன் திருவடியை வைத்து அழித்தான்.

அந்த ஆற்றல் சான்ற செந்தாமரைக் கண்ணனை அடையவே எண்ணிப் பண்ணிசைத்தேன் என்கின்றார் ஆண்டாள். பண்ணிசைத்தும் என்பால் அந்த மணிவண்ணன் வாராமலேயே வஞ்சனை செய்கின்றான். அவன் வாராமலே வஞ்சனை செய்வதால் நான் மிகவும் மனவேதனையைக் கொண்டேன் என்று ஆண்டாள் கூறுகின்றார். இவ்வாறு துன்பமுடனிருந்த நேரத்தில் தென்றல் காற்றும் முழு நிலவும் ஆண்டாளின் முன்தோன்றி மேலும் வருத்தத்தைத் தந்தன. இந்தத் துன்பம் எனக்கு ஏற்படும் என்று நான் நினைக்க வில்லை என்கின்றார் அவர்.

பின்னர் சோலையிலிருந்து கூவும் குயிலோசை கேட்டது. அந்தக் குயிலிடம் சென்ற ஆண்டாள், தென்றலும் நிலவும் வருத்தியதைப்போல நீ என்னை வருத்தாதே எனகின்றார்.

எனக்கு அன்பான நாராயணனை என்பால் வரவே, நீ கூவ வேண்டும். நீ கூவி அம்மாயனை இங்கு வரவழைக்காமல் போனால் உன்னையே இச்சோலையிலிருந்தே விரட்டி விடுவேன் என்கின்றார். இதை,

"அன்று உலகம் அளந்தானை உகந்து
அடிமைக்கண் அவன்வலி செய்யத்
தென்றலும் திங்களும் ஊடறுத்தென்னை
நலியும் முறைமை அறியேன்
என்றும் இக்காவில் இருந்து இருந்து
என்னைத் ததைத்தாதே நீயும் குயிலே
இன்று நாரா யணனைவரக் கூவாயேல்
இங்குத்தை நின்றும் துரப்பன்!"

என்று பாடினார். இதை அகத்துறை நெறியில் பாடியருளி னார். இந்நெறியில் பாடுவது எம்பெருமானைப் பற்றுவதற்கு எளிதான வழியாகும். இவ்வழியைக் கையாண்ட ஆண்டாள் அவனைத் தன்வயப்படுத்த முனைந்தார். மாணிக்கவாசகரும் இந்த இனிய வழியைப் பின்பற்றி அவனைப் பற்ற முனைந் தார்.

சோலையிலே கூவிச் சாலவும் சிறப்போடு இருக்கும் குயிலே! நான் சொல்வதைக் கேட்பாயாக! அழகுவாய்ந்த திருவடியைப் பெற்றவனே எனக்கு உறவினன் ஆவான்; இன்று இந்த இடத்தில் என்னை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய அவன்,மிக இனியன்;அவனே தேவர்களுக்கெல்லாம் தலைவன்; உதவி செய்யும் இதயம் படைத்தவன்; அவனைக் கூவி இங்கே வரவழைப்பாயாக என்றவர்,

''கொந்தணவும் பொழில் சோலைக்
கூங்குயிலேஇது கேள்நீ
அந்தணன் ஆகிவந் திங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தமர் ஆமிவன் என்றிங்கு
என்னையும் ஆட்கொண்டு அருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர் பிரான்வரக் கூவாய்!''

எனப் பாடுவார். இதில் ஏற்றுக்கொள்வதாகக் கூறிய அவன் சிவந்த மேனியன் ஆவான். அவனை வரக் கூவுவாய் என்ற இவரோ அகத்துறை நெறியில் பாடியிருத்தலை அறிதல் வேண்டும்,

ஆண்டாள் அன்னையார்,

குயிலே! என்னிலையை அறிவாயாக! என் எலும்புகள் உருகியதல்லாமல், வேல் போன்ற அகன்ற என் கண்களும் உறக்கம் கொள்ளவில்லை. நெடுங்காலமாகவே யான் துன்பக் கடலில் அழுந்தியுள்ளேன். நான் கரையேற வைகுந்தநாதன்

என்னும் தோணி கிடைக்காமல், துன்பக் கடலுக் குள்ளே தத்தளிக்கின்றேன். அன்புக் காதலாலே பிரிந்த அவன் துன்பத்தைக் குயிலே நீயறிவாயன்றோ? பொன் போன்ற மேனியுடையவனாய், கருடக் கொடியுடையவனாய், தருமமே வடிவாயிருப்பவனாயுள்ள கண்ணபிரானை இங்கே என்பால் வரக் கூவுவாய் என்று.

> "என்புருகி யினவேல் நெடுங்கண்கள்
> இமைபொருந்தாபலநாளும்
> துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்
> தோணி பெறாது உழல்கின்றேன்
> அன்புடை யாரைப் பிரிவுறும் நோயது
> நீயும் அறிது குயிலே
> பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்
> புண்ணியனை வரக் கூவுவாய்!"

எனப் பாடுவார். உருகி வாடும் என்னைக் காப்பாற்ற கருடக் கொடியுடைய வைகுந்தநாதனை வரக் கூவுவாய் என்று குயிலிடம் கூறுவார் ஆண்டாள். தம் துன்பத்தை நீக்கும் மாமருந்து ஆராவமுதனே எனத் தெரிவித்தார். மாணிக்கவாச கரும் குயிலிடம் எம் காதல் வேட்கையினைத் தீர்ப்பவன் இனிய சிவபெருமானே ஆதலால் அவனை வரக் கூவுவாய் என்கின்றார். குயிலே, செங்கமலத்தைப் போன்ற உருவ முடைய செல்வனை உனக்குத் தெரியுமா? அவன் இந்த உலகத் தில் உள்ள மக்களுக்குத் தன் பாதங்களைக் காட்டிப் பாவங் களைக் களைபவன், என்னுடைய ஆசைகளை அறுத்தே ஆட்கொண்டவன், அவனே ஆத்திமாலையைச் சூடித் திகழ் பவன்; பொன்னைப் போன்ற மேனி பெற்றுப் பொலிபவன்; அவன் அமுதம்போல உயிர்க்குலத்தை வாழ்விப்பவன்; அத் தகைய நித்தியமூர்த்தியை இங்கு என்பால் வரக் கூவுவாய் என்று.

"சீருடைப் பொன்திகழும் மேனிக்
கடிபொழில் வாழும் கூயிலே
சீருடைச் செங்கமலத்திற் றிகழுரு
வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
பாச மறுத்தென்னை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி
அமுதினை நீவரக் கூவுவாய்"

எனப் பாடுவார். இதில் மக்களின் பாவங்களை எம்பெருமான் தன் பாதங்களைக் காட்டிப் பறக்கடிப்பான் என்றார். பாதங்களால் பாவங்களைப் போக்குவோனைப் சிவபாதன் எனக் கூறக் கேட்போம்.

ஆண்டாள் அன்னையார் எம்பெருமான் திருமேனியைப் பொன்புரை மேனி என்றார், மாணிக்கவாசகரும் பரம்பொருளின் மேனியைப் பொன் திகழும் மேனி என்றார்.

"அன்புடையாரைப் பிரிவுறு நோயது" என்று ஆண்டாள் கூறியதில் எம்பெருமான்மீது கொண்ட காதல் நோயோ நீங்குவதற்கு அப்புண்ணியன் வந்தாலே போதும் என்பதை அழகாக எடுத்துக் கூறினார்.

மாணிக்கவாசகரும் தம் நோய் தீர அந்தப் பரம்பொருளாகிய அமுதன் வந்தாலே போதும் என்பதை அமுதினை வரக் கூவுவாய் என்று கூறியதால் அறியலாம்.

ஆண்டாள் அன்னையார் குயிலிடம் புண்ணியனை வரக் கூவுவாய் என்றார். மாணிக்கவாசகர் குயிலிடம் அமுதினை வரக் கூவுவாய் என்றார். எனவே, இருவரும் ஒன்றுபட்டே பரம்பொருளை அடைய நல்வழியைக் கண்டதைப்போல் நாமும் இவர்கள் வழியில் சென்றாலே பேரின்பம் எய்த இயலும் என்பது திண்ணம்.

# குலசேகராழ்வாரும் நாவுக்கரசரும்

சேரநாட்டரசராகச் சிறப்புடன் ஆட்சி செய்தவர் குலசேகராழ்வார். அரச பதவியைத் துறந்து அருளாளனின் பக்தராக மாறினார். உயர்ந்த வாழ்வு ஊராளும் அரச வாழ் வன்று; உள்ளத்தின் உணர்வாலே வெள்ளத்தரவணைமேல் பள்ளி கொண்டிலங்கும் உலகளந்தானைப் பக்தி செய்வதே உயர்ந்தவாழ்வு எனக் கருதினார். இனிய அரச வாழ்வையோ இன்னல் தருகின்ற வாழ்வு என்று எண்ணியே துறந்தார் அவர்;

குலசேகரர் அரச வாழ்விலிருந்த போதும் பேரின்பம் தரும் பெருமானையே நாளும் பொழுதும் நாவாரப்பாடி மனமாரப் போற்றித் தலையார வணங்கி வந்தார்; இந்த உணர்வில் இனிது வாழ்ந்த அவரோ தாம் வளர்த்த கிளியிடம் இராம பிரானைப் பற்றிக் கூறி, அதை உரைக்குமாறு செய்வித்து உள்ளம் பூரித்தார்; இவர் கிளியிடம் உரைத்ததைப் போன்று இவர்தம் அன்பர் உடையவரும் கிளியிடம் கூறுகின்றார். உடையவரான இராமானுசர் குலசேகராழ்வாரின்மீது அளப் பரிய பற்றுக் கொண்டிருந்ததால், தாம் வளர்த்த கிளியிடம்,

> "இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
> தென்னரங்கம் பாடவல்ல சீர்ப் பெருமாள்—பொன்னஞ்
> சிலைசேர் நுதலியர் வேள் சேரலர்கோன் எங்கள்
> குலசேகரன் என்றே கூறு"

என்று பாடி, கிளியைப் பாடுமாறு செய்கிறார். இராமானுசர் தமிழில் பாடியதாதச் சொல்லப் பெறுவது இந்த ஒரு

வெண்பா மட்டுமே என அறிகிறோம். போக வாழ்வைட் புறத்தே தள்ளிப் புனித இறை வாழ்வில் ஆழுங்கால் பட்ட குலசேகரரின் இனிய பக்தியே நனிசிறந்ததெனப் போற்றிட தால் மேற்குறிற்த நேரிசை வெண்பாவால் பாடிச் சிறப்பித் தார். மாயபிரான்மீது பற்றுக்கொண்ட குலசேகராழ்வார் பாடியபாசுரங்கள் நூற்றைறந்து.இப்பாசுரங்களால் எப்படியெல் லாம் எம்பெருமானின் ஏற்றத்தைக் கூற இயலுமோ அப்படி யெல்லாம் சுவைபடப் பாடிப் பெருமை செய்தார். அரச போகம் பெரிதல்ல. உன்னை அனுபவிக்கும் தாகமே பெரும் போக்கியமாகும் என்று பாடிப் போற்றுவார்.

பெருமாள் திருமொழியில் இரண்டாம் பத்தில் முதற் பாசுரத்தில்,எம்பெருமானின் செம்மையை யெல்லாம் பாராட் டிப் பேசுவார். தோய்ந்த, குளிர்ந்த தயிரையும் பாலையும் வெண்ணெய்யையும்ஒரேநேரத்தில் இனியதன் வாயால் உண்ட போது, யசோதைப் பிராட்டியானவர், அவன் செய்த களவைப் பார்த்துக் கோபங்கொண்டு, பிடித்துக் கயிற்றால் கட்ட முடியாமல் கட்டினார்; அன்னையார் தன்னைக் கட்ட முடியாமல் சிரமப்படுவதைக் கண்டு அவனே கட்டுண்டான்; அப்படித் தாயின் கட்டுக்குக் கட்டுப்பட்டவனோ பெரிய தோள்களையுடையவன் ஆவான்என்கிறார்.அவனேதான்எனக் குத் தலைவன் ஆவான் என்கிறார். அத்தலைவனான அரங்க நாதனை அடியார்கள் தம் நாக்குத் தித்திக்கும்படி,நாராயணா என்று அழைத்தும், உள்ளம் புளகாகிதம் கொள்ளும்படி துதித்தும் மகிழ்ச்சி அடைகின்றார்கள். எனவே அத்தொண்டர் களுடைய திருவடிகளையே என் மனம் பணிந்து பல்லாண்டு பாடிட விழைகின்றது என்று இயம்பிய குலசேகரப்பெருமான்,

''தோய்த்த தண்தயிர் வெண்ணெய் பாலுடன்
உண்டலும் உடன்று ஆய்ச்சி கண்டு
ஆர்த்த தோளுடை எம்பிரான்
என் அரங்கனுக்கு அடியார்களாய்

நாத்தழும்பெழ நாரணா வென்றழைத்து
மெய்தழும்பத் தொழுது
ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி
ஏத்தி வாழ்த்தும் என்நெஞ்சமே''

எனப் பாடிப் போற்றுவார். பால், தயிர், வெண்ணெய்யை விரும்பி உண்டதால் யசோதைப் பிராட்டியாரால் கட்டுண்டு மகிழ்வுற்ற கண்ணனின் இனிய தன்மையை ஆழ்வார்கள் பாடியதைப் போன்றும் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும் மகிழ்ந்து பாடியுள்ளார். இங்கே குலசேகராழ்வார், எம்பெருமானின் பெரிய தோள்களைப் பெருமையாகப் பேசுவார். அன்னைக்குக்கட்டுண்ட கண்ணபெருமானே நீயே திருவரங்கத்தில் அரங்கனாகப் படுத்துக் கிடக்கின்றாய்; அரங்கனே! நீதான் உலகம் புரக்கும் தலைவன் எனக்கூறி அவனை ஏத்துகின்றார்.

இதில் ''நாத்தழும்பேற நாராயணாவென்றும் மெய்தழும்பேறத் தொழுதேத்தி என்றும் இன்புற்றதைக் கூறியதால் நாமும் பலமுறை நாராயணாவென்று கூறியும் பலமுறை மண்ணில் உடம்பு படிய அவன் திருவடியைத் தொழுதும் பூசித்தால் பயன் கிட்டும். அவனை நாவார நாராயணாவென்றும் அரங்காவென்றும் வழிபட்டு வந்த குலசேகராழ்வாரின் பக்திப் பரவச நிலையை நாம் உணரலாம், இவர் அவன் சேவடியை வாழ்த்தியது தம் நெஞ்சமே! என்றியம்பிப் பாடியருளியதைப் போன்று நாவுக்கரசரும் எம்மானைக் கண்டுகொண்டது என் உள்ளமே! என்று பாடுகின்றார் தாயைப் போன்று உதவும் இறைவனை அமுதமாக உருவகப் படுத்துகின்றார். ஆம், அவன் அமுதத்திற்கே அமுதமாக உள்ளான், இந்த இனியவனை அடியார்கள் தம் அம்மானாகவே ஏத்துகின்றார்கள். மகிழ்ந்தேத்திய அவர்கள் அவனைத் தத்துவப் பொருளாக ஏத்தினார்கள்; அப்படிப் போற்றிய அவர்களெல்லாம் தத்துவம் தெரிந்த அடியார்களானார்கள் என்றே நாவுக்கரசர் இயம்புகின்றார்.

செம்பொருளான எம்பெருமானைத் தொழுது போற்றும் உள்ளமோ அவனின் செம்மைநிறமாகவேஆனது என்கின்றார்.

எப்படி? அவன் வந்து புகுந்ததால் அந்தச் சிந்தை அவன் நிறத்தைப் பெற்றதே என்கிறார் அவர். இத்தகைய வனே எனக்கு அம்மானாக என்னை ஆதரிப்பவனாக இருக்கின்றான் என்கின்றார். அவன் என் உள்ளத்தில் தங்கி இருப்பதையே யான் கண்டுகொண்டேன் என்று கூறிப் புகழ்ந்தார். பரம்பொருள் நிலையை நன்குணர்ந்த நாவுக்கரசர், அவனோ அடியார்களின் மனத்திலும் குடிகொண்டு வாழ்பவன் என்று பேசுகின்றார். எனவே, அவனுக்கே அனைவரும் அடியாராக இருக்க, நிலைத்த வாழ்வைக் காண இப்பாடலிலே மனமுவந்து உணர்த்துகின்றார். இக்கருத்தினைக் கரும்பு தரும் இனிப்பினைப் போலவே,

"அம்மானை அமுதின் அமுதே என்று
தம்மானைத் தத்துவத்து அடியார் தொழும்
செம்மான நிறம்போல் வதோர் சிந்தையுள்
எம்மானைக் கண்டு கொண்டது என்உள்ளமே!"

என்று பாடுவார். இதில் அமுதின் அமுதே என்று முதலடியில் கூறியதால் அவன் அமுதத்திற்கே அமுதாயுள்ளான் என்றார். தேவர்களுக்கெல்லாம் தேவனாயிருப்பவனை அமுதத்திற்கே அமுதம் எனக் கூறியது ஏற்புடையதன்றோ? தத்துவப் பொருளாய் இருக்கும் அவனைப்பற்றிஎண்ணுகின்ற, அவனின் திறத்தைப்பற்றிப் பேசுகின்ற—அறிந்தே போற்றிக் கூறுகின்ற அடியார்களெல்லாம் தத்துவ அடியார்கள் என்றே கூறியது சிறப்புடையதாகும்.

எம்பெருமான் அனல் போன்று செந்நிறத்தவன்; அவன் நிறமான செம்மையைத் தம் சிந்தையும் பெற்றதாகக் கூறுகின்றார். இத்தகையவனையே தம் கண்கள் கண்டதாகக் கூறாமல் உள்ளம் கண்டதாகக் கூறியதில் தம் உள்ளத்தில் அவன் உள்ளதைத் தெரிவிக்கின்றார்.

முன் பாடிய குலசேகராழ்வார், அரங்கனின் அடியார்களோ நாத்தழும்பு எழ நாரணா என்றும், மெய் தழும்பு

எழ தொழுதேத்தி நின்றும் வழிபாடு செய்த நிலையைச் சிறப்புறப் பாடிக் காட்டினார்." "அம்மானை அமுதின் அமுதே என்றும் தம்மானைத் தத்துவத்து அடியார் தொழுது" என்றும் சிவபெருமானை அடியார்கள் தொழுதேத்தும் நிலையை நாவுக்கரசர் பெருமையாகக் கூறினார். இவ்வாறு கூறும் இவர்களின் கருத்துகளால் உள்ளத்தால் உவந்தே எம்பெருமானைத் தொழுபவர்களெல்லாம் அவன் அடியார்களாகவே இலங்க இயலும்என்ற விவரத்தை நாம்அறியவேகூறினார்கள்.

இந்த மண்ணில் உடம்பெடுத்துப் புலன்களின் வழிச் சென்று அனுபவிக்கின்ற இன்பங்களைத் துய்த்து வாழ்வதே உண்மையான வாழ்வு எனக் கருதுகின்ற, இவ்வுலகத்தவர்களோடு அடியேன் கலப்பதில்லை; ஆனால், பரம்பொருளாகிய உன்னிடம் சேர்வதே இன்பம் என்று உன் திருநாமங்களை நாவினிக்க நித்தமும் கூறியே அழைக்கின்றேன்; என்னிடத்தில் என்றும் அன்புடன் இருக்க விரும்பும் அருளாளனே! உன்னிடத்திலே அடியேன் மிகவும் காதல் கொண்டுள்ளேன் என்று தம் பிரியமான, உண்மையான அன்பு நிலையை,

"மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்
ஐயனே அரங்கா! என்று அழைக்கின்றேன்
மையல் கொண் டொழிந்தேன் என்றன் மாலுக்கே!"

என்று குலசேகரர் இசைக்கின்றார். இதில் "மெய்யில் வாழ்க்கை" என்பது உடம்பு அனுபவிக்கின்ற நிலையைப் பற்றிக் கூறியதாகும்.அந்த வாழ்வு மின்னல் போன்று தோன்றி மறைவதாகும். எனவே, இது நித்திய வாழ்வன்று; அழிவுக்குரிய அநித்தியமானதாகும். எனவே, அந்த அநித்தியமானதையே நித்தியமானதாக மயங்கி, இந்தப் போகத்திற்காகவே மண்ணுலகில் உழன்று திரிகின்ற மனிதர்களின் நிலையைப்பற்றிச் சிறிதும் என்னால் சகிக்க முடியவில்லை;ஆதலால் இவர்களுடன் நான் கலக்கமாட்டேன் என்றும் கூடியிருக்கமாட்டேன் என்றும் குலசேகரர் கூறுகின்றார்,

இவர் இவ்வாறு உரைத்ததைக் கேட்டுச் சிலரோ ஆழ்வாரை நோக்கியே எங்களைக் காட்டிலும் நீங்கள் என்ன சிறப்புத் தன்மையைப் பெற்றுள்ளீர்கள் எனக் கேட்டிருக்கக் கூடும்: அவர்களைப் பார்த்தே நீங்களெல்லாம் குடும்பமே பெரிதாக எண்ணியும் மனைவி, மக்கள், சோறு, சுகம் என்பதை உயர்வாகக் கருதியும், அவற்றிற்காக நாளும் பொழுதும் அலைந்து தேடியும் அவ்வாறு தேடிய அந்த அழியும் பொருள்களைப் போலவே அழிய நினைக்கின்றீர் களே இது சரியாகுமா? எனவே, உங்களைப் போன்றே அடியேனும் அழிந்து மாயாமல், அந்த மோகத்தில் வீழ்ந்து போகாமல் எப்போதும் நிலைத்த வாழ்வைத் தருகின்றவனைப் போற்றியே என்றும் உய்வேன் எனக் கூறியவர் நலந்தரும் சொல்லாம் நாராயணாவென்னும் நாமத்தைக் கூறியே எம் பெருமான் பற்றினில் நம்பிக்கையுடன்வாழ்கின்றஅடியவனைப் பற்றி நீங்கள் அறியவில்லை போலும் என்றவரோ அவர் களிடம் தம் நிலையையும் தாம் நிலைத்து வாழ்கின்ற தன்மை யையும் எடுத்துக் கூறினார்;

மெய்யில் வாழ்க்கையை மெய்+இல் என்று பிரித்தால் மெய் இல்லாத வாழ்க்கை: என்றதாகிய அதுவோ பொய்யான வாழ்க்கை என்னும் பொருளினை உணர்த்தக் காணலாம். மேற்குறித்த பாசுரத்தில் இரண்டாம் அடியின் முதற் சீரில் "வையம்" என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது; இது பூமியைக் குறித்தது. இச்சொல் பூமியில் வதியும் மக்களை உணர்த்து வதால் இடவாகு பெயராகும். ஈற்றடியில் உள்ள "மையல்" என்னும் சொல் ஒரு பொருளின்மீது கொண்ட விருப்பத்தைக் குறிக்கும். குலசேகரர் கண்ணபெருமான்மீது கொண்ட பெரு விருப்பத்தை "மையல் கொண்டொழிந்தேன் என் றன் மாலுக்கே" என்று பாடியதால் தெரியலாம். இதனால் பொய் யான வாழ்வைப் போக வாழ்வாகக் கொண்டலையும் ஆசை யுடையோருக்கு நீங்கள் கொண்டது இழிந்த வாழ்வு என உணர்த்தி உண்மை வாழ்வைக் காண அரங்கனைப் பாடிப் பரவுமாறு கூறுகின்றார். இவர், "மையல் கொண்டொழிந்

தேன் என்றன் மாலுக்கே" என்று பாடியதைப் போன்று நாவுக்கரசரும், "மகிழ்ந்து ஆடும் கூத்தனுக்கு அன்பு பட்டாள்" என்றே பாட்டிசைத்தார். நாவுக்கரசர் தலைவியாகத் தம்மைப் பாவித்து, தலைவனாகிய சிவபெருமானிடம் கலந்தின்புறவே முயல்கின்றார்.

பெண்ணாகிய யான் பாடல் ஒன்றை இயற்றினேன். அதை இசைத்துப் பாடும் வகையில் பண்ணுடன் கூட்டி இசைக்கின்றேன். உன்னுடன் இணைவதற்கு உயர்ந்துள்ள மணற் குன்றின்மேல் அமர்ந்து சோதிடம் பார்ப்பதற்காகக் கூடல் இழைக்கின்றேன் என்றார். காந்தள் மலர் பூத்து அலர்ந்து நிற்கின்ற, அழகிய பதியில் மகிழ்வுற்று வதியும் கூத்தபிரான் இனிதாக ஆடுகின்றான். அவனுக்கே அன்புடையவள் ஆவேன் என்று அந்த இனிய நங்கை கூடல் இழைக்கின்றாள். அவள் அக் கூத்தனுக்கு இன்றோ அன்புடையவளாக மட்டும் அல்லை. நீண்ட நாள்களுக்கு முன்னமே அன்புடையவளாகவே இருந்தவள் என்று நங்கையாகிய நாவுக்கரசர் ஆவல் மேவியே உலகையெல்லாம் காவல் புரியும் எம்பெருமானின் காதலியாக இருத்தலை இயம்பினார்.

பரம்பொருளைப் பற்றுதற்கு எளிய வழி தலைவி தலைவன் பாவமே! இதை நாயகி நாயகன் பாவத்தைச் சமயத் துறையைச் சார்ந்தவர்கள் கூறி அனுபவிப்பார்கள், இந்த நெறியைக் கையாண்டே நாவுக்கரசரும் பாடுகின்றதை

"பாடல் ஆக்கிடும் பண்ணொடு பெண் இவள்
கூடல் ஆக்கிடும் குன்றின் மணல் கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத்துள் மகிழ்ந்து
ஆடும் கூத்தனுக்கு அன்புபட்டாள் அன்றே"

என்று இன்பம் பிறங்க இசைத்தார் இவர். குலசேகராழ்வாரோ எம்பெருமானாகிய அரங்கனுடன் ஐக்கியமாகிடவே அவனை அழைக்கின்றேன் என்றார். அந்த அரங்கனுடன் காதல் கொண்டதால் மற்றவற்றை மறந்தேன் என்கின்றார்.

இப்படி ஒப்பில்லா அப்பனான அரங்கனை அழைத்து அவனுடன் ஒன்றியே பிறவற்றைத் துறந்தேன். என்றவர் அருளாளனே வாழ்வு என்றே உணர்ந்து அவனைக் குலசேகராழ்வார் போற்றிப் புகழ்ந்தார்.

நாவுக்கரசர் பண்ணொடு பாடலாக்கி அன்புடன் அவன்பால் ஒன்றிடக் கூடல் இழைத்துக் காந்தள் மலரான கோடல் பூத்தலர்ந்துள்ள இடத்திலே ஆடல் புரியும் கூத்தனிடம் அன்புடன் அன்றே ஐக்கியமான செய்தியை இன்று இப்பாடலை இசைத்துப் போற்றிப் புகழ்ந்தார்.

இதுகாறும் கூறியவற்றால் குலசேகரரும் நாவுக்கரசரும் பாடிய பாடல்களால் . அருள் வாழ்வை மக்கள் யாவரும் அடைந்திடவும் மாட்சியுறவும் வழிகாட்டினார்கள்; அவர்கள் காட்டி உணர்த்திய வழியில் ஆர்வமுடன் மக்களாகிய நாமெல்லோரும் சென்று இறைவனைப் போற்றி இன்பமெலாம் எய்துவோமாக!

## மெய்யனின் பேரின்ப வீடு!

(நேரிசை வெண்பா)

மெய்யிலா வாழ்வதனை மேன்மையென்று போற்றிடுவோர்
பொய்யுலகில் நின்றே புலம்பிடுவர்—உய்யுங்கால்
தெய்வத்தின் மாணடியைச் சேவிப்போர் கண்டிடுவார்
மெய்யனின் பேரின்ப வீடு!

# தொண்டரடிப்பொடியும் மணிவாசகரும்

மண்ணுலக வாழ்வைப் பெரிதாக மதிக்கின்றார் தொண்டரடிப் பொடியாழ்வார். ஏ னெ னி ல், இம்மண்ணுலகிலே திருவரங்கத்தின்கண் எம்பெருமான் கோயில் கொண்டுள்ளான்: அவனை நித்தமும் உருகிப் பாட, பாடி மகிழ வாய்ப்புகள் உளளதாலே மண்ணுலக வாழ்வான இச்சக வாழ்வே பெரிதெனப் போற்றுகின்றார் அவர்.

இம்மண்ணுலகில் எம்பெருமானாகிய அரங்கன் எத்தகைய கோலம் கொண்டுள்ளான் என்பதை அவர் மிக அழகாகத் தெளிவிக்கின்றார். கார்மேனியையுடைய கண்ணபிரானையே இவர் பச்சை நிற மேனியனாகப் பாடுகின்றார். இங்கே நிற்காமல் படுத்துள்ள அவனின் மேனியோ மலையைப் போன்ற பெரியதொரு மேனியாய் உள்ளது என்கின்றார். அவன் மேனியை மலையென்றே கூறினார். மலையோ பச்சை நிறத்தையுடையதாதலாலே அந்தப் பச்சை நிறத்தையே அவனும் பெற்றுள்ளான் என்று சிறப்பித்துள்ளார். அவன் பச்சை நிறத்தைப் பெற்றதோடு பெரிய தோற்றத்தையும் கொண்டுள்ளான் என்றார். அன்று அம்மாயன் மிக—ஓங்கி உலகளந்தான் என்று கூறி எம்பெருமானின் திரிவிக்கிரம அவதாரத்தை உள்ளுறையாக வைத்து நமக்கு உணர்த்துகின்றார். அவன் வாயைப் பவளம் என்றார்; அவன் கண்களைச் செந்தாமரை நிறத்தையுடையன என்று இயம்புகின்றார்.

இத்தகைய நிலையில் நம் சித்தத்தைக் கவரும் அந்த மாயனை அழிவில்லாதவன் என்றே அறிவிக்கின்றார்,

அவனோ, தேவர்களுக்கெல்லாம் தலைவனாய் மிளிர்கின்றான் என்று உணர்த்துகின்றார். கொழுந்து வாட்டம் பெறுமாயின் மரமும் வாட்டத்தினைப் பெற்றுள்ளதென்றே அறியலாம் மரத்தின் வாட்டத்தைக் கொழுந்தின்மூலம் அறிவதைப்போல் ஆயர்தம் வாட்டத்தை இவன் முகம் வாட்டமடைந்து காட்டும். எனவே, ஆயர்தம் வாட்டத்தையும் பசுக்களின் துன்பத்தையும் இவன் கண்களே கண்டு போக்கும் ஆற்றல் வாய்ந்தன.

ஆயர்குலத் தோன்றலான இவன் இந்த மண்ணுலகில் பிறந்துள்ளான். அவனையே அனுபவிக்கும் பேறு எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே, அஃது எனக்குப் பேரின்பமாகும் என்கின்றார். இத்தகைய நிலையில் அவனை அனுபவிக்கும் இன்பத்தை விடுத்து, இந்திரலோகத்தை ஆளுகின்ற இன்பம் கிட்டுமாயினும் அது வேண்டவே வேண்டாம் என்று கூறியவர் அந்தப் பேரருளாளனான அரங்கநாயகனை மிகவும் மனம் உருகிப் பாடுகின்றார். அந்த அரங்கனையே கண்ணபிரானாக உருவகப்படுத்தித் தொண்டரடிப்பொடி ஆழ்வார் அனுபவிக்கின்றார்.

இந்தக் கருத்தைச் சிறந்ததோர் அழகோவியமாக வரைந்து மக்கள் அனுபவிக்கவும் அருளினார். இக்கருத்தினை

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!"

என்று பாடி அருளிச் செய்தார். இதில் "அச்சுதா" என்னும் சொல்லைப் பெய்து அருளாளன் அழிவில்லாதவன் என்

பதை விளக்கிக் கூறுகின்றார். இவர் பாடியதைப் போன்று மணிவாசகப் பெருமானும் வானுலகம் பெற்றாலும் யான் வேண்டேன். உன்னருளைப் பெற்றாலே போதும் என்றார் மண்ணுலகில் அர்ச்சையாய் நின்று நலமருளும் எம்பெருமானிடம் தொண்டரடிப்பொடியாழ்வாரோ.

"இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று பாடியதைப் போன்றே மாணிக்கவாசகரும் வானேயும் பெறினும் வேண்டேன் என்று பாடுகின்றார்.

இவர் யான் எந்தவித பிறவியும் எடுப்பதற்கே அஞ்சுகின்றேன். காரணம் அப்பிறவி தப்பாது இறப்பைத் தரும். எனவே, இறந்து போவதைப் பெறுகின்ற பிறப்பு எனக்கு எதற்கு? இறக்கின்ற உடம்பையே பிறந்ததால் பெற்ற யான் அவ்வுடம்போ நலமெய்திட வானுலகைப் பெற்றாலும் அஃது எனக்கு வேண்டாம் என்று வெறுத்துப் பேசுகின்றார். விண்ணுலகை ஆளுதல் வேண்டேன் என்று சொல்வதைப் போன்று மண்ணுலகை ஆளும் நிலையால் மகிழ்ச்சி ஏற்படினும் அதையும் மதிக்கவே மாட்டேன் ஒதுக்கியே தள்ளிவிடுவேன் என்கின்றார்.

தேனையுடைய கொன்றை மலரைச் சூடிய சிவபெருமானே என்னை ஆள்பவன்; ஆதலால், அவனை நோக்கி எம்மானே உன்னுடைய இன்பத் திருவருளைப் பெற்றிடவே விரும்புகின்றேன்; அந்த அருள் வாழ்வோ என்று எனக்குக் கிட்டுமோ என்றே யான் நித்தமும் ஏங்குகின்றேன்; ஏங்கி உன்னைத் துதிக்கின்றேன் என்றவர்,

"யாயேதும் பிறப்பு அஞ்சேன்
இறப்பதனுக்கு என்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ஆள்வான் மதித்துமிரேன்

தேனேயும் மலர்க் கொன்றைச்
சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள்
என்றென்றே வருந்துவனே!"

எனப் பாடுவார். இதில் உடம்பின் நலத்தை விரும்பாமல் தம் உள்ள உணர்வுக்கே முதன்மை தருகின்றார். பண்பட்ட மனம் பரம்பொருளின் திருவருளையே எண்ணும் என்றவர் அவனை எண்ணியே ஏத்தி நலங் காணும் மனத்தின் திட்பத்தைத் தெரிவிக்கின்றார்.

வானுலகை யாளும் நலத்தையும் மண்ணுலகை ஆளும் சுகத்தையும் வெறுத்து, எம்பெருமானின் அருளுக்கோ தொண்டரடிப்பொடியாழ்வாரும் மாணிக்கவாசகரும் பாடினார்கள். அவர்கள் கொண்ட ஏக்கமோ ஊக்கத்தை ஊட்டி ஆக்கத்தை யருளும் தன்மையாய்ப் பரம்பொருளை நோக்கியே பாட்டிசைக்கச் செய்தது.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கநாதனுக்குப் பள்ளியெழுச்சி பாடுகின்றார். அம்மாயன் தூங்குகின்றானா? என்றால் இல்லை; அவன் தூங்கிவிட்டால் உலகத்தில் இயக்கமேயில்லை. எனவே, அவன் தூங்காமல் அறிதுயில் கொண்டுள்ளான். உலகத்தின் நடவடிக்கைகளையெல்லாம் அறிந்து கொண்டே துயில் கொண்டுள்ளான்; அவன் மற்றவர்கள் பார்வைக்குத் தூங்குவதைப் போன்றே காட்சியளிக்கின்ற தன்மையில் ஞான நித்திரை செய்கின்றான். இப்படி இவன் தூங்குவது தொண்டரடிப்பொடியாழ்வாருக்குத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் அவர் ஏன்? அவனைப் பள்ளி உணர்த்துகின்றார்?

அறிதுயில் கொள்ளும் அவனை மக்கள் எல்லோரும் காலைக்கடனை முடித்துக்கொண்டு துதிக்கவே காலையில் அவன் ஆலயத்தில் அவர் நின்று பாடத் தலைப்படுகின்றார். தூங்கிக்கொண்டே இருக்கும் மக்கள் தம் கடமையாகிய எம்பெருமானையே மறந்து விடுகின்றார்கள். அவர்களுக்கு

உணர்த்தவே, உணர்த்தி எம்பெருமானின் இணையடிகளைப் போற்றிப் பக்தி செய்யவே இவர் வழி காட்டுகின்றார்.

அரங்கா நீ இன்னும் துயில் கொள்வது சரியில்லை; கதிரவன் காலையில் கீழ்த் திசையில் தோன்றி உச்சிக்கே வந்து விட்டான்; அதனால் அதிகமாகச் சூழ்ந்துகொண்டிருந்த இருளோ ஓடி மறைந்துவிட்டது.

கதிரவன் வருகையால் மரம், செடி, கொடிகளில் உள்ள மலர்கள் விரிந்து தேனைச் சொரிகின்றன. இந்த நேரத்தை யறிந்தே தேவர்களும் மண்ணுலகை யாளும் மன்னர்களும் உன்னை நோக்கிப் பாடி அருளைப் பெற வந்தவர்கள் எதிர் திசையில் வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்கின்றார்கள்; இவர்களோடு பெரிய ஆண் யானைகளும் பெண் யானைகளும் வந்துள்ளன. இந்த யானைகளின்மீது முரசுகள் இருக்கின்றன. அவற்றை ஒலியெழ அடிக்கின்றார்கள்.

அடித்த அந்த முரசின் ஓசையோ கடலின் அலைகள் எழுப்பும் ஓசையைப் போலவே அதிர்கின்றது. இந்த ஓசை எல்லாவிடங்களிலும் கேட்கின்ற வகையில் அதிர்கின்றது. மிகுந்த அந்த ஓசையோ அரங்கா உன் செவியில் கேட்க வில்லையோ? கேட்டும் கேளாதவன் போன்று இருக்கின்றாயா? இது சரியில்லை. எனவே, உடனே எழுந்து வந்து உன்னடி யவனான எனக்கு அருள்புரிவாயாக! என அரங்கனிடம் வேண்டுகின்றார். காலைப்பொழுதை அறிந்தே யாவுமே விழிப்புற்று எழுந்தே கடனாற்றுகின்றன. தேவர்கள் எழுந்து வந்து உன்னைப் பாடித் துதிக்கின்றார்கள். ஆனால் நீ மட்டும் காலைப்பொழுதை உணராமல் துயில்கின்றாய் என்று இறைவன் மேலேற்றி உலகத்தில் தூங்கிக் கிடப்போரைத் துயில் உணர்த்தும் தொண்டரடிப்பொடியாழ்வார்,

''கதிரவன் குணதிசை சிகரம்வந் தடைந்தான்
கனஇருள் அகன்றது காலையும் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி

எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள்ள தெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தரு ளாயே!''

என்று பாடுகின்றார். காலைப்பொழுதை அறிவிக்கும் ஆழ்வார் அக்காலத்தில் விளங்கி நிற்கும் அழகுவாய்ந்த் பொருள்களைக் கற்பனை நயத்தோடு படம் பிடித்துக் காட்டு கின்றார். பின்னர் வரும் தம் பாசுரங்களில் அந்த அழகுப் பொருள்களின் நிலைகளைத் தெளிவாக வரைந்து காட்டுகின் றார். பரம்பொருள்மீது தாம் கொண்ட ஈடுபாட்டினை விளக்க வந்தவர் எம்பெருமானையும் அவனால் படைத்தருளப் பெற்ற பொருள்களையும் நினைவு கூர்ந்து போற்றுகின்றார். போற்றித் தம் கவிதையின் நயம் விளங்கவே பாடுகின்றார்.

இவரைப் போன்று மாணிக்கவாசகரும் பெருந்துறையில் வதியும் பெருமானை அருமையாகவே பள்ளியுணர்த்திப் பாடு கின்றார். இவர்தம் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கும் அப்பரம்பொருளினை ஒப்புயர்வற்ற நிலையில் உயர்த்திப் பாடுகின்றார்.

எனக்கு ஆதாரமாகவும் அனைத்துயிர்களுக்கும் ஆதார மாகவும் உள்ள பரம்பொருளே! உன்னைப் போற்றுகின்றேன்.

கடமையை உணர்த்தும் காலைப்பொழுது வந்தது. உன் னுடைய பூப்போன்ற அடிகளைப் பூசிப்பதற்கு உரிய பூக்கள் மலர்ந்திருக்கின்றன. அப்படி அப்பூக்கள் மலர்ந்திருப்பதைப் போன்று உன் முகமலர்ச்சியைக் கொண்டே எமக்கு அருள் புரியவேண்டும். முகமலர்ந்தே அழகுடன் சிரிப்போடு விளங் கும் அருளாளனான உன் திருவடியைச் சேவித்து வழிபடுகின் றேன். சேற்றிலே உள்ள செந்தாமரை மலர்ந்துள்ளது. குளிர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்துள்ள பெருந்துறை என்னும் அருமைப் பதியில் உறையும் சிவபெருமானே! நீ எருதுக் கொடியை உடையவனாவாய். நீயோ! என்னை ஆளும் ஐயனும் ஆவாய்! இத்தகைய சத்தியசீலனான நீயோ

பள்ளியை விட்டு எழுந்திருப்பாயாக. உலகத்தினை நடத்தும் நீ! உறங்குதல் ஏற்புடையதாகாது,சாதனை புரியும் நீ! எழுந்து வந்தே உதவுதல் விழுமியதாகும் என்றுணர்த்தும் மணிவாசகர்.

"போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுதோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!"

என்று பாடுவார். இதில் காலைப் பொழுது புலர்ந்தது ஆதலால் எழுந்து வந்து சிரிக்கும் மலர் முகத்தால் எனக்கு அருள் செய்வாயாக! என வேண்டுகின்றார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் மேலும் அவனை உணர்த்தி எழுப்ப முயல்கின்றார். பறவைகள் பாடிச் செல்கின்றன; பூக்கள் மிகுந்துள்ள சோலையை நாடி அவை செல்கின்றன. கதிரவன் தோன்றியதால் இருள் விலகியது; கீழ்த்திசையி லுள்ள கடல் ஒலியை எழுப்புகிறது; தேனை உண்ணும் களிப்பில் வண்டுகள் இசைக்கின்றன; தேவர்கள் மாலையைக் கட்டிக்கொண்டு உன் திருவடியில் வைத்துப் பணிவதற்காகச் சூழ்ந்து நிற்கின்றார்கள்; மற்றும் இலங்கையை ஆளும் வீபீடண ஆழ்வாரும் உன் கோயிலில் வந்து பாடுகின்றார்; எனவே, எம்பெருமானே! நீ துயில் கொள்வதை விடுத்து, எமக்குதவ எழுவாயாக என்று கூறுபவர்.

"புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த

அலங்கல்அம் தொடையல் கொண்ட டியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!"

என்று பாடுவார். இவர் அரங்கனைப் பாடி எழுப்புதல் போன்று மணிவாசகரும் திருப்பெருந்துறை அம்மானை எழுப்புகின்றார். பூஞ்சோலையில் குயில்கள் கூவுகின்றன. கோழியும் கூவுதல் காண்க! பறவைகளும் இசைக்கின்றன. சங்குகள் ஒலிக்கின்றன. வானில் விண்மீன்கள் ஒளி மங்கின. காரணம், கதிரவன் உதித்ததாலே மங்கின. ஆதலால், காலைப் பொழுதினை உணர்ந்து எழுந்து வந்து உன் அழகு பொருந்திய பாதமலரைக் காட்டுவாயாக! பெருந்துறையில் வதியும் பெருமானே! நீயோ போற்றாதவர்களுக்குக் கிட்டுவதற்கு அரியவனாயுள்ளாய். எனக்கோ கிட்டுகின்ற எளியனாகவே ஒளியுடன் மிளிர்கின்றாய்! எனவே, துயில்வதை விட்டுத் துதிக்கும் எனக்கு அருள் சுரப்பாயாக என்று.

"கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே;
யாவரும் அறிவரி யாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!"

என்று பாடுவார். பரம்பொருளைக் காலைப் பொழுதில் பாடுவதால், பாடிப் பணிவதால் அவன் பயனை எய்த வியலும் எனக் கருதிய தொண்டரடிப்பொடியாழ்வாரும் மாணிக்கவாசகரும் மனம் உருகியே எம்பெருமானுக்குப் பள்ளியெழுச்சி பாடிப் பயன் கண்டார்கள். ஆம், அவனின் பாதமலரை அவர்கள் அடைந்தார்கள். அந்த வகையில் நாமும் அவர்கள் இசைத்து அருளிய இன்பப் பாடல்களைக் காலைப் பொழுதில் ஆவல் மேவிப் பாடி அருளாளனின் திருவடிப் பேற்றினை எய்திடுவோமாக! எம்பெருமானின் அடியார்களாக இலங்குவோமாக!!

# அன்பிலே உறையும் அருளாளன்

இறைவன் திருவருளைப் பெறுபவர்களே அருளாளர்கள் இவர்கள் மக்களின் மேம்பாட்டிற்காகவே பாட்டிசைத்தார்கள். மக்கள் சிறந்து வாழ்கின்றபோதுதான் சமுதாயமும் சிறந்து விளங்கும் என்றும், அறத்தைப் பேணி வாழ்பவர்களே சமுதாயத்தைக் காப்பவர்களாவார்கள் என்றும், அந்த அறநெறியாளர்களே இறைவனைப் பாடும் இனியவர்களாவார்கள் என்றும் கருதியே அன்பாலே இறைநெறியில் ஆழங்கால் பட்டவர்கள், சமுதாயத்தையும் சமுதாயத்தில் நலிந்து கிடப்பவர்களையும் உயர்த்துவதற்காகவே இறைவனிடம் இறைஞ்சிப் பாட்டிசைத்தார்கள்.

அன்புடையவர்களின் இனிய மனமோ தூய்மையுடையதாகவே இலங்கும். தன்னலமுடைய துறவிகள் மௌனமாக எதையும் வெளியிடாமல், சொல்லாமல் தாம் மட்டும் இறையின்பம் அனுபவிக்கவே முயல்வார்கள். இவர்கள் குறையுடைய பேர்வழிகளே. அன்புடையவர்கள் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பொது நோக்கால் பிறரும் அனுபவிக்கவே பாடியருளினார்கள்.

தம் அருளிச் செயல்மூலம் உலகத்தோர் அனுபவிக்கவும் இறையின்பத்தில் ஆழங்கால் படவும் வழி காட்டினார்கள். செவ்வியுடைய உலகப் பெரு மாயனை ஒவ்வொருவரும் அனுபவிக்க அனுபவித்து அடைய தூய மனமும் அன்புணர்வும் பெற்றிருத்தல் வேண்டும். சீரான அமைதியையுடையமனமே ஆராவமுதனையேகோரிப்பெறவியலும் என்று

அருளாளர்கள் கூறினார்கள். தூயமனமுடைய நேயர்களையே மாயவனும் விழைவான் என்பதைக் கரும்பனைய பாடல்களால் அருளினார்கள். அகத்தூய்மையைப் பற்றியும் புறத்தூய்மை யைப் பற்றியும் கூறிய திருவள்ளுவர்,

''புறந்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும்''

என்றார். புறத்தே விளங்கி நிற்கும் உடம்பு முதலானவற்றைத் தூய்மைப்படுத்த நீர் தேவைப்படுகிறது; அகம் எனும் மனத் தைத் தூய்மைப்படுத்த வாய்மை தேவைப்படுகின்றது என்று அவர் தெளிவுபடுத்தினார். இவ்வாய்மையோ நம்மை மெய் யுணர்வில் தலைப்பட வைப்பது; உண்மையாகிய வாய்மையோ மெய்யுணர்வைக் காட்டுவது. இத்தகைய அகத்தூய்மையைப் பெற்றுள்ள அன்புடையார் நெஞ்சத்தில் அருளாளன் விரும்பிக் குடியிருப்பான் என்று சான்றோர்கள் புகல்கின்றார்கள். உண்மையைக் கூறுவதும், பிறருக்குத் தம்மிடத்தில் உள்ள தையே கொடுப்பதும், நல்லதையே செய்வதும் அன்புடையவர் களின் கடப்பாடாகும். விரிந்த இந்தச் சிந்தையுடையவர் களைப்பற்றி ஆழ்வார்களும் அடியார்களும் படம் பிடித்துக் காட்டும் வகையில் பாடிச் சென்றார்கள். நானிலம் புரக்கும் நாராயணனின் சீர்த்தியினை நல்ல மனம் இல்லாதவர்கள் காணவே இயலாது. இவர்களின் மனத்தை இன்னமுதனும் விழையான். எம்பெருமான் கரவு மனம் கொண்டவர்களோ காணவியலாதவாறு மறைந்தே உறைவான்.

பொங்கியெழும் உணர்வால் புனிதனைக் காண்பதற்கு இனிதே வேண்டுவோர்பால் சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக் கையன் சென்று நிற்பான். தேனைக் கொண்டுள்ள மலர்களை நாடிச் சுவைக்கவே வண்டுகள் சென்று தங்குதல் போன்று அன்புடையார் மனங்களிலே அருளாளன் விரும்பிச் சென்று தங்குவான்.

இருளை விரட்டுவதே ஒளியாகும். இதைப்போன்று அன்புள்ளம் கொண்டவர்களின் துன்பங்களை எம்பெருமான்'

விரட்டிடுவான். அப்பெருமானே அன்பின் திருவுருவமாகவே திகழ்கின்றான் என்பதைப் பொய்கையாழ்வார்,

"அன்பாழி யானை யணுகென்னும் நாஅவன்தன்
பண்பாழித் தோள்பரவி ஏத்தென்னும்"

என்று பாடித் தெரிவிக்கின்றார். இதில் அவருடைய நாக்கு அன்பை ஆழியாகப் பெற்றவனை அணுகுவாயாக! என்றும் அவனது பண்பை விளக்கும் ஆழியைப் பெற்ற திருத்தோள்களை ஏத்துவாயாக! என்றும் உரைப்பதாகக் கூறுகின்றார்.

அவரை அறியாமலேயே அவர்தம் நாக்கு இயம்புவதாகத் தெரிவிக்கின்றார். நான் மறந்தாலும் என் 'நா' மறவாது "நமசிவாயத்தை" என்று அடியார் ஒருவர் பாடுவதைப் போன்றே பொய்கையாழ்வார் தம் மெய்யுணர்வின் தன்மையை வெளிப்படுத்துகிறார். அவருடைய நாக்கு எம்பெருமானையே பேசுவதும் பாடுவதும் ஆகிய பண்பிலே தோய்ந்து தோய்ந்து பழக்கப்பட்டுவிட்டதால், அவரை அறியாமலேயே அவர் நா பரவி ஏத்திடவே அணுகுவாயாக என்று அவரிடம் இயம்புவதாக எடுத்துப் பேசுகின்றார்.

அடுத்து, திருமழிசை ஆழ்வார் திருச்சந்த விருத்தத்தில்,

"அன்பிலன்றி ஆழியானை யாவர் காண வல்லரே"

என்று பாடுகின்றார்.

இதில் நம் நெஞ்சில் அன்பு இல்லாமல் போனால் ஆழியென்னும் சக்கரத்தைக் கையில் உடையவனைக் காணவியலாது என்கின்றார். எப்படிப்பட்ட வல்லவர்களாக இருந்தாலும் அவர்கள் நெஞ்சில் அன்பு இல்லையென்றால் எம்பெருமானைக் காண்பது அரியதாகும் என்கின்றார் அவர்

இன்னமுதன் அன்பின் வடிவமாக இருக்கின்றான். அவன் அன்புடையார்களையே நேசிக்கின்றான். ஆதலால் அன்புடையவர்களாலே அவனைக் காணவியலும் என்று திருமழிசைப்பிரான் தெரிவிக்கின்றார்; இந்தக் கருத்தை "அன்பிலன்றி" என்னும் தொடரால் உறுதிப்படுத்திக் காட்டுகின்றார்.

மேலும் ஆழ்வார்களுள் தலைமை சான்றவராகப் பேசப் படுகின்ற நம்மாழ்வார், எம்பெருமான் யாரை விரும்புபவன் தெரியுமா? செம்மையை விரும்புகின்ற அன்புடைய அடியார் களையே விரும்புவான் என்றே விளம்புகின்றார். எனவே, அவனை அடைய விரும்புபவர்கள் மெய்யர்களாக, அன்பர் களாக இருத்தல் வேண்டுமென்பதை,

"அன்பனாகும் தனதாள் அடைந்தார்க் கெல்லாம்
செம்பொன்ஆகத் தவுணன் உடல் கீண்டவன்
நன்பொனேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
அன்பன் நாளும்தன் மெய்யர்க்கு மெய்யனே!"

என இத்திருவாய்மொழியில் அன்பர்களையே தன் அடியார் களாக விரும்பும் பண்ணவமூர்த்தியின் பண்பினை எடுத்துக் காட்டி இனிது பாடுகின்றார். இப்பாசுரத்தில் அவன் திருவடி களை அடைந்தவர்கள் யாவராயினும், அவர்களிடத்தில் எம்பெருமான் அன்பனாகவே இருப்பான் என்கின்றார். இத் தகையவன் பொன்மயமான உடம்பைப் பெற்ற இரணியனை இருபிளவாகப் பிளந்தான். ஏன்? அவனைப் பிளந்தான்; அந்த இரணியன் தன்னையும் கேவலம் செய்தவன் என்றும், தன் அன்பான பிரகலாதனையும் துன்புறுத்தியவன் என்றும் அவனோ தன் மனத்தில் சிறிதும் அன்பே இல்லாமல் கொடுமை செய்தவன் என்றும் எம்பெருமான் நரசிங்கனாய்த் தோன்றி அவனை இருபிளவாகப் பிளந்தான் என்று இயம்பு கின்றார். எம்பெருமான். பொன்னால் சட்டப்பெற்ற மதில்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரத்தில் இருக்கின்றான் என்று கூறியவர் அங்கே அவன் அன்புடையவனாகவே இருக்கின்றான் என்றும் இயம்புகின்றார். அன்பர்கள் அவனிடத்தில் சென்றிறைஞ்சி னால் அவன் மெய்யனாகவே வந்து அவர்களுக்கு அருள் பாலிப் பான் என்றும் கூறுகின்றார். இப்பாசுரத்தால் ஆராவமுதனை அடைபவர்கள் மெய்யன்புடையவர்களாகவே இருப்பார்கள் என்றும், எம்பெருமான் இவர்களிடம் மெய்யன்பனாகவே காட்சிதருவான் என்றும் நம்மாழ்வார் நவில்கின்றார்.

மனிதனுடைய அகத்திலே இருப்பது, அன்பேயாகும். புறத்திலே இருப்பன மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன வாகும். இந்தப் புற உறுப்புகள் எல்லாம் அக உறுப்பான அன்பின் துணைகொண்டு இயங்கும்போது அநீதிகளைச் செய்தல் இல்லை; அன்பால் அவை பெருமை எய்துகின்றன. இந்த அன்பென்னும் அகத்தின் உறுப்பேதான் ஒருவனை நல்வழிப்படுத்தி இறைவனிடம் சேர்க்கின்றது; இந்த இனிய அன்பின் நிலையைத் திருமூலர்,

''என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் தனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகிஅகம் குழைவார்க்கன்றி
என்போல் மணியினை எய்த ஒண்ணாதே!''

என்று பாடுகின்றார். இப்பாடலில் எலும்பை விறகாக எரியும்படி செய்து, சதையினை அதில் அறுத்துப் போட்டுப் பொன்போல் அந்த எரியும் தீயில் பொரியும்படி வறுத்தாலும் இறைவனைக் காணவோ? அடையவோ? முடியாது என்கிறார். ஆனால் என்னைப் போன்று அன்பினால் உள்ளம் உருகுபவர் களே மணிபோல் ஒளிரும் இறைவனைக் காணவும் அடையவும் இயலும் என்கின்றார்.

திருநாவுக்கரசரெனப் போற்றப் பெறும் அப்பர் பெருமான், இறைவனை என்பொன்னே என்றும், தேவர்கள் தொழும் திருவடிகளையுடைய நல்ல பொன்னே என்றும், நன்மை தீமையறியாத என்னைக் கவர்ந்த செம்பொன்னே என்றும், திருவீழிமிழலையில் இருக்கும் அன்பனே என்றும் போற்றி, தம்மை அவன்குறிக்கோளில் நிற்கச்செய்து அவனிடம் அருள் புரிவாயாக என்று இறைஞ்சுகின்றார். இந்தச் செய்தி களைத் தம் தேவாரத்தில்,

''என்பொனே இமையோர் தொழுபைங் கழல்
நன்பொனே நலந்தீங் கறிவொன்றிலேன்
செம்பொனே திருவீழி மிழலையுள்
அன்பனே அடியேனைக் குறிக்கொளே!''

என்று பாடித் தெரிவிக்கின்றார். இறைவன் பொன்னாகப் பெருமையுற்று இருந்தாலும் அவன் அன்பனாகஇருப்பதனால் தான் அருளும் நிலையில் சிறந்துள்ளான் என்று கூறித் தம்மை ஆட்படுத்திக்கொள்ள அவனைத் தம் அன்பு நெஞ்சால் வேண்டுகிறார்.

"பாம்பின்கால் பாம்பறியும்" என்பதைப் போன்று அன்புடைய அடியார்உள்ளத்தைஅன்பனான எம்பெருமானால் தான் அறிய முடியும் என்று இப்பாடலில் நாவுக்கரசர் நவில் கின்றார். கொள்ளையின்பப் பாடல்களை அருளிய வள்ளலான இராமலிங்கர் அன்பை அணுவாகவே உருவகப்படுத்துகின்றார். அப்படிக் கூறும் அவர் அன்பெனும் அணுவில் அமைந்திருக்கும் பேரொளி"யாகவே இறைவனைக் காட்டுகிறார். திருவருள் புரியும் பரம்பொருளை "அன்புருவாம் பரசிவமே" என்று அவனை அன்பின் வடிவமாகவே காட்டுகிறார். இதை,

"அன்பெனும் அணுவில் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே."

என்று இறைவன் அன்பின் உருவமாய் இருக்கின்றான் என்கின் றார். அவர் மேலும் அன்பெனும்பிடிக்குள் அகப்படும் மலையே என்றும் பாடுதல் காணலாம். பாரதத்தின் விடுதலைக்குப் பாட்டு முழக்கம் செய்த பாரதியார்,

"தின்னவரும் புலிதன்னையும்—அன்போடு
சிந்தையில் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி அவ்வுருவாயினள்
அவளைக் கும்பிடுவாய்! என்று

இப்பாடலில் தம் நெஞ்சத்தின் நிலையான அன்பினை வெளிப்படுத்துகின்றார்.

நம்மைத் தின்னவரும் புலியினிடம் அன்பைக் காட்டி னால், அது அடித்துக் கொல்வதை விடுத்து அமைதியாகச் சென்றுவிடும் என்று, அன்பைப் பேணுமாறு கூறுகின்றார்.

தம் அன்பினாலே புலியை அன்னை பராசக்தியின் வடிவமாகக் காண்கின்றார். அதனால் அப்புலியிடம் அன்பைச் செலுத்த வேண்டுகின்றார். மனித உடம்பெடுத்து நின்ற பாரதியார் தம்மை மறந்து அன்னை பராசக்தியுடன்; ஒன்றிவிடுவதால் அடித்துத் தின்னவரும் புலியிடமும் அன்பைக் காட்டுகின்றார். அப்புலியை அன்னைப் பராசக்தியென்று தொழுகின்றார் பாரதியாரைப் போன்று. உலகத்தாரும் போற்றினால் எல்லாப் பொருளையும் அன்னைப் பராசக்தியாகவே காணவியலும்.

இவர் மற்றோரிடத்தில் காக்கை சிறகினிலே நந்தலாலா என்ற கண்ணபெருமானைக் காணுகின்றார். தீயில் விரலை வைத்த அவர் நந்தலாலாவாகிய கண்ணனைத் தீண்டி இன்பம் காண்பதாகப் பாடித் தெரிவிக்கின்றார். இப்பாடலால் பாரதி தாம் போற்றும் தெய்வத்துடன் கலந்துவிடுவதை நாம் அறியலாம்.

எனவே, இவ்வாறு இறைவனைப் பற்ற விழைந்த ஆழ்வார்கள் முதல் பாரதியார் வரை பாடி வழங்கியப் பாடல்களைப் பார்க்கின்றபோது அன்புடையார் தம்மனத்திலே அருளாளனைப் பார்க்கவியலும் என்பது புலனாகிறது

இறைவனும் அன்பின் உருவமாகவே இருக்கின்றான் என்றும் அவர்கள் பாடிய பாடல்களால் அறிகின்றோம். எனவே, நாம் அன்புடையவர்களாகத் திகழ்ந்து, அன்பனாகிய எம்பெருமானின் திருவடியைப் போற்றி நிறைவையுடைய நிலையான வாழ்வில் மிளிர்ந்திருப்போமாக!

# சடகோபரும் இராமலிங்கரும்

நம்மாழ்வாரின் இயற்பெயர் சடகோபர். இவர் வேதந் தமிழ்ச் செய்த மாறன் சடகோபர் எனப் போற்றப் பெற்றார். நான்கு வேதங்களையும் தமிழ்ப் பாசுரங்களாகப் பாடியருளி யவர். திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என நான்கு பிரபந்தங்களைப் பாடியவற்றில் நான்கு வேதங்களின் செய்திகளைப் பெய்து பாடியதாக வேதங்களின் நுட்பம் தெரிந்த விற்பன்னர்களால் போற்றப் பட்டார் சடகோபர். இன்றும் அப்பிரபந்தங்களில் ஆழங்கால் பட்டவர்களால் போற்றப் பெற்று வருகின்றார். இத்தகைய இனிய பிரபந்தங்களைப் பாடியருளியதால் ஆழ்வார்களுள் இவர் தலைமை சான்றவராகப் புகழப்படுகின்றார்.

ஞானங்கனிந்த நிலையில் நான்கு பிரபந்தங்களை நயந் தோன்றப் பாடியருளியதால் நம்மாழ்வார் என்று அறிஞர் பெருமக்களால் பாராட்டுதற்குரிவராக மிளிர்ந்தார். எண் ணிறந்த நன்மைகளை மக்கள்பெற்றுமகிழவேஅருளுகின்றமாய பிரானை வள்ளல் எனப் பாடினார். மக்கள் மனம் நிறைவு பெறவே வழங்கு கின்ற அருட்தன்மையாலே இன்னமுதனை வள்ளலெனச் சடகோபர் மகிழ்ந்து இசைத்தார். இப்புவியில் அருளும் மனமுடையவர்களையே வள்ளல் என்று புலவர் பெரு மக்கள் பாடினார்கள்.

அவர்கள்தம்பால்இருப்பதை மறுக்காமல்கொடுக்கும்மனத் தாலே வள்ளலெனப் புகழப் பெற்றார்கள். கொடுக்கின்ற

மனவளம் பெற்றவர்களே குவலயத்தில் வள்ளலாகத் திகழ் கின்றார்கள். நல்ல மனம் இருந்தாலும் செல்வம் இல்லாமல் போனால் எடுத்துக் கொடுக்கவியலுமா? இல்லாமல் தொல் லைப்படுபவர்களும் தம்பால் இருப்பதையே அவர்கள் வருந்து பவர்களுக்கு விரும்பித் தருவதனாலேயே புலவர்களால் வள்ள லென வாழ்த்துதலுக்குரியவரானார்கள்.

இல்லையென்று சொல்லாமல், இனிது வாரி வழங்குபவர் களுக்கே மாரியெனச் செல்வத்தைச் சொரிபவனே மாதவன். இந்த மாமாயன் வரையாமல் செல்வத்தை வழங்குவதற்கு, இவன் மார்பில் அகலாமல் புகழ்வாய்ந்த திருமகள் விரும்பி இருக்கின்றாள். தட்டின்றி விரும்பிக் கேட்கின்ற வேட்கை யுடைய தம் அடியார்களுக்குப் படியளந்த பரந்தாமன் வரை யாது அருளுகின்றான். இவனே கவலையினைப் போக்கும் வள்ளலாவான். உலகைப் புரக்கும் வள்ளலாக இவன் ஒளிர் கின்றான்.

இவனைத் தவிர மற்றவர்களை வள்ளலென்று பேசவது சரியில்லை என்று சடகோபர் சாற்றுவார், இந்த உடம்பினை வளர்க்கின்ற பொருளைத் தருபவன் வள்ளலாகான்; உடம் பொடு உயிரையும் புரப்பவனே வள்ளல் ஆவான்; எனவே, உயிரைக்காக்கும் திறன் எந்த மனிதனுக்குமே இல்லையாதலால் மனிதர்களெல்லாம் வள்ளலாகவிருக்கவே இயலாது. எனவே, வள்ளல் என்று கூறுவதற்குரிய தன்மையில் ஒரே ஒருவன்தான் இருக்கின்றான். அவன் மதுசூதனன் என்று இயம்புகின்றார். சடகோபர் தம் திருவாய்மொழியில் வள்ளலான அந்த மதுசூதனின் கருணை மனத்தைப் படம் பிடித்துக் காட்டு கின்றார்.

வள்ளலே! மதுவைக்கொன்றே மதுசூதனன் என்று பெயர் பெற்றிருப்பவனே! அடியேன் அனுபவித்துப் போற்றி வரு கின்ற பச்சைநிற மலையைப் போன்றிருப்பவனே! உன்னையே நினைந்து பரவுகின்ற, அறிவையே எனக்கருளிய தெய்வமே! வெள்ளம் பெருக்கெடுத் தோடுவதைப் போன்ற இனிய புகழ்

வாய்ந்த குணங்களை உடையவனே! அடியேன் அந்தப் புகழ் ஆகிய வெள்ளத்திலே குடைந்து ஆடிப் பாடிக் களித்ததாலே முன்பு எனக்கிருந்த இடர்ப்பாட்டை யெல்லாவற்றையும் துறத்தித் தொலைத்துவிட்டேன்; உன்னை அணுக்கமுடன் பற்றி வாழும் யானோ, எவ்வாறு உன்னை விட்டே பிரிந்து வாழவியலும் என்று எம்பெருமானிடம் கேட்கின்ற வகையில்,

"வள்ளலே மதுசூதனா என்மரகத
மலையே உனை நினைந்து
எள்கல் தந்த எந்தாய் உன்னை
எங்ஙனம் விடுகேன்
வெள்ளமே புரைநின்புகழ் குடைந்து
ஆடிப் பாடிக் களித்து உகந்துகந்து
உள்ளநோய்கள் எல்லாம் துரந்து
உய்ந்து போந்திருந்தே!"

என்று பாடுவார். இதில் எல்லாவகையாலும் இறையனுபவம் பெற்ற பிறகே, பின்னர் அந்த இறையின்பத்திலிருந்து எப்படி யான் விட்டு விலகவியலும் எனக் கேட்கின்றார் சடகோபர். இப்பாசுரத்தின் இரண்டாம் அடியில் முதற்சீரில் 'எள்கல்'' என்ற சொல்லினைப் பெய்துள்ளார். இதற்கு ஈடுபாடு என்னும் ஒரு பொருளும் இகழ்ச்சி என்னும் ஒரு பொருளும் கூறப்படுகின்றது. இங்கே இகழ்ச்சி என்னும் ஒரு பொருளையே சடகோபர் ஆளுகிறார்.

"உன்னை நினைந்து எள்கல் தந்த எந்தாய்''

என்பதில் உன்னை நினைந்து யான் போற்றியதால் சிற்றின்பங்களை இகழ்ந்து வெறுத்தொதுக்குமாறு எனக்கு அருள் புரிந்த எந்தையே! எனப் புகழ்ந்து அப்பரம்பொருளைப் பரவுகின்றார். இதில் அம்மாயனிடத்திலே தொல்லை நல்கிய பொல்லாத உலகத்தில் அலைந்த என்னைத் திருத்தி நல்லுலகத்தில் விளங்கிட இனிய அருளைத்தந்த நீயே! பிறவாத செல்வத்தை வழங்கிய வள்ளலாவாய் என்று உள்ளக் களிப் பெய்திடச் சடகோபர் தெரிவிக்கின்றார்.

சடகோபர்தம் சால்பறிந்தே அவர் நெறியில் ஒன்றிய இராமலிங்கரும் பாடியிருத்தல் காணலாம். இராமலிங்கர் ஆறு திருமுறைகளை வழங்கிப் பேரருளாளனான சிவபெருமான் திருவடியிலே மக்கள் நிற்க, நின்று போற்றிட, நலம் பெற்றிட வழிகாட்டுகின்றார்.

மதுசூதனனை வள்ளலெனக் கூறிய சடகோபர் நெறியிலே இராமலிங்கர் சிற்றம்பலத்தானை வள்ளலென வாய் இனிக்கப் பாடுகின்றார். சிவபெருமான் கருணையுடையவன்' அவன் நம் கண்ணினுள்ளிருக்கும் மாமணியாவான்; கருத்தினுள்ளிருக்கும் தெள்ளமுதமாவான்; மருட்சியை விரட்டும் மருந்தாவான்; அவன் வல்லமை பெற்ற வள்ளலாவான்; சிற்றம்பலம் என்னும் பதியில் நிற்கும் புகழ்வாய்ந்த நிறை பொருளாவான்; அவன் இன்பமருளியே நம்மை ஆளும் புண்ணியனாவான்; அந்தப் புண்ணியனே இப்போது, வருகின்ற தருணமாகும்; ஆதலால் அவனை எண்ணியே நானிங்கிருப்பதை அப்பரம்பொருளின் திருவுள்ளம் அறியுமென்று தெரிவிக்கும் இராமலிங்கர்,

"கருணையம் பதிநங் கண்ணுள்மா மணிநம்
 கருத்திலே கலந்ததெள் ளமுதம்
மருள்நெறி தவிர்க்கும் மருந்தெலாம் வல்ல
 வள்ளல்சிற் றம்பலம் மன்னும்
பொருள்நிறை இன்பம் நம்மை ஆண்டளித்த
 புண்ணியம் வருகின்ற தருணம்
தருணம்இப் போதென் றெண்ணிநான் இருக்கும்
 தன்மையும் திருவுளம் அறியும்!"

என்று திருவருட்பாவின் பிள்ளைப் பெரு விண்ணப்பத்தில் பாடுகின்றார்.

சடகோபர் எம்பெருமானைப் பெருகி வரும் வெள்ளம் போன்று வந்தருளும் வள்ளல் என்றே புகழ்வார்; இராமலிங்கர் அவனைப் பொருள் நிறைந்த வள்ளல் என்று போற்றுவார். வள்ளல் என்று பேசப்படும் பரம்பொருள் வாரி வழங்குவதில்

வெள்ளம் போன்றவன் என்றும் பொருள் நிறைந்தவன் என்றும் இவர்கள் இருவரும் உவந்துரைத்தார்கள்.

கண்ணபெருமான் தன் கனைகழல்களைக் காட்டி தம் அடியார்களுக்குக் கடுநரகம் இலலையென்றொழித்து நல்ல தோர் பெரும் பதம் அருளிடுவான் என்று சடகோபர் சாற்று வார்; எம்பெருமானின் அருளினைப் பெற எண்ணும் அடியார் களுக்கு ஆழியாகிய சக்கரத்தையுடைய அம்மாயன் வந்தருள் வான்; அவனோ அடியார்களுக்கெல்லாம் அருள் தரவே இருக் கின்றான். அப்படி ஒப்புடன் முகமலர்ந்து அருள்வோனையே நாடி நலம் பெறுதலே விதியெனக் கருதி மதிநலத்தோடு போற்றுதல் ஏற்றமாகும்.

இந்த இருள் சூழ்ந்த உலகத்தில் மீண்டும் பிறப்பெடுத்து வருதல் பெருந் துன்பம் ஆகும்; அந்தப் பிறவியாகிய துன்பத்தை ஒழிக்க என் நேஞ்சே! நீ, வாட்டாறு எனும் பதியில் வதியும் பரம்பொருளின் அடிமலரில் சரணடைவாயக எனக் கூறிய சடகோார்,

"அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு, ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான்; அதுநமது விதிவகையே
இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன்
மருள்ஒழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே!"

என்று தரவு கொச்சகக் கலிப்பாவால் பாடுவார். இதில் அருள் பெறுவார் என்று முதலடியிலும் அருள் தருவான் என்று இரண்டாம் அடியிலும் குறித்தார், "அருள் பெறு வார்" என்றதில் அடியார்கள் அவனருளைக் கோரிப் பெறுவ தைக் குறித்தார். "அருள் தருவான்" என்றதில், வேண்டும் அடியார்க்குஇறைவன் இரங்கி வந்தே அருள்வதைக்குறித்தார். அருள் என்னும் சொல் தயவு, இரக்கம், கருணை ஆகியவற் றைக் குறிக்கும்" தயவுடன் கோரும் அடியாருக்குத் தயவுடன் வந்தே இறைவன் அருள்வான் என்பதை அறியலாம். தயவாகிய பரம்பொருளைத் தயவுடன் அடியார்கள் வேண்டி னால்தான் வயப்பட்டு "அருள் தருவான்" என்று சடகோபர்

தம் பாசுரத்தில் சாதித்தல் அறியலாம். மேற்குறித்த பாசுரத்தின் இரண்டாம் அடியின் முதற்சீரில் அருள் தருவான் என்பதில் எம்பெருமான் தயவுடன் தன்னடியாருக்கு உவந்து வந்தே அருள்வான். என்பதைத் தெரிவித்தல் காணலாம். இவரை அடியொற்றி இராமலிங்கர் கருணையுடைய இறைவனைத் தயவு என்றே அப்பரம்பொருளினைச் சாற்றுவார். மக்களிடம் இன்றே இறைவனாகிய தயவுடையான் வருகின்ற தருணமென்று அவர் பாடிக்கூறுகின்றார். ஆம் சத்தியமாய்ச் சொல்கின்றேன், அருளாளன் வருகின்ற தருணம் இதுதான் என இயம்புகின்றார்; வருகின்ற சத்தியசீலனிடத்தில் நித்திய வாழ்வினை நாம்பெற்றிடலாம் என்றும் அவர்களிடம் உறுதியாகப் பேசுகின்றார். அவனால் நாமோமயக்குகின்ற பொருளினிடத்தில் வயப்படாமலிருக்க இயலுமென்கின்றார்; அந்தப் பெருமானால் இப்பூமியிலே மகிழ்வுடன் திகழவியலும் எனவும் விளம்புகின்றார். அவனாலே, அழிகின்ற பொருள் எவற்றையும் நாம் கருதாமல் அகத்தினிலே நிலையான ஆனந்த வாழ்வினையே காணப் போகின்றோம் என்றே தெளிவுடன் இருப்பதற்கு வழி கூறுகின்றார். இவற்றை இயல்பாக வந்து நம்மை வயப்படுத்தும் இன்ப இசையே தெரிவிக்கின்றது. இனி நம் வாழ்வில் இன்னல் இல்லை; இன்பம் நல்கும் பொன்னொளியே தோன்றப் போகிறது என்றே கூறுகின்றார். இதில் நித்தியம் என்பதால் பிறவாத இறவாத நிலையைப் பொன்னொளி என்று குறித்ததாலே இறைவன் அருளால்பெருமையுறுவதையே கூறினார். இச்செய்தியினை இராமலிங்கர்.

"தயவுருகின்ற ஒரு தருணமிது தானே
சத்தியம்மென் றறிந்திடுமின் நித்தியம்பெற் றிடலாம்
மயலறிவு கொண்டினிமேல் மலங்கிடுதல் வேண்டாம்
மன்னருளின் உணர்வாலே மாநிலத்தில் மகிழ்ந்து
அயலறியா தெல்லாரும் அகவுரிமை கொண்டே
ஆனந்த வாழ்வுறுதற் கானஒரு அமையம்
இயலாக இன்றுவந்தே இசைத்திட திதனால்
இன்னலிருள் கழிந்தெங்கும் பொன்னொளி தங்கியதே!

என்று இந்த எண்சீர் விருத்தப்பாவால் இயம்புகின்றார் கருணை மனங் கொண்டவன் கண்ணன்; அவன் அருளைப் பெற வருகின்ற அடியார்க்கோ அருள் தருபவன். அந்த அடியார்களோ இருள்தருமா ஞாலத்து இனிப் பிறவி வேண்டாமென்று கோரியதும் மாயபிரானே அவர்களின் மருள் ஒழியச் செய்து அருள் உலகத்தில் அகமகிழ்ந்து வாழ வகை செய்வான் என்று அவனை உவந்து போற்றுவார் சடகோபர்.

மயக்குகின்ற உலகியல் வாழ்வில் ஊன்றாமல், நித்திய வாழ்வில் நிலைத்து, ஆனந்த வாழ்வில் ஆழங்கால்படச் செய்பவன் அருளாளன் என்று சிவபெருமானைச் சிந்தையால் ஒன்றி வந்தனைச் செய்து பாடுவார் இராமலிங்கர். இருவரும் இருள் தருமா ஞாலத்தில் வேதனைப்படும் மக்களை வாழ் விக்கவே ஆதாரப் பொருளான இறைவன்பால் ஈடுபட்டுய்ய வழிகாட்டுகிறார்கள். சடகோபர் ஆனந்த மூர்த்தியாய் இருக்கும் அருளாளனைத் தேன் என்றார், பால் என்றார், கன்னல் என்றார், அமுதம் என்றார்; இப்பொருள்கள் யாவும் இனிப்பை நல்கும் சிறந்த பொருள்களாகும். இந்த இனிமை வாய்ந்த பொருள்களைப் போன்று இனிப்பவன் இன்னமுதன் என்கின்றார்; இவனை எண்ணி நித்தம் நினைந்து போற்று பவர்களின் ஊனில், உயிரில் உணர்வில் இவன் நின்று இனிப்பை யருள்வான் என்று,

"தேனும் பாலும் கன்னலும் அமுதமாகத் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வில் நின்ற ஒன்றைஉணர்ந்தேனே!"

என்று பாடுவதில் "ஒன்றை உணர்ந்தேனே" என்றதில் பரம்பொருளினையே உணர்ந்ததாகச் சடகோபர் தெரிவிக் கின்றார்

இராமலிங்கரும் நடராசனான எம்பெருமானோ நினைப் பவர்களின் நெஞ்சங்களில் எப்படி இனிப்புடன் நிற்கின்றான் என்பதை,

"தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்படியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டில் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும்தெள்ளமுதே!"

என்று பாடிக் காட்டியதால் அறியலாம். இங்கே எம்பெருமானை ஏத்திய சடகோபரும் இராமலிங்கரும் இனிப்புக்குரிய பொருளாகவே எம்பெருமானைக் காட்டிப் போற்றுகின்றார்கள். இனிப்புப் பொருள்களைக் கூறி அவன் இனிமையாகவே இருந்து, போற்றும் அடியார்களின் உயிரில் ஊனில் உணர்வில் தங்கிஇனிமையையூட்டி விளங்கி நிற்பான் என்று சடகோபரும், எல்லா இனிப்புப் பொருளினும் அவன் இனிமையுடன் அடியார்களுக்கு இன்பமருள்பவன் என்று இராமலிங்கரும் போற்றியே சிறப்பித்தார்கள்.

பிறவித்துயரை நீக்க மருந்து இறைவனே என்கின்றார் சடகோபர். இறைவனை மறவாமல் மனத்துள் வைத்து ஞானம் எய்தியவர்களுக்குப் பிறவித்துயர் அறுந்து விடும் என்றார் அவர், இதை.

"பிறவித் துயரற ஞானத்துள் நின்று
துறவிச் சுடர்வி ளக்கம் தலைப்பெய்வார்
அறவனை ஆழிப் படைஅந் தணனை
மறவியை யின்றி மனத்து வைப்பாரே!"

என்று திருவாய் மொழியில் பாடித் தெரிவித்தார். இராமலிங்கரும் இப்பிறவித் துயரை ஒழிக்க

"பிறப்பை ஒழிக்கும் மருந்து—யார்க்கும்
பேசப் படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கும் மருந்து—என்னுள்
என்றும் மதுரித்து இனிக்கும் மருந்து"

என்று இசைப் பாடலில் தெரிவிக்கின்றார். பிறந்து பிறந்து உழன்று உழன்று இறப்பதைத் தவிர்க்க நன்மருந்தான இறை

வனை மனத்துள் வைக்க சடகோபரும் இராமலிங்கரும் இனிய வழியினைக் காட்டினார்கள்.

நம்முடைய பிறவித்துயரை அறுக்கும் மருந்தான பரம் பொருளைத் தேன் என்றும் நல்ல பாலென்றும் கன்னல் என்றும் அமுது என்றும் பேசும் சடகோபர் அவனை உலகுண்ட அம்மான் என்றும் நான்முகனைத் தன்கொப்பூழில் பூத்தத் தாமரை மலரில் தோற்றுவித்தவன் என்றும் கூறினார். அவர், அம்மாயனை ஆயிரம் பாசுரங்களால் பாடியவற்றுள்ளே பத்துப் பாசுரங்களால் திருச் செங்குன்றூரில் அமர்ந்துள்ள ஐயனைப் பாடியுள்ளேன் என்றார். இப்பத்துப் பாசுரங் களைப் பாடுபவர்கள் எல்லாரும் பிறவித் துயரை அறுத்து வானுலகத்தில் அவன் திருவடி நீழலில் அமர்வார்கள் என்பதைத்

"தேனை நன்பாலைக் கன்னலை யமுதைத்
திருந்துல குண்டஅம் மானை
வான நான்முகனை மலர்ந்ததண் கொப்பூழ்
மலர்மிசைப் படைத்தமா யோனைக்
கோனைவண் குருகூர் வண்சட கோபன்
சொன்னவா யிரத்துளிப் பத்தும்
வானின்மீ தேற்றி யருள்செய்து முடிக்கும்
பிறவிமா மாயக்கூத் தினையே!"

என்று மடைதிறந்த வெள்ளம்போல் பாடுவார் சடகோபர். இவர் நெறியில் நின்று தேனே, அமுதே என்று இராமலிங்கர் சிவபெருமானைப் பாடியுள்ளார். அப்பெருமான், போற்றும் அடியார் உள்ளத்தில் ஒளியாய், உணர்வாய், உயிருக்குயிரான வனாய், என்னைத் தனதாக்கிக் கொண்டவனாய், தலைவ னாய், அம்மாவாய், அப்பாவாய் இருக்கும் அவனுக்குத் தாம் அடைக்கலம் என்பதை,

''தேனே! அமுதே! சிற்சபையில்
சிவமே! தவமே செய்கின்றோர்
ஊனே புகுந்தே ஒளியேசெய்
உணர்வே! என்றன் உயிர்க்குயிராய்
வானே! என்னைத் தானாக்கு
வானே! கோனே! எல்லாம்வல்
லானே! ஐயா! அம்மா! என்
அப்பா! யான்உன் அடைக்கலமே'

என்று பாடுவார். கோனாகிய பரம்பொருளின் திருவடியைப் போற்றினால் ஞானத்தில் நின்று பிறவித் துயரை அறுக்கலாம் என்றும் அவன் திருவடி நீழலிலே நிற்கவியலும் என்றும் உயிர் வாழும் காலத்தில் எம்பெருமான் பற்றில் ஒன்றிநின்றாலே மண்ணுலக வாழ்வில்மாட்சியுறலாம் என்றும் சடகோபரும் இரமலிங்கரும் பாடினார்கள். இறைவனை வள்ளல் என்றும் அருள் தன்மையுடையவனென்றும், தேனென்றும், பாலென்றும் 'கன்னலென்றும்' 'அமுதம்' என்றும் கூறியதோடு தலைவனாகிய கோனென்றும் அவனுக்குமேல் வேறொரு தலைவன் இல்லையென்றும் கூறி மன்பதையில் வாழும் நம்மையெல்லாம் அவனைப்பாடி வாழவும் போற்றி உய்யவும் இந்த இருபெருமக்களும் வழிகாட்டிச் சென்றார்கள். இவர்கள் வழியில் மாண்புறுதல் நமக்குப் பெருமையாகும்.

## பண்ணிசைத்து நிற்போம் பரிந்து

*(நேரிசை வெண்பா)*

தேனாகிப் பாலாகித் தீங்கரும் பாகியே நம்
ஊனெல்லாம் தித்திக்கும் உத்தமனை—ஞானத்தால்
கண்டுணர்ந்து போற்றிக் கருத்தினில் வைப்பதற்குப்
பண்ணிசைத்து நிற்போம் பரிந்து!

# அனைத்தும் ஒன்றே!

''ஒன்றே பலவாகி உள்ளதுஅப் பேரொளியே
ஒன்றாகி இன்பம் உவந்தளித்து—நின்றிலங்கும்
தெய்வமோ ஒன்றென்றே சேர்ந்தொன்றாய்ப் போற்றியே
மெய்ஞ்ஞானத் துய்வோம் மிளிர்ந்து.'' (கவியமுதனார்)

தெய்வம் ஒன்றுதான். அது பலவாகி மக்கள் விருப்பத்திற் கேற்ப ஆனது, இவ்வாறு ஆக்கப் பெற்ற தெய்வம் எங்கும் பேரொளியாகி ஒன்றே என நின்றது. அப்பேரொளியோ எண்ணி ஏத்துபவர்களுக்கே உவந்து இன்பம் அளிக்கவல்லது. இவ்வாறு செவ்விகாட்டி இலங்கும் தெய்வத்தை ஒன்றே என மக்கள் அனைவரும் தம் மனத்தாலே ஒன்றி நின்று போற்றி வந்தாலே, அவர்கள் மெய்ஞ்ஞானம் பெற்று மிளிர்ந்து வாழ்வார்கள் என்று கவியமுதனார் மேற்குறித்த வெண்பாவில் பாடினார்.

பிறபொருளின் மேல் கவனம் செலுத்தாது இறைவன் ஒருவனே என அவனை மனத்தின் கண் ஒன்றி நிற்குமாறு போற்றினாலே அந்த ஆற்றல் சான்ற பரம்பொருள் திருவருளைப் பொழிவான் என்று நம்மாழ்வாரும் தம் திருவாய் மொழியில்,

''ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனெனும் இவரை
ஒன்றநும் மனத்துவைத் துள்ளினும் இருபசை அறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனுடை நம்முடை நாளே!

என்று பாடுகின்றார்.

இப்பாசுரத்தில் ஒன்றான தெய்வமே பலவாகியது. அஃதே அறிவாகி. அருவமாகி நின்றது. பின்னர் அது மக்கள் விருப்பத்திற்கேற்ப நாராயணனாக நான்முகனாக அரனாக உருக்கொண்டது. இவ்வாறு ஆன அந்த ஒன்றான பரம் பொருளை நம் மனத்தில் ஒன்றி நிற்பதற்கு நம்மிடையேயுள்ள நல்வினை தீவினையாகிய பசைகளை நீக்கிவிட வேண்டும். அப்படி நீக்கினாலே அவனோடு நாம் சேர்ந்தே இன்பம் அனுபவிக்க இயலும் என்று தெரிவிக்கின்றார்.

இதில், பலவான தெய்வத்தை ஒன்றே என்று எண்ணிப் போற்றுவதே சால்பென்றார். போற்றுங்கால் பிறவியைத் தரும் தீவினை நல்வினை ஆகிய பசைகளையே நம் மனத்தி லிருந்து அகற்றிவிட வேண்டும் என்றார். அப்படி அகற்றி னால்தான் ஒப்பில்லா அப்பனான எம்பெருமானோடு சேர்ந்து இன்புறுகின்ற நாள் ஏற்படும் என்று நம்மாழ்வார் நயம்படப் பாடினார்.

இதிலிருந்து தெய்வம் ஒன்றே என்று அறிகின்றோம் அன்றோ? அந்த ஒன்றான தெய்வத்தை நம் முள்ளத்திலே ஒன்றி நிற்கவே பக்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இருவினை அறும். இருவினை அறுந்து அழிந்து போனதும் அவனின் திருவடிப்பேறு நமக்குக் கிட்டும் என்றார். எனவே, எளிவந்த பிரானாகவுள்ள அவனை எளிதாகப் பற்றிடவே நமக்கு நல்வழிகாட்டினார். நம் நாட்டில் முன்னாளில் இறைவன் ஒன்றெனப் போற்றப் பெற்று வந்தது.

அந்தப் பரம்பொருளை உணர்த்தும் மதமும் அக்காலத் தில் ஒன்றாகவே இருந்தது. இந்நிலை மாறி பின்னாளில் பலவாக மதங்கள் உருக்கொண்டன. மக்கள் விருப்பத் தாலே ஒன்றாயிருந்த மதம் பலவாகியது. ஒரு பெரிய ஆலமரத்திலே கிளைத்த விழுதுகள் பலவாய் ஆதல்போல, முன்னாளில் வேதமதமென்று போற்றப்பெற்று ஒன்றாயிருந்த அது, மக்கள் விருப்பத்திற்கேற்ப பலவாக அமைக்கப்பெற்றது.

அவ்வாறு மக்களால் அமைக்கப்பெற்ற அவை வைணவம், சைவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என ஆறாக ஆயின. இந்த ஆறு மதங்களும் முறையே திருமால், சிவன், சக்தி, கணபதி, முருகன், சூரியன் எனப் போற்றப் பெறும் தெய்வங்களை உருவாக்கின; ஒன்றாயிருந்தபோது அத்தெய்வத்திற்குப் பெயரில்லை, வடிவமும் இல்லை. பின்னர் ஆறாகக் கிளைத்த போது வடிவமும் பெயரும் தோன்றின. மக்களே அப்பெயர்களைச்சொல்லியும் வடிவத்தை அமைத்தும் வழிபடலாயினர். இவையன்றி இத்தெய்வங்களை விவரித்துப் புகழ்ந்து கூறும் வகையிலே புராணங்களையும் படைத்தார்கள்.

இவ்வாறு அமைக்கப் பெற்ற அவை மக்கள் நலங்கருதி ஏற்படுத்தப் பெற்றன. இவ்வாறு அமைத்தவர்கள் தொடக்க காலத்தில் பேதமில்லாமல் அனைத்தையும் ஒன்றாகவே கருதிப் போற்றினார்ககள். தாயும், பிள்ளையும் ஒன்றாகவிருந்தாலும் வாயும் வயிறும் அவர்களை வேறாக ஆக்குதல் போல ஒன்றான இறைவனைப் பலவாக ஆக்கியதால் மக்களிடையே என் தெய்வம் சிறந்ததென்றும் உன்தெய்வம் தாழ்ந்ததென்றும் கூறும் வேற்றுமைகளே தோன்றின; இந்த வேற்றுமை யாலே மதச் சண்டைகள் தோன்றின. நாட்டில் பகையுணர்ச்சி மலிந்து அழிவுகள் நிகழ்ந்தன. இன்றும் நிகழ்ந்து வருதல் தன்னைக் காண்கின்றோம். ஆதி மனிதன் சிந்தித்தே இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்று கண்டறிந்தான்.

ஐந்து பூதங்களான நீர், நெருப்பு, காற்று, விண், மண் இவற்றைப் படைத்த இறைவன் தன் பரிணாம வளர்ச்சியை இப்பூதங்களாலே நடத்தி வருகின்றான் என்பதை ஆதி மனிதன் கண்டறிந்தான். இவன் ஆராய்ந்து கண்டறிந்த தெய்வக் கொள்கையை எவருமே மாற்ற இயலாத வகையில் போற்றி வருவதைக் காண்கின்றோம்.

ஆதி மனிதன் நெறியை, அவன் கண்டு உணர்த்திய இறைவன் ஒருவனே என்னும் கருத்தினை அந்த இறைவனைப் போற்றும் மதமும் ஒன்றே என்னும் கருத்தினைக் குலைத்திட,

பல மதங்களும் தெய்வங்களும் தோன்றின. பிணக்குகள் உருவாயின. ஒரே மதமாய் இருந்து ஒரே இறைவனைப் போற்றிய அக்காலத்தில் பேதமில்லை, பிணக்கில்லை, அமைதியே எங்கும் நிலவின. அன்று ஒன்றாய், மனத்தாலே பேதமின்றி இருந்ததாலே, அமைதியுடையவர்களாக அன்புடையவர்களாக இருந்த மக்கள் ஒன்றாகவே, ஒன்றான தெய்வத்தையே தம் உள்ளத்தில் ஒன்றி நிற்குமாறு செய்து அவனின் ஏற்றத்தை எல்லாம் போற்றி வந்தார்கள். அவர்கள் போற்றி வந்த தெய்வத்திற்குப் பெயரும் வடிவமும் கொடுக்காமல் இனிதே போற்றி நனிசிறக்க வாழ்ந்தார்கள்.

இப்படியிருந்த போக்கைப் பின்னர் அவரவர்கள் ஆக்கம் கருதிச் செய்யப்பட்ட மாறுதல்களால் ஆறு மதங்களு ஒன்றோடொன்று சார்ந்து நிற்காமல் வேறுபட்டுப் பிணக்குக கொண்டுள்ளன என்று நல்லுள்ளம் கொண்ட சான்றோர்கள் பலர் வருந்தி இம்மதங்கள் ஒன்றுபட்டிலங்க வழி கூறினார்கள். பிணக்குகள் இல்லாமல் அந்த ஆறு சமயத்திலே உள்ளவர்கள் தாம் ஏற்றுக் கொண்ட தெய்வத்தை உள்ளத்தால் உணர்ந்து போற்றும் போது பிறதெய்வங்களை இகழாமல், தம் தெய்வம் ஒன்றையே நினைந்தேத்தினால் இன்பம்எய்தவியலும்,ஆனால் இன்பம் காணவியலாத அளவில் ஆறுவகைப்பட்ட சமயங்களால் பிணக்குகளே ஏற்பட்டன என்றுநம்மாழ்வார்கூறுவார்.

அவர், ஆறுவகைப்பட்ட சமயப் பிணக்குகளை அற்றுப் போகும்படி, வழியை ஆராய்ந்து உணர்த்தினார். உணர்த்திய வழியில் மக்களை நிற்கவும் வேண்டுமென்றார். எண்ணிறந்த உயர்ந்த குணங்களைக் கொண்டு முடிவில்லாத முழுமுதற் தெய்வமாய், அழகு நலத்துடன் விளங்கும் பரம்பொருளான அவனைப் பக்தி செய்து அந்த நெறியிலேயே மாறாமல் வணங்கினால், புறநெறிகளாகிய களைகளையே அறுத்து எறிய முடியும் என்றும் கூறுகின்றார்.

அவனை இவ்வாறு பக்தி செய்வதால் அவன் அருள்வான் என்றார். நல்லுணர்வு கொண்டும், அந்த உணர்ச்சியில்

மாறாமலும் நிலைத்து நின்று பிற வேண்டாத ஆசைகளை யெல்லாம் களைந்து எறிந்தால்தான் ஆதிபகவன் நம்முள்ளத்தில் நின்று நன்மை சாதிப்பான் என்பதை

"பிணக்கற அறுவகைச் சமயமும்
நெறியுள்ளி உரைத்த
கணக்கறு நலத்தனன் அந்தமில்
ஆதியம் பகவன்
வணக்குடைத் தவநெறி வழிநின்று
புறநெறி களைகட்கு
உணக்குமின் பசையற அவனுடை
உணர்வுகொண் டுணர்ந்தே!

என்று நம்மாழ்வார் பாடுவார். இதில் "பிணக்கற அறுவகைச் சமயமும்" என்று குறித்ததில், ஆறுவகையான சமயத்தில் குற்றம், குறை, வேற்றுமைகள் கூறப் பெற்றிருந்தாலோ பகையை உண்டாக்கும் என்றார். அப்பகையை உண்டாக்கும் குறையை நீக்குவதற்கோ பிணக்கற என்ற தொடரைப் பெய்தே உணர்த்தினார். "நெறியுள்ளி உரைத்த" என்பதில், தீய நெறிகளை அறுத்து எறியவே உரைத்தவன் இறைவனே என்கின்றார். அவன் எண்ணிறந்த நலன்களைப் பெற்றே முடிவில்லாமல் முதல்வனாய் உள்ளான் என்பதை, 'கணக்கறு நலத்தனன் அந்தமில் ஆதியம் பகவன்" என்றே சிறப்பிக்கின்றார்.

பகவானைப் போற்றி மகிழ்வுடன் துதிக்கின்ற நெறியே பக்திநெறி. ஆதலால் இதை "வணக்குடைத் தவநெறி' என்றார். தவம் என்று இங்கே குறித்தது பக்தியினையே சுட்டியதாகும், "தவநெறிக்கு முன் வணக்குடை" என்னும் சொல்லைப் பெய்துள்ளதால் இவர் தவம் செய்வதைக் குறித்தாரில்லை என்பதையறிய வேண்டும். வணங்கிப் போற்றும் பக்தியையே சுட்டினார் என்பது தேற்றம்.

பயிர்களுக்கிடையே களை தோன்றினால் அது நல்ல பயிரை அழிக்கும், என்பதால் அவற்றைக் களைந்தெடுத்தெறி

வதற்கோ களை என்று கூறுவர். அந்தக் களையை எடுத்துப் பயிரை வளர்ப்பது போல, தீய நெறிகளான புறநெறிகளை* இறைநெறியாளர்கள் தம்மனத்திலிருந்து களைந்தெறிய வேண்டும். அப்படிக் களைந்தாலே தடையில்லாமல் இறைவாழ்வினை எய்த இயலும் என்பதை.

''வழிநின்று புறநெறி களைகட்டு''

என்று குறித்தார். பயிரின் களையினைப் பிடுங்கி வெயிலில் எடுத்தெறிந்து உலர்த்தி யழிப்பது போல, நம் மனத்தில் உள்ள இருபசைகளைக் களைந்தெறிந்தே அழிக்க பரம்பொருளின் திருவருளாகிய வெயிலிலே உலர்த்த வேண்டுமென்பதை.

' உணக்குமின் பசையறு அவனுடை
உணர்வுகொண் டுணர்ந்தே''

என்று கூறி இப்பாசுரத்தை முடிக்கின்றார்.

தம் பாரதத்தில் பல்வேறு சமயங்கள் தோன்றியதால் பேதங்கள் தலையெடுத்தன. அந்தப் பேதங்களின்றி இறைவன் திருவளை மக்கள் எல்லாரும் பெற்றின்புற நம்மாழ்வார் வழிகாட்டினார். அவர் வழியில் நின்று ஒன்றான தெய்வத்தை உள்ளதில் ஒன்றி நிற்கச் செய்வித்து அனைத்து மதங்களும் ஒன்றிலிருந்து தான் தோன்றின என உணர்ந்து நாட்டில் பிணக்கின்றி வாழ்தலே பெருமை தரும்.

விவேகானந்தர் ஓர் ஆலமரத்தின் இரு பெரிய விழுதுகளே என்று வைணவத்தையும் சைவத்தையும் கூறினார். அவர் தம் கருத்தினை உளம் கொண்டே இரண்டும் ஒன்றே என்னும் இந்நூலின் கட்டுரைகளை வரைந்தேன். இதற்கு ஆழ்வார் களும் நாயன்மார்களும் பாடியருளிய ஒற்றுமைக் கருத்துகளை யெல்லாம் எடுத்துக்காட்டியே இறைவன் ஒருவனே என்றும் அகிலத்திலுள்ள தெய்வங்கள் அனைத்தும் அவனே என்றும் நிறுவியுள்ளேன். எம்பெருமான் திருமாலாகவும் சிவனாகவும்

நான்முகனாகவும் இருக்கின்றான் என்று ஆழ்வார்கள் நாயன்மார்கள் கூறிய எடுத்துக் காட்டுகளையெல்லாம் விளக்கி ஒன்றேதான் இறைவன் என்று குறித்துக் காட்டியதோடு, வைணவம், சைவம் ஒரு நெறியே என்றும் எடுத்துக்காட்டியுள்ளேன். இவ்வாறு அடியேன் காட்டியதைப் பரந்த நல்லுணர்வு பெற்ற சமயச் சான்றோர்கள் வரவேற்பார்கள் எனக் கருதுகின்றேன். ஒன்று என்றே இறைவனைப் போற்றிடுவோர் தம் மனததிலே அந்த இறைவன் ஒன்றும் வகையிலேயே பக்தி செய்ய வேண்டும் என்று உணர்த்தும் நம்மாழ்வார்

"ஒன்றநும் மனத்து வைத்து" என்னும் தொடரால் குறித்தவர், மேலும் அவர்,

"உணர்ந்துணர்ந்து இழிந்தகன்று உயர்ந்துரு
வியந்தஇந் நிலைமை
உணர்ந்துணர்ந்து உணரினும் இறைநிலை
உணர்வரிது உயிர்காள்
உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து அரிஅயன்
அரன் என்னும் இவரை
உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து இறைஞ்சுமின்
மனப்பட்டது ஒன்றே"

என்று பாடுவார். இதில் உணர்வையே இயல்பாக உடையவனாகிய அவன் அணுவாக இருந்து, அந்த அணுவே அகண்டமாகி, அதுவே கீழ்நோக்கியும், நடுவாகியும் மேல் நோக்கியும் வியாபித்துச் சடப் பொருளாகி, அந்தச் சடப்பொருளான உடம்பிலிருந்து வேறுபட்டு நிற்கின்ற இந்த ஆன்மாவின் விளக்கமாக இருத்தலைக் கேள்வியாலும் மன உணர்வாலும் அறிந்து அறிந்து போற்றியே, தவநெறியால் அறிந்து கொண்டாலும், இறைநிலையை அறிந்துகொள்வதற்கோ மிக அரிதாகும். அரிதானாலும் சேதனர்களாகிய மனிதர்களாலே பலகாலம் உணர்ந்து, அவ்வழியிலேயே நின்று தெளிந்தே அரி

அயன் அரன் என்ற இவர்களில் ஒருவரைப் பற்றிப் பக்தி செய்துய்தல் சால்பென்றார். இத்தெய்வங்களில் ஒன்றைப் பலகாலம் உணர்ந்தும் உரைத்தும் வணங்குங்கள் என்றும் பிணக்கில்லாமல் இணக்கமுடன் போற்றி உய்யுங்கள் என்றும் நம்மாழ்வார் உணர்த்துகின்றார்.

எனவே, இறைவன் ஒருவனே! அவனை எவ்வாறு வழி படுகின்றோமோ அவ்வாறு அவன் நம் மனத்தின் கண் நின்று ஒளிர்வான் என்பதை உணர்த்தவே இக்கட்டுரைகளை வரைந்தேன். இக்காலத்தில் வாழுகின்ற நாம் பேதமில்லாமல் எங்கும் எவ்விடத்தும் உறையும் பெருமானை ஒருவனாகவே ஏத்தியும் நாமெல்லோரும் ஒரு குலத்தவரே என்று நினைந்தும் உலகில் அறநெறிகளை வளர்த்தால் போர் வெறிமாளும், சீர்நெறி தோன்றும், பார் முழுவதும் பண்புடன் இலங்கும். துன்பமில்லாமல் எல்லாரும் எல்லாமும் பெற்று நன்னெறியாம் இறைநெறியில் தோய்ந்து நிறைவான அவன் திருவடியாகிய வாழ்வை எய்தி உய்ய இயலும். ஆதலால் நாம் எல்லோரும் இந்த உலகம் ஒன்றே என்றும் இறைவன் ஒருவனே என்றும் பேதம் இன்றிப் போற்றி நிலைத்து வாழ்வோமாக!

## பல்லாண் டிசைப்போம் பணிந்து

*(நேரிசை வெண்பா)*

அனைத்தும் ஒருவனே ஆக்கி இயக்கி
நினைப்போர் வியந்தேத்த நின்று—தனக்குவமை
இல்லாதான் எங்கும் இருக்கும் இறைவனுக்கே
பல்லாண் டிசைப்போம் பணிந்து!

# எங்கும் நிறைந்த இறைவன்

"எங்கும் இருக்கின்ற எம்பெருமான் சீருரைப்போர்
பொங்குமனத் தாமரையில் போந்து நிற்பான்—இங்கிதமாய்
நம்புவோர்க்குத் தேனாய் நயந்தினிப்பான் போற்றுவோர்க்கு
நம்பிக்கை யூட்டுவானை நாடு"

(கவியமுதனார்)

என்று கவியமுதனார் வெண்பா இசைக்கின்றார். இதில் கதியாயிருக்கும் எம்பெருமானின் பேரை, சீரை உரைத்து இசைப்பாரின் மனத் தாமரையில் அவன் வந்து நிற்பான்; இத்தகையவனை நம்புவோர்க்கு இங்கிதமாய்த் தேன் போல் இனிப்பான் அவன்; இவர்கள் ஏற்றுச் செய்யும் செயலை இனிதாக முடிக்க நம்பிக்கை ஊட்டுவான் என்று கூறி, அவனை நாடிப் பத்தி செய்ய பாங்குடன் தெரிவிக்கிறார். இவ் வெண்பாவில் எங்கும் நீக்கமற நிற்கும் இறைவனுக்குப் பெயல் உருவம் குறிக்காமல் பொதுவாகப் பேதம் தோன்றாதவாறு பாடியிருத்தல் காணலாம்.

இறைவன் ஒருவன்தான்; அவனை நிறைமனத்தோடும் நம்பிக்கையோடும் பூசித்தால் நலம் கிட்டும். எந்தக் கடவுளைக் கும்பிட்டாலும், கும்பிடுவோர்க்கு நம்பிக்கை தேவை. இதை முழு நம்பிக்கையுடன் எந்தத் தெய்வத்தை யார் வணங்கினா லும் அஃது என்னை வழிபடுவதாகும் என்று கண்ணபிரான் கீதையில் கூறுகின்றான். இதில் இறைவன் ஒருவனே என்று சொல்லியதோடமையாமல் இறைவன் ஒருவன் இருக்கின் றான் என்ற கருத்தையும் கூறியிருத்தல் அறியலாம். நாத்திகம்

பேசி நாத் தழும்பேறுகின்ற நிலையில் மாந்தன் வாழ்வு இருத்தல்கூடாது; இறைவனை இயற்கை என்று நாத்திகம் பேசுவோர் கூறுவர். இயற்கை உயிர் பெற்றிருந்தாலும் அந்த உயிர் இறைவனன்று இயற்கையும் பரிணாம வளர்ச்சி பெறுவதும், பெற்றுப் பின்னர் அழிவதுமாகிய நிலையிலிருத்தற்கு இறைவனே காரண பூதனாயுள்ளான் என்பதை அறிதல் சிறப்பு. இச்செய்தியை,

"பிரம்மமென்ற ஒன்றால்தான் பேசுகின்ற இந்தப்
பிரபஞ்சம் தோன்றிப் பெரிதாய்—இருத்தல்காண்
தூயஅம் மாயன் தொடர்பிலையேல் யாவுமே
வாய்க்கவழி யில்லை வணங்கு!"

என்று இவ்வெண்பாவில் கவியமுதனார் விளக்குவார். பிரபஞ்சமாகிய இவ்வுலகமும்உயிரும் உருவாகி, இயங்குதற்குப் பிரம்மம் எனும் இறைவனே காரணமாவான். இந்த இறைவனாகிய மாயபிரான் தொடர்பில்லையேல் எல்லாமே, யாவுமே இங்கு உருக்கொள்வதற்கு வாய்ப்பில்லை என்று கூறியவர், அவ்வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாயனை வணங்கு என்று கூறுகின்றார். நம்மை இனிதாகச் செயற்படுத்துகின்ற, உலகைச் செம்மையாக இயக்குகின்ற மாயபிரானுக்கு நன்றி செலுத்தும் வகையில் "வணங்கு" என்று கூறினார் அவர்.

இறைவன் இல்லையென்று பேசுகின்ற நாத்திகரைப்பற்றி,

"ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்"

என்று மாணிக்கவாசகர் கூறி அவர்களை வெறுக்கின்றார். எங்கும் ஒருவனாய் இலங்கும் இறைவனை, ஆறு தெய்வங்களாக ஆக்கி ஆறு சமயங்கள் தோன்றிப் பேசுகின்றன. அப்படி ஆறாக உருக்கொண்டிருக்கச் செய்து, அவற்றின் மூலம் செம்பொருளைக் காண முனைவார்க்கு அப்பரம் பொருள் கண்களுக்குப் புலனாவதில்லை என்பதை,

"விளம்பும் ஆறுசமயமும் அவையாகியும் மற்றும்தன்பால்
அளந்து காண்டற்கு அரியனாகிய ஆதிப்பிரான்"

என்று நம்மாழ்வார் பாடுவார். இதில் ஆறு சமயங்கள் தோன்றி என்ன பயன் கண்டன. வேற்றுமைகளை உருவாக்கினவேயல்லாமல் இறைவனைக்கண்டு இன்பம் அவை அனுபவிக்கவில்லை என்று விளம்புகின்றார் ஆம், எத்துணை வேற்றுமைகளைக் கொண்டு பார்த்தாலும் அளந்து காண்பதற்கு அரியனாய் நிற்பான் ஆதிப்பிரான் என்று கூறுகின்றார் அவர். அவனை அறிவதற்கு வேற்றுமையை உள்ளத்தில் கொள்வதை விடுத்து ஒற்றுமை உணர்வோடு பார்க்க வேண்டும். ஆம், எம்பெருமான் ஒருவனே என உள்ளத்தால் பார்த்தால் பரம் பொருளைப் பார்க்க வி ய லு ம் என்று பகர்கின்றார் நம்மாழ்வார். இதை,

"உளர்எம் மொருவர் அவர்வந்து என்னுள்ளத் துள்ளே
உறைகின்றார்"

என்று பாடுகின்றார்,

ஒப்பில்லாத ஆறாவது அறிவு மனிதர்களாகிய நமக்கு மட்டும் இருப்பதாலேதான் உள்ளத்தில் இறைவன் நிலவுவதை உய்த்துணருகிறோம். எனவே இறைவனது உறைவிடம் நம் உள்ளம் என்றே நம்மாழ்வார் நவில்கின்றார்.

சூரியனைக் குருடன் பார்க்கவே முடியாது. கண்ணொளி பெற்றவனே சூரியனைப் பார்க்கவியலும். அதுபோல அறிவற்றவன் பேரறிவாகத் திகழும் பரம்பொருளைக் காணவே முடியாது. உள்ளத்தின் அறிவைப் பெற்றவனே காணவியலும் என்பதனை,

"பருதியினைக் கண்ணில்லான் பார்த்திடவே
இயலாதே பக்தி யில்லான்
அருட்பருதி எம்பெருமான் தனைக் காண
முடியாதே அறிவுக் கண்ணோ

இருப்பவனே தன்னுடைய ஞானக்கண்
பார்வையினால் எங்கு முள்ள
ஒருபொருளைப் பரம்பொருளைப் பார்த்துமிக
மகிழ்ச்சினால் உளம்பூ ரிப்பான்"

என்று கவியமுதன் பாடுவார். இதில் பார்வையில்லாதோன் பரிதியைக் காணவியலாது; அதுபோல பத்தியில்லாதான் எம்பெருமானைக் காணவியலாது. பரிதியைப் பார்க்கின்றவன் கண்களைப் பெற்றிருத்தல்போல, பக்தியுள்ளவன் தன் உள்ள மாகிய கண்களால் பரம்பொருளைப் பார்த்து இன்புறுவான் என்று பேசுவார். எங்கும் நீக்கமற நிற்கும், நிறைந்து விளங் கும் அருளாளனை அறிவு மனக் கண்ணாலேதான் பார்க்க வியலும் என்று நம்மாழ்வார் பேசுவார்.

"உள்ளுகுவார் உள்ளத்துள்ளார்"

என்று நாவுக்கரசரும் நவிலக் காணலாம். எங்கும் நிறைந்த இறைவனை,

"ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே"

என்று மணிவாசகரும் இசைக்கின்றார்.

"தளர்வின்றியே என்றும் எங்கும்
பரந்த தனிமுதல் ஞானமொன்றாய்
அளவுடை ஐம்புலன்கள் அறியா
வகையால் அருவமாகி நிற்கும்"

என்பதில் தளர்வில்லாத எம்பெருமான் என்றும் எங்கும் பரந் திலங்கும் தனித்தன்மை பெற்ற முதல்வனாய், அறிவுடைய அவன் ஐந்து பொறிகளும் அறிந்துகொள்ள முடியாத அளவில் அருவமாகி நிற்கின்றான் என்றும் நம்மாழ்வார் பாடுகின்றார். மேலும் அவர் எங்கும் நிறைந்தவனை, பிறந்த மாயா என்கின் றார். பாரதப் போரில் இடர்ப்படுத்திய மாயா என்றும் பேசு கின்றார். அவன் ஐந்து பூதங்களாகவும் இருக்கின்றான் என்று விளம்புகின்றார். பாலிலே மறைந்திருக்கும் நெய்யைப் போல

அப்பூதங்களில் நீ நிறைந்திருக்கின்றாய் என்றவர், அவனிடம் மாயம் புரியும் மாயனே உன்னை யான் எங்கு காண்பேன் என்று கூறினார் இக் கருத்தை.

"பிறந்த மாயா பாரதம்
பொருத மாய நீஇன்னே
சிறந்த கால்தீ நீர்வான்மண்
பிறவு மாய பெருமானே
கறந்த பாலுள் நெய்யேபோல்
இவற்றுள் எங்கும் கண்டுகொள்
இறந்து நின்ற பெருமாயா
உன்னை எங்கே காண்கேனே!

என்று பாடி எங்கும் நீக்கமற நிற்கும் மாயப்பிரான் திறத்தைப் படம் பிடித்தார்.

எங்கும் நிறைந்த பரம்பொருள் ஐந்து பூதங்களாகிய காற்றில், தீயில், நீரில், விண்ணில், மண்ணில் மறைந்து உலகை இயக்கி வருகின்றான். எப்படி அவன் அவற்றுள் மறைந்துள் ளான் என்றால், பாலில் வெண்ணெய் மறைந்திருத்தல்போல மறைந்தே செயல்படுத்துகின்றான் என்று எம்பெருமானின் திறத்தை விளக்குவார் நம்மாழ்வார். எங்கும் நிறைந்த பரம் பொருள் எல்லாவற்றிலும் எல்லா உயிர்களிலும் நின்று செயல் படுத்துகின்றான் என்பதை அழகோவியமாகத் தீட்டிய தம் பாசுரத்தில் இனிக்கப் பேசுகின்றார். இவ்வாறு எங்கும் நிறைந்த இறைவன் நம்முள்ளத்திலும் இருந்து இயக்குகின் றவனைப் போற்றிப் பரவி, அவன் திருவடியில் சரணடைவோ மாக!

## பண்ணவன்தாள் சேர்க! பணிந்து

(நேரிசை வெண்பா)

எங்கும் நிறைந்த இறையவனை நும்மனத்தில்
தங்கிடச் செய்துமிகச் சால்புறுக!—பொங்குமெழில்
கொண்டோன் ஒருவனெனக் கூர்த்தமதி யால்போற்றிப்
பண்ணவன்தாள் சேர்க பணிந்து!



**கவிஞர். வி. மு. உலகநாதன்**

**பிறப்பு : 20-8-1923**

**பெற்றோர்கள் : மங்கைத் தாயார், முனிசாமி ஐயா.**

**மனைவி : திலகம்மாள்**

**மக்கள் : கண்மணி, வாசுகி, பூங்கோதை,**
**தாமோதரன், தாமரைக்கண்ணன்.**

இயற்றிய நூல்கள் நெஞ்சில் நிழல், பாவலர் போற்றும் மகாவித்துவான் மே.வீ.வே. பராசக்தி பாமாலை, பள்ளிகுவர் தந்த பக்திச் சுரங்கம், கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில், ஆண்டாள் பாவையும் அழகுத் தமிழும் இரண்டு பாகங்கள் (இது தமிழக அரசின் பரிசு பெற்றது) இரண்டும் ஒன்றே. பதிப்பித்த நூல்கள் எண்ணி றைந்தன. நாள், கிழமை, திங்கள் ஏடுகளிலும், மலர் களிலும் கவிதைகள், ஆய்வுக்கட்டுரைகள் எழுதியவர்.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டின் எல்லைகள் மீட்க, தமிழாட்சி ஏற்பட, தமிழ்நாடு என்று பெயர் வைக்க, சுயாட்சி மாநிலம் காண நிகழ்ந்த போராட் டங்களில் சிறை சென்றவர். இத்தகைய தொண்டுள்ளம் கொண்டவரைத் தந்தையாராகப் பெற்றதால் நாங்கள் பெருமை பெற்றவர்களாவோம்.

உ. தாமரைக்கண்ணன்

**Wrapper Printed at Eskay Art Printers, Madras-5.**
**Phone : 844727**